ஆசிய அரசுகளின் நிருவாகத்துறைகள்.

– இராசலட்சுமி (வ)

ஆசிய அரசுகளின் நிருவாகத்துறைகள்

(EXECUTIVES IN ASIAN GOVERNMENTS)

வ. இராசலட்சுமி

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—441

ஆசிய அரசுகளின் நிருவாகத்துறைகள்

ஆசிரியர்
வ. இராசலட்சுமி,
அரசியல் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—April, 1973

T.N.T.B.S. (C.P.) No. 441

EXECUTIVES IN ASIAN GOVERNMENTS

V. RAJALAKSHMI

Price Rs. 4-65

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by

Solden & Co. (Printers),
762/63, Triplicane High Road,
Madras-5.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வாணியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான **'ஆசிய அரசுகளின் நிருவாகத்துறைகள்'** என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **441**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 476 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

பக்கம்

பகுதி 'இ'

பகுதி 'அ'

அரசியலமைப்பைப்பற்றிய விவரங்கள்

1. அரசியல் அமைப்பு என்பது என்ன?

அரசியல் அமைப்பு என்பதற்குப் பல அரசியல் அறிஞர்கள் விளக்கம் தந்துள்ளனர். அனைவரிலும் சிறந்து விளங்குபவர் பிரைஸ் பிரபு (Lord Bryce) என்பவர். இவரது விளக்கத்தின்படி அரசியல் அமைப்பு என்பதற்குச் சட்டத்தின் படியும், சட்டத்தின் வாயிலாகவும் உருவாக்கப்பட்ட அரசியல் சமுதாயத்தின் திட்டம் என்று விளக்கம் கூறப்பட்டுள்ளது. இதனை நாம் நன்கு புரிந்துக் கொள்ள வேண்டுமென்றால், அரசியலில் உள்ள சில அடிப்படைச் சொற்களின் பொருள்களை அறிதல் அவசியமாகும்.

மனிதனும் சமுதாயமும் (Man and society)

இச் சொற்களில் முதன்மையாகத் திகழ்வது 'மனிதன்', அவன் சுற்றம் அல்லது 'சமுதாயம்' என்ற இரண்டுமேயாகும். 'மனிதன் ஓர் அரசியல் பிராணி' (Man is a Political Animal) என்பது ஒரு சில அரசியல் அறிஞர்களின் கருத்தாகும். மனிதன் இயற்கையின் படைப்புகளில் ஒருவனாக இருப்பினும், அவன் மற்ற உயிரினங்களைப் போல் தனிமையிலோ அல்லது காட்டிலோ வாழ முடியாது. அவன், அவனைப் போன்ற மனிதர்களுடனே கூடி வாழவேண்டியுள்ளது. சரித்திரக் காலம் தொட்டு, ஏன் அதற்கு முன்பே கூட, மனிதன் தனியாகவே வாழ்ந்தது இல்லை. 'கூடி வாழ்தல்' என்பதைப் பற்றி எண்ணும் போது, முதன் முதலில் நமது உள்ளத்தில் தோன்றுவது குடும்பமேயாகும். ஒருவன் தனக்கென்று மனைவி, மக்கள், சுற்றம் முதலியோருடன் சேர்ந்து வாழ்கின்றான். இந்தப் போன்று ஒரு சமூகத்திலுள்ள பல குடும்பங்கள் இனம் அல்லது சாதியின் காரணமாகவோ, அல்லது மொழியின் காரணமாகவோ ஒன்றாக இணைந்து வாழ முடிகிறது. இப்படி ஏற்பட்ட ஒரு சமூகம்

இருக்கும் இடத்தை ‘நகர அரசுகள்’ (City States) என்று சரித்திரத்தில் குறிப்பிடுகின்றனர். அதன்பின் படிப்படியாக மொழி, அரசு இவைகளில் ஒருங்கே நின்று இணைந்து நாடு என்று மாறியது.

அடுத்த சொல் நாடு (State) என்பதாகும். மேற் கூறிய வண்ணம் பல மனிதர்கள் ஒன்று சேர்ந்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழ்வதை அரசியல் சமுதாயம் என வழங்குகிறோம். இதனையே நாம் அரசியலில் சுருக்கமாக நாடு என்று குறிப்பிடுகிறோம். நாடு என்பதற்கு முக்கியமாக நான்கு உறுப்புகள் உண்டு. அவை இடம் (Place or Territory), மக்கள் (People or Population). அரசாங்கம் (Government), மற்றும் இறைமை (Sovereignity) என்ற நான்குமாகும். இதிலிருந்து ஒரு நாட்டிற்கு எல்லை மிக அவசியமானது என்பது தெரிகிறது. உதாரணமாக நம் நாட்டில் பல நூற்றுக்கணக்கான இங்கிலாந்து மக்கள் வாழ்ந்தாலும், அவர்கள் வாழும் பகுதி இந்தியாவின் ஒரு பகுதியே அன்றி, இங்கிலாந்தின் ஒரு பகுதியென்று கூற முடியாது. உதாரணமாக, ‘இந்திய நாடு’ என்று நாம் குறிப்பிடும்பொழுது அதனுடைய எல்லைகளாக வடக்கே இமய மலையையும், தெற்கே கன்னியாக் குமரியையும், மேற்கே அரபிக் கடலையும், கிழக்கே வங்காள விரிகுடாக் கடலையும் எல்லைகளாகக் கொண்ட நிலப் பகுதி என்று கூறுகின்றோம். அதே போன்று இந்த எல்லைகளுக்குள் வாழும் 55 கோடி மக்கள் இந்திய நாட்டு மக்கள் என்றும் கூறுகிறோம். இதைத் தவிர, இந்திய நாட்டிற்கென்று ஒரு தனி அரசும் உள்ளது. இவையனைத்தையும் விட ஒரு நாட்டிற்கு முக்கியமான அணிகலனாக விளங்குவது இறைமையாகும். இதனைப் பரிபூரணமாக எந்த நாட்டு அரசாங்கத்தால் தன்னாட்டிற்குள்ளும், அயல் நாட்டிலும் வெளிக்காட்ட முடிகிறதோ அப்பொழுதுதான் அதனை ஒரு நாடு என்று குறிப்பிட முடியும். உதாரணமாக 1947 ஆகஸ்டு 15-க்கு முன் நமது நாடு இங்கிலாந்து நாட்டினிடம் அடிமைப்பட்டிருந்தது. அப்பொழுது இந்தியாவை நாம் நாடு என்று கூற முடியாமல் இருந்து வந்தோம். இதற்குக் காரணம், சட்டங்களை ஏற்படுத்தி, நாட்டில் உள்ள மக்களை அவற்றிற்குக் கீழ்ப்படிந்து நடக்கச் செய்ய எல்லாவற்றிற்கும் மேம்பட்ட ஒருவகையான அதிகாரம் நம் நாட்டிற்கு இல்லாமல் இருந்ததேயாகும்.

இறைமை (Sovereignity)

ஒரு நாட்டின் நான்கு உறுப்புகளில் மிக முக்கியமானது இறைமை என்று முன்பே கூறினோம். இந்த இறைமை ஓர் இடத்தில் யாரிடத்தில் இருக்கின்றது என்பதைப் பற்றிப் பலவகை கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன. பலவகை இறைமையினை

ஆராய்வதற்கு முன்பு, இறைமை என்றால் என்ன? என்பதனைத் தெளிவுபடுத்திக் கொள்ளுவோம். சட்டங்களை ஏற்படுத்தி நாட்டில் உள்ள மக்களை அவற்றிற்குக் கீழ்ப்படிந்து நடக்கச் செய்ய, எல்லாவற்றிற்கும் மேம்பட்ட ஒருவகையான அதிகாரம் தேவைப்படுகிறது. அத்தகைய அதிகாரமே இறைமை என்று வழங்கப்படும். இனி, இறைமை யாரிடத்தில் இருக்கிறது? என்பதனை ஆராய்வோம். இதற்கு உதாரணமாக இங்கிலாந்து நாட்டினை எடுத்துக் கொள்வோம். அதன்படி அரசன் அல்லது அரசி இவர்களில் ஏவரேனும் ஒருவரின் பேரிலேதான் அந் நாட்டுச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. ஆயினும் உடனே நாம் அரசனோ அல்லது அரசியோதான் இறைமையைப் பெற்றிருக்கின்றார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஏனெனில், எல்லாச் சட்டங்களும் பாராளுமன்றத்தில் (Parliament) ஏற்படுத்தப்படுபவையே. பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். எனவே, இங்கிலாந்து நாட்டின் இறைமை மன்னனிடம் உள்ளதா அல்லது மக்களிடம் உள்ளதா என்பது பிரச்சனைக்கு இடமாகிறது. எது எவ்வாறாயினும் நாட்டில் சட்டங்களை உண்டு பண்ணி அவற்றிற்கு மக்களைக் கீழ்ப்படியச் செய்வதற்கு வேண்டிய சக்தியையும் துணையையும் பெற்றிருப்பது அந்த நாட்டின் அரசாங்கம் ஒன்றினால் மட்டுமே முடியும். சுருங்கக் கூறின் இறைமை, சட்டம் இவை இரண்டையும், இரண்டு கண்களாக உடையது அரசாங்கம் என்றே கூறலாம்.

சட்டங்கள் (Laws)

முன்பு கூறியது போல் ஒரு நாட்டின் இறைமையை ஆயும் பொழுது, முதன்மையாகத் தோன்றுவது அந் நாட்டின் சட்டங்களே யாகும். இயற்கையில் பிறந்த மனிதன் ஒரு சமூகத்தில் ஒழுங்காகவும், அமைதியாகவும் வாழவேண்டுமாயின் சட்டங்கள் மிகவும் முக்கியமானதாகும். மனிதன் உரிமையுடன் வாழவேண்டியவன் தான். ஆயினும் சமூகநலம், சமூகத்தின் முன்னேற்றம் இவற்றிற்காக மனிதன் தன்னுடைய சில உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டியவனாய் இருக்கிறான். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது, ஆதிகாலத்தில் ஒரு மனிதனுக்குப், பல மனைவிகள் இருந்தனர். ஆனால், இப்போது சமூகத்தின் ஒழுங்கிற்காக, அதன் நலனுக்காக ஒருவன் ஒரு மனைவியுடன்தான் வாழவேண்டும் என்னும் சட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது திடீரென்று சட்டமாக்கப்படவில்லை. மனித சமூகத்தில் படிப்படியாக நாகரீகம் வளர, வளர இம் முறைதான் சிறந்தது என்று கண்டறியப்பட்டது. இது பலப்பல வருடங்களாக வழக்கில் கொண்டு வரப் பட்டு இன்று

சட்டமாக்கப்பட்டுள்ளது. ஆகையால் சட்டம் ஒன்று உருவாக்கி, அதனை ஒரு சமூகத்தில் பயன்படுத்த வேண்டுமென்றால் அதனைச் சமூகத்தின் பலம் கொண்டுதான் செயல் படுத்த முடியும். ஆயினும் சமூகத்தில் பயன்படும் அனைத்தையும் சட்டங்களாக்க முடியாது. மிகவும் அத்தியாவசியமான சிலவற்றினைத் தவிர ஏனையவைகளைச் சட்டங்களாக்குவது என்பது இயலாத காரியமாகும்.

அரசாங்கம் (Government)

நாடு, இறைமை, சட்டம் இவைகளை ஆராய்ந்த நாம் இவைகளை நடத்திச் செல்லும் கருவியான அரசாங்கம் எப்படிப்பட்டது, எத்தகையது என்பதனைச் சிறிது ஆய்வோம். ஒரு குடும்பம் என்று குறிப்பிடும் பொழுது, ஒழுங்கிற்கும், செல்வத்திற்கும் குடும்பத் தலைவனையும், குடும்பத்தினை அழகாகப் பரிபாலிக்கும் பொறுப்பையுடைய குடும்பத் தலைவியையும் குறிப்பிடுகிறோம். எவ்வாறு இவர்கள் இருவரும் இரண்டு காளைகள் என இணைந்து குடும்பம் எனும் ஏரினைச் செவ்வனே நடத்துதல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றோமோ அதே போல் தான் ஒரு நாட்டின் ஒழுக்கம், அமைதி இவற்றினைக் குறிக்கும் பொழுது இறைமை என்றும், அதனை ஒரு நாட்டுச் சமூகத்தினுள் புகுத்திச் செயல்படுத்தும் பொறுப்புள்ள கருவியை அரசாங்கம் என்றும் குறிப்பிடுகின்றோம். (ஒரு நாட்டை உள் நாட்டுக் கலகங்களிலிருந்தும், வெளி எதிர்ப்புகளினின்றும் பாதுகாக்க அரசாங்கம் ஒன்றால்தான் முடியும். இம் மாபெரும் பணியைச் செவ்வனே செய்து முடித்து, அந் நாட்டின் கண்ணுள்ள மக்கள் அமைதியுடனும், ஒற்றுமையுடனும் வாழ வேண்டுமாயின் அதற்கு அந் நாட்டின் முக்கிய பலங்களான படை, பணம், மக்கள், ஒத்துழைப்பு இவைகள் தேவைப்படுகின்றன. இம் மூன்று பலங்களையும் ஓர் அரசாங்கம் சட்டங்களின் மூலம் பெற்றுவிடுகின்றது. வெறும் சட்டங்களினால் மட்டும் இதனைப் பெற்று விட முடியுமாவெனில், முடியாது. ஆகையால் சட்டமியற்றுவது, அதனைச் செயல் முறைக்குக் கொணர்தல், அது சரியான முறையில் செயல்படுகிறதா என்று கண்காணிப்பது இவை மூன்றினையும் அரசாங்கத்தின் மூன்று உறுப்புகளான (1) சட்டமன்றம் (Legislative) (2) செயற்குழு (Executive) (3) நீதித் துறை (Judiciary) இவைகள் செயல்படுத்திக் கொள்கின்றன.

இனி இம் மூன்றிலும் முதற்கண்ணாகத் திகழும் சட்டமன்றத்தினைப் பற்றி ஆராய்வோம். இப் பிரிவின் மூலமாக ஓர் அரசாங்கம் தன் நாட்டிற்கு வேண்டிய சட்டங்களை ஒரு நாடு இயற்றுகின்றது. அரசாங்கத்தின் மற்ற இரு பிரிவுகள் செயல்பட வேண்டுமாயின், அதற்குச் சட்டமன்றமே முதற்பணியை மேற்கொள்ள வேண்டியுள்

ளது. இச் சட்ட மன்றம் மக்களால் உருவாக்கப்படுகிறது. பெரிய பெரிய நாடுகளான இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் நேரிடையாக எல்லா மக்களும் ஓர் இடத்தில் குழுமிச் சட்டங்கள் இயற்றுவது என்பது நடவாத காரியமாகும். ஆகையால், இவர்கள் தங்கள், பிரதிநிதிகளாக ஒருசிலரைத் தேர்ந்தெடுத்து, சட்டமன்றத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். அவர்கள் மக்களுக்குத் தேவையான அல்லது அவர்கள் விருப்பத்திற்கு முரணற்ற சட்டங்களையே இயற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அமெரிக்க நாட்டின் தலைசிறந்த ஜனாதிபதிகளுள் ஒருவரான ஆப்ரகாம் லிங்கன் அவர்கள் ஒரு நாட்டு அரசாங்கம் மக்களுக்காகவே இருத்தல் வேண்டும். மக்களுக்காகவே வாழ வேண்டும். மக்களுக்காகவே சட்டங்கள் செய்யப்படவேண்டும் என்று கூறுகிறார். இருபதாம் நூற்றாண்டில் இருக்கும் உலக நாடுகளின் அரசியல் அமைப்புகள் பெயரளவில் பல மாறுதல்கள் உடையதாக இருந்த போதிலும், அடிப்படையில் ஒரே மாதிரியாக உள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையும், மற்றும் சிலரை உறுப்பினர்களாகக் கொண்ட மற்றொரு சபையும் சட்டமன்றத்தின் இரு சபைகளாக அமைந்துள்ளன. இன்றைய அரசியல், பொருளாதாரம் (Politics & Economics) இவைகளின் கருத்துப்படி அரசாங்கம் பொது மக்களின் நலன்களையே முதன்மையாகக் கொண்டு 'பொது நல நாடு' (welfare State) என்பதனை உண்டாக்க முயன்று வருகிறது. இவற்றின் காரணமாகச் சட்டமன்றத்தின் பணிகள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகின்றன.

செயற்குழு, அல்லது ஆட்சி மன்றம் (Executive) என்பது ஓர் அரசாங்கத்தின் மற்றொரு முக்கிய உறுப்பாகும். இவற்றின் முக்கிய பணி சட்ட சபையில் உருவாக்கப் பட்ட சட்டங்களைச் செயலாற்றுவது. பொதுவாக மக்கள் ஓர் அரசாங்கத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, செயற்குழுவை மையமாகக் கொண்டே பேசி வருகின்றனர். இச் செயற்குழுவின் பணிகள் இந்த இருபதாம் நூற்றாண்டில் மிகவும் அதிகமாகி விட்டபடியால் இதனையே பொது மக்கள் அரசாங்கம் என்று குறிப்பிடுகின்றார்கள். ஆனால், உண்மையில் இது அரசாங்கத்தின் ஒரு பிரிவேயாகும். ஒரு நாட்டின் பரிபாலனத்தை இப் பிரிவே பெரும்பாலும் செய்கின்றது. இப் பிரிவு சட்டமன்றத்துடன் கூடி செயல்பட வேண்டுமா அல்லது அதனின் றும் பிரிந்து செயல்படவேண்டுமா என்பது போன்ற பிரச்சனைகள் எழுவதுண்டு. ஆயினும் ஓர் அரசாங்கத்தின் நடப்பினை நோக்கி ஆராயும்பொழுது இவைகள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்படுவதே சாலச் சிறந்ததாகும் என அறியப்படுகிறது.

அப்படிச் செயற்குழுவிற்கு அதிகாரமும் சுதந்திரமும் கொடுக்கப் பட்டு விட்டால் அது வரம்பற்றுச் செயலாற்றத் துவங்கிவிடும். உதாரணமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரச பரிபாலனத்தை எடுத்துக் கொள்வோமாயின் அந் நாட்டுத் தலைவனே உண்மை யான ஆட்சியாளனாகிறான். அவனுடைய செய்கைகள் அனைத்தும் சட்டமன்றத்தின் மேல் சபை உறுப்பினர்களான 'செனெட்' (Senate) என்ற குழுவில் மூன்றில் இரண்டு பங்கு அங்கீகாரம் பெற வேண்டியுள்ளது. இன்றைய அரசியல் உலகில் அமெரிக்க நாட்டு ஜனாதிபதிதான் முதல் மனிதனென்றும் அவனது அதிகாரம் அளவற்றதென்றும் குறிப்பிடப்படுகிறது. இருப்பினும் 'மாண் டெஸ்க்யூ (Montesque) அவர்களின் அரசியல் விதிப்படி ஓர் அரசாங்கத்தின் மூன்று உறுப்புகளும், தனித்து இயங்குவது நடை முறைக்கு ஒவ்வாததாகிறது.

அடுத்து நாம் நீதித் துறையினை நோக்குவோம். ஒரு நாட்டில் வாழும் மனிதன் அந் நாட்டுச் சட்டங்களை மீறி நடக்கும் பொழுதும் அல்லது ஆட்சியாளர்கள் மக்களுக்கு ஏற்றமில்லாத சட்டங்களை உருவாக்குமிடத்தும், மக்களையும், அரசாங்கத்தையும் தண்டிக்கவும், கண்டிக்கவும் செய்து, ஒரு நாட்டின் நீதியை நிலை நிறுத்துவதே நீதித் துறையின் கடமையும், அதிகாரமும் ஆகும்.

அரசாங்கத்தின் மேற்கூறிய மூன்று உறுப்புகளான செயற் குழு, சட்டமன்றம், நீதித் துறை இவற்றின் தொடர்புகளும், இவைகள் வேலை செய்யும் விதிகளையும், முறைகளையும் ஒழுங்குப் படுத்தித் தொகுக்கப்படும் நூலே ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு என்று கூறப்படுகிறது (Constitution). இன்னும் சிறிது விளக்க மாக அரசியல் அமைப்பு என்ன என்பதனை விளக்க வேண்டுமாயின் போலிங் ப்ரோக் (Boling Broke) என்பவர் குறிப்பிட்டது போல், 'அரசியல் அமைப்பு என்பது குறிப்பிட்ட சில தத்துவங்களின் அடிப்படையில் அரசியல், சமூகம், தன்னைத் தானே நிர்வகித்துக் கொள்ள வேண்டி ஏற்படுத்திக் கொள்ளும் வழக்காறுகளின், சட்டங்களின், நிறுவனங்களின் தொகுப்பே ஆகும்.'

2. அரசியல் அமைப்பின் நோக்கங்கள்

முதல் பிரிவில் நாம் கண்ட அரசாங்கத்தின் மூன்று பிரிவு களான செயற்குழு, சட்டமன்றம், நீதித் துறை இம் மூன்றின் அமைப்பையும், பணிகளையும் நிர்ணயிக்கின்றது அரசியலமைப்பு. என்றாலும் அதனுடைய உண்மையான நோக்கம் என்ன? ஒரு நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் சுதந்திரத்துடனும், நல்வாழ்

வுடனும் வாழவேண்டுமாயின், அது அந் நாட்டைப் பரிபாலிக்கும் அரசாங்கத்தின் பெரும் பொறுப்பாகும். நாட்டு மக்களின் உரிமைகள் பறிபோகாவண்ணம் அரசாங்கம் சட்டங்கள் ஏற்படுத்தவேண்டும். அவ்வாறு ஏற்படுத்தும் சட்டங்களையே மக்கள் விரும்பி, ஏற்று மதித்து அதன்படி நடக்கின்றனர். மக்களுக்கு மாறாகச் சட்டங்கள் ஏற்படுமாயின் அவ்வரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டங்களும் கிளர்ச்சிகளும் மக்கள் துவக்குகின்றனர். இவைகளைத் தடுக்க வேண்டுமாயின் அரசாங்கத்தையும், அதன் அதிகாரத்தையும் ஒரு வரம்பிற்குள் செயலாற்ற வைக்க வேண்டும். சுருங்கக் கூறின் அரசியல் அமைப்பின் நோக்கம் அரசாங்கத்தின் பிரிவுகளான செயற்குழு, சட்டமன்றம், நீதித் துறை என்பவற்றின் பணிகளை நிர்ணயிப்பது மட்டுமின்றி, நாட்டு மக்களின் சில அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதுமாகும். இவை இரண்டிலும், பின்னால் கூறப்பட்ட பணியே மிக முக்கியமானதாகும். இன்றைய நூற்றாண்டில் எழுதப்பெற்ற அரசியல் அமைப்புப் புத்தகத்தையுடைய நாடுகளுள் முதன்மையாகத் திகழும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்பின் முன்னுரையை (Preamble) நோக்குவோமாயின், அரசியல் அமைப்பின் உண்மை நோக்கம் என்ன என்பது தெள்ளென விளங்கும். அடுத்துச் சிறந்து விளங்கும் நமது நாட்டின் அரசியல் அமைப்பின் முன்னுரை இன்னும் விரிவாக அதன் நோக்கத்தினை வெளியிட்டுள்ளது. 'இந்திய மக்களாகிய நாம், இந்தியாவைப் பூரண உரிமைப் பெற்ற ஒரு ஜனநாயகக் குடியரசு', (Sovereign Democratic Republic) என நிச்சயித்து, அதன்கண், உள்ள குடிகளுக்குச் சமூகம், பொருளியல், அரசியல் துறைகளில் நீதியையும், எண்ணம், பேச்சு, நம்பிக்கை, சமயம், வழிபாடு முதலியவற்றில் உரிமையையும், வாழ்வில் சம வாய்ப்பையும், பாதுகாக்காகவும், அவர்களுக்கிடையே தனி மனிதனுடைய பெருமை, சகோதரத்துவம் இவற்றை வளர்க்கவும் இந் நாளான 1949-ம் ஆண்டு, நவம்பர்த் திங்கள் 26-ம் நாளில் நம் அரசியல் நிர்ணயச் சபையில் ஒப்புக்கொண்டு நாமே நமக்கு இவ்வரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொள்கிறோம் என்பதே இந்திய அரசியல் அமைப்பின் முகப்பாக அமைந்துள்ளது.

மேற்கண்ட உதாரணங்களின் மூலம் அரசாங்கம் செயலாற்றும்போது பொதுமக்கள் உரிமைகளைப் பறிக்காமல் நடந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சில கட்டுப்பாடுகளை அரசியலமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்பது மிக அவசியமானது என புலனாகிறது. அவ்வாறான கட்டுப்பாடுகளை ஓர் அரசியலமைப்புக் கொண்டிருக்க வேண்டுமாயின் அதனுடைய சக்தி அந் நாட்டுச் சட்டங்களை விட

உயர்வானதாக இருக்கவேண்டும். இந்த உயர்ந்த சக்தி ஒன்றிஞல் தான் அரசாங்கம் ஏதேனும் மக்களுக்கு முரணுன சட்டங்களைக் கொண்டு வருவதாயிருந்தாலும், அதனைத் தடுத்து நிறுத்த முடியும். இத்தகைய சக்தி ஓர் அரசியலமைப்புப் பெறவேண்டுமாயின் அது அந் நாட்டு மக்கள் அரசியலமைப்பிற்குக் கொடுக்கும் மதிப்பைப் பொறுத்துள்ளது. அரசியல் சட்டத்திற்கும், சாதாரணச் சட்டத் திற்கும் பல வேற்றுமைகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானது அரசியல் சட்டங்களை மாற்றியமைப்பதில் உள்ளது. இந்த அடிப் படைத் தத்துவத்தைக் கொண்டுதான் இன்றைய அரசியல்வாதிகள் அரசியலமைப்பை *(1)* நெகிழும் அரசியலமைப்பு (Flexible Constitution) (2) நெகிழா அரசியலமைப்பு (Rigid Constitution) என இருவகைப் படுத்தியுள்ளனர்.

ஒரு நாட்டின் அரசியலமைப்பு மக்களின் உரிமைகளைப் பாது காக்கவும், ஓர் அரசாங்கத்தின் அதிகாரங்களை வரையறுக்கவும் சில கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளதாயுள்ளது. ஓர் அரசிய லமைப்புச் சட்ட மன்றத்தின் அதிகாரங்களையும், செயற்குழுவின் அதிகாரங்களையும், நீதித்துறையின் அதிகாரங்களையும் ஒவ்வொரு நாட்டிற்கும் தக்கவாறு பாகுபடுத்தி வரையறுத்துக் காட்டுகிறது. சிறந்த அரசியலமைப்பின் மூலம் ஒரு நாட்டில் உள்ள அரசாங்கத் தின் மூன்று பிரிவுகளிலுமுள்ள தொடர்களையும், அதிகார வரம்பு களையும் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும். இதைத் தவிர அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் கூட்டாட்சி அமைப்பில் ஏற்படும் சிக்கல்களைப் போக்கக் கூடிய ஒரே கருவி அரசியலமைப்பே யாகும். சுருங்கக் கூறின் ஒரு நாட்டின் இறைமை மக்களிடத் திலேயேதான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, மக்களின் பிரதிநிதி என்ற அளவில் அவ்விறைமை செயலாற்றும் பொழுது, அரசாங்கம், மக்களின் அடிப்படை உரிமைகளை ஆக்கிரமிக்காமல் தடுப்பதும், கூட்டாட்சியுள்ள நாடுகளில் நடு அரசு (Central Gov't) மாநில அரசுகளின் (State Gov't) பங்குகளை வரையறுக்கவும், அவ்வதிகாரங்களை அவை ஒவ்வொன்றும் மீருமலிருக்கின்றனவா என்பதைப் பார்த்துக் கொள்வதும் அரசியல் அமைப்பின் நோக்கங் களாகும்.

3. அரசியல் அமைப்புகள் எழுதும் முறை

உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் அரசியல் அமைப்புகளைக் கொண்டுள்ளது. ஆயினும் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத் தில் மாறுபட்டுள்ளது. அவ்வாறு மாறுபட்டுக் காணப்படுவதற்கு அதனை உருவாக்கியவர்களும், அந் நாட்டு மக்களுமே மிகவும்

பொறுப்பானவர்களாகிருர்கள். உதாரணமாக அமெரிக்க நாட்டின் அரசியல் அமைப்பு ஏழு பக்கங்களுக்குள் அடங்கிவிட்டது. ஆனல், நாட்டு அரசியல் அமைப்பு 325 பக்கங்களுடையதாக அமைந்து விட்டது. அரசியல் அமைப்பு, சட்டங்களேயும், விதிமுறைகளேயும் மட்டும் உள்ளடக்கிய சாசனமே ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு என நினைக்கின்றனர். ஆனல், வேறு சிலரோ, அரசியல் அமைப்பு வெறும் சட்டங்களை மட்டும் சொன்னல் போதாது. அந் நாட்டு அரசின் இலட்சியங்களேயும், நோக்கங்களேயும், தத்துவங்களேயும் சொல்லுகின்ற நாட்டின் நியம பத்திரமாக (Charter of the land) இருக்கவேண்டும் எனக் கருதுகின்றனர்.

இங்கிலாந்து நாட்டின் அரசியல் அடிப்படையிலே உருவாக்கப் பட்ட அமைப்புகள் யாவும் முதலாவது வகையைச் சேர்ந்தன வாகவே உள்ளன. முன்னுரையில் அழகிய வார்த்தைகள் இருந்த போதிலும், அவை முழுதும் விதிமுறைகளேயும், சட்டங்களேயும் கொண்டனவாக இருக்கின்றன. ஆனல். அமெரிக்கா, இந்தியா, ஹாலந்து, பெல்ஜியம் போன்ற நாடுகளின் அரசியல் அமைப்புகள் அந் நாட்டு அரசியல் இலட்சியங்களேப் பற்றி கூறுகின்றன. இந்திய நாட்டு அரசியலமைப்பு இந்திய நாட்டின் விதிமுறைகள், சட்டங்கள், இந் நாட்டு இலட்சியங்கள், இவைகளனைத்தும் தவிர, சட்ட ரீதியாகச் சொல்ல முடியாதன பலவும் அரசியல் அமைப்பில் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக நெறிசெய் நியதிகள் (Directive Principles) நம் நாட்டு அரசியல் அமைப்பிற்கு எந்த வகையில் தொடர்பு கொண்டது என்பது விளங்கவில்லை. இருப்பினும் இவைகள் நம் நாட்டு அரசியல் அமைப்பில் இடம் பெற்றுள்ளன. இதனைப் பல அரசியல் அறிஞர்கள் காந்தியக் கொள்கை என்றும் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக இப்போது உண்டாகும் அரசியல் அமைப்பில் மக்களுடைய உரிமைகளேயும், நாட்டின் இலட்சியங் களேயும் அரசாங்கத்தின் அதிகாரங்கள் எங்கெங்கு தோன்றுகின்றன என்பதைப் பற்றியும், இறைமையைப் பற்றியும் சொல்லாமல் விடுவதில்லை.

இவற்றையெல்லாம் பொதுவாக நோக்கும்பொழுது அரசியல் அமைப்பு எழுதுபவர்களிடையே எத்தகைய நோக்கும் பொதுவான தாகத் தெரியவில்லை. பொதுவாக ஒரு நாட்டின் அரசியலமைப்பு எப்படி எழுதப்பட்டுள்ளதோ அது அப்படியே நின்றுவிடுவதில்லை. எந்த வருடம் ஒரு நாட்டின் அரசியலமைப்பு எழுதப்படுகிறதோ அந்த வருட சூழ்நிலைக்கு ஒப்பவே அரசியலமைப்பு அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. உதாரணமாக 1909ஆம் ஆண்டில் தென் னுப்பிரிக்கா அரசியலமைப்பை எழுதியவர்கள் 'இந்தச் சட்டம்

1909-ம் ஆண்டின் தென்னுப்பிரிக்கச் சட்டம்' என்று வழங்கப்படும் என்று ஆரம்பித்துள்ளனர். அடுத்து நமது நாட்டு அரசியல் சாசனத்தை எடுத்துக்கொள்வோமேயாயின் இது 1949-ல் எழுதப் பட்டு 1950-ல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. நமது நாட்டு அரசியலமைப்பு இந்திய மக்களனைவருக்கும் பொதுவானதாகவும், பொருத்தமானதாகவும், அன்றைய சூழ்நிலையில் எழுதப்பட்டது. ஆயினும் இதுவரை நாம் இருபதுக்கு மேற்பட்ட மாற்றங்களை அரசியலமைப்புகளில் மேற்கொண்டுள்ளோம். இவ்வாறு மாற் றங்கள் செய்வதன் நோக்கம் அவ்வப்பொழுது இந்திய மக்களின் மாற்றங்களுக்கும், எண்ணங்களுக்கும் ஒத்துள்ளதாக இருக்கிறது. உதாரணமாக நமது அரசியல் சாசனத்தின்படி சுதந்திரம் பெற்று 20 வருடங்களுக்குப் பிறகு இந்தி நமது நாட்டு மொழியாக ஆக்கப் படவேண்டுமென்று எழுதப்பட்டிருந்தது ஆனல், 20 வருடங் களுக்குப் பிறகு இந்தியைத் தாய்மொழியாகப் பெற்றில்லாத இந் திய மக்கள் இந்த அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால் மக்களின் விருப்பத்திற்கேற்பவும் மொழிச் சட்டத்தை அமுலாக்கினர்கள். இதற்கு முக்கிய காரணம் அரசியல் சட்ட மென்பது அந் நாட்டு மக்களனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் போற்றப்பட வேண்டிய ஒன்ருகும்.

அரயசில் அமைப்பு எழுதுவதில் இத்தகைய கருத்து வேறு பாடுகள் இருக்கும்பொழுது இது இப்படித்தான் எழுதவேண்டும் என்று பொதுமக்களோ அல்லது அரசியல் மாணவர்களோ வரை யறுத்துக் கூறுதல் என்பது அவ்வளவு எளிதல்ல. இத்தகைய கஷ்டங்கள் இருந்தபோதிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைமை நீதிபதியாக இருந்த மார்ஷல் (Marshall) என்பவர் அரசியலமைப்பு எப்படி இருக்கவேண்டும் என்பதை விளக்கியுள்ளார். 'அரசிய லமைப்பு அரசாங்க நோக்கங்களையெல்லாம் தொகுத்து, அதிகாரம் செலுத்தும் முறைகளையும், வழிகளையும் ஒன்றுவிடாமல் எழுதி வைக்குமேயானல், சாதாரண மக்கள் அதைப் புரிந்துக் கொள்ள முடியாது. எனவே, அரசாங்கம் எப்படி நடக்கவேண்டும் என்ற பொதுவான செய்திகளைக் கூறுதல் போதும்' என்பதே இவரது கருத்து. இந்தக் கருத்தின்படி ஒரு நாட்டின் அரசியலமைப்பை விளக்க முற்படுவோமாயின் அதனுள் எழும் சிக்கல்களைத் தீர்த்து விட முடியும் என்பது முடியாதது. அரசியலமைப்பு எழுதப்படும் பொழுது அந் நாட்டு மக்களின் போக்கு, சூழ்நிலை இவற்றிற்குத் தக்கவாறே எழுதப்படுகிறது. சுருங்கக் கூறின் அரசியலமைப்புச் சூழ்நிலைக்கேற்பவே உருவாக்கப்படுகிறது.

அரசாட்சி ஒற்றையரசாட்சி, கூட்டு அரசாட்சி என்று இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒற்றை அரசாட்சிக்கு அரசியலமைப்பு எழுதுவது மிகவும் எளிது. ஏனெனில், கூட்டு அரசாட்சியைப்போல் ஒற்றை அரசாட்சியில் பங்கீடுகள் கிடையாது. ஒற்றையாட்சியில் செயற்குழு, சட்ட மன்றம், நீதித்துறை இம் மூன்றின் அதிகாரங்களைப் பற்றியும் இம் மூன்றிற்குமுள்ள தொடர்புகளைப் பற்றியும், இவைகளுக்கும், மக்களுக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றியும் கூறுதல் போதுமானது. ஆனால், கூட்டாட்சியில் ஒரு நாட்டின் நடு அரசிற்கும் (Central Gov't) நாட்டின் மற்ற மாநில அரசுகளுக்கும் (State Gov't) உள்ள ஆட்சிப் பங்கீடுகள், ஒற்றுமைகள் இவற்றினைத் தெளிவாகக் கூறுதல் வேண்டும். சட்ட மன்றங்களின் செயல்கள் செயற்குழுவின் செயல்களுக்கு மாறுபட்டு இல்லாமல் இருக்கவேண்டும். கூட்டாட்சியில் அரசியலமைப்பை எழுதுவது மிகவும் கடினமாகும். அரசியலமைப்பாளர்கள் கூட்டாட்சிக்கு அரசியலமைப்பை எழுதும்பொழுது (1) நடு அரசின் அதிகாரத்தை வரையறுத்து, எஞ்சியதை மாநில அரசாங்கத்திற்கு அளிப்பது; (2) மாநில அரசாங்கத்திற்கு அதிகாரங்களையளித்து விட்டு எஞ்சியதை நடு அரசாங்கத்திற்கு வழங்குவது என்றும், (3) நடு அரசின் அதிகாரத்தையும் மாநில அரசுகளின் அதிகாரத்தையும் தனித்தனியாக வரையறுப்பது என்றும் மூன்று வகைகளாகப் பிரித்தனர். இம் மூன்று முறைகளைத் தவிர அண்மையில் ஏற்பட்ட சில அரசியல் மாறுதல்களையொட்டி ஒரு புதிய முறை கையாளப்பட்டது. சில அதிகாரங்கள் நடு அரசாலும், மாநில அரசுகளாலும் பொதுவாக நிர்வகிக்கப்படும் என்றும் அவற்றிற்கிடையே பிணக்கு ஏற்படும்பொழுது நடு அரசால் செய்யப்படும் சட்டம் தான் நிலைக்கும் என்றும் அந்தப் புதிய முறை கூறுகிறது. இவ்விதம் அதிகாரங்கள் பிரிக்கப்படுவதால் சில சமயங்களில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக இந்திய நாட்டை எடுத்துக் கொள்வோமாயின் வரி விதிகளில் சிலவற்றிற்கு நடு அரசிற்கும், மற்றும் சில வரிகளுக்கு மாநில அரசுகளுக்கும் உரிமைகள் உள்ளன. இம்மாதிரியான விதிகளில் நடு அரசாங்கம் ஏதேனும் விதிகளை ஏற்படுத்தினால் அது மாநில அரசுகளைப் பாதிக்கத்தான் செய்கின்றது. இவ்விதம் ஏற்படும் பிணக்குகளைச் சட்ட மன்றமே தீர்த்து வைக்கவேண்டியுள்ளது. ஆகையால் கூட்டாட்சி அரசின் அரசியலமைப்பைத் தயாரிப்பது, அவ்வளவு எளிதல்ல. இவ்வித இடர்ப்பாடுகளைத் தவிர்க்கக் கூட்டாட்சி அரசியலமைப்பை எழுதுபவர்கள் ஒரே ஒரு பட்டியலை மட்டுமே தயாரித்தல் வேண்டும். அந்தப் பட்டியல் நடு அரசு அதிகாரத்தின் பட்டியலா? அல்லது நாடுகளின் பட்டியலா? என்ற கேள்வி எழும். பொதுவாக

நாடுகளின் பட்டியலே வரையறுத்து எஞ்சியுள்ள அதிகாரங்களை நடு அரசிற்கு விட்டுவிடுவது சிறந்தது என்று கருதப்படுகிறது. ஏனெனில், காலப்போக்கினுல் அரசியலமைப்புகளில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. அம் மாறுதல்களுக்கேற்ப அரசியலமைப்பும் மாற்றி அமைக்கவேண்டியிருக்கும். ஆகையால் மேற்கூறிய முறையே சிறந்தது என்று பெரும்பாலோரால் கருதப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் அரசியலமைப்பினை எழுதும்பொழுது இவ்வித பிரச்சனைகளை மனதில் நினைத்ததாகத் தெரியவில்லை. இன்றைய உலகில் கூட்டாட்சியினைப் பெற்றுள்ள நாடுகளில் நடு அரசிற்கு அதிக அதிகாரங்கள் இருப்பின் அது சர்வாதிகார ஆட்சியாகத் தோற்றம் அளிக்கும் என்று கருதுகிறார்கள். ஆகையால், மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்ற பிரச்சனை பெரும் தீயாக அரசியலில் பரவியுள்ளது. உதாரணமாக இந்திய அரசாங்கம் கூட்டாட்சி அமைப்புள்ளதேயாகும். நமது அரசியல் அமைப்பின்படி நடு அரசிற்கு அளவிற்கு அதிகமான அதிகாரம் நடு அரசின் கையில் இருப்பதாலும், மாநில அரசுகள் சிறு செயல்களுக்குக்கூட நடு அரசினையே நாடவேண்டியுள்ளது. இந்நிலை மாறி மாநில அரசுகள் அதிக அதிகாரம் பெறவேண்டும் என்று தமிழ்நாடு, இன்னும் சில மாநில அரசுகளும் நடு அரசாங்கத்துடன் போராடி வருகின்றன.

இவ்வித இடர்ப்பாடுகள் ஒற்றையாட்சியின் அரசியலமைப்பை எழுதுபவர்களுக்கு இல்லையா? என்ற கேள்வி எழுமாயின், அதற்கு எதிர்மாறான விடையே கிடைக்கிறது. கூட்டாட்சி அல்லது ஒற்றை ஆட்சி இவ்விரண்டில் எவ்வகை அரசியல் அமைப்பைப் பெற்றிருப்பினும் இரண்டும் ஒவ்வொரு வகையில் இடர்ப்பாடுகள் நிறைந்ததாகவே காணப்படுகின்றன. பொதுவாக மக்களுக்கு வழங்கும் அரசியல் உரிமைகள் ஒவ்வொன்றிலும் கட்டுப்பாடு இருப்பதுதான் நல்லது. உதாரணமாக ருஷ்யாவின் அரசியலமைப்பை நோக்குவோமாயின் கட்டுப்பாடற்ற விதிகளைப்போல் நமக்குத் தோன்றுகிறது. ஆயினும், அவற்றைக் கூர்ந்து நோக்குவோமாயின் ஒவ்வொரு உரிமையும் அதிகமான அரசியல் கட்டுப்பாடு உடையதாக இருப்பதை நன்கு உணரமுடிகிறது. இவ்விதமாக ஒரு நாட்டின் மக்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் கட்டுப்பாடுடையதாக இருப்பதின் காரணத்தை ஆராய்வோமாயின், கட்டுப்பாடுகளுடன் கூடிய சட்டங்களே ஒரு நாட்டின் அமைதியை நிலைநாட்ட முடியும் என்பதை உணரலாம். அதே சமயம் கட்டுப்பாடுகள் அளவுக்கு மீறியதாயும் போய்விடக்கூடாது. அடுத்துச் சட்ட மன்றம், நீதி மன்றம் இவற்றினைப் பாகுபடுத்தி அவற்றின் செயல்கள் என்னென்ன, கட்டுப்பாடுகள் என்னென்ன என்பதைத் தெளிவு

படுத்திக் கொள்ளவேண்டும். சட்டம், உரிமை, சமத்துவம், ஒழுக்கம், நெறி, பண்பு முதலிய வார்த்தைகள் சூழ்நிலைக்கேற்றவாறே விளக்கம் பெறக்கூடிய நிலையில் உள்ளன.

இத்தகைய சிக்கல்களையெல்லாம் மனதில் கொண்டுதான் அரசியலமைப்பு எழுதுவோர் மக்கள் உரிமையைப்பற்றி பேசும் போது சட்டங்களாகவோ அல்லது விதிமுறைகளாகவோ அவற்றைச் சொல்லவேண்டாம் என்றும் அதற்குமாருக விரும்பத்தக்க இலட்சியங்களாக இருத்தல் போதுமென்றும் கருத்தில் கொண்டனர். உதாரணமாக இந்திய நாட்டு அரசியலமைப்பில் நாட்டுக் கொள்கைகளுக்கான நெறிசெய் நியதிகள் (Directive Principle of State Policy) போன்ற ஓர் அத்தியாயம் காணப்படுகிறது. இக் கொள்கைகள் அரசியல் அடிப்படையில் அமைக்கப்பட்டதேயன்றி சட்டங்கள் முன்னிறுத்துதல் கூடாது. பொதுவாக ஒரு நாட்டின் அரசியலமைப்பு அந் நாட்டு மக்களனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கவேண்டும். ஒரு சிறந்த அரசியலமைப்பு அரசு முறைகள் எவ்வாறு நடக்கவேண்டும் என்பது பற்றிய முறைகள் கொண்டதாகும் நாட்டு மக்களின் உரிமைகளைக் காக்கக் கூடியதாகவும் அமைந்திருந்தால்தான் ஒரு நாட்டு அரசியலமைப்பு மதிப்பையும், உயர்வையும், சிறப்பையும் பெற்றுள்ளதாக இருக்கும்.

4. அரசியல் அமைப்புகளின் வகைகள்

அரசியல் அமைப்புகள் பல உள்ளன. ஆயினும் எல்லா அரசியல் அமைப்புகளும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அரசியல் அமைப்புகளைப் பழைய அரசியல் அறிஞர்கள் ஒரு வகைப்படுத்தியும், இன்றைய அரசியல் அறிஞர்கள் வேறொரு வகைப்படுத்தியும் பிரித்துள்ளனர். இவ்வாறு வகைப்படுத்துதல் அவசியம் என்று கொள்ளுதல் முடியாது. ஏனெனில், அரசியல் அமைப்புகள் அனைத்தும் இறைமையை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு, அந் நாட்டு மக்களின் மனப்போக்கு இவ்விரண்டையும் கருத்தில் கொண்டு, அரசியல் அமைப்புகள் அமைக்கப்படுகின்றன.

அரசியல் அமைப்புகளை முறையாக வகைப்படுத்தியவர்களில் முதன்மையாகக் கருதப்படுகிறவர் அரிஸ்டாடில் (Aristotle) இவர் வாழ்ந்த காலத்தில் இருந்த நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளின் அரசியல் அமைப்பினை ஆராய்ந்து, அரசியல் அமைப்புகளைக் கீழ்க் கண்டவாறு வகைப்படுத்தினர். இவரின் அரசியல் கருத்துப்படி,

அரசியல் அமைப்புகளை, அதிகாரம் யாரிடத்தில் இருக்கின்றது என்பதைக் கொண்டும், அது எம் முறையில் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கொண்டும் வகைப்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். இவரின் அரசியல் கருத்தின்படி, ஆட்சியை ஒருவரின் கீழ் உள்ள ஆட்சி என்றும், ஒரு சிலரின் கீழ் உள்ள ஆட்சி என்றும், பலபேரின் கீழ் உள்ள ஆட்சி என்றும் மூன்று வகைகளாகப் பிரித்துள்ளார். இம் மூன்று பிரிவினையையே நல்லாட்சிகள் என்றும், தீயவைகள் என்றும் இருவகைப்படுத்தி உள்ளார். ஒருவரின் கீழ் உள்ள நல்லாட்சியை மன்னர் ஆட்சி என்றும் (Monarchy) அதுவே தீயவையாக இருந்தால் கொடுங்கோன்மை (Anarchy) என்றும் பிரித்தார். இரண்டாவதாகக் கூறப்பட்ட ஒரு சிலரிடம் இருக்கும் நல்ல ஆட்சியை உயர்குடி ஆட்சி (Aristocracy) என்றும், தீயவைகளாக இருந்தால் சிறு குழு ஆட்சி (oligrachy) என்றும், மூன்றுவதாகக் கூறப்பட்ட பலரிடம் இருக்கும் ஆட்சியை நல்முறையில் இருந்தால் பாலிட்டி (Polity) என்றும், தீயவையாக இருந்தால் மக்களாட்சி (democracy) என்றும் பிரித்துள்ளார். இவர் வகைப்படுத்திய அரசியல் அமைப்புகள் இன்றைய அரசியல் அமைப்பிற்கு அவ்வளவு சிறந்தது என்று கருதுவதற்கு இல்லை. ஏனெனில், இருபதாவது நூற்றுண்டில் உலக நாடுகள் அனைத்திலும் மக்கள் ஆட்சியே சிறந்த ஆட்சி என்று போற்றப்படுகின்றது. இன்றைய அரசியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அரிஸ்டாட்டில் கூறிய பாலிட்டி என்ற வார்த்தையினை ஆராய்வோமாயின், முற்றிலும் மாறுன கருத்தே தருகிறது. அவர் கூறிய பலபேர் கூடிய நல்லாட்சி என்பது மத்தியதர வகுப்பினரையே கொண்டுள்ளதாக இருந்திருக்க வேண்டும். ஏழைகளால் நடைபெறும் ஆட்சியையே அவர் மக்களாட்சி என்று குறிப்பிட்டுள்ளார்.

இவரைப் பின்பற்றிய பல அரசியல் அறிஞர்கள் மிகவும் சிறந்தவர்களாகக் கருதப்படுபவர்கள் ஆப்ஸ் (Hobbes), லாக் (Locke) ரூஸோ (Rousseau) என்ற மூவரும் ஆவர். இவர்களுள் முதன்மையாகத் திகழும் ஆப்ஸ் என்பவர் அறம், மக்கள் நலம் இவை இரண்டினையும் அடியோடு ஒதுக்கிவிட்டு இறைமை ஒன்றினையே அடிப்படைக் கருத்தாகக் கொண்டு அரசியல் அமைப்பு இருக்கவேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார். இவரின் கருத்துப்படி இறைமை ஒருவனிடம் இருந்தால் மன்னர் ஆட்சி என்றும், ஒரு சிலரிடம் இருந்தால், உயர்குடி ஆட்சி என்றும், பலரிடம் இருந்தால் மக்களாட்சி என்றும் பிரித்தார். இவர் அரிஸ்டாட்டிலைப் போல் இறைமையைச் செலுத்தும் முறையை ஒட்டி நல்ல அரசு என்றும், தீய அரசு என்றும் வகைப்படுத்தவில்லை. இரண்டாவதாக வரும்

லாக் அவர்கள் தனது முன்னோடியான ஆப்ஸ் அவர்கள் கருத்தினையே முழுமையாகப் பின்பற்றினார். ஆயினும், இவர்கள் இருவரின் அரசியல் கருத்துகளில் வேறுபாடுகள் இருக்கத்தான் செய்தன. லாக் அவர்களின் அரசியல் கருத்துப்படி ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு, அந் நாட்டு மக்களுக்கு ஒவ்வாத முறையில் அமைக்கப்பட்டு இருந்தால் அதனை அந் நாட்டு மக்கள் மாற்றி அமைக்கவும் முடியும் என்று கூறுகின்றார். இதன் மூலம் மக்களின் உரிமை, அவர்களின் அரசியல் அறிவு இவை இரண்டும் இக் கால அரசியல் அமைப்பினைப் போல் உள்ளன. மூன்றாவதாகக் கூறப்பட்ட ரூஸோ அவர்கள், ஆப்ஸ் லாக் இவர்கள் இருவருடைய கருத்தினையும் இணைத்து ஒரு புதிய அரசியல் கருத்தினை அளித்துள்ளார். இவரது கருத்துப்படி மக்களுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இவரின் கூற்றுப்படி ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு அம் மக்களுக்கு ஒவ்வாததாக அமைந்திருப்பின், அந் நாட்டு மக்கள் புரட்சிகளில் ஈடுபட்டும் கூட அரசாங்கத்தினை மாற்ற முடியும் என்று கூறுகிறார். இவர்கள் வாழ்ந்த காலத்தே வாழ்ந்த மாண்டெஸ்கோ (Montequeu) என்னும் பிரெஞ்சு நாட்டு அரசியல் அறிஞர் இம் மூவர் அரசியல் கருத்துகளிலிருந்தும் வேறுபட்டார். மக்களிடம் இறைமை இருந்தால் குடியரசு என்றும், தனி மனிதன் ஒருவனிடமிருந்து சட்டப்படி ஆட்சி செலுத்தினால் மன்னர் ஆட்சி என்றும், எதேச்சையாக நடந்தால் அதைக் கொடுங்கோன்மை என்றும் பிரித்தார். இவ்வாறு பல அரசியல் அறிஞர்கள் பலவகையான அரசியல் கருத்துகளை அளித்ததற்குக் காரணம் அவரவர்கள் வாழ்ந்த காலமே ஆகும். 18-ம் நூற்றாண்டுக்குப் பிறகு அரசியல் வளர்ச்சி அளவிற்கு மீறியதாகவும், மிகவும் விரிவானதாகவும் இருந்தது. ஆகையால், நாம் அரசியலமைப்புகளையும் வகைப்படுத்த வேண்டுமாயின் பதினெட்டாம் நூற்றாண்டுக்குமுன் வாழ்ந்த அரசியல் அறிஞர்களின் கருத்துகளை மனதில் கொள்ள முடியாது. இன்றைய அரசியல் உலகிற்கு ஒப்ப பல அடிப்படைத் தத்துவங்களை மனதில் கொண்டே அரசியல் அமைப்புகளை வகைப்படுத்தவேண்டும்.

முன்பே கூறியதுபோல் பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு இங்கிலாந்து, மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் ஒரே மாதிரியான சம்பவங்கள் அரசியல் சூழ்நிலையிலும், பொருளாதார சூழ்நிலையிலும் ஏற்பட்டுப் பல மாறுதல்களை அளித்தன. இவ்வாறு ஏற்பட்ட பல மாறுதல்களை அடிப்படையாகக் கொண்டுதான் இன்று நாம் அரசியல் அமைப்புகளை வகைப்படுத்தி இருக்கின்றோம். ஒவ்வொரு அரசும் தன்னுள் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவைகளைச் செயற்குழு என்றும், சட்டமன்றம் என்றும், நீதித் துறை என்றும்

கூறுகின்றோம். இவை தவிர, ஒரு நாட்டின் அரசியலமைப்பு அந் நாட்டு மக்களைப் பொறுத்தே அமைக்கப்பட்டுள்ளது. நாட்டின் தன்மை, மக்களின் தன்மை, அரசியலமைப்பின் தன்மை, சட்ட மன்றத்தின் தன்மை ஆட்சிமுறையின் தன்மை, நீதித்துறையின் தன்மை, வாக்குரிமை இவை அனைத்தையும் பொறுத்தே ஒரு நாட்டின் அரசியலமைப்பு எழுதப்படுகிறது.

நாட்டின் தன்மை என்று கூறும்போது அந் நாடு சிறிய நாடா அல்லது பெரிய நாடா என்று தெரிந்துக்கொள்ள வேண்டும். மேலும், அந் நாட்டு மக்கள் ஒருமுக ஆட்சியை (unitary) பெற்றனரா? அல்லது கூட்டாட்சியைப் (Federal) பெற்றுள்ளனரா என்று அறிந்துக்கொள்ளவேண்டும். உதாரணமாக இங்கிலாந்து நாட்டை ஒருமுக ஆட்சிக்கும், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளைக் கூட்டாட்சி முறைக்கும் கூறலாம்.

மக்களின் தன்மையினை ஆராய்வோமாயின் அவர்கள் எத்தகைய அரசாட்சியினை விரும்புகிறார்கள் என்பதனை ஆராய வேண்டும். உதாரணமாக இங்கிலாந்து நாட்டு மக்கள், மக்களாட்சியினைப் பெறுவதற்கு முன் மன்னர் ஆட்சியையே கொண்டிருந்தார்கள். மன்னர் ஆட்சியில் உள்ள குறைகளை நன்கு உணர்ந்த பிறகு மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு பல போராட்டங்களை நடத்தி வெற்றி பெற்று இன்று நாம் காணும் மக்களாட்சியினைப் பெற்றார்கள். அதேபோன்று ஐரோப்பிய சரித்திரத்தில் மிக உன்னத இடத்தைப் பெற்றுள்ள பிரெஞ்சு நாட்டுப் புரட்சி பிரெஞ்சு நாட்டு மக்களின் எண்ணத்தை நன்கு சித்தரித்துக் காட்டுகின்றது. நமது தாய் நாடாகிய இந்திய நாட்டை எடுத்துக்கொள்வோமாயின், அடிமை வாழ்விலிருந்து விடுதலைப் பெற்றுச் சுதந்திரமான மக்களாட்சியைப் பெற நமது நாட்டு மக்கள் செய்த தியாகங்கள் பல நம் கண்முன்னே நிற்கின்றன. இவ்வித உதாரணங்களின் மூலம் நாட்டு மக்களின் தன்மை ஒரு நாட்டின் அரசியல் அமைப்பிற்கு உயிர்நாடி போன்றது என்பது நன்கு விளங்குகின்றது.

அரசியல் அமைப்பின் தன்மை எழுதப் பெற்றுள்ளதா? (written) அல்லது எழுதப் பெறாமல் பல பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதா (unwritten and convention) என்று அறிதல் வேண்டும். இதனைத் தவிர ஒரு நாட்டின் அரசியல் அமைப்பில் உள்ள சட்டங்களை மாற்றி அமைக்கும்போது நெகிழும் வகையா (Flexible) அல்லது நெகிழா வகையைக் (Rigid) கொண்டுள்ளதா என்று ஆய்ந்து அறிதல்வேண்டும்.

சட்ட மன்றத்தின் தன்மையை ஆராயும்போது ஒரு சபையைப் பெற்றுள்ளதா (unicameralism) அல்லது இரு சபையைப் பெற்றுள்ளதா (bicameralism) என்று தெரிந்துக் கொள்ளவேண்டும்.

ஆட்சிமுறையின் தன்மை அல்லது செயற்குழுவின் தன்மை என்று ஆராயும்பொழுது செயற்குழு, சட்ட மன்றத்துக்குப் பொறுப்புள்ளதா அல்லது சட்ட மன்றத்திற்குப் பொறுப்பற்றதா என்று தெரிந்துக் கொள்ளவேண்டும். இதனைத் தவிர, செயற்குழு உண்மையான அதிகாரம் பெற்றுள்ளதா (Real executive) அல்லது பெயரளவில் அதிகாரம் பெற்றுள்ளதா (Nominal executive) என்றும் தெரிந்துக் கொள்ள வேணடும். உதாரணமாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆட்சிமுறையின் தன்மை தலைமை முறைத் துறைத்தனம் (Presidential Govt.) என்று கூறுகிறோம். அமெரிக்கத் தலைவர் (President) அந் நாட்டுச் சட்ட மன்றத்திற்குப் (Congress) பொறுப்பற்றவர். இவர் ஆட்சி முறையை அமெரிக்க நாட்டு மக்களின் விருப்பத்திற் கேற்ப சுயேச்சையாக ஆட்சி செலுத்த முடியும். ஆனால் இந்திய நாட்டு முதன் மந்திரியும் அவர்களுடைய செயற்குழு (Cabinet)வும் சட்ட மன்றத்திற்கும், மக்களுக்கும் பொறுப்புள்ளவர்களாக நடந்துக் கொள்ளவேண்டும். மேலும், இந்திய நாட்டின் தலைவர் அல்லது ஜனாதிபதி அவர்களுக்கு உண்மையான அதிகாரம் இல்லை. ஆகையால் இவரை நாம் பெயரளவில் செயற்குழுத் தலைவர் (Nominal executive) என்று குறிப்பிடுகின்றோம். இந்திய நாட்டில் ஏற்படுத்தும் எல்லாச் சட்டங்களும் இவர் கையொப்பம் பெற்ற பின்பே நாட்டின் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆயினும் நாட்டின் பரிபாலனத்தை முதன் மந்திரியும், அவருடைய மந்திரி சபையுமே நடத்துவதால், மந்திரி சபையை உண்மையான செயற்குழு (Real executive) என்று கூறுகின்றோம்.

நீதித் துறையின் தன்மை இரண்டு முறையாகப் பிரிக்கப்படுகிறது. எல்லோருக்கும் ஒரே வகையான சட்டம் என்ற முறையை ஒரு நாடு கையாளுமேயானால் அதனைச் சட்ட ஆதிக்கம் (Rule of Law) என்றும் ஆட்சித் துறையில் உள்ளோருக்கு வேறு சட்டம் என்ற முறையான ஆட்சித் துறைச் சட்டம் (Administrative Law) என்று பிரித்துள்ளார்கள் ஒரு நாட்டில் உள்ள வயது வந்த மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை உண்டா? அல்லது பணம், பதவி, கல்வி இவற்றை உடையவர்க்கு மட்டும் வாக்குரிமை உண்டா என்று அறிதல் வேண்டும்.

மேற்கூறிய ஏழு வகைகளில் ஒரு நாடு எந்த வகையைச் சேர்ந்தது என்று ஆராய்ந்த பின்பு அந் நாட்டின் அரசியலமைப்

யைப்பற்றி நாம் நன்கு உணர்ந்துக் கொள்ள முடியும். உதாரண மாக நாம் இங்கிலாந்து நாட்டை எடுத்துக் கொள்வோமானல் அது ஒருமுக அரசாங்கம் (Unitary form of Govt.) எழுதப் பெருத அரசியல் அமைப்புடையது (Unwritten Constitution) நெகிழும் வகை (Flexible) இரு பிரிவைக் கொண்ட சட்ட மன்றம் (Bicameralism) சட்ட மன்றத்திற்குப் பொறுப்புள்ள ஆட்சிமுறை (Parliamentary form of Govt.) சட்ட ஆதிக்கம் (Rule of Law) என்று கூறவேண்டும். இதே போன்று உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டினையும் எடுத்து வகைப்படுத்த முடியும். அப்படி வகைப் படுத்தும் போது ஒரு நாட்டிற்கும், மற்ருெரு நாட்டிற்கும் உள்ள வித்தியாசங்களை நம்மால் நன்கு அறிய முடியும்.

இம் முறையின்படி அரசியல் அமைப்புகளைப் பிரிப்பது என்பது எளிதல்ல. மேற்கூறிய ஏழு பிரிவுகளில் இது எவ்வகையைச் சேர்ந்தது என்பதைப் பிரிவு படுத்தி ஆராய்ந்து ஒழுக வேண்டி யுள்ளது. இது எளிதற்ற முறையாக இருப்பினும் இக் கால அர சியல் நிலைக்கும் இம் முறையே மிக்க உன்னதமானதாக உள்ளது. இந்த முறையின் மூலமாகத்தான் நாம் திருப்திகரமான அரசியல் அமைப்பைத் தெரிந்துக் கொள்ள முடியும். இம் முறை பிரைஸ் பிரபு (Lord Bryce) மாரியாட் (Marriot) போன்ற அரசியல் அறிஞர்கள் காட்டிய வழிகளைப் பின்பற்றி உள்ளது. இதில் பல சிறப்பு அம்சங் கள் இருந்த போதிலும், பல குறைபாடுகளும் உள்ளன. உதாரண மாக மேற்கூறிய முறையில் அரசியல் அமைப்பினை ஆராயும்போது அந் நாட்டின் சிறுபான்மையோரின் நிலை, அரசியலமைப்பின் வளர்ச்சியில் மக்கள் கொள்ளும் நேர்முகமான பங்கு, அரசியல் அமைப்பு உருவாக்கும் போது, பொருள் இயல் (Economics) இவற்றின் தொடர்பு இவற்றைப் பற்றி எல்லாம் நம்மால் அறிந்துக் கொள்ள முடியவில்லை. இம்மாதிரியான சிறு சிறு குறைபாடுகள் இருப்பினும் இம் முறைதான் ஓரளவு முழுமையான அரசியல் அமைப்பைப்பற்றி அறிந்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கிறது.

5. பழைய, அரசியல் அமைப்புகளின் வகைகள்

அரசியல் அமைப்புகள் பிரிக்கப்படும்போது அவற்றின் தன் மையை ஒட்டிப் பிரிக்கப்படுகின்றன. இவ்வாறு பிரிக்கும்போது எழுதி வைக்கப்பட்ட அரசியல் அமைப்பு, எழுதி வைக்கப்படாத அரசியல் அமைப்பு என இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் அரசாங்கம் எம் முறையில் நடத்த வேண்டும் என்பதைப்பற்றியும், சட்ட மன்றம், செயற்குழு, நீதித்துறை இம் மூன்றின் அமைப்புகள், கடமைகளைப்பற்றியும் ஒரே புத்தக வடி

வில் எழுதப்பட்டிருந்தால் அதனை எழுதி வைக்கப்பட்ட அரசியல மைப்பு என்று கூறுகின்றனர். உதாரணமாக இந்திய நாட்டின் சட்டப் புத்தகத்தையும் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு இவ்வாறு ஒரு புத்தக வடிவ மாக அமைக்கப் படாமல் இருந்தால் அதனை எழுதி வைக்கப்படாத அரசியல் அமைப்பு என்று கூறப்படுகின்றது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறப்படுவது இங்கிலாந்து நாட்டின் அரசியல் அமைப்பே ஆகும். ஆனால், உண்மையில் இங்கிலாந்து நாட்டின் அர சியல் அமைப்பு இவ்வகையைச் சேர்ந்ததுதானா என்று ஆராய்வோ மானால் இந் நாட்டில் எழுதப்பட்ட பல அரசியல் சாசனங்கள் இருப்பதை அறிகின்றோம். உதாரணமாக 1689-ம் ஆண்டில் உண் டான உரிமைகளின் சாசனம் (Bill of Rights) 1911-ம் ஆண்டில் பிர புக்களின் சபை (House of Lords) அதிகாரங்களைக் குறைக்கவும், பாராளுமன்றத்தின் காலத்தைக் குறைக்கவும் ஏற்படுத்தப் பெற்ற பாராளுமன்றச் சட்டங்கள் (Act of Parliament) இவையனைத்தும் அரசியல் அமைப்பைப்பற்றிய சட்டங்களேயாகும். இங்கிலாந்து நாட்டின் அரசியல் அமைப்பு, நமது இந்திய நாட்டின் அரசியல் அமைப்பை ஒரே புத்தக வடிவமாக வைத்திருப்பது போல் இல்லை யென்றாலும், எழுதப் பெற்ற பல அரசியல் சட்டங்கள் உள்ளன. ஆகையால் இங்கிலாந்து நாட்டின் அரசியல் அமைப்பு எழுதப் பெறாத அரசியல் அமைப்பைக் கொண்டுள்ளது என்று குறிப்பிடு வது தவறானதாகும். மேலும் இந் நாட்டில் எழுதப்பட்டுள்ள சட்டங்களை விட நெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் வழக் காறுகளே நிலையாக நின்றுவிட்டன. எம். ஈ. பௌட்மி (Boutmy) என்னும் ஆசிரியர் “ ஆங்கில மக்கள் தங்கள் அரசியல் அமைப்பின் பகுதிகளைச் சரித்திரத்தின் அலைகள் எங்கெங்கு எப்போதெல்லாம் அடித்துக் கொண்டு வந்து வைத்தனவோ அவற்றையெல்லாம் அங்கங்கே அப்படியே ஏற்றார்கள். அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து ஒழுங்குப் படுத்தி முழுமையான ஓர் அரசியல் அமைப் பாக அவர்கள் செய்யவில்லை ” என்று கூறுகிறார். ஆகையால் பேராசிரியர் டாக்கவில்லி (Prof. Tocqueville) கூறியது போல் அந் நாட்டிற்கு அரசியல் அமைப்பே இல்லை என்று கூறிவிட முடியாது.

கடந்த இரு நூற்றாண்டுகட்குள் உண்டானவையே எழுதி வைக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்புகள். முதன் முதலில் இவ் வெண்ணம் தோன்றிய நாடு அமெரிக்க நாடுதான். முதன் முதலில் ஆங்கில நாட்டினின்றும் பிரிந்த அமெரிக்க நாடுகள் தங்கள் ஒவ் வொரு நாடுகளுக்கும் தனித்தனியாக அரசியல் அமைப்பை எழுதி

வைத்துக் கொண்டன. 1789-ம் ஆண்டில் இந் நாடுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகள் என ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொண்டன. 1791-ம் ஆண்டு தோன்றிய புரட்சிக்குப் பின்பு பிரான்சு நாடுகள் தங்களுக்கென்று ஓர் அரசியல் அமைப்பை எழுதி வைத்துக் கொண்டதால் அதன்பின் ஐரோப்பாவில் இதர நாடுகள் ஒன்றன் பின் ஒன்ருய் அரசியல் அமைப்புகளை எழுதி வைத்துக் கொள்ள ஆரம்பித்தன.

இத்தகைய எழுதி வைக்கப்பட்ட அரசியல் அமைப்புகளை எடுத்துக் கொண்டு ஆராயும் பொழுது, ஒவ்வொன்றும் ஒரு சூழ் நிலையை ஒட்டியே எழுதப்பட்டுள்ளது என்பது விளங்கும். பேரா சிரியர் சி. எப். ஸ்ட்ராங்கு (C F. Strong) என்பவர் "நாட்டு மக்கள் உயர்ந்த அரசியல் அறிவாலும், உணர்ச்சியாலும் உந்தப் படும்பொழுதுதான், அரசியல் அமைப்பை எழுத முன் வந்தார் கள்" என்று கூறினர். ஆனல், இவர் கூற்றை அப்படியே எடுத்துக் கொள்ள முடியாது. இவரின் கருத்துப்படி இங்கிலாந்து நாட்டை நாம் எடுத்துக்கொள்வோமாயின் அவர்களுக்கு அரசியல் அமைப்பு ஒரு புத்தக வடிவில் இல்லாததால் அவர்கள் அரசியல் துறையில் பின் தங்கியவர்கள் என்று எண்ணத் தோன்றும். ஆனல், உண்மையில் இன்று உலகில் காணப்படும் பலவகையான மக்களாட்சித் தத்துவங்களுக்கும், அரசியல் முறைகளுக்கும் தாயாக நின்று வழிகாட்டுவது இங்கிலாந்து நாடும், அந் நாட்டின் அரசாட்சியுமே யாகும். ஒற்றை ஆட்சியோ, கூட்டாட்சியோ சட்ட மன்றத்தின் மூலம் மக்களாட்சியை நடத்த முடியும் என்பதனை உலகுக்குக் காட்டிய பெருமை அந்த நாட்டையே சேரும்.

உலக நாடுகளில் எழுதிவைக்கப்பட்ட அரசியலமைப்புகளை நோக்குவோமாயின் அவை ஒவ்வொன்றும் பல சூழ்நிலையை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளன என்பது நன்கு விளங்கும். அவ்வாறு ஏற்பட்ட பல சூழ்நிலைகளில் முக்கியமான சிலவற்றை நாம் இங்கு நோக்குவோம்.

(1) ஒரு நாட்டில் வாழும் ஒவ்வொரு தனி மனிதனும், தங்களு டைய சுதந்திரம் பறிபோகாமல் பாதுகாத்துக் கொள்ளவும், அரசாங்கத்தின் அளவிற்கு மீறிய அதிகாரத்தை வரம்பிற்குள் வைக்கவும் மக்கள் விரும்பியது.

(2) மன்னனே அல்லது மக்களோ ஒருவருக்கொருவர் நம்பிக் கையுடனும், திருப்தி கொண்டும் வாழவேண்டும் என்ற நோக்கம் கொண்டு அரசியல் சாசனம் எழுதினர்கள்.

(3) புதிதாகச் சுதந்திரம் அடைந்த நாடுகள் நிரந்தரமாகவும் எல்லாருக்கும் புரிவதற்காகவும் ஏற்படுத்திக்கொள்ளும் அரசியல் அமைப்புகளில் சில.

(4) இதுவரை தனித்தனியாகச் சிதறுண்டு கிடந்த பல நாடு கள் ஒன்று சேர்ந்து பல காரணங்களுக்காகக் கூட்டாட்சி ஏற்படுத் திக்கொள்ளும்பொழுது உண்டாகும் அரசியலமைப்புகள் சில.

(5) மன்னராட்சியும், உயர்குடி மக்களாட்சியும் நடந்துவந்த 18-ம், 19-ம் நூற்றுண்டில் தோன்றிய ஒருசில அரசியல் சாசனங்களை நோக்குவோமாயின் அவைகள் மன்னனுலேயே தன் சந்ததியாரைக் கட்டுப்படுத்தவும், அரசாங்கத்தை ஒழுங்கான முறையில் நடத்து வதற்கும் தயாரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பது 1814ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டில் பதினெட்டாம் லூயி மன்னனுல் எழுதப்பட்ட அரசியல் சாசன மாகும்.

(6) தன்னுடைய பழைய அரசு முறைகளைக் கைவிட்டுப் புதிய தோர் அரசியல் அமைப்பை ஒருநாடு ஏற்படுத்திக் கொள்வது பல.

இம்மாதிரி பல சூழ்நிலைகளில் ஏற்படும் அரசியல் அமைப்புகள் யாவுமே எழுதி வைக்கப்பட்டனவாகவே உள்ளன. எழுதி வைக் கப்பட்ட, எழுதி வைக்கப்படாத அரசியல் அமைப்புகளில் முக்கிய மான சில வேற்றுமைகள் உள்ளன. முதலாவதாக அரசியல் சட்டத்தில் ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டி இருந்தால் எழுதி வைக்கப்படாத அரசியலமைப்பில் சாதாரணச் சட்டங்களைத் திருத்துவது போல் திருத்திவிட முடியும். ஆனுல், எழுதி வைக்கப் பட்ட அரசியலமைப்பில் அரசியல் சாசனத்தை மாற்றும்பொழுது பல கட்டுப்பாடுகள் உள்ளன.

இரண்டாவதாக எழுதி வைக்கப்படாத அரசியல் அமைப்பின் வளர்ச்சி வழக்காற்றின் (convention) வலிமையைப் பொறுத்தது. ஆனுல், எழுதி வைக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்பில் வழக்காற் றிற்குச் சிறிது இடமே அளிக்கப்படுகிறது.

மேற்கூறிய இவ்விரு காரணங்களை மனதில் கொண்டு எழுதி வைக்கப்பட்ட, எழுதி வைக்கப்பெருத அரசியல் அமைப்புகள் என்று பிரிப்பது சாலப் பொருந்தாததாகும். ஏனெனில், எழுதி வைக்கப் பட்ட அரசியல் சாசனத்தைக் கொண்டுள்ள பிரெஞ்சு நாடு, தனித்தனியாகப் பல சட்டங்களையும் வைத்துள்ளது. அமெரிக்க நாட்டை நோக்குவோமாயின் அவர்களது அரசியல் சட்டத்தின்படி

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைவர் (President) மறைமுகத் தேர்வின் (indirect-election) மூலம் தேர்ந்தெடுக்கலாம் என்றுள்ளது. ஆனால் வழக்காற்றின்படி அந் நாட்டின் தலைவர்கள் நேர்முகத் தேர்தலின் மூலமே (Direct-election) தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதேபோல் ஒரே புத்தகமாக இங்கிலாந்து நாட்டின் அரசியல் சட்டம் அமைக்கப் பெறவில்லையாயினும், அந் நாட்டில் பல அரசியல் சட்டங்கள் தனித்தனியாக உள்ளன. இவ்வுதாரணங்களின் மூலம் நமக்கு ஓர் உண்மை நன்கு புலனாகின்றது. பழைய விதிமுறைகளை மேற்கொண்டு அரசியல் அமைப்புகளை எழுதி வைக்கப்பட்ட, எழுதப் பெறாத என்று பிரித்திருப்பது அவ்வளவு சிறந்ததாகக் கருதப்படவில்லை. ஆகையால் பல அரசியல் ஆராய்ச்சியாளர்கள் அரசியல் அமைப்புகள் நெகிழும் அரசியல் அமைப்பு (Flexible Constitution) என்றும், நெகிழா அரசியலமைப்பு (Rigid Constitution) என்றும் வகைப்படுத்தியுள்ளனர்.

6. புதிய அரசியல் அமைப்புகளின் வகைகள்

அரசியல் அமைப்புகளின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு அமைப்புகளை வகைப்படுத்தும்பொழுது எழுதப்பட்ட அரசியலமைப்பு எழுதப்படாத அரசியலமைப்பு என்று இரண்டு வகைகளாகப் பிரித்தார்கள். ஆனால், பின்னர் பல அரசியல் ஆராய்ச்சிக்குப் பிறகு, அரசியல் அமைப்பில் செய்யப்படும் திருத்தங்களின் முறைகளையொட்டி, நெகிழும் அரசியல் அமைப்பு (Flexible Consutution) என்றும், நெகிழா அரசியல் அமைப்பு (Rigid Constitution) என்றும் இருவகையாகப் பிரித்தனர்.

நெகிழும் அரசியல் அமைப்பு

அரசியல் அமைப்பில் மாற்றமோ அல்லது திருத்தமோ கொண்டு வரவேண்டுமெனில் அதைச் சாதாரணச் சட்டங்கள் கொண்டு வருவது போல கொண்டுவந்துவிட முடியுமாயின் அத்தகைய அரசியல் அமைப்பை நெகிழும் வகையைச் சேர்ந்தது என்று குறிப்பிட்டனர். இம் முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு இங்கிலாந்து நாடேயாகும். இந் நாட்டில் அரசியல் சட்டப் புத்தகம் என்று ஒன்று இல்லை இந் நாட்டில் சாதாரணச் சட்டங்களை மாற்றுவது போலவே, அரசியல் சட்டங்களையும் மாற்றி விடுவார்கள். உதாரணமாக 1911-ம் ஆண்டில் பிரபுக்கள் சபையின் (House of Lords) அதிகாரத்தை வரையறுத்த பாராளுமன்றச் சட்டம் சாதாரணச் சட்டத்தைப் போன்றே உண்டாக்கப்பட்டது. ஆகையால் இங்கிலாந்து நாட்டின் அரசியல் அமைப்பை நெகிழும் வகையைச் சேர்ந்தது என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

இங்கிலாந்து நாட்டைத் தவிர, மற்றும் இத்தாலி, 'நியூஜிலந்து, பின்லாந்து இம் மூன்று நாடுகளிலும் அரசியல் சட்டங்களை எளிதில் மாற்றிவிட முடியும். ஆனால், இம் மூன்று நாடுகளும் எழுதி வைக்கப் பட்ட அரசியல் அமைப்புகள் உடையவை. நியூஜிலந்து அரசியல் அமைப்பில் சட்ட மன்றம் எத்தகைய மாற்றத்தையும் கொண்டு வரலாம் என்பதனைத் தெளிவாகவே குறிக்கப்பட்டுள்ளது. இந் நாட்டில் சட்ட மன்றத்திற்கு அதிக அதிகாரங்கள் உள்ளன என்பது நன்கு புலனாகின்றது. இத்தாலி பின்லாந்து இவை இரண்டு நாடுகளிலும் திருத்தங்கள் கொண்டுவருவதற்கெனத் தனியாக எம் முறையும் குறிப்பிடப்படாதது மட்டுமின்றி திருத்தங்களைப் பற்றிய பேச்சே அவற்றில் இல்லை. எனவே, திருத்தங்கள் விரும்பப் படுமேயாகில், மற்றச் சாதாரணச் சட்டங்களைக்கொண்டு வருதல் போலவே கொண்டு வரமுடியும். இந் நான்கு நாடுகளை ஒப்பிட்டு நோக்கும்பொழுது, இங்கிலாந்து நாடு ஒன்றைத் தவிர, மற்ற மூன்று நாடுகளும் எழுதப்பெற்ற அரசியல் அமைப்புகளையுடையது என்பது புலனாகின்றது. இதிலிருந்து நமக்கு ஓர் உண்மையை அறிய முடிகிறது. எழுதப்பெற்ற அரசியல் அமைப்பை உடைய தாக இருந்தாலும், நெகிழும் அரசியல் அமைப்பை உடைய நாடு களின் சட்ட மன்றங்கள் அதிக அதிகாரம் பெற்றுள்ளது என்பதே யாகும்.

நெகிழா அரசியல் அமைப்பு

அரசியல் அமைப்பில் மாற்றங்களைக்கொண்டு வருவதில் சட்ட மன்றத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தினால், அவ்வமைப்பு நெகிழா அரசியல் அமைப்பு என வழங்கப்படும். இத்தகைய அரசியல் அமைப்பின்படிச் சாதாரணச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வருவது போல அரசியல் சாசனத்தின் சட்டங்களில் திருத் தங்கள் அவ்வளவு சுலபமாகக் கொண்டு வர இயலாது. உதாரண மாக நமது இந்திய நாட்டில் ஓர் அரசியல் சட்டத்தில் ஏதேனும் மாற்றங்கள் தேவைப்பட்டு மாற்றும் பொழுது, அது சட்ட மன்றத்தில் பெரும்பான்மை அங்கீகாரம் பெற்று, பின்பு நாட்டின் மாகாணங்களில் பெரும்பான்மையான அங்கீகாரம் பெற்றால்தான் மாற்ற இயலும். இல்லையென்றால் அதனை மாற்றுதல் இயலாது. நமது நாட்டின் மொழிப் பிரச்சனை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். நமது அரசியல் சாசனத்தின்படி, "நம் நாடு சுதந் திரம் பெற்று இருபது ஆண்டுகள் முடிந்த பின்பு, மக்கள் அனைவரும் ஒருமுகமாக விரும்புவார்களேயானால், 'இந்தி' (Hindi) நமது நாட்டின் தேசிய மொழியாக்கப்படும் (National Language) என்று கூறப்பட்டிருந்தது. ஆனால், இந்த மொழிப் பிரச்சனை மக்கள்

மன்றத்தில் எழுந்தபோது, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிராத மாகாணத்தின் மக்கள் இதனை விரும்பவில்லை. ஆகையால் இந்திய நாட்டின் ஒரு பகுதியினர் மட்டுமே விரும்புவதை உணர்ந்த மறைந்த நம் நாட்டின் முதல் மந்திரியான ஜவஹர்லால் நேரு, மக்கள் அனைவரும் விரும்பி ஏற்கும்வரை இந்தி 'தாய்மொழி' யாகாது என்றும், ஆங்கிலமும், மாகாண மொழியும் பயின்றால் போதுமென்றும் நடு அரசு வேலை வாய்ப்புகளுக்காக நடத்தப் பெறும் தேர்வுகள் அனைத்தும் இந்திய நாட்டின் பல்வேறு மாகாணங் களில் பேசப்படும் அனைத்து மொழிகளிலும் நடத்தப்பெறும் என்றும் திருத்தியமைத்தனர்.

இம்மாதிரியாக அரசியல் அமைப்பில் மாற்றங்காண்பதற்காக வேறு தனிப்பட்ட முறைகளைக் கையாளும் அமைப்புகள் நெகிழா அரசியல் அமைப்புகள் ஆகும். அமெரிக்க ஐக்கிய நாடு, இந்தியா, பிரான்சு, ஸ்விட்சர்லாந்து, ருஷ்யா இன்னும் பல நாடுகளும் இவ்வகையைச் சார்ந்தவையே. பொதுவாக இத்தகைய நெகிழா அரசியல் அமைப்புகளை ஆராய்ந்தால், அரசியல் அமைப்புகளில் மாற்றங்கள் கொணர்வதற்குப் பல நாடுகள் பல முறைகளைப் பின் பற்றி வருகின்றன. அவற்றுள் ஒரு சில முக்கியமான முறைகளை நாம் இங்குக் காண்போம்.

(1) நாட்டின் சட்ட மன்றமே சில குறிப்பிட்ட கட்டுப்பாடு களுக்கு உட்பட்டு மாற்றங்களை உண்டாக்குவது: இம் முறையிலும் பல வகைகள் உள்ளன. முதலாவதாகச் சட்ட மன்றத்தின் இரு பிரிவு களிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகள் மூலம் அமைப்புச் சட்டத்தை ஏற்படுத்துவது. இரண்டாவதாக அரசியல் அமைப்பில் யாதேனும் மாற்றம் வேண்டுமாயின் இப்போதுள்ள சட்ட மன்றத்தைக் கலைத்துவிட்டு, பொதுத் தேர்தல் மூலம் நிறுவப்படும் புதிய சட்டமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு மாற்றத்தை ஏற்படுத்து வது. மூன்றாவதாக இரு பிரிவுகளும் ஒன்றாகக் கூடி அச் சபையில் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு மாற்றத்தை உண் டாக்குவது.

(2) அரசியல் அமைப்பில் மாற்றமோ அல்லது திருத்தமோ வேண்டுமெனின் அதை மக்கள் தீர்ப்பிற்கு விட்டு விடுவது: இம் முறை இன்றும் ஆஸ்திரேலியாவிலும், ஸ்விட்சர்லாந்திலும் கையாளப்படுகிறது. இந் நாட்டில் அரசியல் அமைப்பின் மாற் றங்கள் முதன்முதலில் சட்ட மன்றத்தில் கொண்டுவரப் பட்டு, பின்னர் அவை மக்களின் ஒப்புதலுக்காகப் பொது வாக்கெடுப்பு

மூலம் வைக்கப்படுகின்றன. இம் முறையைத் தவிர, இந் நாட்டில் மற்றொரு முறையும் உள்ளது. அதன்படி 50,000 மக்கள் ஒன்று சேர்ந்து அரசியல் அமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும் என்று முன் நிற்கலாம். இம் முறைக்கு 'மக்கள் தொடக்கம்' (Initiative) என்று கூறுவார்கள்.

(3) கூட்டாட்சியின் நாடுகளுக்குப் பங்களிப்பது: இம் முறை ஏறக்குறைய எல்லாக் கூட்டாட்சி நாடுகளிலும் வழக்கில் உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியா, ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகளில் அரசியல் அமைப்பில் கொண்டுவரப்படும். திருத்தத்திற்குக் கூட்டாட்சியின் நாடுகள் ஒப்புதலை அளிக்கவேண்டும். சுருங்கக் கூறின் கூட்டாட்சியின் அடிப்படையில் செயல்படும் நாடுகளில், அரசியல் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டுமாயின் நாடுகளின் ஒப்பந்தம் இன்றி நடைபெறாது. ஆயினும் ருஷ்யா, கனடா இவ்விரு நாடுகளும் கூட்டாட்சியின் அடிப்படையில் செயல்பட்டாலும், அரசியல் அமைப்பில் மாற்றம் கொண்டு வரும் பொழுது கூட்டாட்சி நாடுகளின் அனுமதியில்லாமலே மாற்றங்கள் ஏற்படுத்த முடியும். ருஷ்ய நாட்டின் பரிபாலனத்தை மக்களாட்சி முறை என்று கூறுவர். ஆயினும் உண்மையாக அந் நாட்டின் அனைத்து அரசியல் வேலைகளையும், கம்யூனிஸ்ட் (Communist) கட்சியின் பெருந்தலைவர்கள் அடங்கிய ஒரு குழுவே செயல்படுத்துகிறது. ஆனால், கனடா நாட்டில் அரசியல் சட்டத்தில் ஏற்படுத்தும் மாற்றங்கள், மத்திய சட்ட மன்றத்தின் இரு பிரிவுகளும் ஒன்று சேர்ந்து ஆங்கில நாட்டரசருக்குக் கொடுக்கும் மனுவின் மூலம் தான் அமைப்பில் மாற்றம் உண்டாக்கப்பட முடியும். ஆகையால் இந் நாட்டில் அரசியல் அமைப்பில் கொண்டு வரும் மாற்றம் அயல் நாட்டு அரசின் கையில் கொடுக்கப்பட்டுள்ளது.

(4) வழக்காற்றின் மூலம் மாற்றத்தை உண்டுபண்ணுதல் என்பது மற்றொரு முறையாகும். சட்ட மன்றத்திற்கும் அல்லது அமைப்பின் வேறு எந்தப் பிரிவுக்கும் எத்தகைய தொடர்புமில்லாத தனியொரு குழுவை அமைத்து, அதன் மூலம் அரசியல் அமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவரும் முறை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சில பகுதியில் காணப்படுகிறது.

நெகிழும் அரசியல் அமைப்பு, நெகிழா அரசியல் அமைப்பு இவை இரண்டிலும் பல சிறப்பு அம்சங்களும், குறைபாடுகளும் உள்ளன. முதலில் நெகிழும் அரசியல் அமைப்பின் சிறப்புகளை நோக்குவோம். நாட்டில் உண்டாகும் முன்னேற்றத்துக்குத் தேவைப்படும் திருத்தங்களை அமைப்பில் யாதொரு கடினமுமின்றி

எளிதில் இம் முறையில் கொண்டு வரமுடியும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டான நாடு இங்கிலாந்து நாடேயாகும். மேலும் மக்களின் விருப்பங்களுக்கு ஏற்ப உடனுக்குடனே மாற்றங்களை ஏற்படுத்த முடியுமாதலால் இம்முறையை வளைந்து கொடுக்கும் மூங்கிலுக்கு ஒப்பிடுகிறார்கள். ஒரு நாட்டின் அரசியல் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும், அரசியல் வளைந்து கொடுப்பது அத்தியாவசிய மாகிறது. அவ்வாறு வளையும் தன்மையற்ற நாடாயின் அதை உடைக்க வேண்டியுள்ளது. இங்கிலாந்து நாட்டின் அரசியலமைப்பு நெகிழும் தன்மையுடையதாக இருப்பதால்தான், அழகாக வளைந்து கொடுத்து, அரசியலில் மற்ற நாடுகளுக்கு வழிகாட்டி யாக நிற்கிறது.

மேற்கூறிய சிறப்பு அம்சங்களைப் பெற்றுள்ள நெகிழும் அரசியல் அமைப்பில் குறைபாடுகளும் உள்ளன. முதலாவதாக அரசிய லமைப்பில் ஏற்படுத்தும் மாற்றங்கள் நினைத்த நேரத்தில் கொண்டு வரப்படுவதால், காரணமின்றிச் சில மாறுதல்களை ஏற்படுத்த இம் முறை ஏதுவாகிறது சில சமயங்களில் அரசியல் கட்சிகளின் எண்ணங்கள் நிறைவேறவும் வழிவிடுகிறது. அரசியல் அமைப்பிற்கு அளிக்கப்படவேண்டிய சிறப்பும், நிரந்தர நிலையும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

அடுத்து நெகிழா அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்களை ஆராய்வோமெனில், மக்களின் உரிமைகள் நெகிழா அமைப்புகளில் அவ்வளவு எளிதில் பறிக்கப்படவோ அல்லது குறைக்கப்படவோ முடியாது. அரசியல் அமைப்பு நிரந்தரமாகச் செயல்பட வழி வகுக்கிறது. ஆயினும் குறைகள் மிக அதிகம். மக்களின் எண்ணங் களுக்கு ஏற்றவாறு உடனுக்குடனே அரசியல் அமைப்பில் மாற் றங்கள் ஏற்படுத்த முடியாமல் போவதால் இது எளிதில் உடையக் கூடியது. இதனால் அரசாங்கமே மாறுபடுகிறது. அலுவல்கள் தடைபடுகின்றன. இதனால் ஒரு நாட்டின் அரசியலமைப்பு வளர்ச்சி யடையாமல் போய்விடுகிறது. நெகிழா அரசியல் அமைப்பில் நீதித் துறையின் வேலை மிகவும் முக்கியமானது. அரசியல் அமைப்பில் கொண்டுவரப்படும் மாற்றங்கள் அமைதிக்குட்பட்டவையாய் இருக்கின்றனவா. இல்லையா என்பதனை நிச்சயிக்கும் பணி நீதி மன்றங்களையே சாரும். இப் பணியைச் செய்வதால் நீதிமன்றம், செயற்குழு, சட்டமன்றம் இவை இரண்டைவிட சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இவற்றில் நாம் முக்கியமான ஒரு குறைபாட்டை அறியவேண்டும். நீதித் துறையைச் செயல்படுத்துபவர்கள், நாட்டின் செயற்குழுவினராலேயே நியமிக்கப்படுகின்றனர். சில சமயம் இவர்கள் ஆட்சிமுறையின் அடிமைகளாக மாறுவார்களேயானல்

இவர்கள் நீதிமுறையை இழந்தவர்களாகிறார்கள். இதனால் மக்கள் நிலை பாதிக்கப்படும்.

பொதுவாகக் கூறுவோமாயின், நல்ல அரசியல் ஞானம் பெற்ற இங்கிலாந்து போன்ற நாடுகளைத் தவிர மற்ற நாடுகளுக்கு நெகிழும் அரசியல் முறை ஒவ்வாதது. நெகிழும், நெகிழா அரசியல் அமைப்புகள் ஒவ்வொரு வகையில் சிறப்பு வாய்ந்தவைகள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இருப்பினும் இன்றைய அரசுகளில் நெகிழா அரசியல் அமைப்பே பெரும்பான்மையாகச் சிறப்பு அம்சத்தைப் பெற்று நிலையாக நின்றுவிட்டது.

7. அரசியல் அமைப்பில் மாற்றங்கள் (Amendments to the Constitution)

பொதுவாக அரசியல் அமைப்புகள் ஏற்படுத்தும்பொழுது, அவை ஏற்படுங் காலங்களில் உள்ள கொள்கைகளையும், எண்ணங்களையும் கண்ணாடிபோல் காட்டும். அவ்வாறு நிலவிவரும் எண்ணங்களும், கொள்கைகளும் அரசியலைப்பற்றி மட்டுமோ அல்லது சட்டம், ஆட்சிமுறையைப் பற்றியனவாகவோ இருக்கவேண்டுமென்பது இல்லை. அக் காலத்தில் மக்களிடையே பரவிவந்த பல பொருளாதாரக் கருத்துகளையும், சமூக இலட்சியங்களையும் பின்னணியாகக் கொண்டும் அரசியல் அமைப்பாளர்கள் அமைப்புகளை எழுதுவார்கள். ஆகவே ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு அது ஏற்பட்ட காலத்து அரசியல், பொருளாதார, சமூக முதலியவற்றின் அடிப்படையில் ஏற்பட்ட ஒன்றாகவே அமையும். எப்படி ஓர் அரசியல் அமைப்பு அவற்றின் காலத்தைப் பிரதிபலிக்கின்றது என்பது உண்மையோ அத்துணை உண்மை காலம் மாறிக்கொண்டே போகின்றது என்பதும். காலம் மாறும்பொழுது அரசியல் அமைப்பு மாறுகின்றனவா? மாறுதலுக்கு வேண்டிய சூழ்நிலைகள் எவை? மாற்றங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன? அம் முறைகள் அனைத்தும் சிறப்பு வாய்ந்ததுதானா என்பவற்றை எல்லாம் நாம் ஆராய்வது அவசியம்.

காலப்போக்கில் ஏற்படும் சூழ்நிலைகள் அரசியலமைப்பில் இருவகையான மாற்றங்களை உண்டாக்கி விடுகின்றன. சில சமயங்களில் அமைப்பினுடைய சட்டத்தில் யாதொரு திருத்தத்திற்கும் அவசியமில்லாமல், அரசியல் அமைப்புகளின் சில பிரிவுகளுக்கும், சில அதிகாரங்களுக்கும் புதிதான விளக்கம் கொடுக்கப்படுகிறது. வேறு சமயங்களில் சூழ்நிலை காரணமாக அமைப்பின் சட்டத்தில் தெளிவாகச் சில திருத்தங்கள் கொண்டுவரப்படும். எவ்வகையான மாற்றங்கள் ஏற்பட்டாலும், மாற்றம் ஏற்படுவதற்குக் காரணம்

கருத்து வளர்ச்சியும் சூழ்நிலையும் என்பதை மறுக்க முடியாது. அவ்வாறு உருவாகும் சூழ்நிலைகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவைகளை நாம் இங்கு நோக்குவோம்.

(1) முதன்மையாகத் திகழ்வது நாட்டின் வளர்ச்சியும், முன்னேற்றமும் ஆகும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வது அமெரிக்க ஐக்கிய நாடுகளும், இந்திய நாடுமாகும். அமெரிக்க நாடு 18ஆம் நூற்றாண்டில் அரசியல் அமைப்பை ஏற்படுத்தும் பொழுது அதனுள் அடங்கிய 13 நாடுகளும் விவசாய நாடுகளாகத் திகழ்ந்தன. ஆனால் ஐரோப்பாக் கண்டத்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சிக் காரணமாக, அமெரிக்காவில் வாணிபத் தொடர்பு மிக விரைவில் பெருகியது. இதே போன்று அந்நிய நாட்டவர்களின் படையினை அழிக்க், உறுதியான அரசியலை ஏற்படுத்த அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்தியது. அவ்வப் பொழுது ஏற்படும் தொழில், அரசியல், சமூக வளர்ச்சிக்கேற்ப அரசியல் அமைப்பில் இதுவரை பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். அதேபோல் நமது இந்திய நாட்டை எடுத்துக் கொள்வோமானால், நாம் சுதந்திரம் அடைந்தவுடன் நமக்கு என்று ஓர் அரசியல் அமைப்பை எழுதினார்கள். ஆனால் சுதந்திரம் கிடைத்த பிறகு இதுவரை மக்களின் அரசியல் சமூக வளர்ச்சிக்கு ஏற்ப 28 அரசியல் மாற்றங்கள் (Amendments of the Constitution) செய்துள்ளார்கள். இம் மாதிரி ஏற்படும் மாற்றங்களால் நடு அரசுகளின் அதிகாரங்கள் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டே போகிறது.

(2) நாட்டின் அதிகாரத்தைப் பெருக்குவதற்குச் சிறந்த காரணமாகத் திகழ்வது போர் ஆகும். உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் நாட்டின் பாதுகாப்பு நடு அரசிடம்தான் இருக்கும். சாதாரண நாட்களில் இவ்வதிகாரத்தைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கும் நடு அரசு, நாட்டிற்கு இக்கட்டான சூழ்நிலையும், போரும் ஏற்படும்பொழுது தனது அதிகாரத்தை எந்த அளவு பெருக்கிக் கொள்ளும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அடுத்துத் திகழும் காரணம் பொருளாதார மந்தம். (Economic depression) இது ஒற்றையாட்சி முறையை விட, கூட்டாட்சி முறையிலேயே நன்கு தெளிவுறத் தெரிகிறது. கூட்டாட்சியிலுள்ள நாடுகளில், ஏதேனும் சில பகுதிகளில், பொருளாதாரம் சீர்குலைந்து போய், மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் மூழ்கி தவிப்பார்களேயானால், அவர்களுக்கு உதவுவது நடு அரசேயாகும். இந்த

நேரங்களில் நடு அரசு தனது அதிகாரங்களைப் பெருக்கிக் கொள்கிறது.

அதற்கடுத்து முக்கியமாகத் திகழ்வது நாட்டு மக்களின் பொது நலத்தை மனதில் கொண்ட நாடுகள். இதற்கு நாம் நமது இந்திய நாட்டையே உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். பொது நல நாட்டுத் தத்துவம் அல்லது சமூக சேவை நாட்டுத் தத்துவம் இப்போது உலகில் மிகத் தீவிரமாய்ப் பரவி வருகிறது. அதன்படி நாட்டு மக்கள் யாவருக்கும் சில அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்ததாக உள்ளது. தனி மனிதனுக்கு வேண்டிய கல்வி, தொழில், சுகாதாரம் இன்னும் இதைப் போன்ற மற்றும் பல வசதிகளுக்கு, அரசாங்கத்தின் கடமைகள் மிக முதன்மை வாய்ந்தது ஆகிவிடுகிறது இவற்றை எல்லாம் செய்வதற்கு அரசாங்கத்திற்குப் பணமும், ஆட்களும் தேவைப்படுகின்றன. இம்மாதிரியான பொதுக் காரியங்களைப் பெரிய அளவில் செய்து அனைவரும் பலனடையும்படி செய்வதென்பது அரசாங்கம் ஒன்றினால் மட்டுமே முடியும். இதனால் நிலையான நடு அரசானது படிப்படியாகத் தனது அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டு விடுகிறது. இதனையே டாக்கவில்லி (Tocqueville) என்பவர், "மக்களாட்சி நடைபெறும் நாடுகளில் அவற்றின் அரசியல் காரணமாகவும், அரசாங்கத்தின் அதிகாரம் மிக அதிகமாக இருத்தல் இயல்பு" என்று குறிப்பிடுகின்றார்.

அடுத்த முக்கிய காரணம் மக்களின் மனப்பான்மை: மக்களின் மனப்பான்மையை யொட்டியும் அரசியல் அமைப்பு மாற்றமும், வளர்ச்சியும் அடைகிறது அரசியல் அமைப்பை மக்கள் பக்தியுடன் நோக்குவார்களாயின் அவர்கள் அரசியல் அமைப்பினை அடிக்கடி மாற்ற இடம் அளிக்கமாட்டார்கள். இந்தப் பெருமை ஸ்விட்சர்லாந்தியரையும், அமெரிக்கரையுமே சேரும். மற்ற நாட்டு மக்கள் தங்கள் அரசியல் அமைப்புகளுக்கு அவ்வளவு மதிப்பு அளிப்பதாகத் தெரியவில்லை. ருஷ்ய நாட்டில் அரசியல் அமைப்பைக் காட்டிலும் அரசாங்கத்திற்குத் தான் மக்கள் அதிகமாக மதிப்பளிக்கின்றனர்.

மேற்கூறிய காரணங்களைத் தவிர, ஆட்சி முறையின் செல்வாக்கு அரசியல் கட்சிகள், வாக்குரிமைப் போன்ற மற்றும் சில காரணங்களும், அரசியல் அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் சூழ்நிலைகளை உருவாக்குகின்றன. இனி நாம் அரசியல் அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த நாம் உபயோகிக்கும் முறைகளைப் பற்றி ஆய்வோம்.

ஒரு நாட்டில் உண்டாக்கும் பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக அரசியல் அமைப்பில் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதனை அறிந்தோம். இவ்வாறு ஏற்படுத்தும் மாற்றங்கள், அரசியல் சாசனத்தில் கொண்டு வரும் வகையால் மட்டும் ஏற்படுவதில்லை. நீதி மன்றங்கள், அரசியல் அமைப்பின் விதிகளுக்கு விளக்கங்கள் கொடுக்கும் போதும், அல்லது வழக்காறுகள் மூலமாகவும் ஏற்பட்டு விடுகின்றது. அரசியல் அமைப்பில் ஏற்படும் மாற்றங்களை எத்தனை வகைப்படுத்தலாம் என்பதனை முந்திய அத்தியாயத்தில் நன்கு விளக்கியிருக்கிறோம்.

அரசாங்கத்தின் பிரிவுகள்

ஓர் அரசு என்று கூறினால் அதற்கு என்னென்ன இருக்க வேண்டும் என்பது அரசியலைப்பற்றிக் கூறும் நூல்களில் அழகாக விளக்கப்பட்டுள்ளது. முறையே இடம், மக்கள், அரசாங்கம், இறைமை இந் நான்கும் அத்தியாவசியமானது. இவற்றில் நாம் இங்கு அரசாங்கத்தை மட்டும் எடுத்துக் கொள்வோம். ஓர் அரசிற்கு மூன்று முக்கிய உறுப்புகள் உள்ளன. அவைகள் மக்கள் சபை (Legislative), செயற் குழு (Executive) மற்றும் நீதித்துறை (Judiciary) என்பனவாகும். இவற்றினைப்பற்றி நாம் சிறிது விளக்கமாக ஆராய்வோம்.

8. சட்டமன்றம் (Legislature)

இம் மூன்றிலும் முதலாவதாகத் திகழ்வது மக்கள் சபையாகும். இதனைச் சட்டம் இயற்றும் பிரிவு (The Law Making Branch) என்றும் கூறுவர். இப் பிரிவே ஒரு நாட்டின் அடிப்படைத் தத்துவத்தை விளக்குகிறது. இது நாட்டின் இறைமையைக் காக்கும் வண்டியாகவும் கருதப்படுகிறது. இப் பிரிவு ஒரு நாட்டிற்குத் தேவையான சட்டங்களை ஒழுங்கான முறையில் இயற்றிய பின்பு தான், செயற்குழுவினால் அதனைச் செயல்படுத்த முடியும். மேலும் நீதித்துறை அதனைக் கண்காணிக்க முடியும். ஆகையால் ஓர் அரசாங்கத்தின் மற்ற இரண்டு உறுப்புகளும் செவ்வனே இயங்க வேண்டுமாயின் அதற்கு அடிப்படை அச்சாணியாகத் திகழ வேண்டியது மக்கள் சபையேயாகும்.

இனி இந்த மக்கள் சபைக்கு இவ்வளவு முக்கியத்துவம் ஆதி முதலே இருந்து வந்ததா, அல்லது அது எப்பொழுதிலிருந்து அரசியலில் இவ்வளவு சிறப்புகளைப் பெற்றுள்ளது என்று நோக்குவோம். பழைய காலத்தில் (ancient times) மக்களை அரசாங்கத்தின் ஒரு பகுதி என்று நினைக்கவில்லை. ஆகையால்

அக் காலத்தில் மக்கள் சபை என்று ஒன்று இல்லை. ஆனால் இன்று, ஒரு நாட்டின் மக்களின் பிரதிநிதிகள் (Representatives) அடங்கிய சபையை மக்கள் சபை என்று குறிப்பிடுகிறார்கள். இச் சபையின் முக்கிய வேலைகள், மக்களின் குறைகளைப்பற்றி ஆராய்வது, விவாதிப்பது, நாட்டின் மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படியான சட்டங்களை இயற்றுவது போன்றனவாகும். சரித்திர வாயிலாகப் பார்க்கும் பொழுது மக்கள் சபை முதன் முதலில் ஜெர்மானிய நாட்டிலேயே தோன்றி உள்ளது. அதே போல் இங்கிலாந்து நாட்டில் முதன் முதலில் மக்கள் சபை என்று ஒன்று தோன்றிய பொழுது அதில் பிரபுக்கள், மத குருமார்கள், மற்றும் பொது மக்களும் அடங்கி இருந்தனர். 1295ஆம் ஆண்டு முதலாம் எட்வர்ட் (Edward I) மாதிரி மக்கள் சபை (Model Parliament) என்று ஒன்றை அமைத்தார். ஐரோப்பிய நாடுகளில் மக்கள் சபையின் வளர்ச்சி அவ்வப்பொழுது தடைப்பட்டுக் கொண்டே இருந்தது. பிரான்சு நாட்டில் 1302-ல் பிரபுக்கள், குருமார்கள், பொது மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சபை கூடியது. சுருங்கக் கூறின், மத்திய காலந்தொட்டே (Medieval Period) ஐரோப்பிய நாடுகளில் மக்கள் சபையின் தொடக்கமும் வளர்ச்சியும் ஏற்பட்டது.

இந்த மக்கள் சபையில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று ஒரே ஒரு சபையைக் கொண்ட மக்கள் சபை (Unicameralism) என்றும், இரண்டு வகை சபைகள் கொண்ட மக்கள் சபை (Bi-cameralism) யென்றும் பிரிந்தனர். இவற்றில் முதலில் கூறிய ஒரே ஒரு பிரிவைக்கொண்ட மக்கள் சபை 18ஆம் நூற்றாண்டில், சிறப்பிடம் பெற்றிருந்தது. ஆனால் அதன் பிறகும், பெரும்பாலான அரசியல்வாதிகளின் கருத்துகளின்படியும் இரு பிரிவுகள் அடங்கிய மக்கள் சபையே சிறப்பிடம் பெற்று விளங்கியது. இங்கிலாந்து, பிரான்சு, இந்தியா, தென் ஆப்பிரிக்கா, சிலோன், பர்மா, ருஷ்யா, ப்ரேஜில், பெல்ஜியம், ஈஜிப்ட்டு இன்னும் மற்ற நாடுகளிலும் இரு பிரிவுகள் அடங்கிய மக்கள் சபையே உள்ளது. இவ்வாறு மக்கள் சபையில் உள்ள இரு பிரிவுகளும், ஒன்று செய்யும் காரியத்தை மற்றொன்று அப்படியே செய்வதில்லை. முதல் பிரிவிற்கு உதவியாகவும் அதனுடன் இணைந்ததாகவுமே இரண்டாவது பிரிவு வேலை செய்கின்றது. இவ்விதம் இரு பிரிவுகள் அடங்கிய மக்கள் சபையில் பல பெருமைகள் உள்ளன.

முதலாவதாக, அலட்சியமாகச் சட்டமியற்றுவதைத் தடுத்து நிறுத்துகிறது. (Check on hasty Legislation) உதாரணமாக இங்கி

லாந்து நாட்டை எடுத்துக்கொண்டால், அதன் மக்கள் சபையின் முதல் பிரிவைப் பொதுமக்கள் சபை (House of Commons) என்றும், இரண்டாவது பிரிவைப் பிரபுக்கள் சபை என்றும் (Home of Lords) என்றும் பிரித்துள்ளனர். இந் நாட்டில் பொதுமக்கள் சபைக்கே அதிக அதிகாரங்கள் உள்ளன. இருப்பினும், ஒரு சட்டத்தை இயற்றும்பொழுது, அது எந்த முறையுடன் மக்கள் மன்றத்தில் ஒத்துக் கொள்ளப்படுகிறதோ, அதேபோல் மேல்சபைக்கும் கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள பெரும்பாலோரால், ஒத்துக் கொள்ளப்பட்ட பின்பே செயற்குழுவின் கையெழுத்திற்கு அனுப் பப்படும். மக்கள் மன்றத்தின் இரண்டாவது பிரிவான மேல்சபை, கீழ்ச் சபையைக் காட்டிலும் சுதந்திரம் அதிகமுள்ளது. மக்களின் கருத்துகளை நன்கு ஆராயவும், அவர்களின் நோக்கங்களை மக்கள் மன்றத்திற்கு எடுத்துக் கூறி, மக்களின் விருப்பங்களுக்கேற்ப சட்டங்கள் இயற்றவும் உதவுகின்றன. இரண்டாவதாக மக்கள் மன்றத்தில் எந்தக் கட்சி பெரும்பான்மையான இடத்தைப் பெற்றுள் ளதோ, அக் கட்சியே செயற்குழுவை உருவாக்குவதால், நாட்டு மக்களுக்காக இயற்றப்படும், சட்டங்கள் எத்தகையதாக இருப் பினும் மக்கள் சபையில் எளிதில் நிறைவேற்றிவிட முடியும். இந்தக் குறையைப் போக்கி, மக்களின் விருப்பத்திற்கேற்ப, அவர்கள் நன்மையைக் கருதும் சட்டங்களை இயற்றத் தூண்டுவது மக்கள் சபையின் இரண்டாவது பிரிவு என்பதில் சிறிதும் ஐயமில்லை:

மூன்றாவதாக, மேல்சபையில் எல்லாத் துறையிலும் சிறப்புற்ற அறிஞர்களும், விஞ்ஞானிகளும், அரசியல்வாதிகளும் நிறைந்து காணப்படுவதால் இதனை அறிவாளிகள் சபையென்று கூறுகின்றனர். மேலும் இதன் மூலமாக, கீழ்ச்சபையின் அளவிடமுடியாத வேலை களைப் பகிர்ந்து கொள்ள முடிகிறது. மேலும் கூட்டாட்சி நடக்கும் நாடுகளுக்கு இவ்விரு சபைகள் அடங்கிய மக்கள் சபையே பொருந்தும்.

இதனுள் உள்ள குறைபாடுகளை நோக்குவோம்-முதலாவதாக, இன்றைய அரசியல் அமைப்புகளைப் பொதுப்படையாக நோக்கும் பொழுது, மக்கள் சபையின் இரண்டாவது பிரிவுக்கு அதிகமான பொறுப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் கீழ்ச்சபையின் காரியங்களை இது இரண்டாவது முறையாக, செய்வது போல் தோன்றுகிறது. இதனால் வீணான காலதாமதமும் ஏற்படுகிறது. மேலும் கீழ்ச்சபையின் அமைப்பு போல், மேல்சபையில்லை. உதாரண மாக கீழ்ச்சபையின் அங்கத்தினர்கள் அனைவரும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள், இவை போன்ற இன்னும் ஒரு சில நாடுகளைத் தவிர மற்ற நாடு

களில் மேல்சபையின் அங்கத்தினர்கள் மக்களால் முழுமையாகத் தேர்ந்தெடுக்கப்பவதில்லை. ஒருசிலர் மக்களாலும், ஒருசிலர் செயற் குழுவினாலும் நியமிக்கப்படுகிறார்கள். அதேபோல் இவ்வக் காலங்களும் (Tenures) மாறுபடுகிறது. மேலும், கீழ்ச் சபையை விட, மேல் சபையின் அதிகாரங்கள் பொதுவாகக் குறைவாகவே உள்ளன. இத்தனை குறைபாடுகள் இருப்பினும், இரு சபைகள் கொண்ட மக்கள் சபையே இன்று பெரும்பாலோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறையில் உள்ளது.

இனி ஒரு சபைக்கொண்ட மக்கள் சபையை நோக்குவோம். கிரீஸ், பல்கேரியா, பின்லாந்து, இந்தியாவில் ஒருசில நாடுகளில் ஒரு சபைக்கொண்ட மக்கள் சபையுள்ளது. அரசியல் மேதை பென்தம் (Bentham) அவர்களின் கருத்தின்படி மக்கள் சபைக்கு இரண்டு பிரிவுகள் தேவையற்றது என்றே கருதுகிறார்கள். அமெரிக்க விஞ்ஞானியும், அரசியல்வாதியுமான பென்சமின் பிராங்களின் (Benjamin Franklin) அவர்களின் கருத்துப்படி மக்கள் சபைக்கு இரண்டு பிரிவுகள் இருப்பது, ஒரு வண்டிக்கு இரண்டு பக்கம் இரண்டு குதிரைகள் இணைத்ததுபோல் ஆகும். பொதுவாக நோக்கும் பொழுது ஒரு பிளவு உள்ள மக்கள் சபை சிறந்ததாகத் தோன்றினாலும் இரு பிளவு உள்ள மக்கள் சபையே நடைமுறைக்கு ஒத்ததாக உள்ளது இம் முறையிலுள்ள சிறப்புகள் (1) மக்கள் சபை வளர்ச்சியுற தடைகள் இருக்காது. (2) பொறுப்புகள் பிரிக்கப்படவில்லை (3) வீணான காலதாமதத்தைத் தவிர்க்க முடிகிறது ஆனால் இம் முறையில் குறைபாடுகள் மிக அதிகமாக உள்ளன. (1) ஒரு முறை தீர்மானத்திற்கு வந்த சட்டங்களில் குறைபாடுகள் இருக்கலாம். அக் குறைபாடுகளை நீக்கும் வாய்ப்பில்லாமலே அதனைச் சட்டமாக மாற்றிவிட முடியும் இதனால் மக்கள் அரசாங்கத்தின் மீது வெறுப்படைந்து அரசாங்கம் அடிக்கடி மாற ஏதுவாகிறது. (2) மேலும் ஒரே பிரிவு இருப்பதால் அளவிட முடியாத அதிகாரங்கள் வந்தடைவதால் மக்களின் விருப்பு, வெறுப்புகளையறியாமலே சட்டங்களை இயற்றக்கூடும். இவ்விதமான பெருங்குறைகள் எல்லாம் ஒரு பிளவுகொண்ட மக்கள் சபையில் இருப்பதால் இதனைப் பெரும்பாலோர் விரும்புவதில்லை. மாபெரும் அரசியல் வாதிகளான சர் ஹென்றி மெயின் (Sir. Henry Maine) மாரியாட் (Marriott) ப்ரைஸ் (Bryce) இன்னும் மற்றும் பலர் இரு பிரிவுகள் கொண்ட மக்கள் சபையே ஏற்றுக் கொள்ளப்படும் என்று கூறுகிறார்கள்.

(2) இனி மக்கள் சபையின் முக்கியமான வேலைகளை நோக்குவோம்.

நாட்டுக்கு நாடு மக்கள் சபையின் வேலைகள் வேறுபடுகின்றன. உதாரணமாக இந்தியா, இங்கிலாந்து இந் நாடுகளில் மக்கள் சபையின் அதிகாரங்களை அளவிட முடியாது. ஆனால் அமெரிக்க நாட்டில் மக்கள் சபையின் அதிகாரமும், செயற்குழுவின் அதிகாரமும் தனித்தனியே இயங்குகின்றது. ஆனால் எல்லா நாட்டு மக்களுக்கும் ஒருசில கடமைகள் பொதுவாக உள்ளன. அவைகள் (1) ஒரு நாட்டிற்குத் தேவையான (Law making body) அரசியல் சட்டங்களைச் சட்ட மன்றமே இயற்றும், இரண்டாவதாகச் சட்டத்தை உருவாக்கும் பொழுது அது நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் பொருத்தமானதாக அமைந்துள்ளதா என்பதனை உணர்ந்தே அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். ஆகையால் சட்ட மன்ற உறுப்பினர்கள் அதற்கான வாத பிரதி வாதங்களை மேற்கொள்வார்கள். மூன்றாவதாக ஒரு நாட்டின் பொதுச் செல்வம் வீணான செலவுகளுக்குப் பயன்படுவதைத் தடுத்து நிறுத்தவும், பொது மக்கள் நன்மைக்காகவும் நாட்டின் முன்னேற்றத்துக்காகவும் பயன்படுகிறதா என்பதனைக் கண்காணிக்க வேண்டியது இச் சபையின் முக்கிய பொறுப்பாகும். இச் சபையில் பல சிறு சிறு குழுக்கள் (Committees) உண்டு. இக் குழுக்களின் மூலம் பல வேலைகளை ஒழுங்காகச் செயல்படுத்த முடிகிறது நான்காவதாக நாட்டின் அரசைப் பரிபாலிக்கும் செயற்குழு (Executives) செவ்வனே நடக்கிறதா அல்லது அவர்கள் அளவுக்கு மீறிய அதிகாரங்களை மக்களின் மீது செலுத்துகிறார்களா என்பதனை ஆராய்ந்து அறிந்து அதனைக் கட்டுப்படுத்த வேண்டியது மக்கள் சபையின் பொறுப்பாகும். இதைத் தவிர மக்கள் சபையின் இரண்டாவது பிரிவு (upp r Home) இங்கிலாந்து இன்னும் ஒரு சில நாடுகளில் நீதிமன்றங்களாகவும் திகழ்கின்றது. இன்னும் சில கடமைகளும், இச் சபைக்கு உள்ளன. அவைகள் செயற்குழுவினை அமைப்பது அரசியல் அமைப்பில் ஏற்படும் மாற்றங்களை, காலத்திற்கேற்றவாறும், மக்களின் போக்கிற்கு ஏற்றவாறும் மாற்றியமைப்பது இச் சபையின் வேலையாகும்.

9. செயற்குழு (Executive)

இனி ஓர் அரசாங்கத்தின் இரண்டாவது உறுப்பான செயற்குழுவைப் பற்றி பொதுவாக ஆராய்வோம். (Organ sation of the Executive) மக்கள் மன்றம் இயற்றும் சட்டங்களைச் செயல்படுத்தி, நாட்டைப் பரிபாலிப்பது செயற்குழுவின் கடமையாகும். ஜே டபிள்யூ. கார்னர் (J W. Garner) அவர்களின் கருத்துப்படி, நாட்டை நடத்திச் செல்வதும், நீதியை நிலைநாட்டுவதுமாகும். சுருங்கக் கூறின். எந்த நாடும் செயற்குழு இல்லாமல் நடைபெற முடியாது. இன்றைய அரசியலில் செயற்குழுவின் சக்தி மிகமிக

அதிகமாகிக்கொண்டே போகிறது. பொதுவாக நாம் குறிப்பிடும் "அரசு" 'Government' என்ற சொல் செயற்குழுவையே குறிக்கிறது. செயற்குழுவுக்கு அங்கிகாரம் பெற்று வரும் சட்டங்களை, அரசியல் சட்டம் (Government Law) என்றே குறிப்பிடுகின்றோம். செயற்குழு அரசாங்கத்தின் ஒரு பிரிவாக இருப்பினும் இதுவே அரசாங்கம் என்று கருதப்படுகிறது.

'செயற்குழு' என்ற சொல்லைப் பரந்த நோக்கம் கொண்டு பார்ப்போமாகில் இதனுள் அரசியலைச் சேர்ந்தவர்களும், அலுவலகத்தைச் சேர்ந்தவர்களும் இருப்பதை அறியலாம். உதாரணமாக நாம் நமது இந்திய நாட்டை எடுத்துக்கொண்டால், ஜனாதிபதி, உப ஜனாதிபதி, முதன் மந்திரி அவர்களின் மந்திரி சபை. இவர்கள் அரசியல் செயற்குழுவினர்களாகவும், அரசாங்க அலுவலகத்தில் வேலை செய்யும், காரியதரிசி (Secretary) இயக்குநர் (Director) மற்றும், இதுபோன்ற பல உயர்ந்த பதவியுள்ளவர்களை அலுவலக செயற்குழுவினர் என்றும் கூறலாம். இவ்வாறு நாம் கருத்தில் கொள்ளாது மிகச் சுருக்கமாகச் 'செயற்குழு' என்று கூறுவோமானால் அது அரசியல் செயற்குழுவினர்களை மட்டும் குறிக்கும்.

இனிச் செயற்குழுவின் வகைகளை நோக்குவோம்.

(1) முதல் வகையின்படி செயற்குழுவை உண்மையான செயற்குழு (Real Executive) என்றும், பெயரளவு செயற்குழு (Nominal Executive) என்றும் இருவகைப் படுத்துகின்றனர். இதற்கு எடுத்துக்காட்டாக இன்றைய இங்கிலாந்து நாட்டின் இராணி (The Queen of England) யைப் பெயரளவு செயற்குழுவினராகவும், ஆனால் அந் நாட்டின் மந்திரி சபையை (Cabinet) உண்மையான செயற்குழுவாகவும் கூறப்படுகிறது. இப் பிரிவின்படி உண்மையான செயற்குழுவிற்கும், மக்கள் சபைக்கும் அதிக தொடர்பு உண்டு என்றும், ஆனால் பெயரளவு செயற்குழுவிற்கு அத்தகைய நெருங்கிய தொடர்பு மக்கள் சபையுடன் இல்லையென்றும் கருதப்படுகிறது. ஆனால் இக் கருத்து முற்றிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. ஏனெனில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைவர் (President) உண்மையான செயற்குழுவினர். ஆனால் அவருக்கும் மக்கள் சபைக்கும் அவ்வளவு நெருங்கிய தொடர்புகள் கிடையாது.

(2) இரண்டாவது பிரிவின்படி தனி மனிதன் செயற்குழு (Single executive) ஒன்றுக்கு மேற்பட்டவர் அடங்கிய செயற்குழு (Plural executive) என்றும் வகைப்படுத்தியுள்ளனர். இதற்கு உதாரணமாக இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா, பிரான்சு முதலிய நாடுகளை முதல் வகைக்கும், ஸ்விட்சர்லாந்து, ருஷ்யா போன்ற

நாடுகளை ஒன்றுக்கு மேற்பட்டவர் அடங்கிய செயற்குழுவிலும் வகைப்படுத்தலாம். இங்கிலாந்திலும், இந்தியாவிலும் மந்திரி சபைகள் உள்ளன. இதுவே இந் நாடுகளின் உண்மையான செயற்குழு என்று கூறப்படுகிறது. இருப்பினும் மந்திரி சபையில் அடங்கிய மந்திரிகள் அனைவரும் ஒரேமுகமாகச் செயல்படுகின்றனர். ஆகையால் மந்திரி சபையில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் இருப்பினும், இதனை ஒருவர் கொண்ட செயற்குழுவாகவே கருதப்படுகிறது.

(3) மூன்றாவது வகையின்படி செயற்குழுவை, பரம்பரை வகையாகவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களாகவும், நியமிக்கப்படுபவர்களாகவும் மூன்று வகைகளாகப் பிரித்துள்ளார்கள். இதற்குச் சிறந்த உதாரணமாக, இங்கிலாந்து ஜப்பான் நாட்டு மன்னர் குடும்பங்களைக் கூறலாம். அந் நாடுகளின் பெயரளவு செயற்குழுவிற்கான தலைவர்களையோ, தலைவியையோ இம் மன்னர் குடும்பங்களிலிருந்தே தேர்ந்தெடுத்து நியமிக்கின்றார்கள். இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைவர்கள் (President) மக்களால், நேர்முகமாகவோ (Direct) அல்லது மறைமுகமாகவோ (Indirect) தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பு இங்கிலாந்து அரசாங்கத்தால் பிரதிநிதிகளை நியமித்து வந்தனர்.

(4) நான்காவது வகையின்படி அரசியல் செயற்குழு என்றும், நிலையான செயற்குழு என்றும் வகைப்படுத்தலாம். அரசியல் செயற்குழுக்கள் நிலையானதல்ல. இவற்றிற்குக் காலங்கள் உண்டு. உதாரணமாக இந்திய நாட்டின் மந்திரி சபை (Cabinet) ஐந்து வருடங்கள் வரை நீடிக்கும். ஐந்து வருடம் முடிவுபெற்ற பின்பு மறுபடியும், பொது வாக்கெடுப்பு நடைபெற்று, புதிய மந்திரி சபை அமைப்பார்கள். ஆனால் அலுவலகச் செயற்குழுவினர்கள் நிலையானவர்கள். இவர்கள் எந்த அரசு வந்தாலும், போனாலும் அவர்களது கடமைகளைச் செயல்படுத்திக்கொண்டே இருக்கவேண்டும்.

இறுதியாகச் செயற்குழுவை மக்கள் சபையடங்கிய செயற்குழு என்றும் (Parliamentary Executive) மக்கள் சபையற்ற செயற்குழுவென்றும் (Non-Parliamentary Executive) இருவகைப்படுத்தியுள்ளனர். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக நாம் நமது இந்திய நாட்டை எடுத்துக் கொள்ளலாம். இந்திய நாட்டின் மந்திரி சபையை மக்கள் சபையுள்ள செயற்குழு என்று குறிப்பிடுகின்றோம். ஏனெனில், மக்கள் சபையின் முதல் பிரிவில் (Lower House) எந்தக் கட்சி பெரும்பான்மையான இடத்தைப் பெற்றுள்ளதோ அந்தக் கட்சியின் தலைவனும், அவனால் தனக்கு வேண்டிய மற்றச் சகாக்களையும் மக்கள் சபையிலிருந்து தேர்ந்தெடுத்து மந்திரி சபை அமைக்

கின்றனர்கள். இவர்கள் மக்கள் சபைக்குக் கட்டுப்பட்டவர்களாகிறார்கள். மக்கள் சபையிலுள்ள அங்கத்தினர்கள் எழுப்பும் சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் மந்திரி சபையிலுள்ள ஒவ்வொரு மந்திரியும் தனித்தனியாகவும், கூட்டாகவும் பதிலளித்து, அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். இது மந்திரி சபையின் கடமையாகும். அப்படி மந்திரி சபையில் அடங்கியவர்களின் செயல்கள் மக்கள் மன்றத்திற்குப் புறம்பானதாக இருப்பின் அவர்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் (No confidence motion) கொண்டுவந்து மந்திரி சபையைக் கலைக்கவும் முடியும். ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவர் (President) இதற்கு முற்றிலும் மாறுபட்டவர். ஏனெனில் இவரை மக்களே தேர்ந்தெடுக்கிறார்கள். இவருக்கும், மக்கள் மன்றத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. இவர் செய்யும் எந்தக் காரியத்திற்கும், மக்கள் மன்றம் தடை விதிக்கவோ, மறுக்கவோ முடியாது. உதாரணமாக, அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவராக விளங்கிய ஆப்ரகாம் லிங்கன் (Abraham Linchon) அவர்கள் ஒருமுறை தனது மக்கள் மன்றத்தின் மேல்சபை அங்கத்தினர்களுடன் பெர்லின் விஷயமாக விவாதிக்கும்பொழுது, அவர்கள் அனைவரும் இவருக்கு எதிரிடையாகப் பதிலளித்தனர். ஆனால் ஆப்ரகாம் லிங்கன் அவர்கள், அவர்களை மீறி தனது விருப்பப்படி அக் காரியத்தை முடித்துக் கொண்டார். இவ்விதமான அளவுக்கு மீறிய அதிகாரம் அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைமைக்கு இருப்பதால் இவரை மக்கள் மன்றமற்ற செயற்குழு என்று கூறுகின்றனர்.

இனிச் செயற்குழுவின் முக்கியமான கடமைகள் என்னென்ன என்பதை நோக்குவோம்.

தற்கால நாடுகளின் அரசியலைப் பொதுவாக நோக்கும்பொழுது, ஒவ்வொரு அரசாங்கமும், நாட்டு மக்களின் நலன்களுக்காகவே செயல்படுகிறது என்பது நன்கு தெரிகிறது மக்களின் பொதுநலன்களுக்காகவே செயல்படுவதால், அரசாங்கத்தின் கடமைகள் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே போகிறது, முன்பே கூறியபடி ஓர் அரசாங்கத்தில் மூன்று உறுப்புகள், சட்ட மன்றம், செயற்குழு, நீதித் துறை என்ற மூன்றுமாகும். இம் மூன்றிலும் முதன் முதலில் சட்ட மன்றத்திற்கே அதிகமான கடமைகள் இருந்தன. ஆனால் அரசியலிலும், சமூகத்திலும் ஏற்பட்டுள்ள மாறுதல்களையொட்டி, இன்று செயற்குழுவின் அதிகாரமே மிகமிக அதிகமாக உள்ளது. இன்றைய அரசாங்கத்தில் செயற்குழுவின் அதிகாரம் சர்வாதிகாரத் (Dictatorship) தன்மையைப் பெற்றுள்ளது. அரசியல் பேரறிஞர் சி. எப். ஸ்டராங் (C. F. Strong) அவர்

களின் கருத்துப்படி, இன்றைய செயற்குழுக்கள் நாட்டின் சட்டத்தினை ஒழுங்காகச் செயல்படுத்துவதுடன் நில்லாமல், இக் குழுவே முன்னின்று பல செயல்களைச் செய்து மக்கள் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுவிடுகிறபடியால், இவற்றின் அதிகாரம், மக்கள் மன்றத்தைவிட அதிகமாகிவிட்டது என்று விளக்குகின்றார். மக்களின் பொதுநல வாழ்வை மையமாகக் கொண்டு செயலாற்றும் ஒவ்வொரு அரசாங்கத்திலும், செயற்குழுவின் கடமைகள் அதிகமாகிக் கொண்டே போகிறது. இனிப் பொதுவாகச் செயற்குழுவின் அதிகாரங்கள் என்னென்ன என்று நோக்குவோம்.

நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுதல்
(Enforcing law, Maintaining Peace & Order)

(1) நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநிறுத்தி, நாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டங்களைக் கொண்டு நாட்டினைப் பரிபாலிப்பது, இதுவே செயற்குழுவின் தலையாயக் கடமையாகும். பொதுவாக நாட்டின் சட்டத்தை மீறி செயல்படுவோர் மிகக் குறைவாக இருப்பினும், அவர்களையும் ஒழுங்காக நடக்க வைப்பது ஒரு நாட்டு அரசின் கடமையாகும். மேலும் நாட்டு மக்கள் அனைவரும் அமைதியுடனும், நிம்மதியுடனும், வாழ வேண்டுமாயின் நாட்டில் அமைதி நிலவ வேண்டும். இதனைச் செயல்படுத்துவது செயற்குழுவின் கடமையே ஆகும். அதேபோல அரசிற்கு நாட்டு மக்களால் செலுத்தப்படும் வரியினை ஒழுங்காகக் கட்டத் தவறினால் அவர்களைச் சட்டப்படி விசாரித்து அவர்களிடமிருந்து வரி வசூலிப்பதும் அரசின் கடமையாகும்.

(2) இரண்டாவதாக மற்ற நாடுகளை நண்பர்களாகத் தொடர்பு கொள்வது. அயல் நாட்டினர் தங்கள் நாட்டின்மீது படையெடுக்கும்பொழுது அவர்களைத் தடுத்து நாட்டு மக்களையும், நாட்டையும் பாதுகாப்பது இவை போன்றவைகள் செயற்குழுவின் கடமையாகும். உதாரணமாக நாம் நமது இந்தியாவை எடுத்துக் கொண்டோமானால், 1962-ல் இந்தியாவின்மீது பாகிஸ்தான் படையெடுத்து வந்தது. அப்பொழுது இந்தியப் படை வீரர்கள், செயற்குழுவின் கட்டளையின்படி சைனப் படையினை எதிர்த்தார்கள். அதே போல் செயற்குழுவின் தீர்மானத்தின்படியே, இந்தியா மற்ற நாடுகளையும், வியாபாரம் மற்றும் பல செயல்களுக்கும் நேச நாடுகளாகக் கருதி, பழகிச் செயல்பட்டு வருகிறது. மூன்றாவதாகச் செயற்குழு ஒன்றினால்தான் அயல் நாட்டின்மீது போர் தொடுக்கவும், உறவு கொள்ளவும் முடியும். இங்கிலாந்தைப் பொறுத்தவரை அந் நாட்டுச் செயற்குழுவிற்கு அயல் நாட்டின்மீது போர் தொடுப்பதற்கான ஏற்பாட்

டியைச் செய்வதற்குப் பூரண உரிமை அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இதற்காக மக்கள் மன்றத்தைக் கலந்தாலோசிக்கவோ, அல்லது அவர்கள் சம்மதம் பெறவோ வேண்டியதில்லை. ஆனால் அதனை நிறுத்துவதற்கு முன்பு இங்கிலாந்து நாட்டுச் செயற்குழு அந் நாட்டு மக்கள் சபையிடம் சம்மதம் பெறவேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அந் நாட்டுத் தலைவர் (President) பாராளு மன்றம் அல்லது காங்கிரஸ் (Congress) அவற்றில் பெரும்பான்மையான சம்மதம் பெற்ற பின்பே அயல் நாட்டின்மீது போர் தொடுக்க முடியும். அதேபோல் அயல் நாடுகளுடன் மேற்கொள்ளும் ஒப்பந்தங்களும் காங்கிரஸின் மேல்சபையான செனேட் (Senate) அங்கத்தினர்களின் 2/3 பங்கு சம்மதம் பெறவேண்டும். அளவுக்கு மீறிய அதிகாரம் அமெரிக்க நாட்டுத் தலைவர் பெற்றிருந்தபோதிலும், அவர் செயலாற்றிய ஒவ்வொரு காரியத்திற்கும் முன்போ அல்லது பின்போ காங்கிரஸாரிடமிருந்து சம்மதம் பெற்றேயாக வேண்டும். ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாட்டில்கூட அயல் நாட்டுடன் போர் என்று முடிவு செய்த பின்பு செயற்குழுக்களின் அதிகாரம் அதிகமாகிக் கொண்டே போகிறது. உதாரணமாக நமது இந்திய நாட்டின் தலைவர் போர் ஏற்பட்ட பின்பு அவசர அதிகாரம் (Emergency Power) பெற்றுவிட்டால் அவர் நாட்டின் பரிபாலனத்தையும், பொருளாதார நிலையையும் தன்கீழ் கொண்டுவர முடியும்.

(3) மூன்றாவதாகச் செயற்குழுக்கள், அரசாங்கத்தின் முக்கியமான அதிகாரிகளை நியமிக்கின்றார்கள். (Making appointments) நாட்டின் பரிபாலனத்தின் முக்கியமான பிரிவுகளுக்கும், படைகளைப் பரிபாலிப்பதற்குமான அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்புச் செயற்குழுவினுடையதேயாகும். இதைத் தவிர முக்கியமான அதிகாரிகள், அயல் நாட்டுத் தூதுவர்கள், மன்றத்தின் நீதிபதிகள், இன்னும் பல முக்கியமான அதிகாரிகளையும், செயற்குழு நியமிக்கும். உதாரணமாக இந்தியாவின் தலைவர், படைத் தளபதிகள், நீதிபதிகள், அலுவலகச் செயலாளர்கள் அனைவரையும் பிரதம மந்திரியின் அனுமதியுடன் நியமிக்கின்றார். அதேபோல் அமெரிக்காவில் செனேட் உறுப்பினர்களின் அங்கீகாரம் பெற்று அமெரிக்கத் தலைவர் நியமிக்கின்றார்.

(4) செயற்குழுவிற்குச் சட்ட மன்ற வேலையும் உண்டு. (The executive has Legislative Functions also) இவற்றில் முதன்மையானது பாராளு மன்றத்தைத் தள்ளி வைப்பது, கலைப்பது, கூட்டுவது போன்றவையாகும். (Summons, Prorogus and Dissolves Parliament.) இரண்டாவதாக ஒரு சட்டத்தை உருவாக்குவதற்கு முன்பு அதனுடைய சாசனத்தை மக்கள் மன்றத்திற்குக் கொண்டு வரு

வது (Introducing Bill). மூன்ருவதாக ஒரு சாசனம் பாராளு மன்றத்தின் இரு சபைகளிலும் பெரும் சம்மதம் பெற்று நிறைவேறிய பின்பு. அது செயற்குழுவிற்கு அனுப்பப்பட்டு, செயற்குழுவின் தலைவரின் கையொப்பம் பெற்ற பின்பே சட்டமாக ஏற்றுக் கொள்ளப்படும் (A sert to Bill). மக்கள் மன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்களுக்குத் தேவையான பல துணைச் சட்டங்களைக் கொண்டு வர செயற்குழுவால் முடியும். இதைத் தவிர அவசர காலங்களில் (Emergency Power) செயற்குழுக்களின் சக்தி மிக அதிகம் என்றே கூறலாம். உதாரணமாக இந்திய நாட்டுப் பெயரளவு தலைவருக்கு (Nominal Executive or President) சாதாரண நாட்களில் எவ்வித சக்தியும் கிடையாது. ஆனல் அவசரக் காலங்களில் அவர் அமெரிக்கத் தலைவருக்கு ஒப்பாகக் கருதப்படுகிறர். இந்த அவசரக் காலத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். (1) அயல் நாடுகளின் மூலம் ஒரு நாட்டிற்கு ஏற்படும் தொல்லைகள்; (2) உள் நாட்டில் நிலையான அரசாங்கம் இல்லாதபொழுது (3) இறுதியாகப் பொருளாதார நிலை சீர்குலைந்துள்ளபோது. இம் மூன்று காலங்களிலும் இந்தியத் தலைவர் உண்மையான செயற்குழு (Real Executive) வேலை செய்கிருர். இறுதியாகச் சட்டங்கள் ஏற்படுத்திய பின்பு, அதனை ஆராய்வது நீதித் துறையின் கடமையாகும். ஆயினும் செயற்குழுவிற்கும் இவ்வதிகாரம் உள்ளது (Interpretation of Law).

(5) மக்கள் நலனுக்காகவே செயற்குழு கடமையாற்ற வேண்டும். அதற்கு வேண்டிய முறைகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு செயற்குழுவினுடையதேயாகும். மக்களின் கல்வி, உடல் நலன், தொழில், வியாபாரம் மற்றும் பல பொதுக் காரியங்களுக்கான தொண்டைச் சரிவர நிறைவேற்றுவது செயற்குழுவின் அதிகாரத்தையும், திறமையையும் பொறுத்துள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

(6) அடுத்துப் பொருளாதாரக் கடமை. ஒரு நாட்டின் மக்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும், அந் நாடு செய்ய முற்படும் பொழுது அதற்குப் பொருள் தேவைப்படுகின்றது. அந்தப் பொருளை அரசாங்கம் பல வழிகளிலும் பெறுகிறது. (1) வரிகளின் மூலமாகவும் (2) தன் மக்களிடமிருந்தும் (3) அயல்நாட்டினரிடமிருந்தும் செல்வத்தைப் பெறுகிறது. ஒரு நாட்டின் வருஷ வரவு செலவுகளைச் சரிபார்த்து, செலவிற்குத் தக்க வரவுகளைப் பெருக்கவேண்டியது பொருளாதார மந்திரியையே சாரும். அவரும் செயற்குழுவின் ஒரு முக்கிய அங்கத்தினர் மட்டுமின்றி, மற்றவர்களின் எண்ணங்களை யொட்டியும், நாட்டு மக்களின் நிலையையுணர்ந்துமே பொருளாதாரக் காரியங்களைச் செயல்படுத்த வேண்டும்.

(7) ஏழாவதாகச் செயற்குழுவிற்கு நீதித் துறை வேலையும் உண்டு குற்றவாளிகளை மன்னிக்கலாம். தண்டனை வழங்கவும் அதிகாரம் உண்டு. உதாரணமாக இரண்டாவது மகா யுத்தத்தின் போது கடற்படைத் தலைவராகப் பணியாற்றிய நானுவதி (Nanavadi) என்பவர், கொலைக் குற்றச்சாட்டில் மாட்டப்பட்டு ஆயுள் தண்டனைப் பெற்றபொழுது பம்பாய் நகரத்துத் தலைவராக (State Governor) விளங்கிய பண்டிட் விஜயலட்சுமி அவர்கள், அவர் நாட்டிற்காகச் செய்த தொண்டிற்காக விடுதலையளித்தார்.

இவைகளைத் தவிர செயற்குழுவிற்குப் பல சில்லறை வேலைகளும் உண்டு. (Miscellaneous Functions) ஒவ்வொரு அரசியல் துறைகளையும் பார்வையிடுவது, அரசியல் துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசிப்பது போன்ற பலவாகும்.

செயற்குழுவின் அதிகாரிகள் ஒருசில நாடுகளில் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களாகக் கருதப்படுவதால் அவர்களைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கவோ, விவாதிக்கவோ முடியாது உதாரணமாக, இங்கிலாந்து நாட்டு இராணியையும், இந்தியத் தலைவரையும் கூறலாம். தற்காலத்தின் செயற்குழுவின் கடமைகள் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே போகின்றன. அதற்குக் கூறும் முக்கிய காரணங்கள் (1 இன்றைய அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள அளவிட முடியாத கடமைகள். (2 மக்கள் மன்றம் அதிகமான வேலைகளால் நசுக்கப்படுவதால் செயற்குழுக்களைச் சரிவர கவனிக்க முடியாதது. (3) பெரும்பாலான நாடுகளில் மக்கள் மன்றத்தின் கீழ் சபை உறுப்பினர்கள் கட்சியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, எக் கட்சி அதிகமான இடத்தைப் பெற்றுள்ளதோ, அக் கட்சித் தலைவரும், மற்றும் பலரும் இணைந்து செயற்குழு அமைப்பதால் அவர்களுடைய எண்ணங்கள் தங்குதடையின்றி நடைபெற்றுவிட முடிதல். (4) நாட்டின் நன்மைக்காகச் செய்யும் காரியங்களின் முறைகள். இவை போன்ற பல்வேறு காரணங்களால், இன்றைய செயற்குழுக்களின் அதிகாரம் அதிகமாகிக் கொண்டே போகிறது.

10. நீதித் துறை (Judiciary)

இனி ஓர் அரசாங்கத்தின் மூன்றாவதும், முக்கியமானதுமான நீதித் துறையை ஆராய்வோம் (Judiciary) ஒரு நாட்டில் சட்டத்தை இயற்றும் பொறுப்புச் சட்ட சபைகளிடமும் அதனை நிறைவேற்றும் பொறுப்புச் செயற்குழுவிடமும், அச் சட்டங்கள் சரியான முறையில் செயல்படுத்தப்படுகிறதா என்று கண்காணிக்கும்

பொறுப்பு நீதித் துறையினிடமும் விடப்பட்டுள்ளது. நீதித் துறையின் முக்கிய கடமைகள் ஒரு நாட்டின் சட்டத்தைக் காப்பதும், அது செயல்படுத்தும்பொழுது ஏற்படும் இடையூறுகளை நீக்கி, நீதிகள் வழங்குவதும், ஒரு நாட்டு மக்களின் உரிமைகளைக் காக்க உதவுவதுமாகும்.

இக் கால நீதித் துறைக்கும், முற்கால நீதித் துறைக்கும் அதிக வித்தியாசங்கள் உண்டு. முற்காலத்தில் பெரும்பான்மையான நாடுகளில் மன்னராட்சியே நடந்துவந்தது. நீதிபதிகள் மன்னர்களாலேயே நியமிக்கப்பட்டார்கள். ஆகையால் மன்னர்களின் கட்டுப்பாட்டிற்கும், அவர்களின் கூற்றிற்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய நிலையில் நீதிபதிகள் இருந்துவந்தனர். மன்னர்களின் விருப்பத்திற்கு முரணாக நடப்பவர்களை உடனே தங்கள் நிலையிலிருந்து தாழ்த்தப்பட்டு விடுவதை, அவர்கள் உணர்ந்திருந்ததால், மன்னர்களின் அடிமைகளாகவே நீதிபதிகள் இருந்து வந்தனர்.

ஒரு நாட்டில் நல்ல நீதித் துறை யிருக்கிறதா என்பதனை, அந்நாட்டு மக்கள் அனைவரும் நடத்தப்படும் விதத்திலிருந்தும், அனைவரும் சரிசமமான உரிமைகளைப் பெறுகின்றனரா என்பதிலிருந்தும் நீதித் துறை அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் நடுநாயகமாக நின்று செயல்படுகிறதா என்பதிலிருந்தும் அறிந்துக் கொள்ளலாம். ஜனநாயக முறையையே வழக்காகக் கொண்டுள்ள நாடுகளிலும், அனைத்து மக்களும் ஒரே மாதிரியான நிலையில் இல்லை. சமூகம், பொருள் நாகரீகம் இன்னும் பலவற்றில் பின்தங்கியுள்ளவர்களின் நிலையை உயர்த்தவும், அவர்கள் பெரும்பான்மை இனத்தினரால் நசுக்கப்படுவதைத் தடுக்கவும் அரசியல் சில தடைகளை விதிக்க வேண்டும். அவ்வாறு ஏற்படுத்தப்படும் தடைகள் சரியானவை தானா அல்லது முறையற்றதா என்பதனை ஆராய்ந்து ஒழுங்கு செய்ய வேண்டியது, நீதித் துறையின் முக்கிய கடமையாகும்.

இரண்டாவதாக, ஒரு சட்டத்தின் முன்பு, நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றாகவே கருதப்படவேண்டும். பொதுவாக நாட்டு மக்களின் நன்மைக்காகவே சட்டங்கள் இயற்றப்படுகின்றன. அவ்வாறு இயற்றப்பட்ட சட்டங்களால் ஒரு சிலரோ அல்லது ஒருவரோ பாதிக்கப்படுவார்களேயானால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய மாற்று அமைப்பது அல்லது வேறு வழியில்லை என்று விளக்குவதும் நீதித் துறையின் கடமையாகும். எந்த ஒரு தனி மனிதனும் அல்லது ஒரு கூட்டத்தினரோ நாட்டுச் சட்டங்களை மீறி செயல்படுவார்களேயானால் அவர்களைத் தண்டிப்பது இத் துறையேயாகும். இவ்வாறு பல வகையினும் ஒரு நாட்டின் நீதியைக் காப்

பாற்றவேண்டிய பொறுப்பு நீதித் துறையினுடையது என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவ்வளவு பொறுப்பு வாய்ந்த நீதிபதிகள் தங்கள் பொறுப்பை மறந்து பணத்திற்காகவோ, பதவிக்காகவோ, நீதிமுறையினின்றும், தவறி நீதி வழங்குவார்களே யாயின் நாட்டில் அமைதியும், சட்டமும் நிலைத்து நிற்காது.

நீதித் துறையின் அமைப்பு: (Organisation of the Judiciary) ஒரு நாட்டின் பரப்பையும் மக்களின் தொகையையும் பொறுத்தே நீதித் துறைகள் அமைக்கப்படுகிறது. நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும்பொழுது அவர்களின் வயது, திறமை, காலம் இவற்றைத் தீர்மானித்தே தேர்ந்தெடுக்கிறார்கள். நீதிமன்றத்தில் விவாதிக்கப்படும் வழக்குகளின் ஒளிவு மறைவுகள் கிடையாது. சந்தேகப்படும் யாவரையும் நீதிமன்றத்தினுள் அனுமதிப்பதும் இல்லை.

நீதித் துறையின் நடுநாயகச் செயல்: ஒரு நாடு நல்ல நாடாக விளங்க வேண்டுமாயின், அதன் நீதித் துறைக்கு நடுநாயகமாக நின்று நீதியைக் காக்கும்படியாக அதனுடைய வேலையைக் குறிப்பிட்டிருக்கவேண்டும், நீதித் துறையின் நீதிபதிகள் சட்டத்திற்கு மதிப்பளிப்பவர்களாகவும், பயமற்றவர்களாகவும், ஒரு பக்கம் சாராதவர்களாகவும் இருக்கவேண்டும். ஒரு கெட்ட நீதிபதியானவன் தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொள்ளுவது மட்டுமல்லாமல் 'நீதி' என்னும் கோவிலுக்கே தீங்கை இழைப்பான். நீதிபதிகளுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்கப்படாவிட்டால் அவர்களின் நீதி வழங்கும் சுதந்திரம் பாதிக்கப்பட்டு நாட்டின் நன்மையும் கெட்டுப்போகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நீதித் துறைக்குத் திறமையும் சுதந்திரமும் அத்தியாவசியமானது என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் முதன்மையாகத் திகழும் காரணம்:-

(1) ஒரு நாட்டின் அரசியல் அமைப்பில் நீதித் துறையின் கடமைகள் என்னென்ன என்பது தெளிவாக இருத்தல் வேண்டும். நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையினின்றே அவர்களுடைய சுதந்திரத்தையும், பொறுப்பையும் நாம் உணர்ந்துகொள்ள முடியும். பொதுவாக நீதிபதிகளை மக்களே தேர்ந்தெடுப்பது அல்லது மக்கள் மன்றத்தின் மூலம் தேர்ந்தெடுப்பது அல்லது செயற்குழுவால் நியமிக்கப்படுவது என்பனபோன்ற மூன்று முறைகள் வழக்கத்திலுள்ளது. மக்கள் மூலமாக நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை முதன்முதலில் பிரான்ஸ் (France) நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்பு இம் முறை அமெரிக்காவின் சில பகுதிகளிலும், ஸ்விட்ஜர்லாந்தின் ஒரு சில

பகுதிகளிலும் வழக்கத்தில் உள்ளது. இந்தியாவில் நீதிபதிகள் செயற்குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இன்னும் ருஷ்யா, ஆல்பேனியா, பல்கேரியா மற்றும் பல நாடுகளிலும் நீதிபதிகளை மக்கள் மன்றத்திலிருந்தே தேர்ந்தெடுத்துவிடுகின்றனர்.

நீதிபதிகள் முதன்முதலில் கூறப்பட்டபடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருப்பின், அவர்களின் மதிப்பைக் கண்டிப்பாக நீதிபதிகள் பெறவேண்டும். மக்களின் மதிப்பை இழந்த நீதிபதிகளை அடுத்த முறை நீதிபதிகளாக மக்கள் தேர்ந்தெடுப்பார்களா என்பதில் ஐயம் எழுகிறது. ஆகையால் இவர்கள் வழங்கும் நீதி சிறிது முறை குறைந்ததாகவே காணப்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மேலும் இங்குக் கட்சிகளின் செல்வாக்கையும் தேர்ந்தெடுக்கப்படலாம். இரண்டாவதாக இவர்கள் சட்ட மன்றத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்களேயாயின், அவர்கள் சட்ட மன்றத்தின் கட்டுப்பாடுகளுக்கு உடன்படவேண்டியுள்ளது. இங்கிலாந்திலும், இந்தியாவிலும் நீதிபதிகளைச் செயற்குழு நியமிக்கிறது. இம்முறை மற்ற எல்லா முறைகளைவிடச் சிறந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை இவ்வாறு நியமிக்கப்பட்ட நீதிபதிகளின் காலம் வரையறுக்கப்படக்கூடாது. அவர்கள் எதுவரை தங்களுடைய கடமைகளைச் செவ்வனே செய்து முடிக்கின்றார்களோ, அதுவரை அவர்கள் பதவியில் இருக்கலாம். செயற்குழுவினால் நீதிபதிகளின் திறமை ஆராய்ந்து நியமிக்கப்பட்ட நீதிபதிகளைத் தவிர மற்றபடி சட்ட மன்றத்திலோ அல்லது பொதுமக்களாலோ தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகளின் காலம் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியுள்ளது. இவ்வாறு கட்டுப்பாடுகள் அடங்கியதாக இருப்பின் அது சுதந்திரத்துடன் செயல்பட இயலாது. இதைத் தவிர நீதிபதிகளாக ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் பதவியிலிருந்து விலக்கிவிட முடியாது. உதாரணமாக இந்தியத் தலைவர், இந்தியாவின் உச்ச நீதி மன்றத்தின் நீதிபதியையும், மற்றும் இந்தியாவிலுள்ள உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளையும் நியமிக்கிறார். ஆனால் அவரால் இவர்களைப் பதவியினின்றும் எளிதில் விலக்கிவிட முடியாது. அப்படி அவர்களைப் பதவியினின்றும் விலக்கவேண்டுமென்றால், முறைப்படி அவர்களது குற்றச்சாட்டுகளைப் பாராளு மன்றத்தில் விவாதித்து அவர்களில் பெரும்பாலோர் ஏற்றுக்கொண்ட பிறகே, நீதிபதிகளைப் பதவியிலிருந்து விலக்க முடியும். மேலும் நீதிபதிகளின் சம்பளம் கவரக்கூடியதாக இருக்கவேண்டும்; அவர்கள் சிறந்த சட்ட அறிவும், அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். மேலும், செயற்குழுவினின்று விடுபட்டுத் தனித்து இயங்கவேண்டும்.

கூட்டாட்சி முறையினைக் கையாளும் நாடுகளில் இருவகை நீதி மன்றங்கள் உள்ளன. உச்ச நீதிமன்றம் (Federal courts or supreme court) மற்றும் உயர்நீதிமன்றம் (State courts or High court) என்பனவாகும். ஆயினும் இம்மாதிரியான இருவகை நீதி மன்றங்களை இந்தியா வைத்துக்கொள்ளவில்லை. உச்ச நீதிமன்றத்தில் (Supreme court of India) எம் முறை கையாளப்படுகிறதோ அதே முறைதான் நாட்டின் மற்றப் பிரிவுகளில் உள்ள நீதிமன்றங்களிலும் வழக்கத்தில் இருந்து வருகிறது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இதற்கு முரணாக உள்ளது. காரணம் என்னவென்றால் அங்கு மாநில அரசுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி அமைப்பு உள்ளது. அதற்குத் தக்கவாறே நீதிமன்றமும் இயங்குகிறது.

நீதித் துறை, சட்ட மன்றம், செயற்குழு இம் மூன்றும் தனித்து ஒவ்வொன்றும் அதனிச்சைப்படி இயங்க முடியுமா? என்பது ஒரு பெரிய வினா. அதற்குப் பதிலளிக்கையில் இவைகள் அனைத்தும் மான்டெஸ்க்யூ (Montesquieu) அவர்களின் கருத்துப்படி தனித் தனியாக இயங்குகிறது. இயங்கவேண்டும் என்றே கூறுகிறார். ஆனால் அவரது கருத்து நடைமுறைக்கு ஒவ்வாததாக உள்ளது. ஒரு மனிதனின் உடலிலுள்ள வெவ்வேறு உறுப்புகள் எப்படி ஒரே நரம்பு மண்டலம், இரத்த மண்டலத்தின் கீழ் செயல்படுகின்றதோ அதே போலதான், ஒரு நாட்டினுடைய அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளிலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து இயங்கினால்தான் அது நல்ல அரசாங்கமாகத் திகழ முடியுமே தவிர ஒவ்வொன்றும் தனித் தனியாக இயங்கினால் ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. உதாரணமாகச் செயற்குழுவின் மூலமாகவே பெரும்பாலான நாடுகளில் நீதித் துறை அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதேபோல் நீதித் துறையை, செயற்குழுவால் கட்டுப்படுத்த முடியும். உதாரணமாக நீதித் துறையில் வழங்கப் பட்ட நீதியைச் செயற்குழுவால் மாற்றி அமைக்க முடியும். ஐரோப்பிய் நாடுகளில் நீதித் துறையும், மற்ற அரசாங்க இலாக்காவைப் போல் ஒன்றாகவே கருதப்படுகிறது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மாவட்ட நீதித் துறையின் அதிகாரிகள் அந் நாட்டின் மேல்சபை அதாவது செனேட்டார் அவர்களிடம் நல்ல பெயர் எடுக்கவேண்டும் நீதிபதிகளை வேலையில் அமர்த்தவும், பதவி உயர்வு கொடுக்கவும் மாற்றவும், செயற்குழு ஒன்றால்தான் முடியும்.

அதேபோல் நீதித் துறையும், செயற்குழுவின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்த முடியும். செயற்குழு அனுமதி பெற்ற சட்டங்களால் ஒரு நாட்டின் குடிமகனோ அல்லது ஒரு குழுவினரோ பாதிக்கப்படுவார்களேயாயின் அவர்களுக்கு நீதி வழங்கும் முறையில், நீதி

பதிகள் செயற்குழுவினைக் கட்டுப்படுத்த முடியும். உதாரணமாக நமது இந்திய நாட்டில் இராஜமானியச் சட்டம் (Privy Purse Bill) மேல்சபையில் தோல்வியுற்ற போதும், நமது தலைவர் (President) அவர்களின் ஒப்புதல் பெற்று அதனைச் சட்டமாகக் கொண்டு வந்தார்கள். ஆனால் உயர்நீதி மன்றத்திற்குப் போகவே; அங்கு நீதிபதிகளால் அச் சட்டம் அமுலாக்கியது தவறு என்று கூறினர். இதனால் மந்திரி சபை 1971-ல் கலைக்கப்பட்டது.

இதேபோல் மக்கள் சபையும், நீதித் துறையைக் கட்டுப்படுத்த முடியும். ஒருசில நாடுகளில் நீதித் துறை, சட்ட மன்றத்தால் உருவாக்கப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நீதிபதிகளை நியமிப்பது, அவர்களுடைய சம்பளம் முதலியவைகளை நிர்ணயிப்பது, காங்கிரஸின் மேல்சபை உறுப்பினர்களான செனேட்டார்களே யாகும். இந் நாட்டின் இன்னும் சில பகுதிகளில் சட்ட மன்றமே நீதித் துறையாகவும் விளங்குகிறது. இங்கிலாந்து நாட்டிலும், பிரபுக்கள் சபையே நீதித் துறையாக விளங்குகிறது.

அதேபோல் சட்ட மன்றம் அனுமதி பெற்ற பல அரசியல் சட்டங்களை, நாட்டிற்கு ஏற்றுக்கொள்ளப்படாததாக உள்ளது என்று நீதித் துறையால் கூற முடியும். ஆகையால் சட்ட மன்றம் இயற்றும் சட்டங்கள் அந் நாட்டு அரசியல் சட்டத்தை ஒட்டியே இருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது.

நீதித் துறையின் வேலைகள்: (Functions or Judiciary) இதன் முதல் கடமை சட்டத்தின்படி நீதி வழங்குவது. அதாவது தனி மனிதன் ஒருவன் ஓர் அரசால் பாதிக்கப்பட்டாலும் அல்லது எந்த ஒருவனால், நாட்டிற்குத் தீங்கு நேரினும் அவனைத் தண்டிப்பதோ அல்லது அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்து எது நேர்மையென்று ஆராய்ந்து வழங்குவதோ உயர்நீதி மன்றத்தின் கடமையாகும். எந்த ஒரு நீதிபதிக்கும் இந்தச் சட்டம் நல்லதா கெட்டதா என்று கூறும் உரிமை கிடையாது. யார் ஒருவர் நாட்டின் சட்டத்தை மீறுகிறார்களோ அவர்களுக்குச் சட்டத்தின்படி தண்டனை கொடுத்துத் தீருவதே நீதிபதிகளின் கடமையாகும். நீதி வழங்கும்பொழுது எந்தப் பக்கம் உண்மை இருக்கிறது என்பதனை நன்கு ஆராய்ந்து அறிந்த பின்பே நீதி வழங்கவேண்டும். நீதிபதிகள் வழங்கிய சட்டத்தை மற்றவர் மாற்றவோ, பழிக்கவோ அதிகாரம் கிடையாது. நீதிபதிகள் நீதி வழங்கும் முன்பு, அந்தச் சட்டத்தின் பொருள் என்ன, அவர்கள் வழங்கும் நீதி சட்டத்தைப் பொறுத்துள்ளதா போன்ற சில முக்கிய விஷயங்களைக் கவனிக்க வேண்டும். குழப்பங்கள் அதிகமாகவுள்ள சில விஷயங்களுக்கு நீதி

வழங்குவது மிகவும் கடினமாக இருக்கும்பொழுது, நீதிபதிகள் அந்தச் சூழ்நிலையையும் சந்தர்ப்பத்தையும், மக்களின் போக்கையும் ஆய்ந்து நீதி வழங்குவார்கள். நீதிபதிகள் இருக்கும் சட்டங்களை விரிவடையச் செய்வதற்கும், முறையான புதிய சட்டங்களை உருவாக்குவதற்கும் அதிகாரம் உண்டு. இருக்கும் சட்டங்களைக் கொண்டு நீதி வழங்க முடியாத காலங்களில் நீதித் துறை மேற்கூறியவாறு புதிய சட்டங்களை உருவாக்குகின்றது.

இங்கிலாந்து நாட்டு நீதித் துறைக்கு, அந் நாட்டுச் சட்ட மன்றம் ஏற்படுத்திய அரசியல் சட்டத்தை மாற்றும் அதிகாரம் கிடையாது. ஆனால் இந்திய, அமெரிக்க நாடுகளின் நீதித் துறைகளுக்குச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டங்கள் ஏதேனும் இந் நாடுகளின் சட்டங்களுக்குப் புறம்பானதாக இருப்பின், அச் சட்டங்களை நாட்டிற்குப் பொருந்தாதது என்று கூறும் அதிகாரம் உண்டு. அரசியல் சாசனத்திலுள்ள ஒவ்வொரு அதிகாரத்தையும் செவ்வனே படித்து மக்களோ அல்லது அரசாங்கத்தின் மற்ற இரு பிரிவுகளோ தவறு செய்யும்பொழுது, அவர்களுக்கு விளக்கி ஆவன செய்ய வேண்டியது நீதித் துறையின் கடமையாகும். இதைத் தவிர செயற்குழுக்களுக்கு அவ்வப்பொழுது அறிவுரை கூற வேண்டிய கடமையும் நீதித் துறைக்குண்டு. பலமுறை இந்திய நாட்டுத் தலைவர் (President) நீதித் துறையின் நீதிபதிகளைக் கலந்தாலோசித்திருக்கிறார். சில சந்தர்ப்பங்களில் சட்ட மன்றமும், செயற்குழுவும் ஏதேனும் ஒரு சாசனத்தை (bill) கொண்டுவந்து அதனைச் சட்டமாக மாற்றுவதற்குச் செயல்படும்பொழுது அது அந் நாட்டு அரசியல் சட்டத்திற்குப் பொருத்தமானதா அல்லவா என்ற குழப்பங்கள் ஏற்பட்டுவிட்டால் அவர்கள் நீதித் துறையிடமே கேட்டுத் தெளியவேண்டும். இதைத் தவிர நாட்டு மக்களின் உரிமைகள் (Fundamental Rights) அரசாலோ அல்லது மற்ற எக் காரணங்களாலோ பாதிக்காமல் பாதுகாத்து வருவது நீதித் துறையேயாகும். அரசாங்கம் ஏற்படுத்தும் சட்டங்களால், ஏதேனும் ஒரு தனி மனிதனின் உரிமையோ அல்லது ஒரு சிறு கூட்டத்தினரின் உரிமையோ பாதிக்கப்படுமேயானால் அவர்கள் நீதித் துறையை அணுகி நீதி வழங்க வேண்டுகோள் விடுக்க முடியும். அதேபோல் மக்கள் அரசியல் சட்டத்தை மீறி செயல்படுவார்களேயானால் அவர்களைத் தண்டிக்கும் உரிமையும் நீதித் துறைக்கு உண்டு. இதைத் தவிர நீதித் துறை சில பரிபாலிக்கும் கடமைகளையும் செய்கின்றது உதாரணமாக ஒருவரின் சொத்துகளைப் பாதுகாக்கும் உரிமையை ஒருவரின் பேரில் வழங்குவது, ஒப்பந்த திருமணங்கள் செய்வது (Registered Marriage) முதலியனவுமாகும்.

11. அதிகாரப் பிரிவினையும் பொதுக் கருத்தும் Separation of Powers and General Opinion)

இதுவரை மூன்றும் பிரிவில் அரசாங்கத்தின் மூன்று முக்கிய பிரிவுகளான சட்ட மன்றம். செயற்குழு, மற்றும் நீதித் துறை இவற்றின் அமைப்பு, வேலைகள் இவைகளைப்பற்றி ஆராய்ந்து வந்த நாம் இனி இம் மூன்றும் ஒன்றுகச் செயல்படுகின்றனவா அல்லது தனித் தனியே இயங்குகின்றனவா என்பதனை நோக்குவோம் நாம் எப்படி ஒரு நாடு அவற்றின் பிரிவுகள் என்பதனைப்பற்றிப் படிக்கும்போது பொதுவாக மத்திய அரசின் கடமைகள், மாநில அரசுகளின் கடமைகள் என்று ஆராய்கின்றேமோ, அதேபோல் ஓர் அரசாங்கத்தின் கடமைகள் என்னென்ன என்று ஆராயும் பொழுது அரசாங்கத்தின் பிரிவுகள் என்னென்ன என்று மேல் வாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சட்டங்களை இயற்றுவது சட்ட மன்றத்தின் கடமை. அதனைச் செயலில் காட்டுவது செயற்குழுவின் கடமை. அவை செவ்வனே நடைபெறுகின்றனவா என்று கண் காணிப்பது நீதித் துறையின் கடமையாகும்.

அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவும் அதனதன் வேலைகளைச் செவ்வனே செய்துவருகிறது. இவ்விதமான அரசாங்கப் பிரிவுகள் தங்களுடைய வேலைகளைத் தனித்தனியாகச் செய்து வருகின்றது என்பதனை இக் கால அரசியல் அறிஞர்கள் ஒத்துக் கொள்வதில்லை. ஆயினும் இவ்வாறு தனித்தனியாக ஒவ்வொரு அரசாங்க உறுப்பும் இயங்குவதால் பல நன்மைகள் உள்ளன. முதலாவதாக இவை ஒவ்வொன்றின் கடமைகள் என்னென்ன என்பது நன்கு விளங்கும். அது எந்த ஒரு துறையில் செயல்படுகிறதோ அதில் அதிக ஞானத்தைப் பெற முடிகிறது. அரசாங்கத்தின் முப்பிரிவுகளும் சரிசமமான கடமைகளைப் பெறுவதால் இவைகளுக்குள் இந்தப் பிரிவு பெரியது, மற்றது சிறியது என்பது போன்ற பிரச்சனைகள் எழ வழியில்லை.

1748-ம் ஆண்டு மான்டெஸ்க்யூ (Montesquieu) என்பவர் 'நீதியின் அடிப்படை' (The Sprit of the Laws) என்னும் நூலில் இந்தப் பிரிவினைக் கடமைகளைப்பற்றி தெளிவாக எழுதியுள்ளார். இவர் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவர். சரித்திரத்தை நோக்கும்பொழுது மான்டெஸ்க்யூவிற்கு முன்பு அரிஸ்டோடல் (Aristotle) என்பவர் இதேபோல் அரசாங்கத்தின் மூன்று பிரிவுகள், அவைகளின் தனித் தனி கடமைகள் என்னென்ன என்பதனைப் பற்றியெல்லாம் கூறியுள்ளார். ஆனால் அரிஸ்டோடல் அவர்களின் காலத்தில் அரசியல் இன்று வளர்ச்சியடைந்திருப்பதைப்போல் வளர்ச்சியடையாததால்,

இவரது கருத்து அன்று பிரசித்திப் பெறவில்லை. ஆனால் அதே கருத்தை 18ஆம் நூற்றாண்டில் மான்டெஸ்க்யூ அவர்களின் மூலம் உலகிற்குத் தெரியப்படுத்த முடிந்தது. பழைய காலத்தில் ரோமானியர்கள் ஆட்சியின்படி பிரிவினை அதிகாரம், மேற்பார்வை, சமத்துவம் இவைகள் அனைத்தும் ஓர் அரசாங்கத்திற்குத் தேவை என்பதை உணர்ந்திருக்கிறார்கள். அதேபோல் 14ஆம் நூற்றாண்டில் மார்ஸிக்லியோ (Marsiglio) என்பவர் செயற்குழு, சட்ட மன்றம் இவைகளின் அதிகாரங்களைப்பற்றியும், தனித்தனியாகச் செயற்பட வேண்டும் என்பதனையும் வலியுறுத்தியுள்ளார். அதேபோல் 16ஆம் நூற்றாண்டில் போதின் (Bodin) என்பவர், ஒரு நாட்டின் நீதித்துறை, செயற்குழு, சட்ட மன்றம் இவைகளினின்றும் தனித்து இயங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். 17ஆம் நூற்றாண்டில் இதனையே ஹேரிங்டன், (Harrington) மற்றும் லாக் (Locke) என்பவர்கள் வலியுறுத்துகிறார்கள். ஆனால் 18ஆம் நூற்றாண்டில் அதிகாரப் பிரிவு (Separation of Powers) என்பது முந்தைய நூற்றாண்டுகளைவிட உயர்வாகவும், ஆழமாகவும் செயல்படத் தொடங்கியது. தனி மனிதனின் உரிமை, சுதந்திரம் இவற்றினைப்பற்றி அதிகமாகப் பேசப்பட்டது. இந்த நூற்றாண்டில்தான். மேலும் அமெரிக்கப் பிரெஞ்சு நாடுகளில் புரட்சிகள் ஏற்பட்டதும், இதே நூற்றாண்டில்தான். அதே நூற்றாண்டில் வாழ்ந்த மான்டெஸ்க்யூ அவர்களும் இதற்குப் புறம்பானவராகக் காணப்படவில்லை. இதனையெல்லாம் மனதில் கொண்டே இவர் ஓர் அரசிற்கு மூன்று பிரிவுகளும், மூன்று வகை அதிகாரங்களும் உண்டு எனவும் அவை ஒவ்வொன்றும் தனித்தனியாகவே செயல்பட வேண்டும் என்றும் கூறுகின்றார். இவ்வாறு ஓர் அரசாங்கத்திலுள்ள ஒவ்வொரு பிரிவும் தனித்தனியாக நின்று அதனதன் கடமைகளைச் செவ்வனே செய்ய வேண்டுமென்றால் ஒவ்வொரு நாடும் எழுதப்பட்ட அரசியல் சட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்றும் கூறுகின்றார். அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவின் அதிகாரமும் அரசியலின் தனித்தனி பிரிவே ஏற்று நடத்த வேண்டும். இவைகள் செயல்படும்பொழுது தனித்தனி உரிமையுடனும், ஒரு பிரிவு மற்றப் பிரிவுடன் தொடர்பு கொள்ளாமலும் தனது அதிகாரங்களைச் செலுத்தவேண்டும் என்பதாகும்.

மான்டெஸ்க்யூ அவர்களின் கருத்துப்படி 'அதிகாரப் பிரிவின்' விதியின் அடிப்படைகள் (1) ஓர் அரசாங்கத்தின் எல்லாப் பிரிவுகளும் ஒருவரின் கையிலோ அல்லது ஒரு குழுவினிடமோ இருத்தல் கூடாது. அவ்வாறு இருந்து ஓர் அரசாங்கம் செயல்படுமானால் அது கொடுங்கோன்மை ஆட்சிக்கு வித்தாக இருக்கும். மேலும்

செயற்குழுவின் கடமை, சட்ட மன்றத்தின் கடமைகள் இரண்டும் ஒருவரின் கையில் இருந்தால் மக்களின் சுதந்திரம் எளிதில் பாதிக்கப்படும். ஒரு சமூகத்திலுள்ள தனி மனிதர் ஒவ்வொருவரும் சுதந்திரத்துடன் வாழ வேண்டுமென்ருல் 'அதிகாரப் பிரிவு' முறை ஓர் அரசாங்கத்தில் இருந்தால்தான் செயல்படுத்த முடியும். மேலும் இவ்வாறு ஓர் அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவும் தனித்தனியாகச் செயல்படும்பொழுது ஒரு துறை மற்றெரு துறைக்கு மேற்பார்வையாகவும் இருக்கிறது.

ஆனல் மான்டெஸ்க்யூ அவர்களின் இந்தப் 'பிரிவினை அதிகாரங்கள்' என்ற விதி இக் கால அரசியலுக்கும் அரசியல் அமைப்பிற்கும் சாலச் சிறந்ததாக இல்லை. இக் கால அரசியல்களில் அமெரிக்க நாட்டின் அரசியல் அமைப்பு, மான்டெஸ்க்யூ கூறியது போல் அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவும் தனித்தே இயங்குகின்றன என்கின்ருர்கள். ஆனல் இது அந் நாட்டு அரசியல் அமைப்புச் சட்டப் புத்தகத்தின்படி சரியாக இருந்தாலும், பழக்கத்தில் முற்றும் மாறுபட்டே உள்ளது. உதாரணமாக அமெரிக்க நாட்டுத் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிருர். அதேபோல் அந் நாட்டுச் செனேட் உறுப்பினர்களையும், கீழ்ச்சபையாகிய மக்கள் சபை உறுப்பினர்களையும், அந் நாட்டு மக்களே தேர்ந்தெடுக்கிருர்கள். இதனல் அமெரிக்க நாட்டுத் தலைவர், அந் நாட்டுச் சட்ட மன்றமாகிய காங்கிரஸிற்குக் (Congress) கட்டுப்பட வேண்டியதில்லை. ஆனல் அந் நாட்டு அரசாங்கம் நடக்கும் முறையை நோக்குவோமானல் இதற்குச் சிறிது முரணுகச் செயல்படுவது நன்கு புரியும். அதாவது அமெரிக்க நாட்டுத் தலைவர் தாம் செய்யும் ஒவ்வொரு காரியங்களுக்கும், அந் நாட்டுச் சட்ட மன்றத்தின் உறுப்பினர்களான செனேட்டாரிடமும், மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களிடம் சம்மதம் பெற்ருக வேண்டும். அதேபோல் சட்ட மன்றம் இயற்றும் சட்டங்கள் அமெரிக்க நாட்டுத் தலைவரின் கையெழுத்துப் பெற்ற பின்பே சட்டமாக்கப்படுகிறது. இதேபோல் நீதித் துறையின் நீதிபதிகளை அமெரிக்கத் தலைவரே நியமிக்கின்ருர். ஆனல் நீதிபதிகளை நியமிக்கும் உரிமை அவருக்குக் கிடையாது. மேற்கூறிய உதாரணங்கள் மூலம் இந்தப் 'பிரிவினை அதிகாரங்கள்' செயல்படும்போது அவ்வளவு சிறந்ததாகத் தோன்றவில்லை. இவ்வாறு செயல்படுவது என்பது இந்த இருபதாம் நூற்ருண்டு அரசியலுக்குச் சிறிதும் ஒத்துவராது என்பதில் ஐயமும் இல்லை.

சுருங்கக் கூறின் ஓர் அரசாங்கத்தை மனித உடலுக்கு ஒப்பிடலாம். எப்படி மனிதனின் ஒவ்வொரு உறுப்புகளும் தனித்தனியாக இயங்குகின்றனவோ அதேபோல் ஓர் அரசாங்கத்தின் மூன்று

உறுப்புகளும் தனித்தனியாக இயங்கினாலும் அவைகள் நரம்புகளின் துணைக்கொண்டே இயங்குகின்றது. எப்படி ஒரே நரம்பு மண்டலம் உடலின் பல பகுதிகளுக்குப் பிரிந்து சென்று, ஒவ்வொரு பகுதிக்கும் தொடர்பையும், பிரிவையும் அளிக்கின்றதோ அதே போல்தான் ஒரு நாட்டு அரசியலமைப்பும், அரசாங்கமும் அதன் பிரிவுகளுமாகும். சட்ட மன்றம், செயற்குழு, நீதித் துறை இவை அதனதன் கடமைகளைச் செய்யும்போது தனித்தனியாகவும், ஆனால் பொதுவாக நாட்டில் நல்ல பரிபாலனத்திற்கு இணைந்தும் செயல்பட வேண்டும். அவ்வாறு இணைந்து செயல்பட்டால்தான் நாட்டில் நல்ல அரசும், மக்களிடம் அமையும், நீதியும் நிலையாக நிற்கும்.

பகுதி ஆ

1. ஆசிய நாடுகளின் செயற்குழு அல்லது நிருவாகத் துறை அமைப்புகளைப் பற்றிய முகவுரை

(Preface to Asian Executives)

இப் புத்தகத்தின் முதல் பகுதியில் அரசியல் பாடம் படிப்ப தற்கு முன் நாம் அடிப்படையாகத் தெரிந்துகொள்ள வேண்டியவை களைப்பற்றித் தெளிவாக ஆராய்ந்தோம். இனி இந் நூலின் இரண் டாவது பகுதியில் நாம் ஆசிய நாடுகளில் முக்கியமாகத் திகழ்கின்ற ஜப்பான், சீனு, பிலிப்பைன்ஸ், மலாசியா மற்றும் ஆசியாவின் துணைக் கண்டமெனக் கூறப்படும் இந்தியா இவைகளின் செயற் குழுக்களைப்பற்றித் தனித்தனியாக ஆராயப் போகின்ருேம்.


மேற்கூறிய இந்த ஐந்து ஆசிய நாடுகளிலும், செயற்குழுக்கள் மக்களாட்சி முறையின் அடிப்படையிலேயே நிறுவப்பட்டுள்ளது. செயற்குழு என்று கூறும்பொழுது உண்மை செயற்குழு என்றும், பெயரளவு செயற்குழு என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளதை முதல் அத்தியாயத்தில் கண்டோம். அதேபோல் இந்த ஐந்து ஆசிய நாடுகளிலும் எது எது உண்மை செயற்குழுவாகவும், பெய ரளவு செயற்குழுவாகவும் விளங்குகிறது என்பதையும் அதன் அமைப்பையும் தெளிவாக இப் பகுதியில் ஆராய்வோம்.

இந்த ஐந்து ஆசிய நாடுகளில் அரசியல் அமைப்புகளைப் பொது வாகப் பார்க்கும்பொழுது, இந்தியா, மலாசியா இவை இரண்டும் கூட்டாட்சியையும், சீனு, ஜப்பான், பிலிபைன்ஸ் இம் மூன்றும் ஒற்றையாட்சி முறையையும் கொண்டுள்ளது என்பதையும் அறி கிருேம். இந்தியாவிலும், மலாசியாவிலும் மத்திய அரசுகளில் உள்ளதைப் போலவே செயற்குழுக்கள் மாநில அரசுகளிலும் உள்

ளதா என்று ஆய்வோமாகில், இதில் இவ்விரண்டு நாடுகளும் சிறிது வேறுபடுவதை நாம் பார்க்கலாம். இந்திய நாடு கூட்டாட்சி முறையைக் கொண்டுள்ளதாக இருப்பினும், மாநிலங்களில் இயங்கி வரும் செயற்குழுக்களையும், மத்திய அரசு உண்மை, பெயரளவு செயற்குழுக்களையும் அப்படியே ஒத்துள்ளது. மேலும், இந்திய நாட்டு மாநிலங்களின் அரசியல் அமைப்பு, சட்டங்கள், ஆட்சி முறை இவைகள் அனைத்தும் மத்திய அரசிடமிருந்து சிறிதும் மாறுதல் பெற்றில்லை. அதற்கு முக்கிய காரணம் இந்தியா முழுவதும் ஒரே ஒரு அரசியல் சட்டமே உள்ளது. ஆனால் மலாசிய நாட்டில் பதின்மூன்று மாநிலங்கள் உள்ளன. இந்த பதின்மூன்று மாநிலங்களும் தனித்தனியான மாறுபட்ட அரசியலமைப்புகளை உடையதாயிருக்கின்றன. மலாசிய நாட்டுக் கூட்டாட்சி முறை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கூட்டாட்சி முறையைப்போல் உள்ளது.

அடுத்து ஒற்றையாட்சி முறையைக் கொண்டுள்ள ஜப்பான் சீனு, பிலிபைன்ஸ் இம் மூன்றில், ஜப்பான், பிலிபைன்ஸ் இவைகள் இரண்டும் தீவுகள். சீனு ஆசியாவிலேயே பெரிய நாடாகவும், மக்கள் தொகை நிறைந்த நாடாகவும் விளங்குகிறது. ஜப்பான் நாட்டுப் பரிபாலன முறை அப்படியே இங்கிலாந்து நாட்டைப் போலவும், பிலிபைன்ஸ் நாட்டுப் பரிபாலன முறை அமெரிக்க நாட்டையும் ஒத்துள்ளது. ஆனால் பிலிபைன்ஸ் நாடு, அமெரிக்க நாட்டைப்போல் பல மாநிலங்கள் கொண்டதில்லை. சீன நாட்டின் அரசியல் அமைப்பு, ஆட்சிமுறை எல்லாமே மற்ற மேலை நாடுகளுடனே அல்லது கீழை நாடுகளுடனே ஒப்பிடும்படியாக இல்லை. மற்றொரு கம்யூனிஸ்ட்டு நாடான ருஷ்யாவுடன் ஒப்பிடுவோமாகில், அங்கும் சீன நாடு வேறுபட்டிருப்பதை நாம் அறிகிறோம். இந்த ஐந்து நாடுகளின் செயற்குழுக்களைப்பற்றியும், அவற்றின் அதிகாரங்கள், வேறுபாடுகள் முதலியனவற்றையும் நாம் இனி தனித்தனியாகப் பின்னல் காண்போம்.

ஜப்பானின் தேசிய படம் (THE JAPAN)



2. ஜப்பான் நாட்டு நிருவாக அமைப்புகள்
(Executives in Japan State)

1. இன்றைய ஜப்பான் ஓர் அறிமுகம் (Japan To-day)

கிழக்கித்திய நாடுகளில் ஜப்பான் ஒரு தலைசிறந்த நாடாக விளங்குகிறது. முற்காலத்திய வரலாற்றில் சிறப்புப் பெற்ற ஜப்பான் இக் காலத்திலும் ஒரு தலைசிறந்த நாடாக விளங்குகின்றது. இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு ஜப்பான் ஒரு புத்துயிர் பெற்றுள்ளது. பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் கண்டுள்ள ஜப்பான் அரசியல் துறையிலும் நல்ல நிலையை அடைந்துள்ளது. இன்றைய ஜப்பான் சட்ட அமைப்பு 1946ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதாகும். அரசியல் முகப்பில் ஜப்பானிய மக்கள் அமைதியை என்றும் விரும்புவதாக அறிவித்துள்ளார்கள். உலக அரங்கில் அமைதியை நிலைநாட்ட ஈடுபடுவதில் ஒரு நல்ல இடத்தை வரலாற்றில் கிடைக்கும்படிச் செய்யவும் கொடுங்கோன்மையை விரட்டவும், அடிமைத்தனம் ஒழியவும், அடக்குதல் நீங்கவும் ஜப்பானிய மக்கள் என்றும் பாடுபடுவார்கள் என உறுதி கூறுகிறார்கள். நாடு சிறியதாக இருந்தாலும்கூட மக்கள் நல்ல உழைப்போடு நாட்டிற்காகத் தொண்டு செய்கிறார்கள். பரம்பரையாக வரக்கூடிய கொள்கைகளை மதித்தபோதிலும், தற்கால அரசியல் மாறுதல்களையும் ஏற்றுக் கொள்கிறார்கள். இன்றைய ஜப்பான் ஆசியாவின் விஞ்ஞானம், தொழில் துறை, ஜனநாயகம், மக்கள் உரிமை இவைகளின் அடிப்படையில் நன்றாக இயங்கி வருகிறது. தாங்கள் மட்டும் சுதந்திரமாக வாழ்வதோடல்லாமல், மற்ற நாட்டு மக்களும் சுதந்திரமாக வாழ்வதை ஜப்பானியர்கள் விரும்புகிறார்கள். இவர்களுடைய அரசியல் அமைப்பில் ஜனநாயகத்

திற்கும், ஜனநாயகக் கொள்கைகளுக்கும் பாராளு மன்ற உரிமைகளுக்கும், மக்களின் நன்மைகளுக்கும் மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள். எல்லா அரசியல் அமைப்புகளைப் போலவும், ஜப்பான் நாட்டிலும் செயற்குழு, மக்கள் சபை, நீதித் துறை ஆகியவைகள் உள்ளன. அரசியல் அதிகாரம் மக்களிடையே இருக்கிறது.

2. ஜப்பான் நாட்டுப் பெயரளவு, உண்மை நிருவாகத் துறைகள்

ஜப்பானிலுள்ள நிருவாகத் துறை இரு வகையாகப் பிரிக்கலாம். பெயரளவில் (Nominal) செயற்குழுவாக இயங்கி வருவது ஜப்பான் நாட்டுப் பேரரசர் ஆவார். ஆனால் உண்மையான (Real) செயற்குழுவும், அதிகாரங்களும், அமைச்சரவையும், அதற்குத் தலைமை தாங்கும் பிரதம மந்திரியிடமும் இருக்கிறது. பழைய காலத்திலிருந்து, இக் காலம்வரை ஜப்பானில் மன்னர்கள் இருந்து வருகிறார்கள். இது ஆங்கில நாட்டில் இருந்துவரும் முறையைப் போல் அமைந்துள்ளது. பட்டத்துக்கு யார் வர வேண்டும் என்னும் பிரச்சனையைத் தீர்க்க ஜப்பான் நாட்டுப் பாராளு மன்ற(Di'et)த்திற்கு அதிகாரம் உண்டு. அதேபோல் ஆங்கில நாட்டிலும், அரச பரம்பரை பட்டத்திற்கு வருவதற்கான வழிமுறைகளைக் கண்காணித்து வருவது அந் நாட்டிலுள்ள பாராளு மன்றமாகும். ஆங்கில நாட்டில் உள்ளதுபோலவே, ஜப்பான் நாட்டிலும் மன்னரின் மூத்த மகன் பட்டத்திற்கு வரவேண்டும். அப்படி மூத்த மகன் இல்லாவிட்டால் மன்னரின் மூத்த மகள் பட்டத்திற்கு வரலாம். பட்டத்திற்கு வருபவர் குழந்தையாக இருந்தால் அல்லது மன்னர் நோய் வாய்ப்பட்டு ஆட்சி நடத்த முடியாமலிருந்தால் மன்னரின் பிரதிநிதி, பாராளு மன்றத்தால் நியமிக்கப்படலாம். மேலும் மன்னர் தன்னுடைய அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுப்பதற்கும் உரிமையுள்ளது.

மன்னரின் அதிகாரங்கள் : 1946ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த அரசியல் சட்டப்படி ஜப்பானியப் பேரரசர் ஒரு தெய்வத்தின் அம்சமாகக் கருதப்பட்டார். ஆனால் இப்பொழுதுள்ள அரசியல் சட்டப்படி ஜப்பானியப் பேரரசர் அரசின் சின்னமாகவும், மக்களின் ஒற்றுமைக்கு முதல் ஆளாகவும் இருக்கிறார். அரசியல் அதிகாரம் இவரிடம் இல்லை. அது மக்களிடம் இருக்கிறது. இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு ஜப்பானிய மன்னரின் நிலையும், அவருடைய அரசாங்க அதிகாரங்களும், ஆங்கில நாட்டு முடியாட்சியின் அதிகாரத்தையும், நிலையையும் ஒட்டியிருக்கிறது. மன்னரின் தனிப்பட்ட நிலை இப்போது இல்லை. வாரிசாகப் பட்டத்திற்கு வரு

பவர்களை நிர்ணயம் செய்ய, ஜப்பானியப் பார்லிமெண்டான டயட்(Di'et)டுக்கு அதிகாரம் உண்டு. மன்னர் செய்யும் ஒவ்வொரு அரசியல் காரியத்திலும் அமைச்சரவையின் அறிவுரையும், ஒப்புதலையும் மன்னர் பெறவேண்டும். மன்னர் செய்யக்கூடிய எல்லா அரசியல் காரணங்களுக்கும் மந்திரி சபையே பொறுப்பாகும். அரசியல் சட்டத்தில் எப்படி வழி வகுத்திருக்கிறதோ அப்படியே பேரரசர் தன்னுடைய கடமைகளைச் செய்யவேண்டும். அவருக்குத் தன்னுடைய வேலைகளைப் பகிர்ந்து கொடுக்கச் சட்டத்தின் மூலம் வழி வகுக்கப்பட்டிருக்கிறது.

மன்னரின் செயற்குழு அதிகாரங்கள் :

ஜப்பானியப் பார்லிமெண்டாகிய டயட்டால் தேர்ந்தெடுக்கப் பட்டவரை, ஜப்பானிய மன்னர் நாட்டின் பிரதம மந்திரியாக நியமிப்பார். அதேபோல அமைச்சரவையால் தேர்ந்தெடுக்கப் பட்டவரை ஜப்பானிய நாட்டின் உயர்நீதி மன்றத்தின் பிரதம நீதி பதியாக மன்னர் நியமிக்கிறார். மந்திரி சபையின் துணைக் கொண்டு, அவர்கள் ஒப்புதலின் பேரில் அரசின் சார்பில், நாட்டின் அரசியல் சட்டத்தின் திருத்தங்களை அறிக்கை செய்வார் (Promolgate). அமைச்சரவை இயற்றிய சட்டங்களையும். உத்தரவுகளையும், உடன்படிக்கைகளையும் இவர் அறிவிப்பார்.

சட்ட மன்ற அதிகாரங்கள் (Legislative Powers) :

ஜப்பானியப் பாராளு மன்றமான டயட்டைக் கூட்டுவது, மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய கீழ்ச் சபையைக் கலைப்பது அல்லது தற்காலிகமாகக் கூட்டத்தைத் தள்ளி வைப்பது போன்றவைகள் மன்னரின் சட்டமன்ற அதிகாரங்களாகும். பாராளு மன்றமாகிய டயட்டிற்குத் தேர்ந்தெடுப்பதற்காகப் பொதுத் தேர்தல் நடத்துவதற்கான அறிக்கையை வெளியிடுவது மன்னரின் கருத்தாகும். ஆனால் இவையனைத்தும் அமைச்சரவையின் ஒப்புதலின் பேரில்தான் செய்ய முடியும். சட்டத்தின் பிரதியாக அமைக்கப்பட்ட அல்லது கலைக்கப்பட்ட மந்திரிசபை அல்லது அமர்த்தப்பட்ட அல்லது நீக்கப்பட்ட நாட்டு அதிகாரிகள் மன்னரின் மூலமாகவே நியமிக்கவும் நீக்கவும் படுகிறார்கள். வெளி நாட்டுத் தூதுவர்கள் ஜப்பான் நாட்டிற்கு வரும்பொழுது அவர்கள் கொடுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வது அல்லது ஜப்பானிலிருந்து வெளி நாடுகளுக்கு நற்சாட்சிப் பத்திரங்களைக் கொடுத்தனுப்புவது போன்றவைகளை மன்னரே கவனிப்பார்.

நீதித் துறை அதிகாரங்கள் (Judicial Powers) :

ஜப்பானிய மன்னருக்கு நீதித் துறையிலும் சில அதிகாரங்கள் உள்ளன. அமைச்சரவையால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நீதி மன்றங்களுக்கு நீதிபதிகளாக நியமிக்கும் அதிகாரம் உண்டு. பொதுவான அல்லது சிறப்பான மன்னிக்கும் அதிகாரங்களையும், நீதிமன்றத்தில் கொடுத்த தண்டனைகளைக் குறைக்கவும், நிறுத்தி வைக்கவும் மன்னருக்கு அதிகாரங்கள் உண்டு. இவைகள் தவிர விருதுகள் வழங்குவது, வேறு அரசியல் விழாக்களில் கலந்து கொள்வது போன்ற உரிமைகள் உண்டு.

திறனாய்வு (Estimate) :

பேரரசின் அதிகாரங்களை நாம் நன்றாகக் கவனித்தால் அவருடைய செயல்கள் அனைத்தும் நாட்டின் தலைவர் என்ற முறையிலும், அரசியலமைப்பை ஒட்டியும், அமைந்திருக்கின்றன. மந்திரி சபையின் ஆலோசனையும், ஒப்புதலும் இல்லாமல் அவர் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. மன்னர் செய்யும் அரசியல் காரியங்கள் அனைத்திற்கும், அமைச்சரவையே பொறுப்பாகும். ஆகவே மன்னருக்கு அரசாங்கத்தில் உண்மையான அதிகாரங்கள் இல்லை. மன்னர் நாட்டை ஆள்கின்றார். ஆனால் ஆட்சி செய்யவில்லை. இவருடைய அதிகாரம் ஆங்கில நாட்டு மன்னரின் அதிகாரத்தைப்போல் அமைந்துள்ளது. ஒரு வகையில் ஆங்கில நாட்டு மன்னரைவிட ஜப்பானிய மன்னரின் அதிகாரம் குறைவாகவே உள்ளது. ஏனென்றால் ஆங்கில நாட்டின் பிரதம மந்திரி மன்னரைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்ற ஓர் உரிமை உள்ளது.

இன்றைய நிலை :

ஜப்பானின் இன்றைய அரசியலில் பேரரசருக்குத் தனிப்பட்ட உரிமைகள், சலுகைகள் கிடையாது. அவர் சாதாரண குடிமகனைப் போலவே கருதப்படுகிறார். இளவரசருக்கு அரசை ஏற்றுக் கொள்ளும் பொறுப்பிற்குத் தனிப்பட்ட பயிற்சி கிடையாது. இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு பேரரசருக்குள்ள சலுகைகள் எல்லாம் நீக்கப்பட்டபோதிலும், அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பட்டங்களை மாத்திரம் வைத்திருக்கிறார்கள். அதைப் போலவே அரச குடும்பத்தில் திருமணமாகிச் சென்ற பெண்களும் அரச குடும்பத்தின் பட்டத்தை வைத்திருக்கிறார்கள். பாராளு மன்றமாகிய டயட்டின் அனுமதியின்றி தனிப்பட்ட முறையில் அரச குடும்பத்தினர் சொத்துகளை வழங்கவோ அல்லது விற்கவோ அல்லது பரிசுப் பொருள்களைப் பெறவோ கொடுக்கவோ முடியாது. பேரரசின் இன்றைய நிலை

முன்னைப் போல் இல்லா விட்டாலும் மக்கள் பேரரசருக்குச் செலுத்தக் கூடிய மரியாதை ஒன்றும் குறையவில்லை. முன்னைப் போல் பேரரசரைக் கடவுளின் பிரதிநிதியென்று கருதாவிட்டாலும் கூட ஜனநாயக நாட்டின் மக்களின் தலைவர் என்று கருதப் படுகிறார். இன்றைய அரசியலில் சட்டப்பூர்வமான மன்னராக விளங்குகிறார். இப்பொழுது இவர் மக்கட்கு ஆற்றும் பணி ஆங்கில நாட்டில் பணியாற்றி வரும் இராணியைப் போலவே இருக்கிறது.

ஒப்புவமை (Comparison) :

ஆங்கில நாட்டில் பிரதம மந்திரியை இராணி நியமிக்கிறார்கள். அங்கு வழக்காறு உள்ளது (Convention). பொதுத் தேர்தலில் பெரும்பான்மையான இடங்களைப் பெற்ற கட்சித் தலைவரை அழைத்துப் பிரதம மந்திரியாக நியமிக்கிறார்கள். ஆனால் ஜப்பானின் பாராளு மன்றமாகிய டயட்டால் (Di'et) தேர்ந்தெடுக்கப் பட்டவரையே ஜப்பானியப் பேரரசர் பிரதம மந்திரியாக நியமிப்பார். ஆங்கில நாட்டில் மக்கள் சபையை (House of common) கலைப்பதற்கு ஆங்கில நாட்டு இராணி மறுக்கலாம். ஆனால் ஜப்பானியப் பேரரசர் அப்படிப்பட்ட செயலைச் செய்ய முடியாது. இருந்த போதிலும், அரசாங்கம் எவ்வாறு நடைபெற முடிகிறது என்ற விவரங்கள் அனைத்தையும் அறிந்து கொள்ள ஜப்பானியப் பேரரசுக்கு உரிமையுண்டு அரசியலில் உண்மையாக அவருக்குச் செல்வாக்கு இல்லாவிட்டாலும் கூட பொதுவாக மக்களிடையே மதிப்பும் செல்வாக்கும் உள்ளது. அதிகாரம் இல்லாத மன்னனை மக்கள் போற்றுவது, மன்னர் மக்கள் மீது கொண்டுள்ள மதிப்பையும். பாசத்தையும் காட்டுகிறது. அரச நிலையில் பல மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும் கூட மன்னரை மக்கள் மதித்துப் போற்றுகிறார்கள். அரச பரம்பரையைப் பற்றிய தவறான எண்ணங்கள், கருத்துகள் ஜப்பானில் நிலவுவதில்லை. தெய்வமாகக் கருதப் பட்டவரை இன்று மக்கள் மாபெரும் ஜப்பானியத் தலைவராகக் கருதுகிறார்கள். இன்றைய அரசியலில் ஜப்பானிய மன்னர் மக்களோடு பழகுவது மட்டுமல்லாமல், எல்லா சமூக விழாக்களிலும் பங்கு கொள்கிறார். தாள்கள் (News papers), சஞ்சிகைகள் (Magazines) இவருடைய வாழ்க்கை வரலாற்றைப் போற்றி எழுதுகின்றன. கீழை நாடுகளிலுள்ள அரசியல் அமைப்புகளை எல்லாம் உற்று நோக்கினால், ஜப்பானிய மன்னருடைய நிலை நல்லதாகவே இருக்கிறது.

மலாசிய நாட்டு மன்னரும் அரசின் தலைவராகக் கருதப்படுகிறார். ஆட்சியாளரின் மாநாட்டில் (Confederation of Rulers)

மன்னர் தேர்ந்தெடுக்கப்படுகிருர். எல்லா விழாக்களிலும் மன்னருக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. எல்லாப் படைகளுக்கும் தலைவராக விளங்குகிருர். ஜப்பான் நாட்டிலுள்ள முறையைப் போலவே மலாசியாவிலும் மன்னர் அரச சபையின் ஒப்புதலையும், ஆலோசனைகளையும் கேட்டுக் காரியங்களைச் செய்கிருர். ஆனல் மலாசிய மன்னர் நீதிபதிகளை நியமனம் செய்யும்பொழுது தன்னுடைய பெயரில் வாக்குப் பிரமாணத்தை அளிக்கின்ருர். இந்த முறை ஜப்பான் நாட்டில் இல்லை. அதற்கு மாருக ஜப்பான் நாட்டில் சட்டத்தின் பேரில் பதவிப் பிரமாணம் செய்யப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மன்னர் 5 ஆண்டுகள் பதவிக் காலம் வகிப்பார். இப்படிப்பட்ட தேர்வு முறை ஜப்பானிய நாட்டில் இல்லை. ஒரு முறை மன்னராக அமர்ந்து விட்டால் ஆயுள் காலம் முழுவதும் இருக்கலாம். இறந்து விட்டால் அவரது வாரிசு பட்டத்துக்கு வரலாம் அல்லது வேலையை இராஜினமா செய்து விட்டால் வாரிசு உரிமைப்படி மற்றவர் பட்டத்திற்கு வரலாம். ஜப்பானிய மன்னருக்கும், மலாசிய மன்னருக்கும் அதிகாரங்களில் வேறுபாடுகள் பல உள்ளன. ஜப்பானிய முறையும், அரசினுடைய நிலையும் நல்லதாகவே இருக்கின்றன.

உண்மை செயற்குழு (Real Executive) ;

ஜப்பான் நாட்டில் உண்மையான செயற்குழு மந்திரி சபையும், அதற்குத் தலைமை தாங்கும் அரசியல் சட்டத்தில் மந்திரி சபைக்குச் செயற்குழு அதிகாரங்கள், அரசியல் அமைப்பு விதி 66இன்படி உண்மையான செயற்குழு பிரதம மந்திரியும், மற்ற மந்திரிகளும் சேர்ந்து இயங்கும் முறையாகும். பிரதம மந்திரியும், மற்ற மந்திரிகளும் படையைச் சார்ந்தவர்களாக இருக்கக் கூடாது. மந்திரி சபை அனைத்தும் ஜப்பானியப் பார்லிமெண்டான டயட்டிற்குப் பொறுப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். பிரதம மந்திரி அரசாங்க மந்திரிகளை நியமனம் செய்கிருர். பொதுத் தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்ற கட்சி ஆளும் கட்சியாகப் பாராளு மன்றமாகிய டயட்டில் இடம் பெறுகிறது. இராஜாங்க மந்திரிகளை வேலையிலிருந்து நீக்குவதற்குப் பிரதம மந்திரிக்கு அதிகாரம் உள்ளது. பாராளு மன்றத்திலுள்ள மக்கள் சபை நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் மந்திரி சபை தங்கள் பதவியை இராஜினமா செய்ய வேண்டும். அல்லது மக்கள் சபை பத்து நாட்களில் கலைக்கப்பட வேண்டும். ஜப்பானில் உண்மையான மக்களாட்சி இருப்பதையும், மந்திரி சபை நன்ருக இயங்கி வருவதையும், நாம் காண முடிகிறது. 1947-ம் ஆண்டு முதல் இன்று வரை ஜப்பானிய நாட்டில் மந்திரிசபை ஆங்கில

நாட்டைப் போலவே நன்றாக்வே இயங்கி வருகிறது. பாராளு மன்றத்தால் முடிவு செய்யப்பட்ட தீர்மானங்களை மந்திரி சபை நிறைவேற்றி வைக்கிறது. ஜனநாயக முறைப்படி ஜப்பானில் அரசாங்கம் இயங்கி வருகிறது. மந்திரி சபை எப்படி அமைய வேண்டும், மந்திரிகள் எவ்வளவு இருக்க வேண்டும் என்பது பற்றிய குறிப்புகள் எதுவும் அரசியல் சட்டத்தில் இல்லை. அரசியல் சட்டத்தில் மந்திரி சபைக்குப் பிரதம மந்திரி தலைவராக இருப்பார் என்றும் மற்ற மந்திரிகளை அவர் நியமிப்பார் என்றும் கூறப்பட்டுள்ளது. பொதுவாக நடைமுறையில் பிரதம மந்திரியைத் தவிர மேலும் பதினாறு மந்திரிகள் இருக்கிறார்கள். அவர்களில் 11 மந்திரிகள் பல துறைகளுக்குத் தலைவர்களாக இருக்கிறார்கள். 5 மந்திரிகள் இலாகா ஏதும் இல்லாமல் பதவி வகிக்கிறார்கள். இந்த ஐந்து இலாகா இல்லாத மந்திரிகளில் ஒருவர் துணைப் பிரதம மந்திரியாக இருப்பார். எல்லா மந்திரிகளும் இராணுவத்தைச் சார்ந்தவர் களாக இல்லாமல், பொதுமக்களாக இருக்க வேண்டும். 1951-ம் ஆண்டில் வெளிநாட்டு விவகாரங்கள், (Foregin affairs), நியாயம் (Justice), நிதி (Finance), பொதுநலம் (Social work), விவசாயம் (Agriculture) காடுகள் (Forest), வாணிகமும், தொழிலும் (Industries and Commerce), போக்குவரத்து (Transport). தபால் தந்தி (Post & Telegraph), பொதுப் பணித் துறை (P.W.D.) என்று பல அமைச்சர் குழுக்களாக அமைந்திருக்கின்றன. பாராளு மன்றமாகிய டயட்டில் உள்ள பிரதிநிதிகள் தங்களில் ஒருவரைப் பிரதம மந்திரியாகத் தீர்மானத்தின் மூலம் குறிப்பிடுகிறார்கள். இப்படி குறிப்பிட்ட பின்பு ஜப்பானியப் பேரரசரால் பிரதம மந்திரி நியமிக்கப்படுகிறார். பிரதம மந்திரி மற்ற மந்திரிகளை நியமிக்கிறார். அப்படிப்பட்ட மந்திரிகளாக நியமிக்கப்படுகின்றவர்கள் பாராளு மன்றமாகிய டயட்டில் உறுப்பினர்களாகவும். கீழ்ச் சபையில் பெரும்பான்மை கட்சியைச் சார்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

மந்திரி சபையின் கடமைகள் :

மந்திரி சபையின் பொறுப்புகளைப் பிரதம மந்திரி எடுத்துக் கொள்கிறார். மேலும் மந்திரி சபையின் சார்பில் அவர் மசோதாக்களையும், உள் நாட்டு, வெளி நாட்டு கொள்கைகளைப்பற்றிய அறிக்கைகளைப்பற்றியும், பாராளு மன்றமாகிய டயட்டிற்குச் சமர்ப்பிக்கிறார். இதைத் தவிர பொதுவாக எல்லா ஆட்சித் துறைகளையும், கண்காணித்து வருகிறார். பொதுவாகக் கூறினால் ஆட்சி சபை சட்டத்தின் உதவியால் ஆட்சி நடத்தி வருகிறது. அரசை நடத்தும் பொறுப்பும், வெளி நாட்டுக் கொள்கையை முடிவு செய்து

கடைப் பிடிக்கும் பொறுப்பும் அமைச்சரவைக்கு உண்டு. உடன் படிக்கைகள் செய்யவும் அல்லது உடன்படிக்கை செய்வதற்கு முன்பு பாராளு மன்றமாகிய டயட்டின் ஒப்புதலைப் பெறவும் வேண்டும். சட்டத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட பணிகளைச் செவ்வனே செய்து முடிக்க வேண்டும். ஆண்டு வரவு செலவு திட்டத்தைத் தயார் செய்து ஒப்புதல் பெறுவதற்காகப் பாராளு மன்றமாகிய டயட்டிற்குச் சமர்ப்பிக்க வேண்டும், அன்றாட அரசாங்க வேலை களைக் கவனிப்பதற்காக அமைச்சரவை ஆணைகளை வெளியிட அதி காரம் உண்டு. படையில் குற்றம் செய்து தண்டனை பெற்றவரைக் குறைப்பதற்கும், பொதுவாகத் தண்டனையைக் குறைப்பதற்கும் அல்லது கொடுக்கப்பட்ட தண்டனையை மாற்றுவதற்கும் முடிவு செய்வதற்கும் மந்திரி சபைக்கு அதிகாரம் உண்டு. மந்திரி சபை யில் செய்யப்பட்ட முடிவுகள் அனைத்தையும் நிறைவேற்றும் பொழுது அந்தந்த துறையைச் சார்ந்த அமைச்சர்கள் கையொப் பம் இடவேண்டும். அதனை ஏற்றுக் கொண்டதற்குப் பிரதம மந்திரி யும் கையொப்பம் இடவேண்டும். இந்த அதிகாரங்களை நாம் உற்று நோக்கினுல் ஜப்பானிய மந்திரி சபையின் அதிகாரங்கள் தற்போது ஆங்கில நாட்டிலுள்ள மந்திரி சபையின் அதிகாரங் களைப் போலவே காணப்படுகின்றன. இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு அமைக்கப்பட்ட மந்திரி சபைகள் ஆற்றக் கூடிய பணிகளுக்கும். இரண்டாவது உலகப் போருக்கு முன்பு அவைகள் செய்த பணிகளுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. இப்பொழுதுள்ள அரசியல் சட்டத்தின்படி மந்திரி சபை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பார்லிமெண்டாகிய டயட்டிற்குப் பொறுப் பாக உள்ளது. ஆனுல் இரண்டாவது உலகப் போருக்கு முன்பு மன்னருக்குத்தான் அதிகாரங்கள் இருந்தன. அந்நிலை இப்போ தில்லை.

அமைச்சரவை இயங்கும் முறை :

அரசாங்கத்தின் அச்சாணியாக இருப்பவர் பிரதம மந்திரி யாவார். இவருக்காக ஒரு தனி செயலகம் உள்ளது. அமைச்சர வையின் செயலகத்திற்குத் தலைவராக ஒரு இயக்குநர் இருக்கிறுர். அமைச்சரவையின் கூட்டங்களுக்கு வேண்டிய நிகழ்ச்சி நிரலை அவர் தயாரிக்கிறுர். மேலும் அரசாங்கத்தால் தயார் செய்ய வேண்டிய எல்லா அரசியல் ஏடுகளையும் இந்தத் தலைமைச் செயலகம் தயாரிக் கிறது. சட்டங்கள் இயற்ற விரும்பினுல் முதலில் மசோதாக்களைத் தயார் செய்ய இந்தச் செயலகம் உதவுகிறது. அரசியல் சட்டம் குறித்து நடைமுறையில் ஐயங்கள் ஏற்படும்பொழுதும் அல்லது அரசாங்கம் நடத்துவதில் இன்னல்கள் ஏற்படும்பொழுதும் தலை

மைச் செயலகத்தின் இயக்குநரின் அறிவுரையை நாடலாம். தன் பணியைச் செவ்வனே செய்ய பிரதம மந்திரி தன்னுடைய வேலைகளைப் பலவகையில் பிரித்து வைத்திருக்கிறார். பல குழுக்கள் இவருடைய வேலைகளைக் கவனிக்கின்றன. இக் குழுக்களைத் தவிர வேறு சில அங்கங்களும் துணைபுரிகின்றன. பொதுவாக அமைச்சரவை வாரத்திற்கு இருமுறை கூடுகிறது. எல்லாக் கூட்டத்திற்கும் பிரதம மந்திரியே தலைமை தாங்குவார். கூட்டத்திற்கு வேண்டிய குறைந்த அளவு உறுப்பினர் தொகை எதுவுமில்லை. எடுக்கப்பட்ட முடிவுகள் அனைத்தும் பெரும்பான்மை வாக்கு பெற்றிருக்க வேண்டும். கூட்டத்திற்கு வராதவர்கள் பின்பு தீர்மானங்களில் கையெழுத்துப் போடலாம். அமைச்சரவையில் பேசி முடிவெடுக்கப்பட்டவைகள் எல்லாம் இரகசியமாக வைத்துக் கொள்ளப்பட வேண்டும். பொதுவாக அமைச்சரவை இரண்டுவிதமாக முடிவுகளை எடுக்கின்றன. ஒன்று அரசியல் சட்டத்தின்படி அமைச்சரவை செய்ய வேண்டிய முடிவுகள்; மற்றொன்று அரசாங்கம் தன்னுடைய கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக எடுக்க வேண்டிய முடிவுகள். எந்த முடிவு எடுத்தாலும் அமைச்சரவை தனிப்பட்ட முறையிலும், கூட்டு முறையிலும் பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக அமைச்சரிடையே ஒற்றுமையும், ஒன்றாகச் சேர்ந்து செயல்படும் நிலையும் நாம் ஜப்பானில் காண்கிறோம்.

பிரதம மந்திரியின் அதிகாரங்கள் :

ஜப்பான் பார்லிமெண்டாகிய டயட்டில் முடிவு செய்தபடி பெரும்பான்மை கட்சிகளால் நாட்டின் பிரதமராக, மன்னரால் நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்கப்படுகிறார். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதம மந்திரி பாராளு மன்றமாகிய டயட்டின் உறுப்பினராக இருக்கவேண்டும். அவர் படையைச் சார்ந்தவராக இருக்கக் கூடாது. பதவியை ஏற்றுக்கொண்ட பின்பு, அவரும் அவருடைய அமைச்சரவையும் தங்களுடைய செயல்களுக்குப் பாராளு மன்றமாகிய டயட்டிற்குப் பொறுப்பாவார்கள். ஜப்பானியப் பார்லிமெண்டான டயட்டினுடைய கீழ்ச் சபையாகிய மக்கள் சபைக்கு, பிரதம மந்திரியும், அமைச்சரவையும் எப்பொழுதும் தன்னுடைய பொறுப்புகளைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் பெரும்பான்மைக் கட்சியின் தலைவராக இருக்க வேண்டும். அரசியல் தலைமையைத் தாங்கும் தகுதி பெற்றவராக இருக்கவேண்டும். பிரதம மந்திரியின் அதிகாரங்கள் அனைத்தும் அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டபடியே செயலாற்ற முடியும். அரசியல் சட்டத்தின்படி பிரதம மந்திரி அமைச்சரவையின் தலைவராவார். தன்னுடைய மந்திரி சபையில் அமைச்சர்களை அமர்த்த

வும், நீக்கவும், இலாகாக்களை மாற்றவும் பிரதம மந்திரிக்கு அதிகாரம் உண்டு. மந்திரி சபை ஜப்பானிய மன்னருக்கு ஒருவிதமான பொறுப்பையும் கொண்டதல்ல. பிரதம மந்திரி வேலையை இராஜினாமா செய்துவிட்டால் மந்திரி சபை முழுமையும் அவருடன் சேர்ந்து இராஜினாமா செய்யவேண்டும். தன்னுடைய மந்திரிகளில் ஒருவரை உதவிப் பிரதமராகத் தேர்ந்தெடுக்க இவருக்கு அதிகாரம் உண்டு. மந்திரி சபை கூட்டங்களுக்குத் தலைமை வகித்து, அரசை எவ்வாறு நடத்தவேண்டும் என்ற அறிவுரையை மன்னருக்கும் வழங்குவார். ஜப்பானியப் பாராளு மன்றமாகிய டயட்டின் முக்கியமான தலைவராக விளங்குகிறார். அரசாங்கத்தின் கொள்கையை விளக்கும் தலைவராகவும் இருக்கிறார். கீழ்ச்சபையின் உறுப்பினராக இருக்கும் காரணத்தினால் அச் சபைக்குத் தலைவராகவும் இருக்கிறார். ஆங்கில நாட்டில் பிரதம மந்திரிக்கு எவ்வளவு அதிகாரங்களும், செல்வாக்கும் இருக்கின்றனவோ அவ்வளவு அதிகாரங்களும், செல்வாக்கும் இவருக்கு உள்ளன. பிரதம மந்திரி என்ற காரணத்தினால் அரசாங்கத்தின் தலைவராகவும், செயற்குழுவின் தலைவராகவும் இருக்கிறார். எல்லாத் துறைகளிலும் மேற்பார்வை செய்யும் அதிகாரமும், அரசாங்க வேலைகளையெல்லாம் ஒன்றுபடுத்தும் அதிகாரமும் அவரிடம் உள்ளன. மந்திரிகளிலே முதன்மையானவராகவும், அரசாங்கத்தின் தலைவராகவும், தன் கட்சியின் தலைவராகவும், ஜப்பானிய மன்னருக்கு அறிவுரை கூறும் நண்பனாகவும் இன்று பிரதம மந்திரி பணியாற்றி வருகிறார்.

3. ஒப்புவமை (Comparison)

ஜப்பான் நாட்டு அமைச்சரவையை, மலாசியா நாட்டு அமைச்சரவையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் பல வேறுபாடுகளைக் காண முடியும். மலாசியா சுதந்திரம் அடைந்தது 1957ஆம் ஆண்டு. தனி ஓர் அரசியல் சட்டத்தைத் தனக்கென்று அது ஏற்படுத்திக் கொண்டது. அச் சட்டத்தின்படி செயற்குழுவாக மன்னரும், ஆட்சியாளர்களின் குழுவும், அமைச்சரவையும் உள்ளன. மலாசியாவில் மன்னர் பிரதம மந்திரியை நியமிக்கின்றார். ஆனால் ஜப்பானில் பாராளு மன்றமாகிய டயட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மைக் கட்சித் தலைவரை ஜப்பானிய மன்னர் நியமிக்கின்றார். பிரதம மந்திரி மட்டுமல்லாமல், மற்ற மந்திரிகளும் மலாசியாவில் மன்னரால் நியமிக்கப்படுகின்றார்கள். மன்னரே உண்மையான செயற்குழுவாக இயங்கி வருகிறார். பிரதம மந்திரியையும், அமைச்சரவையையும் கலந்து ஆலோசித்துவிட்டு மன்னர் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளைச் செய்து வருகிறார். இது ஜப்பானிய நிலையிலிருந்து பெரிதும் மாறுபட்டது. ஜப்பானில் மந்திரி

சபை செய்த முடிவுகளை அரசர் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யப்படும் காரியங்களுக்குப் பொறுப்பு மந்திரி சபையே யன்றி அரசரல்ல. மேலும் மலேயா நாட்டில் மன்னர் பிரதம மந்திரிகளைத் தேர்ந்தெடுக்கும்பொழுது அவர் மலேயா நாட்டைச் சேர்ந்தவரா என்றும், கீழ்ச்சபையின் உறுப்பினராக இருக்கிறாரா என்றும், பார்லிமெண்டின் நம்பிக்கையைப் பெற்றவராக இருக்கிறாரா என்றும் தெரிந்துகொண்டு நியமிக்கவேண்டும். ஆனால் ஜப்பானில் அவராகவே ஒருவரைப் பிரதம மந்திரியாக நியமிக்க முடியாது. அவர் டயட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவரையே பிரதம மந்திரியாக நியமிக்கவேண்டும். மலேயாவில் மன்னரால் நியமிக்கப்பட்ட பிரதம மந்திரி மக்கள் மன்றத்தின் (Parliament) நம்பிக்கை இழந்துவிட்டால், பிரதம மந்திரி அச் சபையைக் கலைக்கும்படி கேட்டுக் கொள்ளலாம். அதற்கு மன்னர் இணங்காவிட்டால் பிரதம மந்திரி, தன்னுடைய பதவியை இராஜினமா செய்ய வேண்டும். அமைச்சரவையிலுள்ள மற்ற மந்திரிகள், இரு சபையிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் மலேயா நாட்டு மன்னரால் நியமிக்கப்படுகிறார்கள். அமைச்சரவையிலுள்ள மந்திரிகள் அனைவரும் மலேயா நாட்டுப் பார்லிமெண்டிற்குக் கூட்டாகப் பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள். இந்த முறை ஜப்பானுடைய முறையைப்போல இருக்கிறது. எனினும் ஜப்பான் நாட்டுடைய அமைச்சரவையைப் போல மலேயா நாட்டு அமைச்சரவை சக்தி வாய்ந்ததாக இல்லை.

இந்தியாவில் பொதுத் தேர்தல் நடந்த பின்பு அதிக வாக்குகளைப் பெற்ற மத்திய அரசாங்கச் சட்ட சபையாகிய மக்கள் சபையின் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்ற கட்சியின் தலைவரைப் பிரதம மந்திரியாக, இந்தியாவின் ஜனதிபதி நியமிக்கிறார். பின்பு பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் மற்ற மந்திரிகளை இவர் நியமிக்கின்றார். அமைச்சரவை ஒன்றாகவே செயல்படுகின்றது. அமைச்சரவை மத்திய கீழ்ச் சட்டசபைக்குப் பொறுப்புள்ளது. பிரதம மந்திரியும், அவருடைய அமைச்சரவையும் இந்தியாவில் இயங்கும் முறை ஜப்பானிய முறையை ஒட்டி அமைந்துள்ளது. ஏனென்றால் ஜப்பானிலும், இந்தியாவிலும் அமைச்சரவை முறை ஆங்கில நாட்டை ஒட்டி அமைந்திருக்கிறது. ஆசியாவில் ஜப்பானிலும், இந்தியாவிலும்தான் நல்ல ஜனநாயகக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட மந்திரி சபை அமைக்கப்பட்டு நன்றாகச் செயல் புரிகின்றன.

செஞ்சீனவில் தேசிய மக்கள் காங்கிரஸ் முடிவு செய்தபடி நாட்டின் தலைவர் (Chairman) பிரதம மந்திரியை (Premier) நியமிக்

கவும். அகற்றவும் அதிகாரம் படைத்தவராக இருக்கிறார். செஞ்சீன மக்களின் குடியரசிற்குத் தலைவர்தான் முக்கியமானவராக இருக்கிறார். அவரிடமே அரசின் அதிகாரங்கள் இருக்கின்றன. பிரதமர் நாட்டுக் குழு (State Council) அலுவல்களை மேற்பார்வை பார்க்கின்றார். அதன் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகின்றார். பல துறைக்கு மந்திரிகள் பொறுப்பாக இருக்கிறார்கள். நாட்டுக் குழு, தேசிய மக்கள் காங்கிரஸுக்குப் பொறுப்புடையது. ஜப்பானோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது செஞ்சீனாவில் உள்ள அமைச்சரவை பலமுள்ளதாக அமையவில்லை.


ஜப்பான் நாட்டு அரசியல் அமைப்பை விளக்கும் அட்டவணை

(GOVERNMENT OF JAPAN)

Japan's Constitution

1. சட்ட மன்றம் (Legislative Body)
   - பாராளு மன்றம் (டயட்) (Die't)
     - மன்ற உறுப்பினர் சபை (House of Councillors) (மேல்சபை)
     - மக்கள் சபை (House of Representatives) (கீழ்ச் சபை)
2. செயற்குழு (Executive)
   - மன்னர் (EMPEROR) பெயரளவு செயற்குழு (Nomina Executive)
   - மந்திரிசபை (CABINET) உண்மைச் செயற்குழு (Real Executive)
3. நீதித் துறை (Judiciary)
   - உச்சநீதி மன்றம் (Supreme Court)

சீன நாட்டுத் தேசியப் படம்
(THE CHINA)



3. சைனு நாட்டுச் செயற்குழுக்கள்
(Executives in China)

1. இன்றைய செஞ்சீனு
(China To-day)

இன்றைய சீனு உலகத்தில் மாபெரும் மக்கள் தொகுதியைக் கொண்ட நாடு. பழைய காலத்திலிருந்து, இக் காலம்வரை கலாச்சாரத்திலும், அரசியலிலும் முன்னேறி வருகிறது. ஆசிய நாடுகளில் செஞ்சீனு ஒரு பெரும் இடத்தை அரசியலில் வகிக்கிறது. இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு உலக அரசியலில் அதிக முன்னேற்றம் அடைந்திருப்பதின் காரணம், ருஷ்ய நாட்டின் கம்யூனிஸ்ட் கொள்கையை ஏற்றுக்கொண்டு, ஆசியாவில் ஒரு பெரிய வல்லரசாக மாறி இருக்கிறது. சீன நாடு இரண்டாகப் பிரிந்து தேசிய சீனு என்றும், கம்யூனிஸ்ட் சீனு என்றும் இயங்கி வருகிறது. மாஸேதுங் (Mao Tse-tung), சூ என் லாய் (Chou En-lai) இவர்களின் தலைமையில் பொதுவுடமைவாதிகள் பலம் பெற்ருர்கள். ருஷ்யாவின் ஆதரவும் இவர்களுக்குக் கிடைத்தது. ஷியாங்கே ஷேக் (Chiang-Kai-Shek) என்பவர் அமெரிக்காவையும் மாஸேதுங் என்பவர் ருஷ்யாவையும் ஆதரித்தனர். இதன் விளைவாகப் பொது உடைமைவாதிகள் 1949ஆம் ஆண்டு பீகிங்கைக் கைப்பற்றி சீன மக்கள் குடியரசை ஏற்படுத்திஞர்கள். ஷியாங்கே ஷேக்கும், அவரது ஆதரவாளர்களும், பார்மசா தீவில் குடியேறி அதனை ஆண்டு வருகிருர்கள். செஞ்சீனு குடியரசு முதலில் சமாதானத்தில் நாட்டம் கொண்டிருந்தது. ஆனல் பின்னர் உலக ஆதிக்கமே அதன் குறிக்கோளாக மாறியது. விஞ்ஞானத்தில் ருஷ்யாவிற்கு இணையாக முன்னேறி வரும் செஞ்சீனு இப்பொழுது ஐக்கிய நாடுகள் மன்றத்தில் இடம் பெற்றுள்ளது. கலாச்சார புரட்சியைப் (Cultural Revolution) பரப்புவதிலும் ஈடுபட்டுள்ளது. 1954ஆம் ஆண்டு செஞ்சீனுவின் அரசியல் சட்டமானது அமுலுக்கு வந்தது. இச் சட்

டத்தின் முன்னுரையில் (Preamble) சைனு ஒரு பொதுச் சமூகத்தை (Socialistic Society) அமைப்பது முக்கியமான குறிக்கோள் என்றும், படிப்படியாகப் பொருளாதார வாழ்க்கையை மக்களுக்கு மாற்றி அமைப்பது என்றும். (Gradual change of economy in the society), முதலாளித்துவத்தை ஒழித்துத் தொழிலாளிகளின் நலன் பேணும் நாட்டை அமைப்பதென்றும் (Worker's Welfare State), சைனுவிலுள்ள எல்லா மக்களும் ஒரே குடும்பத்தைப் போன்றவர்களாகக் கருதப்படுவார்கள் என்றும், அவர்களது வெளிநாட்டுக் கொள்கை உலக சமாதானத்திற்காகப் பாடுபடுவதற்காகவும், மனித இனத்தின் முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. செஞ்சீனு மக்களின் ஜனநாயக அரசு என்றும் (Democratic State), அங்கு வாழும் மக்கள் அனைவரும் சமம் என்றும், ஒரு புதிய பொதுநல சமூகத்தை அமைப்பதுதான் குறிக்கோள் என்றும், அரசியல் சட்டத்தில் திட்டவட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

2. சைனு நாட்டுச் செயற்குழு

செயற்குழு:

செஞ்சீனுவில் தேசிய மக்கள் காங்கிரஸில் செஞ்சீனு குடியரசின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறுர். அப்படித் தேர்ந்தெடுக்கப்படுபவர் சீனு குடியரசின் குடிமகனுகவும், வாக்குரிமை செலுத்தும் நிலையை அடைந்தவராகவும், தேர்விற்கு நிற்கும் அதிகாரம் படைத்தவராகவும், 35 வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தலைவர் செஞ்சீனுவில் நான்கு ஆண்டுகள் பதவி வகிப்பார். தேசிய மக்கள் காங்கிரஸ் அல்லது நிலைக் குழுவின் முடிவின்படி குடியரசுத் தலைவர் சட்டங்களையும், வேறு உத்திரவுகளையும் வெளியிடுவார். நாட்டின் பிரதமர் (Premier), துணைப் பிரதமர் (Vice-Premier), அமைச்சர்கள் (Ministers), குழுக்களின் தலைவர்கள் (Heads of Commissions), அரசு குழுவின் பொதுச் செயலாளர் (Secretary General of the State Council) ஆகியவர்களை நியமிப்பதற்கும், நீக்குவதற்கும், நாட்டின் தலைவருக்கு அதிகாரம் உண்டு. அதைப் போலவே தேசியப் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்களையும், துணைத் தலைவர்களையும் நியமிக்கவும், நீக்கவும் தலைவருக்கு அதிகாரம் உண்டு. அரசின் ஆணைகளையும், (State orders) பதக்கங்களையும் (Medals), தேசிய விருதுகளையும் (Titles of Honours), நாட்டின் தலைவர் வழங்குவார். பொதுக் குற்ற மன்னிப்பு வழங்குதல் (General Amnesty), மன்னிப்பு வழங்குதல் இவைகள் இவருடைய உரிமைகளாகும். அவசரச் சட்டத்தைப் பிறப்பிப்பதும், நாட்டின் போர்

நிலைமையை அறிவிப்பதும், படைகளைப் போருக்காகத் தயார் செய்வதற்கும் இவருக்கு அதிகாரம் உண்டு. வெளி நாட்டு அரசியலில் செஞ்சீன மக்கள் குடியரசு நாட்டின் தலைவராகத் தன்னைப் பிரதிநிதியாகவும், வெளி நாட்டுத் தூதுவர்களை வரவழைக்கவும், தன் நாட்டுத் தூதுவர்களை அனுப்பவும், அல்லது அனுப்பப்பட்ட தூதுவர்களை, தேசிய மக்கள் காங்கிரஸின் நிரந்தரக் குழுவின்படி திரும்ப அழைப்பதும், வெளி நாடுகளுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்கவும் இவருக்கு அதிகாரம் உண்டு. நாட்டினுடைய எல்லாப் படைகளையும் நடத்தும் உரிமையை இவர் பெற்றிருக்கிறார். தேசியப் பாதுகாப்புக் குழுவின் தலைவராகவும் இருக்கிறார். தேவைப்படும் பொழுது எல்லாம் தேவையான அரசின் மாநாட்டைக் கூட்டி அதற்குத் தலைவராகவும் இருக்கிறார். அதனுடைய அரசியல் கருத்துகளைத் தேசிய மக்கள் காங்கிரசுக்குச் சமர்ப்பித்து முடிவுகள் எடுக்கும்படி செய்வார். தன் அதிகாரங்களைத் துணைத் தலைவருக்குப் பகிர்ந்து கொடுத்துச் செயலாற்றுவார். தன்னுடைய அலுவல்களைத் தலைவர் உடல்நிலையின் காரணமாகக் கவனிக்க முடியாவிட்டால், துணைத் தலைவர், தலைவருக்குப் பதிலாக அவருடைய அதிகாரங்களையும், கடமைகளையும் நிறைவேற்றலாம். தலைவர் பதவி காலியாகி விட்டால் துணைத் தலைவர் தலைவர் பதவிக்கு வரலாம். செஞ்சீன அரசியல் சட்டத்தில் தலைவருக்கு ஒரு சிறந்த இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவரைப் போன்று பதவி உடையவர்களை மற்ற நாட்டு அரசியலில் காண முடியாது. இவரைப் பிரெஞ்சு நாட்டுத் தலைவருடனே, அல்லது அமெரிக்க நாட்டுத் தலைவருடனே ஒப்பிட முடியாது. ஒரு வகையில் பார்த்தால் இவர் ருஷ்ய நாட்டுத் தலைவரைப் போன்ற அதிகாரங்கள் உடையவராக இருக்கின்றார். நாட்டின் ஒற்றுமையின் அடையாளமாகச் சீன தலைவர் விளங்குகின்றார். அரசியலில் உண்மையான அதிகாரம் இவரிடம்தான் இருக்கிறது.

பெயரளவு செயற்குழு (Nominal Executive):

செஞ்சீனக் குடியரசு பெயரளவு செயற்குழுவாக அரசு குழு (State Council) செயலாற்றி வருகிறது. இக் குழுவில் பிரதமர், துணைப் பிரதமர்கள், பல குழுக்களின் தலைவர்கள், பொதுச் செயலாளர்கள் ஆகியோர் உள்ளனர். இச் சங்கம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்குச் சட்டம் இருக்கிறது.

ஆட்சிக்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பது, நிரந்தர குழுவிற்கு (Standing Committee) தங்களுடைய திட்டங்களைச் சமர்ப்பிப்பது முக்கியமான வேலையாகும். அமைச்சரவைக்கும் மக்கள் குழுவிற்கும் இடையே உள்ள வேலைகள் சரியாக நடைபெறு

கின்றனவா என்று கவனிப்பதும், நாடு முழுவதும் உள்ள சுயாட்சி நிலையங்கள் செயலாற்றுவது குறித்து வரும் வேலைகளைக் கவனிப்பதும், தகுதியில்லாது ஏற்படுத்தப்பட்ட ஆணைகளை, மாற்றி அமைப்பதும் இதனுடைய வேலையாகும். நாட்டின் பொருளாதாரத் திட்டம் வரவு செலவு கணக்குகளைச் சரிபார்ப்பதும் ஒரு முக்கியமான வேலையாகும். உள் நாட்டு, வெளி நாட்டு வாணிகத்தைக் கவனித்தல் இக் குழுவின் பொறுப்பாகும். கலாச்சாரம், கல்வி, பொதுச் சுகாதார நிலை இவைகளையும் கவனிக்கும் பொறுப்பு இதற்கு உண்டு. நாட்டில் அமைதியையும், சட்ட ஒழுங்கையும் பாதுகாப்பது, வெளி நாட்டு விவகாரங்களைக் கவனிப்பது, படை பலத்தைக் கூட்டுவது, சட்டத்தின்படி ஆட்சி முறை அதிகாரிகளை நியமிப்பது, நீக்குவது எல்லாம் இதனைச் சாரும். பிரதமர் தேசியக் குழுவின் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார். மேலும் தேசியக் குழு எவ்வாறு செயலாற்றவேண்டும் என்பதற்கு உத்திரவுகள் பிறப்பிப்பார். அமைச்சர்கள், மற்றும் பல குழுக்களின் தலைவர்கள் தங்களுடைய துறைகளின் வேலைகளைக் கவனித்துக் கொள்வார்கள். அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழுள்ள துறையில் சட்ட முறைப்படி ஆணைகளைப் பிறப்பிப்பார்கள். இக்குழு தேசிய மக்கள் காங்கிரசிற்குப் பொறுப்பானது.

3. ஒப்புவமை (Comparison)

செஞ்சீனக் குடியரசின் அரசியல் சட்ட அமைப்பிற்கும், ருஷ்ய நாட்டு அரசியல் அமைப்பிற்கு மிடைய சில ஒற்றுமைகளை நாம் காண முடிகின்றது. அரசியல் கொள்கைகளைப் பொறுத்த மட்டிலும், பொதுவாக உள்ள அரசியல் அமைப்புகளையும், சட்ட அமைப்புகளையும் பார்த்தால் ஒன்றாக இருப்பன போலவே தோன்றுகின்றன. இருந்த போதிலும், ஒரு சில வேறுபாடுகளை நாம் இரண்டிற்கு மிடையே காண முடிகிறது. ருஷ்ய நாட்டு அரசியல் அமைப்புச் சட்டத்தைவிட, செஞ்சீன அரசியல் சட்டமானது பல வகையில் முன்னேற்றத்தையும், ஒரு சில வேறுபாடுகளையும், அவர்கள் கலாச்சாரத்திற்கு ஏற்றவாறு சில மாறுதல்களை உடையதாக இருக்கிறது. செஞ்சீனாவில் ஒரே சபையைக் கொண்ட தேசிய மக்கள் காங்கிரஸ் அமைந்திருக்கிறது. ஒற்றை ஆட்சி முறையில் அரசியல் அதிகாரக் குவியல்கள் ஜனநாயகத்தின் பெயரில் அமைந்திருக்கிறது. இவ்விரண்டு நாடுகளிடையே உள்ள முக்கியமான ஒற்றுமை, தொழிலாளர்களின் ஆதிக்கமாகும். இரண்டு நாடுகளிலும் கம்யூனிஸ்ட்டு கட்சி மட்டுமேதான் இருக்கிறது. இந்த இரண்டு நாடுகளிலும் அரசியல் கட்சிக்குத்தான் செல்வாக்குண்டு. அரசியல் கட்சிக்கும், அரசாங்கத்திற்கும் மாறுபாடுகள் இல்லை.

ருஷ்யாவில், பிரிசீடியம் (Presidium) என்ற செயற்குழுவிற்கு எவ்வளவு அதிகாரம் இருக்குமோ அதைப் போலவே செஞ்சீனுவில் நிரந்தர குழுவிற்கும் அதிகாரங்கள் உண்டு. செஞ்சீனுவில் உள்ள அரசியல் சட்டத்தின் சரத்து எண் 31-ம், ருஷ்யாவின் அரசியல் சட்டத்தில் உள்ள 49-வது விதியைப் போலவே இருக்கிறது. சீனக் குடியரசின் அரசியல் சட்டத்தில் மக்களின் இறைமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ருஷ்ய அரசியல் சட்ட அமைப்பு, உழைப்பாளிகளும், குடியானவர்களும் சேர்ந்து அமைத்த சமத்துவ அரசு என்று கூறுகின்றது. ஆனால் செஞ்சீனு மக்களின் ஜனநாயக அரசு என்று கூறுகின்றது. செஞ்சீனுவினுடைய ஜனநாயகம், தொழிலாளி, குடியானவர்களின் உழைப்பின்மேல் அமைந்திருக்கிறது. செஞ்சீனத் தலைவரை ருஷ்ய நாட்டுத் தலைவருடன் ஒப்பிட முடியாது. செஞ்சீனுவில் தலைவர் உண்டு என்பதற்கு அரசியல் சட்டத்தில் இடமிருக்கிறது. ஆனால் ருஷ்யாவில் தனிப்பட்ட முறையில் தலைவர் இருப்பதாகச் சட்டத்தில் இடமில்லை. ருஷ்யாவில் கூட்டுச் செயற்குழுதான் உள்ளது. அதனுடைய தலைவரைத் தான் நாட்டின் தலைவர் என்று பொதுவாகக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் செஞ்சீனுவில் தனிப்பட்ட முறையில் ஒரு தலைவர் உண்டு என்று அரசியல் சட்டத்தில் திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. துணைத் தலைவர் என்ற ஒரு பதவி சைனுவில் உண்டு. ஆனால் ருஷ்யாவில் இல்லை. மேலும் ருஷ்யாவில் கூட்டாட்சி அரசாங்கம் உள்ளது. ஆனால் சைனுவில் ஒற்றையாட்சி அரசாங்கம் இருக்கிறது. ருஷ்யாவில் இரு சபைகளைக் கொண்ட சட்டசபையுள்ளது. ஆனால் சைனுவில் ஒரு சபையைக் கொண்ட சட்டசபைதான் உள்ளது. ஆகவே இவ்விரு நாடுகளும் அரசியல் அமைப்பிலும் நடவடிக்கைகளிலும் வேறுபாடுகள் உள்ளன.

சீன நாட்டு அரசியல் அமைப்பை விளக்கும் அட்டவணை

(GOVERNMENT OF CHINA)


1. சட்ட மன்றம் (Legislative Body)
   - தேசிய மக்கள் காங்கிரஸ் (The National People's Congress)

2. செயற்குழு (Executive Body)
   - சீனநாட்டுக் குடியரசு தலைவர் (The Chairman of the People's Republic)
     உண்மை செயற்குழு (Real Executive)
   - அரசு குழு (State Council)
     பெயரளவு செயற்குழு (Nominal Executive)
     (சீன நாட்டுத் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதம மந்திரி, மற்றும் துணை மந்திரிகள் மற்றும் பல குழுக்களின் தலைவர்கள் அடங்கியது. இது நாட்டின் உயர்ந்த செயற்குழுவாகக் கருதப்படுகிறது.)

3. நீதித் துறை (Judiciary)
   - உச்ச மக்கள் நீதிமன்றம் (The Supreme People's Court)

பிலிப்பைன்ஸ் தேசியப் படம்

(THE PHILIPPINES)



4. பிலிப்பைன்ஸ் நாட்டுச் செயற்குழு
(Executive in Philippines)

1. இன்றைய பிலிப்பைன்ஸ் (Philippines) To-day

தென்கிழக்கு ஆசியாவின் மிக முக்கியத்துவம் வாய்ந்த நாடாக இன்று பிலிப்பைன்ஸ் விளங்குகிறது. முற்றிலும் மேலை நாட்டு நாகரிகத்தைக் கொண்டு விளங்கும் பிலிப்பைன்ஸ் அரசியலிலும், மேலை நாட்டு நாகரிகத்தைக் கொண்டு விளங்குகின்றது. கலை, கலாச்சாரம் இவைகளிலும் தலை சிறந்து விளங்குகின்றது. இந் நாட்டுக்கு வந்த ஐரோப்பியர்களில், ஸ்பெயின் (Spain) நாட்டுக்காரர்கள் முக்கியமானவர்கள் ஆவார்கள். மேலும் சைனுக்காரர்கள் சிலரும் இங்கு வந்து குடியேறினார்கள். ஆனால் இங்கு ஸ்பெயின் நாட்டு ஆதிக்கம் வெகு நாள் இருந்து வந்தது. ஐரோப்பிய கல்வி அறிவு பெற்ற பிலிப்பைன்ஸ் மக்கள் புரட்சியில் இறங்கினார்கள். ஸ்பெயின் நாட்டினுடைய ஆதிக்கத்தை ஒழித்துக் கட்ட விரும்பினார்கள். இப் புரட்சியின் விளைவாக ஸ்பெயின் ஆதிக்கத்திலிருந்து பிலிப்பைன்ஸ் விடுபட்டது. ஆனால் அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார்கள். இரண்டாவது உலகப் போரில் ஜப்பான், பிலிப்பைன்ஸைத் தாக்கியது. இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு பிலிப்பைன்ஸ் ஒரு சுதந்திர நாடாக மாறியது. தங்களுக்கென்று ஓர் அரசியல் சட்டத்தைப் பிலிப்பைன்ஸ் மக்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அதன்படி பிலிப்பைன்ஸ் 1946-ல் ஒரு குடியரசாக மாறியது.

இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு பிலிப்பைன்ஸ் அரசியல் சட்டத்தில் எந்தவிதமான மாறுதல்களும் செய்யப்படவில்லை. இருந்தாலும் கூட அரசியல் நிறுவனங்கள் சில மாறுதல்களை ஏற்றுக் கொண்டன. காலப்போக்கில் அரசியலின் போக்கிற்குத் தகுந்தவாறு ஒரு சில மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டன. 1935 ஆம்

ஆண்டு பிலிப்பைன்ஸ் அரசியல் சட்டமானது தயாரிக்கப்பட்டது. உலகப் போரின் காரணமாக இதை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர முடியவில்லை. புதிய சட்டத்தின் கீழ் 1940ஆம் ஆண்டு அரசியல் அமைப்பானது நடைமுறையில் நடத்தப்பட்டது. அவர்களுடைய அரசியல் சட்டம் முக்கியமான குறிக்கோளின் மேல் அமைந்துள்ளது. மக்களின் பொதுநலத்தை முன்னேற்று வதற்காகவும் (welfare), நியாயம் (Justice), சுதந்திரம் (Liberty), ஜனநாயகம் (Democracy) இவற்றின் அடிப்படையில் அரசியல் சட்டம் இயங்கி வருகிறது. இது ஒரு குடியரசாகவும், இறைமை (Sovereignty) மக்களிடையே இருப்பதாகவும், அரசியல் அதிகாரங் கள் அனைத்தும் மக்களிடமிருந்தே வரவேண்டும் என்ற நிபந்தனை யும், அரசியல் சட்டத்தில் உள்ளது. நாட்டைப் பாதுகாப்பது (Defence) அரசாங்கத்தின் கடமை. அதற்கு ஒத்துழைப்பைக் கொடுக்கவேண்டியது மக்களின் முக்கியமான பொறுப்பாகும். போரைத் தடுப்பது பிலிப்பைன்ஸ் நாட்டின் கொள்கை. உலக சட்டங்களை அனுசரித்து (International law) செயல் புரிவதும் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்குப் பாடுபடுவதும், பிலிப் பைன்ஸ் அரசு முயற்சிகள் செய்யும். சமூக நீதியை (Social Justice) உயர்த்துவதும், பேணிப் பாதுகாப்பதும் முக்கியமான கடமை யாகுமென்று அரசு அறிவிக்கின்றது. மக்கள் உரிமை மசோதா, அரசியல் சட்டத்தில் இணைக்கப் பட்டிருக்கிறது.

2. பிலிப்பைன்ஸ் நாட்டுச் செயற்குழு

செயற்குழு :

இது அரசியல் அமைப்புச் சட்டத்தில் மிகவும் சக்தி வாய்ந்த உறுப்பு. அந் நாட்டுச் செயற்குழு அதிகாரம் தலைவரிடம் (President) இருப்பதேயாகும். அமெரிக்க நாட்டின் அமைப்பை வைத்துச் சட் டம் இயற்றிய காரணத்தினால், அமெரிக்க நாட்டுத் "தலைவரின்" அதிகாரங்களைப் போலவே பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவருக்கும் அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஒரே சமயத்தில் தலை வரும், உபதலைவரும் நான்கு ஆண்டுகளுக்கு, மக்களால் நேர்முக வாக்கெடுப்பின் மூலம் (Direct Election) தேர்ந்தெடுக்கப்படுகிறார் கள். இப் பதவி வகிப்பவர் பிலிப்பைன்ஸ் நாட்டுக் குடிமகனாகவும், தகுதிப் பெற்ற வாக்களிப்பவராகவும் (Qualified voter), 40 வயது நிரம்பப் பெற்றவராகவும் தேர்தலுக்கு நிற்பதற்கு முன்பாக 10 ஆண்டுகள் பிலிப்பைன்ஸ் நாட்டில் குடியிருந்தவராகவும் இருக்க வேண்டும். தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நான்கு ஆண்டு களுக்கு ஒரு முறை நடைபெறும். தொடர்ந்து எட்டு ஆண்டுகட்கு மேல் எவரும் பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவராக இருக்க முடியாது.

அவர் எப்போது பதவியை ஏற்கிருரோ அப்போதிலிருந்துதான் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும். பதவியை ஏற்றுக் கொள் வதற்கு முன்பாகக் குடியரசுத் தலைவர் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவேண்டும். அவர் பதவியை வேண்டாமென்று இராஜினுமா செய்தாலும், பதவியிலிருந்து நீக்கப்பட்டாலும், தன்னுடைய காரி யங்களைச் செய்ய முடியாமல் போனுலும், அல்லது இறந்து விட்டா லும் அவரது அதிகாரங்களைத் துணைத் தலைவர் (Vice-President) பெறுவர். மற்ரெரு நிரந்தரமான தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வரை, பொறுப்புகளைத் துணைத் தலைவர் ஏற்று நடத்துவார். தலை வருக்கென்று தனியான இருப்பிடம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டபடி இவர் தனது சம்பளத்தைப் பெறுவார். 30,000 பெசோக்களைப் பெறுவர். சட்டத்தில் குறிப் பிட்டுள்ள செயற்குழு துறைகளையும், மற்றத் துறைகளையும் கவனிக் கும் பொறுப்பு இவருக்கு உண்டு பிலிப்பைன்ஸ் நாட்டுப் படை களுக்குத் தளபதியாகவும், நாட்டில் புரட்சிகளோ, கலகங்களோ, நடைபெறுமாளுல் அவற்றினை அடக்குவதற்குப் படையை அனுப்பும் அதிகாரம் தலைவரிடம் உள்ளது. வெளி நாட்டுப் படையெடுப்போ அல்லது போர் நெருக்கடியோ நாட்டில் ஏற்பட்டால் எல்லாச் சலு கைகளையும் அவசரச் சட்டத்தின்கீழ் தள்ளி வைக்க அதிகாரம் உண்டு. குழுக்களின் ஆலோசனையின் பேரில் செயற்குழுத் தலைவர் களையும், படைத் தலைவர்களையும் வேறு முக்கிய அலுவல் புரியும் அலுவலக அதிகாரிகளையும் நியமிக்கும் அதிகாரம் இவருக்கு உண்டு. மக்கள் சபையாகிய காங்கிரஸ் (Congress) கூடாத சமயத்தில் சில அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் தலைவருக்கு உண்டு. அப்படி செய்யப்பட்ட பதவிகள், மறு முறை பாராளு மன்றமாகிய காங் கிரஸ் கூடும்வரை இருக்கலாம். அப்போதைக்கப்போது நாட்டில் நிலவி வரும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு என்னென்ன செய்ய வேண் டுமோ அவைகளைப் பாராளு மன்றமாகிய காங்கிரசுக்கு அவர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைக் கூறவும், எடுக்கவும் அதிகாரம் உண்டு. கொடுக்கப்பட்ட தண்டனையைக் குறைக்கவும், மாற்றவும் பொதுவாக அதிகாரம் உண்டு. மேல் சபையாகிய செனேட்டில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர் ஒப்புதல் பெற்று உடன் பாடுகள் செய்யவும், நியமனங்கள் செய்யவும். வேறு அலுவலர்களை நியமிக்கவும் தலைவருக்கு அதிகாரம் உண்டு. இப்பொழுது அரசியல் சட்டத்தின் கீழ் இயங்கி வரும் செயற்குழு துறைகள் அனைத்தும் எந்த மாறுதல் இன்றியும் இயங்கி வரும். இவரால் நியமிக்கப்பட்ட எத்துறை அதிகாரிகளும் (Department officers), அல்லது அலுவலர் களும் பதவியிலிருக்கும்பொழுது வேறு எந்தத் துறையிலும் ஈடு படக்கூடாது.

பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர் நியமிக்கும் எல்லா அதிகாரிகளையும், மற்றும் வெளி நாடுகளுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களுடனும், தன் நாட்டுத் தூதுவர்களை வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்கும், அயல் நாட்டுத் தூதுவர்களை வரவேற்பதும் இது போன்ற எல்லாக் காரியங்களுக்கும் இவர் செனேட்டாரிடம் மூன்றில் இரண்டு பங்கு ஒப்புதல் பெற வேண்டும். இவ்வாறு ஒப்புதல் பெறுவது, காரியம் செய்வதற்கு முன்பும் இருக்கலாம் அல்லது பின்பும் இருக்கலாம். இம் முறையும் அமெரிக்க ஐக்கிய நாட்டு முறைப் போலவே உள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டுச் செயற்குழு அதனுடைய அரசியல் அமைப்பில் எழுதப்பட்டது போலவே இதுநாள்வரை செயல்படுகிறது. ஒவ்வொரு துறையின் தலைவர்களையும், அலுவலர்களையும், அவர்களது துணை அதிகாரியும் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ செயற்குழுவுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். பிலிப்பைன்ஸ் நாட்டு உப தலைவரை, தலைவர் தனது மந்திரி சபையில் ஓர் இருப்பிடம் அளித்து அவரது பார்வையில் ஒரு துறையையும் கொடுக்கலாம்.

பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவரையும், உப தலைவரையும் அந் நாட்டு உச்ச நீதி மன்றம் தண்டிக்க முடியும். இவர்கள் ஏதேனும் பெரும் குற்றத்தில் ஈடுபட்டு அது கண்டு பிடிக்கப்பட்டுக் காங்கிரசில் பெரும்பாலோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அவர்களைப் பதவியிலிருந்து விலக்கி விட முடியும். இவ்வாறு நாட்டின் தலைவர் மீதும், உப தலைவர் மீதும் கொண்டு வரும் குற்றச் சாட்டுக் காங்கிரஸின் கீழ்ச்சபையான மககள் மன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு அதனை மேல் சபை மெம்பர்களாகிய செனேட்டார் எடுத்து நடத்த வேண்டும். அவ்வாறு தலைவர் குற்றம் சாட்டப்பட்டு விவாதத்திற்கு மேல் சபைக்குக் கொண்டு வரும்பொழுது, அதனை எடுத்து நீதி வழங்கும் பொறுப்பை உச்ச நீதிபதி மேற்கொள்வர். இங்கு வழங்கப்படும் நீதியை நான்கில் மூன்று பங்கு ஒப்புக் கொண்ட பிறகே தண்டனை வழங்கப்படும். ஆனால் இவருக்கு வழங்கப்படும் தண்டனை பதவியிலிருந்து விலக்குவதன்றி வேறெதுவும் இருக்கக் கூடாது.

3. ஒப்புவமை (Comparison)

பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர், அமெரிக்க நாட்டின் தலைவரைப் போலவே பெயரளவு செயற்குழுவாகவும், உண்மையான செயற்குழுவாகவும் இயங்கி வருகிறார். ஜப்பான் நாட்டில் பெயரளவில் உள்ள செயற்குழுவாகிய மன்னனின் அதிகாரங்களும்,

உண்மையாக விளங்கும் செயற்குழுவாகிய, பிரதம மந்திரி கொண்ட மந்திரி சபையாகிய செயற்குழுவும் இவை இரண்டும் சேர்ந்து ஒன்ருக வைத்திருக்கும் செயற்குழுவே பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர். இந்தியாவின் தலைவர் பெயரளவில் செயற்குழுவாகச் செயலாற்றுகிருர். ஆனல் பிலிப்பைன்ஸ் நாட்டில் உண்மையான செயற்குழுவாகப் பணியாற்றுகிருர். நெருக்கடி காலங்களில் (Emergency Powers) இந்தியத் தலைவருக்குச் சில அதிகாரங்கள் உள்ளன. அப்படிப்பட்ட அதிகாரங்கள் சாதாரண காலத்தில் பிலிப்பைன்ஸ் தலைவர், அனுபவித்து வரும் அதிகாரங்களைப் போல் இருக்கின்றன. செஞ்சீனவில் மக்கள் குடியரசின் தலைவரின் (The chairman of the peoples Republic of china) அதிகாரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவரின் அதிகாரங்கள் அதிகமாகவே இருக்கின்றன. ஆனல் நடைமுறையில் செஞ்சீனவின் தலைவருக்கு வரம்பில்லா அதிகாரங்களைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் இருக்கின்றன. தங்களுடைய அதிகாரங்கள் அனைத்தையும் செஞ்சீன தலைவர், தனது தேசிய மக்கள் காங்கிரஸ் நிலைக்குழுவின் மூலம் (Standing committee of the National peoples' congress) அவர் நிறைவேற்றுகிருர்.

சுருங்கக் கூறின் பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர், அமெரிக்க நாட்டுத் தலைவருடன் மட்டுமே எல்லா வகைகளிலும் ஒப்பிடும்படியாக விளங்குகிருர். இவ்வாறு செயற்குழுவின் அதிகாரங்களை உருவாக்கியதற்கு முக்கியக் காரணம், இவர்களது நாடு பல ஆண்டுகளாக அமெரிக்கரின் ஆதிக்கத்தின் கீழிருந்து விடுதலை அடைந்ததே காரணமாகும்.

பிலிப்பைன்ஸ் நாட்டு அரசியல் அமைப்பை விளக்கும் அட்டவணை

(GOVERNMENT OF PHILLIPPINES)


1
சட்ட மன்றம் (Legislative Body)
காங்கிரஸ் (Congress)
(பாராளுமன்றம்)

- செனேட் (Senate) (மேல்சபை)
- மக்கள்சபை (House of Representatives) (கீழ்ச்சபை)

2
செயற்குழு (Executive Body)
நாட்டின் தலைவர்
(President of Phillippines
Both Nominal & Real Executive)]
பெயரளவு மற்றும் உண்மை
செயற்குழு

3
நீதித்துறை (Judiciary)
உச்சநீதி மன்றம் (Supreme Court)

மலாசியாவின் தேசியப் படம் (The Malaysia)



5. மலாசிய நாட்டுச் செயற்குழுக்கள்
(Executives in Malaysia)

1 இன்றைய மலாசியா (Malaysia To-day)

இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு 1946ஆம் ஆண்டு மலாயா ஆங்கில நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. மலாயா சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு மக்களுக்கு உரிமை வேண்டுமென்று ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கில அரசாங்கத்தால் எவ்விதமான முடிவும் எடுக்க முடியவில்லை. ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெற்றன. 1951ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 31-ந் தேதி மலேயா ஒரு சுதந்திர நாடாக மாறியது. 1963ஆம் ஆண்டு வடக்குப் போர்னியோ (North Borneo) மலேசியாவுடன் இணைத்து ஒரு பெரும் கூட்டாட்சி நாடாக மாறியது. இன்றைய நடைமுறையில் இருக்கும் அரசியல் சட்டம் 1951ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதாகும், பின்பு 1963ஆம் ஆண்டு சட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அரசியல் சட்டத்தில் பல மாறுதல்கள் செய்யப்பட்டன. பின்பு பெரிய கூட்டாட்சி மலேசியாவிலிருந்து, சிங்கப்பூர் பிரிந்துச்சென்று தனி மலேசியா நாடாக 1965ஆம் ஆண்டு மாறியது.

முக்கிய அம்சங்கள்

மலேசியா அரசியல் சட்டம், சில அடிப்படைக் கொள்கையின் மீது அமைந்துள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சட்ட சபை ஒன்று இருக்கிறது. சட்டசபையின் கீழ்ச்சபை முற்றும், வயது வந்தோர்க்கு வாக்குரிமை என்ற அடிப்படையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. செயற்குழுவாகிய அமைச்சரவை சட்ட சபையின் அதிகாரத்துக்கு உட்பட்டது. அங்குச் சுதந்திரமான நீதித்துறையும் உள்ளது. கூட்டாட்சி அரசாங்கத்தைக் கொண்ட மலேசியாவில் செயற்குழு

துறைக்கும், சட்டத் துறைக்கும் மாறுபாடுகள் உள்ளபடி அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு செயலாற்றி வருகின்றன. இதே போல கூட்டாட்சித் துறை அரசாங்கத்திற்கும், உறுப்பினர் அரசாங்கத்திற்கும் (Member States) இடையே அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நீதித்துறை மட்டும் பிரிக்கப்படாமல் நாடு முழுவதற்கும் ஒன்றாக அமைந்துள்ளது. அரசியல் அதிகாரங்கள் அனைத்தும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவைகள் முறையே ஒன்று: கூட்டாட்சி. அரசின் அதிகாரங்கள், இரண்டு: உறுப்பினர் அரசாங்கங்களின் அதிகாரங்கள், மூன்றாவதாகக் கூட்டாட்சியில் பொதுவான அதிகாரங்கள். இவற்றில் செய்யப்படாத அதிகாரங்கள் உறுப்பினர் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இஸ்லாமிய மதமே நாட்டின் மதம் என்றும் மற்ற மதங்கள் அமைதியான முறையில் மேற்படலாமென்றும், அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. தேசிய மொழி மலேயா, ஆனால் அவர்களது ஆட்சிமொழி ஆங்கிலமாகும். மலேயாவிலுள்ள எல்லாக் குடிமக்களுக்கும் அடிப்படைச் சுதந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2. மலாசிய நாட்டுச் செயற்குழுக்கள்

செயற்குழு

மலேசியா நாட்டிற்குப் பெயரளவு செயற்குழுவாக மன்னர் இருக்கிறார். இவர் நாட்டின் தலைவராகக் கருதப்படுகிறார். ஆட்சியாளருடைய சபையால் (Confederations of Rulers) அவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதன் பின்பு அவர் நாட்டின் எல்லாப் படைகளுக்கும் அதிகாரியாகவும், மக்கள் சபையாகிய பாராளு மன்றத்தின் ஆலோசனையின் பெயரிலும், உண்மையான செயற்குழுவாகிய அமைச்சரவையின் அறிவுரையின் பெயரிலும் அவர் செயலாற்றுகிறார். அரசர் இறந்துவிட்டால் அவர் மூத்த மகன்தான் பட்டத்திற்கு வரவேண்டும் என்பதில்லை. ஆட்சியாளரின் சபை அரசரைத் தேர்ந்தெடுப்பதைப்பற்றி முடிவு செய்யும். மன்னருக்கு நீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமிக்கவும், நாட்டிற்குள்ள சட்டங்களை அமுல் செய்யவும் அரசருக்கு அதிகாரம் உண்டு. அமைச்சரவையால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விருதுகள் வழங்கவும் அரசருக்கு அதிகாரம் உண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட மன்னர் ஐந்தாண்டுக் காலம் பதவி வகிப்பார். தன் பதவியை வேண்டாம் என்று சொல்வதற்கு அரசருக்கு அதிகாரம் உண்டு. அரசர் நோய் வாய்ப்பட்டால் அவரது வேலைகளை எப்படிச் செய்யப்பட வேண்டுமென்று முடிவெடுக்கும் பொறுப்பு அமைச்சரவைக்கு உண்டு. பதவியிலிருக்கும்பொழுது அரசன் இறந்துவிட்டால் மற்றொருவர்

தேர்ந்தெடுக்கப்படுவார். பிரதம மந்திரியை நியமிக்கும் அதிகாரம் அரசருக்குண்டு. பாராளு மன்றத்தின் கீழ்ச் சபையாகிய, மக்கள் சபையில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்ற கட்சியின் தலைவரே நாட்டின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். மற்ற மந்திரிகள், பிரதம மந்திரியின் ஆலோசனையின்பேரில் அவருடைய விருப்பப்படியே மன்னர் நியமிப்பார். எல்லாப் பொறுப்புகளும் அமைச்சரவைக்குத்தான் உண்டு. ஆகவேதான் மன்னரின் அதிகாரத்தை ஒரு பொதுவான செயற்குழுவை ஒத்ததாகும். பிரதம மந்திரி, மந்திரி சபையின் தலைவராக இருந்து. மக்கள் சபைக்குப் பொறுப்பாக நடந்துகொள்ளும் காரணத்தினால் உண்மையான செயற்குழுவாக விளங்குகின்றது. அமைச்சரவை எதை முடிவு செய்கிறதோ அதுவே நிரந்தரமானது. ஆகவேதான் மன்னர் பெயரளவு செயற்குழுவாகவும் மந்திரி சபை உண்மையான செயற்குழுவாகவும் கருதப்படுகிறது.

உண்மையான செயற்குழு

மலேசியாவில் உண்மையான செயற்குழு அமைச்சரவையாகும். மேன்மைதாங்கிய மன்னரால் அமைச்சரவை அமைச்சர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அமைச்சரவை அரசாங்கத்தின் காரியங்களை நிறைவேற்றுவதற்காகச் செயலாற்றுகிறது. அமைச்சரவையில் ஒரு பிரதம மந்திரியும், மற்ற மந்திரிகளும் இருக்கிறார்கள். அமைச்சரவை அரசருக்கு அறிவுரைச் சொல்லவும், அரசாங்கத்தை நடத்திச் செல்ல உதவி புரியவும் இருக்கிறது. மலேசியாவில் உள்ள பாராளு மன்றத்தின் கீழ்ச் சபையில் திவான் ரயத் (Dewan Ra'ayat) தலைவராக இருக்க வேண்டும். பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் மற்ற மந்திரிகள் அரசரால் நியமிக்கப்படுவார்கள். அப்படி நியமிக்கப்பட்ட மந்திரி சபையானது பாராளு மன்றத்திற்குக் கூட்டுப் பொறுப்பாக இருக்கும். பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையின் நம்பிக்கையை இழக்காதிருக்கும்வரை பிரதம மந்திரி பதவியிலிருப்பார். பிரதம மந்திரியினுடைய ஆலோசனையின் பேரில் அரசர் பாராளு மன்றத்தைக் கலைக்கலாம். அல்லது மந்திரிசபை முழுவதும் இராஜினாமா செய்யலாம், ஒவ்வொரு மந்திரியும், பதவியேற்றவுடன் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும். மலாசிய நாட்டின் குடிமகனாகப் பிறக்காத எவரும் பிரதம மந்திரியாகவர முடியாது. மாநில அரசின் சட்ட சபையில் உறுப்பினராக இருந்தால் மலேசியா கூட்டாட்சி நாட்டிற்கு மந்திரியாக வந்தால் அப்பொழுது அவர் மாநில சட்டசபை உறுப்பினர் பதவியை விட்டுவிட வேண்டும் அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டபடி அமைச்சரவைக்கு ஊதியம் கொடுக்கப்படும்.

உதவி மந்திரிகள் (Assistant Minister)

பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில், துணை மந்திரிகளை, மன்னர் நியமிக்கிறார். துணை மந்திரிகள், பாராளு மன்றத்திலுள்ள இரு சபைகளில் ஏதேனும் ஒரு சபையில் உறுப்பினராக இருந்தால் போதுமானது. துணை மந்திரிகள் பாராளு மன்றம் கலைக்கப்பட்ட போது அமைச்சரால் நியமிக்கப்பட்டிருந்தால் மறுமுறை பாராளு மன்றம் கூடும்வரை அமைச்சராக இருக்கலாம். மறுபடியும் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், துணை மந்திரியாக நீடிக்கலாம். அமைச்சரவைக்கு உதவி செய்வது, துணை அமைச்சர்களின் வேலையாகும். உதவி மந்திரிகளின் சம்பளத்தைப் பாராளு மன்றம் நிர்ணயம் செய்யும்.

3. ஒப்பு நோக்குதல் (Comparison)

மலேசியா நாட்டின் பெயரளவு செயற்குழுவாக மன்னர் விளங்குகிறார். இவருடைய அதிகாரங்களும், பொறுப்பும் ஆங்கில நாட்டின் பெயரளவு செயற்குழுவாக அரசியின் அதிகாரத்தைப் போல் உள்ளன முதலாவதாக ஆங்கில நாட்டின் அரசி அல்லது அரசன் பதவி, பரம்பரையாக வருகிறது. ஆனால் மலேசியாவில் மன்னர் ஆட்சியாளருடைய சபையால் ஐந்தாண்டுகளுக்குத் தேர்ந் தெடுக்கப்படுகிறார். மேலும் ஆங்கில நாட்டில் இராணி காமன் வெல்த் நாடுகளின் (Commonwealth Countries) தலைவியாகவும் விளங்குகிறார். இம் மாதிரியான நிலை மலேசிய மன்னருக்கு இல்லை. ஜப்பான் நாட்டு மன்னரோடு, மலாசிய நாட்டு மன்னரை ஒப்பிட்டுப் பார்த்தால் ஜப்பான் நாட்டு மன்னர் மக்களின் ஒற்றுமைக்குத் தலைவராகவும், நாட்டின் சின்னமாகவும் விளங்குகின்றார். ஜப்பானின் அரசர் பதவி. பரம்பரையாக வருகிறது. ஆனால் மலேசியாவில் அவ்வாறு இல்லை. அதிகாரங்களை ஜப்பானிய மன்னர் நிறைவேற்றும் பொழுது அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுதான் செயலாற்று கிறார். அப்படிச் செயலாற்றும்பொழுது தன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கவும், சட்டம் இடம் கொடுக்கிறது. இம் மாதிரி முறை மலேசிய நாட்டு அரசியல் சட்டத்தில் இல்லை. மலேசிய நாட்டில் மன்னர், பிரதம மந்திரியை நியமிக்கிறார். ஆனால் ஜப்பான் நாட்டில் மன்னர் பாராளு மன்றமாகிய டயட்டால் நியமிக்கப் பட்டவரையே ஏற்றுக்கொள்கிறார்.

மலேசிய நாட்டின் மந்திரி சபை உண்மையான செயற்குழு வாகப் பணியாற்றுகிறது. ஜப்பான் நாட்டைப் போலவும், ஆங்கில நாட்டைப் போலவும், மந்திரி சபை மலேசிய நாட்டிலும் இயங்கி வருகிறது. பாராளும் மன்றத்திற்குப் பொறுப்பானது. பாராளு

மன்றம் கலைக்கப்பட்டால் மந்திரி சபை பதவி இழக்க நேரிடும். மலேசியாவில், அந் நாட்டில் பிறக்காத எவரும் பிரதம மந்திரியாக வரமுடியாது. துணை மந்திரிகள் உண்டு. ஆனால் ஜப்பான் நாட்டில் துணை மந்திரிகள் இல்லை. சில வேறுபாடுகளைத் தவிர பெரும் பாலும், ஆங்கில நாட்டின் முறையை ஒட்டியே, மலேசிய நாட்டு மந்திரி சபை இயங்கிவருகிறது.

மலாசிய நாட்டு அரசியல் அமைப்பை விளக்கும் அட்டவணை

(GOVERNMENT OF MALAYSIA)

மன்னர் (Emperor)
பெயரளவு செயற்குழு
(Nominal Executive)

2
மந்திரி சபை (Cabinet)
உண்மைச் செயற்குழு
(Real Executive)


—செயற்குழு (Executive Body)

1
சட்ட மன்றம் (Legislative Body)
பாராளுமன்றம் (Parliament)

- செனேட் (Senate) The Dewan Nagara (மலாய மொழியில் மேல் சபையின் பெயர்)
- மக்கள் சபை (House of Representatives) The Dewan Ra'ayat (மலாய மொழியில் கீழ்ச் சபையின் பெயர்)

3
நீதித்துறை (Judiciary)
உச்சநீதி மன்றம்
(Supreme Court)

இந்தியாவின் தேசியப் படம் (THE INDIA)



6. இந்திய நாட்டுச் செயற்குழுக்கள்
(Executives in India)

1. இன்றைய இந்தியா ஒரு துணைக் கண்டம்
(India To-day)

ஆசிய நாட்டுச் சரித்திரத்தில் இந்தியா ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. இதனை ஆசியாவின் துணைக் கண்டம் என்று கூறுவர். இந்தியாவின் தற்கால சரித்திரத்தை ஆராய்வோமாயின் இந் நாடு ஆங்கிலேயரிடம் 200 வருடங்கள் அடிமையாக இருந்து வந்தது என்பதைத் தெரிந்துகொள்கிறோம். வியாபார வர்த்தகத்திற்கென்று இந்தியாவிற்கு வந்த ஆங்கில நாட்டு மக்கள் படிப்படியாக இந்தியாவை அடிமைப் படுத்தி இரு நூறு ஆண்டுகள் ஆண்டு வந்திருக்கின்றனர். இந்தியாவில் நாம் இன்று காணும் அரசியல் முறைக்கு அடிகோலாக இருந்தது பிரிட்டிஷ் இந்தியாவேயானாலும் (British India). 1600ஆம் ஆண்டு எலிசபெத் இராணி அவர்களின் கட்டளையின்படி இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனி என்ற ஒரு வியாபார ஸ்தலத்தை ஆரம்பித்தார்கள். இதிலிருந்து இந்தியா சுதந்திரம் அடைந்தவரை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவதாக 17ஆம் நூற்றாண்டிலிருந்து, 18ஆம் நூற்றாண்டில் பாதி நூற்றாண்டுவரை, இந்தக் கிழக்கிந்தியக் கம்பெனி வெறும் வியாபாரத்திற்காகவும், மேலும் ஹாலந்து (Holland) மற்றும் பிரான்சு (France) இவ்விரு நாடுகளின் போட்டியைச் சமாளிப்பதுமே இதன் முக்கிய கடமைகளாக இருந்து வந்தது. ஆனால் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும், 19ஆம் நூற்றாண்டிலும் இங்கிலாந்து நாட்டின் ஆதிக்கம் இந்திய நாட்டின்மீது முழுமையாக இருந்து வந்தது. 1857-ல் ஏற்பட்ட சிப்பாய் கலகத்திற்குப் பிறகு (Mutiny) இந்தக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கம், இங்கிலாந்து நாட்டு அரசியலின் கைக்கு மாற்றப்பட்டது. அதன் பின் இங்கிலாந்து நாட்டு மன்னரின் ஆட்சியே நம் நாட்டிலும் துவங்கியது. 1919 முதல் இந்திய நாட்டு மக்களிடம் ஒரு புது உணர்ச்

சிப் பரவி, சுதந்திர வேட்கை மிகுந்தது. இறுதியாக 1935-ல் ஏற்படுத்திய இந்திய அரசு சட்டத்தின்படி இங்கிலாந்து நாட்டு அரசு இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் அளிப்பதென்று தீர்மானித்தது. ஆனால் அதற்குள் இரண்டாவது உலக மகாயுத்தம் வந்துவிடவே இந்தியாவிற்குச் சுதந்திரம் அளிக்கும் பிரச்சனை நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால் இந்திய மக்களின் விடா முயற்சியின் காரணமாக இந்தியா ஆகஸ்டு 15ஆம் தேதி, 1947-ல் சுதந்திரம் அடைந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் இந்திய நாட்டு மக்கள் தங்களுக்கென்று ஓர் அரசியல் அமைப்பு வேண்டுமென்று தீர்மானித்தனர். 1935ஆம் ஆண்டு ஏற்படுத்திய இந்திய நாட்டு அரசியல் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டே நாம் இன்று காணும் அரசியல் அமைப்பை எழுதினார்கள்.

நமது நாட்டு அரசியல் அமைப்பின் முன்னுரையைப் படித்தால் (Preamble of the constitution) நம் நாட்டு அடிப்படைக் கொள்கைகளை அறிய முடியும். "இந்தியா இந்திய நாட்டு மக்களாலேயே பூரண சுதந்திரத்துடன், குடியாட்சி நடத்தும், இங்குள்ள மக்கள் அனைவரும் நீதி (Justice), சமூகம் (Social), பொருளாதாரம் (Economics) மேலும் அரசியல் (Political) இவை நான்கிலும் சமத்துவம் பெற்றவராவர். மக்கள் அனைவருக்கும் சரிசமமான சந்தர்ப்பமும், சூழ்நிலையும் ஏற்படுத்தி அவர்களது வாழ்க்கைத் திறனை உயர்த்திக் கொள்ள இந்த அரசாங்கம் சம்மதம் அளிக்கு மென்றும், ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தனித்தனியாகவும், கூட்டமாகவும் இதனை இந்த அரசாங்கம் உறுதி கூறுகிறது என்றும், இதனுள் கூறப்பட்டுள்ளது. மேலும் இந்திய நாடு கூட்டாட்சி முறையைக் கொண்டிருந்தாலும், அது ஒற்றையாட்சி முறையினைப் போலவே பரிபாலனத்தை நடத்தி வருகிறது. இந்தப் புத்தகத்தில் இந்திய நாட்டு அரசின் மற்றப் பிரிவுகளைப் பற்றி ஆராயப் போவதில்லை. இனிவரும் இந்திய நாட்டுச் செயற்குழுக்களின் அமைப்பு, பணி, வளர்ச்சி இதனைக் காணப் போகிறோம்.

2. இந்திய நாட்டின் செயற்குழுக்கள்

இந்திய நாட்டின் செயற்குழு பாராளுமன்ற முடையது. இந்திய நாட்டின் தலைவர் (President) இந் நாட்டின் பெயரளவு செயற்குழுத் தலைவர் என்று அழைக்கப்படுவார். (Nominal Executive) இவரது செயல்கள் அனைத்தும், மத்திய மந்திரி சபையின் அறிவுரையின் பேரிலேயே நடத்தப்படும். இந்திய நாட்டின் அரசியல் பரிபாலன முறை இங்கிலாந்து நாட்டை ஒட்டியே அமைந்துள்ளது. ஆனால் இங்கிலாந்து நாட்டின் அரசக் குடும்பத்திலிருந்து (Royal family) வழிவழியாக வருபவர்களை நாட்டின்

பெயரளவு செயற்குழுத் தலைவர்களாக ஆக்கி வருகிறார்கள். ஆனால் இந்திய நாட்டுத் தலைவர் 5 வருடங்களுக்கு ஒருமுறை இந்திய நாட்டு மக்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். (Indirect Election) இந்திய நாட்டு அரசியல் சாசனத்தின்படி, இந்நாட்டிற்கு ஒரு தலைவர் உள்ளார். அவரே செயற்குழுவின் தலைவர். அவருடைய கடமைகள் எல்லாம் மந்திரி சபையின் நோக்கை ஒட்டியே இருக்கவேண்டும். இந்திய நாட்டின் பாதுகாப்பு (Defence) இவரிடமே உள்ளது. இந்திய நாட்டுத் தலைவர் 'தேர்வுக் கல்லூரி' (Electoral College)ன் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இக் கல்லூரியில் சட்ட சபையின் இரு பிரிவுகளின் உறுப்பினர்களும், மாநில அரசுகளின் சட்ட சபை உறுப்பினர்களும் அடங்கியிருப்பர். சுருங்கக் கூறின் இந்திய நாட்டுத் தலைவரை, இந்திய நாட்டு மக்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப் பட்ட இந்திய நாட்டுத் தலைவரின் காலம் (Tennure) ஐந்து ஆண்டுகளாகும். இவர் தனது காலம் முடிவதற்கு முன்பு பதவியிலிருந்து விலக நினைத்தால் அவரது இராஜினமா கடிதத்தை உபத் தலைவர் (Vice President) அவர்களிடம் கொடுக்க வேண்டும். அவர் அதனை பாராளு மன்றத்தின் சபாநாயகரிடம் (Speaker) சமர்ப்பித்து அதனைச் சட்ட மன்றத்தின் கீழ்ச்சபையான மக்கள் சபை (Lok Sabha)யின் பார்வைக்கு அனுப்பி வைப்பார். இங்கு ஏற்கும் முடிவின்படியே அவர் பதவியிலிருந்து விலக முடியும். இல்லையென்றால் அவர் ஏதேனும் குற்றச்சாட்டின் கீழ் தண்டிக்கப்படுவாரே யானாலும், அதற்கு முன்பு அவரது வழக்கைப் பாராளு மன்றத்தில் கொண்டு வந்து தீர ஆய்ந்த பின்பு, அது முடிவெடுத்த பின்பே அவரைப் பதவியிலிருந்து விலக்க முடியும். அவரது பதவி காலம் முடிந்த பின்பு, புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும்வரை பழைய தலைவரே பதவியில் இருக்கலாம். ஒரு முறை நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரை மறுமுறையும் தேர்ந்தெடுக்க முடியும்.

இந்திய நாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவருக்குச் சில தகுதிகள் தேவைப்படுகிறது. முதலில் இவர் இந்திய நாட்டுப் பிரஜையாக இருக்கவேண்டும் அவர் முப்பத்தைந்து வயது உள்ளவராக இருக்கவேண்டும். ஓட்டுப் போடும் தகுதி பெற்றவராகவும் இருக்கவேண்டும். இந்திய நாட்டுத் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் எந்த நபரும் மத்திய அரசிடமோ, அல்லது மாநில அரசிடமோ, வருமானமோ, இலாபமோ பெறும் அலுவலகத்திலோ அல்லது மற்றத் துறைகளிலோ ஈடுபட்டிருக்கக் கூடாது. நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அவர் பாராளு மன்றத்திலோ, அல்லது எந்த ஒரு மாநில

அரசின் சட்ட சபையிலோ உறுப்பினராக இருந்தால் அப் பதவியை அவர் உடனே இழந்துவிட வேண்டும். நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு இவருக்கு மாதம் ரூ. 10,000 ஊதியமாகவும், இலவச வீடும் அளிக்கப்படும். இதைத் தவிர மற்றப் படிகளும் (Allowances) வழக்கமாக அளிக்கப்படும். இவர் முதன்முறையாகப் பதவி வகிக்கும்பொழுது இந்திய நாட்டுப் பிரதான நீதிபதியின் முன்பு (Chief Justice of India) ஒரு சத்தியத்தை மேற்கொள்ள வேண்டும். அதாவது அவர் நாட்டின் தனித் தலைவர் அல்ல, இந் நாட்டு மக்களின் தலைவர். அவர்களுள் ஒருவர் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே அவர் தனது கடமையை ஆற்றவேண்டும்.

இதுவரை இந்தியா சுதந்திரம் பெற்று நான்கு பேரைத் தலைவர்களாகக் கொண்டுள்ளது. முதன் முதலில் 1952-ல் டாக்டர் இராஜேந்திர பிரசாத் (Dr. Rajendra Prasad) அவர்களை இந்திய நாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. பிறகு அவரை 1957-ல் மறுமுறையும் நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுத்தோம். பிறகு இரண்டாவதாக நாட்டின் தலைவராக வந்தவர் டாக்டர் இராதா கிருஷ்ணன் (Dr. Radhakrishnan) என்பவராவார். இவர் 1962-ல் இந்திய நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு 1967-ல் டாக்டர் ஜாகிர் உசெயின் (Dr. Zakir Hussain) என்பவர் இந்திய நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தனது பதவிக் காலம் முடிவதற்கு முன்பே இறந்து விட்டபடியால் வி. வி. கிரி (V. V. Giri) அவர்களை நாட்டின் தலைவராக 1970-ல் தேர்ந்தெடுத்தார்கள். இவரை நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் பொழுது, முந்தைய தேர்தல்களைப்போல் இல்லாமல் போட்டியுடனும், இடையூறுடனே நடந்தது. ஆயினும் அவர் மற்ற எல்லாத் தலைவர்களையும் விட மிக அதிகமான ஓட்டுகளைப் பெற்று இன்று நமது நாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இனி இந்திய நாட்டுத் தலைவரின் நீதி மன்றம், சட்ட மன்றம், செயற்குழு, பொருளாதாரம் மற்றும் அவர் பதவி காலத்தில் அவருடைய கடமைகள் என்னென்ன என்பதனைத் தெளிவுபடுத்தி நோக்குவோம்.

நீதித்துறை அதிகாரங்கள் (Judicial Powers)

இந்திய நாட்டுக் குடியரசுத் தலைவருக்கு அளவிற்கு அதிகமான அதிகாரங்கள் உள்ளன. நீதித் துறையைப் பொறுத்தவரை, இவர் ஒருவருக்கு மன்னிப்பு அளிக்கவும் (grant pardons) நீதித் துறை வழங்கிய தீர்ப்புகளை மாற்றி, தண்டனையைக் குறைக்கவும் இவருக்கு அதிகாரம் உண்டு. மத்திய அரசு அதிகாரிகள் யாரேனும் தங்கள்

அலுவலகக் காரியங்களில் தவறுகள் செய்து தண்டனைப் பெற்றிருந்தால் அதனை மாற்றவும், குறைக்கவும் இவருக்கு அதிகாரங்கள் உண்டு. உதாரணமாக 1955 முதல் 1957 வரை 200 குற்றவாளிகள் இந் நாட்டுத் தலைவரால் மன்னிக்கப்பட்டு விடுதலைப் பெற்றுள்ளனர்.

சட்ட மன்ற அதிகாரங்கள் (Legislative Powers)

இவரது சட்டமன்ற அதிகாரங்கள் மிகவும் விரிவானது. இவர் சட்ட மன்றத்தைக் கூட்டவும், தள்ளிவைக்கவும் கலைக்கவும் முடியும். ஆனால் ஆறுமாத இடைவெளிக்கு மேல் போகாமல் ஒருமுறைக் கூடி மறுமுறைக் கூடும்பொழுது இருக்கக்கூடாது. இவர் பாராளுமன்றத்தின் இரு சபைகளில் தனித் தனியாகப் பேசவும், இரண்டு சபைகளையும் ஒன்றாக இணைத்துப் பேசவும் உரிமையுண்டு. இவர் பாராளுமன்றத்து இரு சபைகளுக்கும் அரசியல் காரியங்களை ஒட்டி செய்தி (Message) அனுப்பலாம். நாட்டின் பொதுத் தேர்தலுக்குப் பிறகு இந் நாட்டுத் தலைவர் இரண்டு சபைகளையும் ஒன்று கூட்டி தனது உரையை யாற்றுவார். பாராளு மன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேறிய மசோதாக்கள் (Bills), இந்திய நாட்டுத் தலைவரின் கையெழுத்துப் பெற்ற பின்பே சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது (Assent). பாராளுமன்றத்தில் நிறைவேறிய மசோதாக்கள், இந்திய நாட்டுத் தலைவரிடம் கையொப்பம் பெறாவிட்டால் அதனைச் சட்டமென்று கூற முடியாது. இவ்வாறு பாராளு மன்றம் நிறைவேற்றிய மசோதா, தலைவரின் பார்வைக்கு வரும்பொழுது அவர் அதனை ஏற்றுக்கொள்ளவும் செய்யலாம். அல்லது அவர் அதனைச் சிறிது மாற்றங்கள் தேவையென்று திருப்பியனுப்பவும் முடியும். இவ்வாறு நாட்டின் தலைவரால் திருப்பி அனுப்பப்பட்ட மசோதாக்களைப் பாராளு மன்றம் மறு ஆராய்ச்சி செய்தேயாக வேண்டும். அதன் பின்பு அது இரு சபைகளிலும் நிறைவேறி விட்டால் இரண்டாவது முறை தனது கையெழுத்திற்கு வந்த மசோதாவைத் தள்ளிவிடும் உரிமை தலைவருக்குக் கிடையாது. இவ்வாறு மறுபடியும் ஆராய்ச்சி செய்யப்பட்ட மசோதாக்களில் தலைவர் குறிப்பிட்டிருந்த கருத்துகள் சேர்க்கப்பட்டும், சேர்க்கப்படாமலும் இருக்கலாம். நமது அரசியல் சட்டம் சரத்து எண் 3-ன்படி (Article-3) மாநில அரசுகளின் பெயர்களை மாற்றவும், எல்லைகளை மாற்றவும் புதிய மாநிலங்களை ஏற்படுத்தவும், கொண்டுவரும் மசோதாக்கள் முதன் முதலில் இந்திய நாட்டுத் தலைவரின் அனுமதிப் பெற்ற பின்பே அதனைப் பாராளு மன்றம் எடுத்துக் கொள்ள முடியும். அதேபோல் ஏதேனும் ஒரு மசோதா

கீழ்ச் சபையிலோ அல்லது மேல் சபையிலோ மட்டும் நிறைவேறி பின்பு அது மற்றொரு சபைக்கு அனுப்பும்பொழுது அங்கு அது நிறைவேற்றப்படாமல் போனாலோ, அல்லது வேறு பிரச்சனைகளைக் கிளப்பி ஒத்துக் கொள்ளாமல் இரு சபைக்குமிடையே தகராறுகள் தொடருமேயாயின். அச் சந்தர்ப்பங்களில் நாட்டின் தலைவர் இரண்டு சபைகளுக்கும் செய்திகள் மூலம் ஒரு நாள் ஒன்றாகக் கூடும்படி கட்டளை இடுவார் அதன்படி கூடி அந்த மனுவை ஆராய்ச்சி செய்து ஒரு முடிவெடுக்க அனுமதிப்பார். மேலும் இந்திய நாட்டு மாநில அரசாங்கங்களில் எங்காவது அமைதி குறைந்து, நிலையற்ற அரசாங்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அம் மாநில அரசாங்க அதிகாரங்களை, நாட்டின் தலைவரே தனது பிரதிநிதியான மாநிலத் தலைவர் (State Governor) மூலம் பரிபாலிக்க முடியும். நமது இந்திய நாட்டு அரசியல் சரத்து 240-ன் படி நாட்டின் அமைதியையும், முன்னேற்றத்தையும், நல்லரசை நிலைநாட்டவும், நாட்டின் தலைவருக்கு அதிகாரம் உண்டு. 'Promulgation (or) Ordinance' இயற்றுவதற்கு அதிகாரம் உள்ளது. இப் பிரகடனம் சட்ட சபையில் ஏற்படுத்திய சட்டங்களுக்கு எவ்வளவு அதிகாரங்கள் உள்ளதோ அவ்வளவு அதிகாரங்கள் பிரகடனத்திற்கும் உள்ளது. அப்படிச் செய்யப்பட்ட பிரகடனங்கள், பாராளு மன்றம் கூடியதும் இவைகள் நிறுத்தப்பட வேண்டும். அல்லது பாராளு மன்றம் கூடி ஆறு வாரத்திற்குள் நிறுத்தப்பட வேண்டும். அல்லது பாராளு மன்றம் அதற்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவந்தால் ஆறுவார காலம் முடிவதற்குள் அவைகள் நிறுத்தப்பட வேண்டும். பிரகடனத்தை எப்பொழுது வேண்டுமானாலும் தலைவர் நிறுத்திவிடலாம். ஆனால் பிரகடனங்கள் செய்வது சட்டங்கள் இயற்றுவதற்குப் பதிலாக உபயோகிப்பது நல்லதல்ல. நெருக்கடி நிலைமை ஏற்படும்பொழுதுதான் பிரகடனத்தை ஏற்படுத்த வேண்டும். சாதாரண நேரங்களில் (normal days) மக்களின் உரிமைகளைப் பாதிக்கும் மசோதாக்கள் இயற்றிச் சட்டங்கள் செய்வதே நல்ல முறையாகும். இதற்காகப் பாராளு மன்ற உட்குழு அமைத்து அதன் ஆலோசனையின்படி பிரகடனங்களைச் செய்வது நல்லதாகும். அப்படிச் செய்தால் ஜனநாயகக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு நடப்பதற்கு ஒப்பாகும். அரசியல் சட்டத்தைக் குறிப்பிட்ட காரணங்களுக்கு மாநில ஆட்சியைத் தலைவர் எடுத்து நடத்தினால் அப் பகுதிகளைச் சட்ட முறையில் ஆளும் பொறுப்புத் தலைவருக்கு உண்டு. அப்பொழுது அதற்காக இயற்றப்பட்ட பிரகடனங்களுக்குச் சட்டத்தைப் போலவே அதிகாரம் உண்டு.

நிதி அதிகாரங்கள் (Financial Powers)

இந்திய நாட்டுக் குடியரசுத் தலைவரின் நிதி சம்பந்தமான அதிகாரங்களை, நமது நாட்டு அரசியல் சாசனத்தின்படி நோக்குவோமேயானல். இவர் ஒவ்வொரு நிதி ஆண்டின் போதும், (Financial Year) இந்திய நாட்டு வரவு, செலவு கணக்குகளைப் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் முன்பும் வைக்க வேண்டும். அதில் செலவுப் பகுதி, நாட்டின் ஒவ்வொரு செலவையும் அழகாக வகைப் படுத்தி காட்டி இருக்கும். இதைத் தவிர அதிகமான தொகையோ அல்லது விதித்த தொகையோ (demand) தேவைப்பட்டால் அது தலைவரின் சம்மதம் பெற்றாலன்றி இதனைப் பெற முடியாது. இந்திய நாட்டுத் தலைவருக்கு அதிக நிதித் தொகை அளிக்கவோ, தர தீர்மானிக்கவோ அதிகாரம் இருக்கிறது. ஆனல் ஏதேனும் ஒரு வரியை எடுக்கவோ, குறைக்கவோ இவரது அறிமுகம் (Recommendation) தேவை இல்லை. நாட்டின் வருடாந்திர நிதி நிலை விவர அறிக்கை (The Annual Financial Statement) மற்றும் இந்திய மாநில கணக்காய்வுத் தலைவர் அவர்களின் குறிப்புகள் (The Report of the Audi or General of India), நிதி ஆணைக் குழுவின் பரிந்துரை (The Recommendation of the Finance Commission), மைய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு (Union Public Service Commission) இவைகள் அனைத்தையும் இந்திய நாட்டுக் குடியரசுத் தலைவர், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். எதிர்பாரா செலவு நிதி (The Contingency Fund)யிலிருந்து இந்திய நாட்டுத் தலைவர் எதிர்பாராமல் நாட்டில் ஏற்படும் செலவுகளுக்குக் கடனுகவோ, அல்லது முன் பணமாகவோ பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்க முடியும். இவர் நிதி ஆணைக்குழு (Finance Commission) ஒன்றை ஏற்படுத்தி மத்திய, மாநில அரசுகளின் பொருளாதாரப் பிரச்சினைகளைக் கவனிக்கச் சொல்ல முடியும்.

செயற்குழு அதிகாரங்கள் (Executive Powers)

இந்திய நாட்டு அரசியல் சாசனத்தின் சரத்து எண் 53-ன்படி செயற்குழு அதிகாரங்கள் இந்திய நாட்டுக் குடியரசுத் தலைவரிடமே அடங்கியுள்ளது. இந்த அதிகாரங்களை இவர் நேரடியாகவோ அல்லது தனது கீழுள்ள அதிகாரிகளின் மூலமோ செயல்படுத்திக் கொள்ளலாம். நாட்டின் பாதுகாப்பு (Defence)ன் முழுப் பொறுப்பும் இவரிடமே அடங்கியுள்ளது. அதனை அரசியல் சட்டங்கள் கொண்டு பரிபாலிக்க வேண்டும். அரசியல் சாசனத்தின் சரத்து எண் 74-வது குறிப்பின்படி மந்திரி சபை அல்லது மந்திரிகள்

அடங்கிய குழுத் தலைவருக்கு அறிவுரை கூறவும், அரசாட்சிக்கு உதவவும் வேண்டும். இதனை எந்தச் சட்டமும் தடுக்க முடியாது. தலைவர் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சி கீழ்ச் சபையில் (Lok Sabha) பெரும்பான்மையான இடத்தைப் பெற்றிருக்கிறதோ அந்தக் கட்சியின் தலைவரைப் பிரதம மந்திரியாக நியமித்து அவரது கருத்தின் பேரில் மந்திரி சபையின் மற்ற மந்திரிகள் தேர்ந்தெடுக்கப் படுகிறார். மந்திரிகள் அனைவரும் பதவி ஏற்கும்பொழுது நாட்டுத் தலைவரின் முன்பு சத்தியம் எடுத்துக்கொண்ட பின்பே பதவி ஏற்க முடியும். இவர்களைத் தவிர இவர் நாட்டின் முப்படைத் தலைவர் களையும், பாதுகாப்பாளர்களையும் இவர் நியமிக்கின்றார். அரசியல் சாசனத்தின் சரத்து எண் 77-ன்படி எல்லாச் செயற்குழு பணிகளும் நாட்டுத் தலைவரின் பேரிலேயே நடக்கிறது. நாட்டின் வியாபார சம்பந்தமான விதிகள் ஏற்படுத்தினாலும் அது பொதுவானதாகவும், நாட்டிற்குப் பொருத்தமானதாகவும், மற்ற மாநிலங்களை எத் துறையிலும் பாதிக்கக் கூடாததாகவும் இருக்க வேண்டுமென் பதை இவர் பார்த்துக் கொள்ளவேண்டும். அரசியல் சாசனத்தின் 78-வது சரத்தின்படி பிரதம மந்திரியும், அவர்களுடைய குழுவும் தீர்மானித்த செயல்கள் அனைத்தும், நாட்டின் தலைவருக்குத் தெரி விக்கவேண்டும். இதைத் தவிர இவர் மாநில அரசுகளின் தலைவர் களையும் (State Governors) நியமிக்கிறார். இந்திய நாட்டு உச்ச நீதி மன்றத்தின் நீதிபதிகளையும், மற்ற மாநிலங்களின் உயர்நீதி மன்றங் களின் நீதிபதிகளையும், நிதி ஆணைக் குழு குழுவின் (Finance Commission Members) பிரதிநிதிகளையும், மைய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவின் தலைவரையும் (Chairman of the Union Public Service Commission), தாழ்த்தப்பட்டோர் இனத்தின் நலனைக் கவனிக்கும் தனி அலுவலரையும் (Special officer for the Scheduled Castes and Tribes). பின்தங்கியவரின் நலனைக் கவனிக்கும் அலுவலரையும் (Officer for the Back ward Community), இந்திய நாட்டுத் தலைவர் நியமிக்கிறார். ஒரு சில குறிப்பிட்ட சந்தர்ப்பங் களில் இந்திய நாட்டுத் தலைவர், உச்ச நீதி மன்றத்தின் நீதிபதி களையும், உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகளையும் இவர் பதவியி லிருந்து எடுத்துவிட முடியும். அதேபோல் இவரால் மைய, மாநில அரசுகளின் பணியாளர்கள் தேர்வு ஆணைக் குழுக்களின் தலைவர் களையும் பதவியிலிருந்து விலக்கிவிட முடியும். இவரே நாட்டின் தலைவராக இருப்பதால் இவர் நம் நாட்டுத் தூதர்களையும் (Ambassadors), அல்லது அயல் நாட்டிலிருந்து நம் நாட்டிற்கு வரும் தூதர்களையும் அனுப்பவும் வரவேற்கவும் அதிகாரம் உண்டு. நம் நாட்டு அரசியல் சாசனத்தின்படி இந்திய நாட்டுத் தலைவருக்கு, அயல் நாட்டின்மீது போர் தொடுக்கவோ, நிறுத்தவோ, அல்லது

ஒப்பந்தம் செய்துகொள்ளவோ அதிகாரம் உண்டு என்றும், அதிகாரம் இல்லை என்றும் தெளிவாகக் கூறப்படவில்லை. ஆகையால் ஒருசிலர் இந்திய நாட்டுத் தலைவருக்கு மேற்கூறிய அதிகாரங்கள் உண்டு என்று கூறுகின்றனர். மற்றும் சிலர் இவ்வதிகாரங்கள் இந்திய நாட்டின் பாராளு மன்றத்திற்கே யன்றி தலைவருக்கு இல்லை என்று கூறுகின்றனர். நாட்டின் அரசியல் சட்டத்தின்படி இவ்வதி காரங்கள் இந்தியாவின் மைய அரசிடமே இருப்பதாகக் குறிப்பிட்டிருப்பதால், இதனைப் பாராளு மன்றத்தின் உரிமை என்றே கூறுகின்றனர். ஆனால் மற்றொரு சாரார் இந்தியாவின் மைய அரசில், தலைவரே முதன்மையானவராக இருப்பதால் இவருக்கே இவ்வதி காரங்கள் உண்டு என்று கூறுகின்றனர். நடைமுறையை நோக்கும் பொழுது சண்டை, சமாதானம், ஒப்பந்தம் இவை மூன்றும் நம் நாடு மற்றொரு நாட்டுடன் மேற்கொள்ளும்பொழுது பார்லிமெண்டுடன் நின்றுவிடுவதில்லை. ஏனென்றால் நாட்டிற்காக ஏற்படுத்தும் ஒவ்வொரு சட்டமும், ஒவ்வொரு முடிவும் இந் நாட்டின் தலைவர் கையெழுத்தைப் பெற்ற பின்பே முடிவடைந்ததாகத் தெரிகிறது. மேலும் இந் நாட்டுத் தலைவர், மற்ற மாநில அரசுகளின் அரசைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் உண்டு. ஒரு மாநிலத்திற்கும், மற்றொரு மாநிலத்திற்கும் ஏதேனும் தகராறுகள் இருப்பின், அவைகளைத் தீர்த்து வைக்கும் பொருட்டுத், தலைவர் ஒரு குழு அமைத்துக் கவனிக்கும் உரிமையுண்டு. நமது நாட்டு அரசியல் அமைப்பின் சரத்து எண் 239-ன்படி ஒன்றிய நாட்டின் பகுதிகளை (Union Territory) பரிபாலிக்கும் பொறுப்பும் இவருடையதேயாகும். உதாரணமாக அந்தமான் நிக்கோபார் தீவுகள் (Andaman and Nicobar Islands), மினிகாய் தீவு (Minicoy Island) இவை போன்ற ஒன்றிய நாட்டின் பகுதிகளுக்குத் தகுந்த சட்டங்களை இயற்றவும் இவருக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட சட்டங்களை மாற்றவும் இவரால் முடியும். இந்தியப் பாராளு மன்றத்தின் இரண்டு சபைகளையும் ஒன்றாகக் கூட்டுவதற்கும், வேறு முக்கியமான அரசாங்க அலுவல்களை நியமிப்பதற்கும், உயர்நீதி மன்றத்தின் வேலையாட்களை நியமிப்பதற்கும் மற்றும் மத்திய அரசாங்கப் பணிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், சட்டங்களையும் வழிமுறைகளையும் வகுக்க அதிகாரங்கள் உண்டு, கணக்குத் தணிக்கையாளர் (Auditor General) கணக்குகளைச் சமர்ப்பிக்கும் முன்பு அவைகள் எந்த வகையில் அமைய வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் வரையறை செய்கிறதோ அதைத் தலைவர் ஏற்றுக்கொள்வார்.

படை அதிகாரங்கள் (Military Powers)

இந்திய நாட்டு அரசியல் சாசனத்தின்படி, இந்திய நாட்டுத் தலைவரே நாட்டின் படைக்கு உச்ச படைத் தலைவராவார்

(Supreme Commander). ஆனால் இதனை அவர் செயல்படுத்தும் பொழுது பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றேயாக வேண்டும். பாராளுமன்றத்திற்கே, நாட்டின் படையை அதிகரிக்கவும், சரி பார்க்கவும், கட்டுப்படுத்தவும், படைக்கு ஆட்கள் எடுக்கவும், பயிற்சியளிக்கவும் அதிகாரங்கள் உண்டு. இவ்விடத்தில் இந்திய நாட்டுத் தலைவரை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைவரையும் ஒப்பு நோக்குவோமாயின் முன்னையவர் நிலை, பின்னவரைவிட முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. அதற்கு முக்கியக் காரணம் அமெரிக்கத் தலைவரின் உண்மையான செயற்குழுவாக இருந்து வருகிறார். ஆனால் இந்திய நாட்டுத் தலைவர் பெயரளவு செயற்குழு வாக இயங்கி வருவதே இதற்குக் காரணமாகும்.

தூதுவர் அதிகாரங்கள் (Diplomatic Powers)

இந்திய நாட்டுத் தலைவரும், மத்திய மந்திரி சபை உறுப்பினர் களும் சேர்ந்து, அயல் நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும் உரிமையுண்டு. உலக விஷயங்களுக்கு நாட்டின் தூதுவராகவும், தலைவராகவும் இந்திய நாட்டுத் தலைவரே பெரும்பாலும் கலந்து கொள்ள வேண்டும். இவருக்கு நம் நாட்டிலிருந்து அயல் நாடு களுக்குத் தூதுவர்களை நியமிக்கவும், அதேபோல் அயல் நாட்டுத் தூதுவர்களை நம் நாட்டில் தங்க வைப்பதற்கும் அதிகாரங்கள் உண்டு.

அவசர அதிகாரங்கள் (Emergency Powers)

இந்திய அரசியல் சட்டத்தின் 18-வது பகுதியின் (Part XVIII) படி, நாட்டின் தலைவருக்கு என்னென்ன அவசர அதிகாரங்கள் என்று வழங்கப்பட்டுள்ளது. (1) அயல் நாடுகள் நம் நாட்டின் மீது படையெடுத்திருக்கும் பொழுதும் (Emergency arising out of war) (2) உள் நாட்டிற்குள்ளேயே குழப்பங்கள் நிறைந்திருக்கும் பொழுதும் (Internal disturbance) மற்றும், (3) நாட்டின் பொருளாதார நிலை சீர்குலைந்திருக்கும் பொழுதும் (Financial Emergency) இந்த மூன்று சந்தர்ப்பங்களில் நாட்டின் தலைவருக்குப் பூரண அதிகாரம் உண்டு. அரசியல் சட்டத்தின் சரத்து எண் 352-ன்படி, இந்திய நாட்டுத் தலைவர், நாட்டின் நிலை அந்நியர் படையெடுப்பால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாக உணர்ந்தா ரானால் நாட்டின் பூரண பரிபாலனத்தையும் இவரே எடுத்துக் கொள்ளலாம் என்ற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசியல் சட்டத்தின் சரத்து எண் 355-ன்படி நாட்டின் எப் பகுதியிலோ அல்லது ஒரு சில பகுதிகளிலோ அமைதி குறைந்து பரிபாலனம் சரிவர நடைபெறாமல் இருந்தால் அப் பகுதிகளின் ஆட்சி

பரிபாலனத்தைத் தன் கைக்குக் கொண்டு வரும் அதிகாரம் நாட்டின் தலைவருக்கு உண்டு. உதாரணமாக 1971-ல் ஏற்பட்ட பொதுத் தேர்தலுக்கு முன்பு, வங்காள மாநிலத்தில் அமைதியற்ற அரசாங்கமே அங்கு இருந்து வந்தது. மக்கள் அமைதியின்றி, உயிருக்கும், பொருளுக்கும் காப்பு இன்றி தவித்தார்கள். அம் மாநிலத்தில் அமைதி, ஒழுங்கு, சட்டம் இவைகளை நிலை நிறுத்த நம் நாட்டுத் தலைவர், அவரது ஆளாக மாநில முதல்வரை நியமித்து அமைதியைக் காத்தார். ஆகையால் வங்காள மாநிலத்தின் ஆட்சி அதிகாரம் 1971-க்கு முன்பு இந்திய நாட்டுத் தலைவரிடமே இருந்தது. அதேபோல் கேரள மாநிலத்து ஆட்சியும் 1959-ல் தலைவரின் கைக்கு வந்தது. அரசியல் சட்ட சரத்து எண் 360-ன்படி நாட்டின் பொருளாதார நிலை மிகவும் சீர்குலைந்திருப்பின் அச் சந்தர்ப்பங்களில் இவர் நாட்டின் பரிபாலனத்தை மேற்கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

தலைவரின் நிலை (Position of President)

மேற்கூறிய அதிகாரங்களனைத்தும் சீர்தூக்கிப் பார்த்து ஆராய்ந்தால், நமது இந்திய நாட்டுத் தலைவருக்கு அளவிட முடியாத அதிகாரங்கள் இருப்பது போல் தோன்றும். ஆனால் மேற்கூறிய அத்தனை அதிகாரங்களும் நாட்டின் உண்மைச் செயற் குழுவான மத்திய மந்திரி சபையே (Central Cabinet) மேற்கொள்கிறது. ஆனால் சபையனைத்தும் தலைவர் அவர்களின் பெயரிலேயே செயலாற்றப்படுகிறது. நமது நாட்டு அரசாங்கம் பாராளுமன்ற அமைப்பையுடையது. இது அமெரிக்க நாட்டினைப்போல் தலைவர் ஆட்சி முறையையுடையது அல்ல, மேலும் நாட்டில் அமைதி நிலவும் காலங்களில் நமது நாட்டுத் தலைவர், இங்கிலாந்து நாட்டு இராணிக்கு ஒப்பாவார். ஏனெனில் இங்கிலாந்து நாட்டு இராணிக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. அந் நாட்டிலும் நாட்டின் பரிபாலனம், நம் நாட்டினைப் போலவே பாராளும் மன்றமுடையதாக அமைந்திருக்கிறது. ஆகையால் இவ்விரு நாடுகளிலும் மந்திரி சபையிடமே (Cabinet) உண்மையான செயற்குழு அதிகாரங்கள் அடங்கியுள்ளன. ஆனால் நாட்டின் அவசர காலங்களில் நம் நாட்டுத் தலைவர், அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர்களை ஒப்பவராகிறார். நெருக்கடி நேரங்களில் இந்திய நாட்டுத் தலைவர், பாராளுமன்றத்தைக் கலைத்துவிடவும், நாட்டின் முழு அதிகாரத்தைத் தானே மேற்கொள்ளவும் அதிகாரம் உண்டு. ஆனால் அமெரிக்க நாட்டுத் தலைவர் சர்வாதிகாரத் தன்மையுடன் நாட்டைப் பரிபாலிக்க முடியும். அந்நிலை இந்தியாவில் ஏற்படுத்த முடியாது. நமது மறைந்த தலைமை அமைச்சர் (Prime Minister) நேரு அவர்

கள் குறிப்பின்படி, "நாம் நம் நாட்டுத் தலைவருக்கு எந்தவிதமான உண்மையான அதிகாரங்களை வழங்காவிட்டாலும், நாம் அவரை ஓர் உயர்ந்த மதிப்பிற்குரிய இடத்திலேயே வைத்திருக்கிறோம்." (According to late Prime Minister Jawaharlal Nehru "We have not given our President any real power but we have made his position one of great authority and dignity." மேற்கூறிய காரணங்களால், நாம் இந்திய நாட்டுத் தலைவரை வெறும் நாட்டின் அலங்காரத் தலைவர் என்று எண்ணிவிட முடியாது. நாட்டில் ஏற்பட்ட பொதுத் தேர்தலுக்குப் பிறகு, பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையில் எந்தக் கட்சி பெருப்பான்மையான இடங்களைப் பெற்றிருக்கிறதோ அந்தக் கட்சியின் தலைவரையே நாட்டின் தலைமை அமைச்சராக, தலைவர் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சியும் பெரும்பான்மை இடங்களைப் பெறாமல் இருந்திருந்தால், நாட்டின் தலைமை அமைச்சரைத் தேர்ந்தெடுப்பது தலைவரின் சொந்தக் கருத்தேயாகும். அதைப் போலவே தலைமை அமைச்சரும், அவரது குழுவும் செயல்படுத்தும் எல்லாக் காரியங்களும் நாட்டின் தலைவருக்குத் தெரியப்படுத்த வேண்டும். இதைத் தவிர நாட்டின் பரிபாலனத்தைப் பற்றியும், அவ்வப் போதைய நிலைமையையும் இவருக்குத் தெரிவிக்க வேண்டும். அதேபோல் இவரும், மத்திய மந்திரி சபை உறுப்பினர்களை கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். அதே போல் இவர் நாட்டின் மற்ற மாநில முதல்வர்களுடனும் (State Governors) தொடர்பு கொண்டு அம் மாநிலங்களின் நிலைமையையும் அறிந்து கொள்ளும் உரிமையுண்டு. பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையை இவரால் கலைக்கவும், தள்ளி வைக்கவும் உரிமையுண்டு. சில சந்தர்ப்பங்களில் தலைமை அமைச்சர் கூறியபடி கேட்காமல், பாராளும் மன்றத்தின் கீழ்ச் சபையை கலைக்காமலும் இருக்க நாட்டின் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

துணைத் தலைவர் (Vice-President)

இந்த நாட்டுக் குடியரசு தலைவருக்கு உதவியாக ஓர் உதவித் தலைவர் இருக்கிறார். (Vice-President) அவர் உத்தியோகத்தில் பதவியாற்றும் (Ex-Officer) காரணத்தினால் மேல் சபைக்கு (Council of States) தலைவராக இருக்கிறார். அவர் வேறு எந்தவிதமான இலாபம் உள்ள வேலையிலோ, அல்லது பதவியிலோ இருக்கக் கூடாது. இவர் தலைவர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும் பொழுதோ, அல்லது இறந்து விட்டாலோ, அல்லது பதவியிலிருந்து விலகி விட்ட பொழுதோ, உப தலைவர், தலைவரின் அலுவலக வேலைகளைத் தற்காலிகமாக மேற்கொள்ளுவார். இவர் மேல் சபைத்

தலைவராகப் பணியாற்றுவதற்கு எவ்வித ஊதியமும் கிடையாது. நாட்டின் உப தலைவர் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் உறுப்பினர்களால் வீத முறைப்படி (Proportional Representatives) தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவ்வாறு உதவித் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பொழுது பாராளுமன்றத்தின் இரு சபைகளும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இவர் பாராளுமன்ற சபைகளில் உறுப்பினராகவோ அல்லது மாநில அரசு சட்ட சபைகளில் ஏதேனும் ஒன்றின் உறுப்பினராக இருக்கக் கூடாது. நாட்டின் உதவித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் எவரும், இந்திய நாட்டுப் பிரஜையாகவும், முப்பத்தைந்து வயது நிரம்பப் பெற்றவராகவும், ஓட்டுரிமைப் பெற்றவராவும் இருக்க வேண்டும். ஒரு முறை உதவித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், ஐந்து வருட காலம் அப் பதவியில் இருக்கலாம். இவரே தனது பதவியை விட்டு விலக நினைத்தால், இராஜினுமா கடிதத்தை இவர் நாட்டின் தலைவரிடம் கொடுக்கவேண்டும். இவரைப் பதவியிலிருந்து விலக்க நினைத்தால், பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் அங்கீகாரம் பெற்ற பின்பே விலக்க முடியும். இவ்வாறு இவர் மீது கொண்டு வரும் நடவடிக்கைகள் உடனடியாகக் கொண்டுவர முடியாது. பதினான்கு நாட்களுக்கு முன்பே இதனை உதவி தலைவருக்கு அறிவிக்க வேண்டும். இவர் தனது பதவிக் காலம் முடிந்து விட்ட போதும் கூட, புதிய உதவித் தலைவர் பதவிக்கு வரும்வரை இவரே தனது அலுவலக வேலைகளைக் கவனிக்கலாம். இவர் பதவி ஏற்கும் பொழுது, தலைவரின் முன் சத்தியத்தை மேற்கொள்ள வேண்டும்.

உண்மைச் செயற்குழு (Real Executive)

இந்தியாவின் அரசியல் சாசனத்தின் சரத்து எண் 53-ன்படி, உண்மையான செயற்குழு அதிகாரம் இந்திய நாட்டு மந்திரி சபைக்கே உண்டு என்று கூறுகிறது. ஆகையால் இந்தியாவின் குடியரசுத் தலைவருக்கு உண்மையான செயற்குழு அதிகாரங்கள் கிடையாது. சரத்து எண் 74-ன்படி, இந்திய அரசாங்கத்தைப் பரிபாலிக்கும் பொறுப்புப் பிரதம மந்திரியைத் தலைவராகக் கொண்டு, பல மந்திரிகள் அடங்கிய ஒரு குழுவேயாகும். இவற்றின் சொல்படியே, குடியரசுத் தலைவர் செயல் புரிய வேண்டும். சரத்து எண் 75-ன்படி பிரதம மந்திரி இந்திய நாட்டுத் தலைவரால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதன் பிறகு மற்ற மந்திரிகள், பிரதம மந்திரியின் சொல்படி, தலைவர் மந்திரி சபைக்குத் தேர்ந்தெடுக்கிறார். பிரதமந்திரியும், மந்திரி சபையிலுள்ள மற்ற மந்திரிகளும், தலைவரிடம் நாட்டின் பரிபாலனத்தைப் பற்றி பேசி, கலந்தாலோசித்துச் சுமுகமான உறவு கொண்டிருப்பார்கள். இந்திய நாட்டு மந்திரி சபையில்

உள்ள மந்திரிகள் அனைவரும் தனித்தனியாகவும், கூட்டாகவும் நாட்டுத் தலைவருக்கும், மக்களுக்கும் பொறுப்புள்ளவராகிறார்கள். இவர்கள் அனைவரும் மக்கள் சபைக்குப் பதில் கூறுவதற்குரியவர் கள். மந்திரி சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு மந்திரியும் பதவி ஏற்கும்பொழுது தலைவரின் முன் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளவேண்டும். மந்திரி பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள், பாராளுமன்றத்தில் பிரதிநிதியாக இல்லாவிட்டால் தேர்ந்தெடுத்த ஆறு மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் உறுப் பினராக இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர் தனது மந்திரி பதவியை இழக்க நேரிடும். மந்திரிமார்களின் சம்பளம், மற்ற படிகள் (Other allowances) அனைத்தும் அப்போதைக்கப்போது பாராளுமன்றத்தின் முடிவின்படி தீர்மானிக்கப்படும். 1952 மற்றும் அதற்குப் பிறகும் ஏற்படுத்தப்பட்ட மந்திரிகளின் சம்பள படி சட்டங்களின்படி (The Salaries & Allowances of Ministers Act) ஒவ்வொரு மந்திரிக்கும் மாதச் சம்பளமும், உதவி மந்திரி களுக்கு மாதச் சம்பளமும் தீர்மானிக்கப்பட்டு அதன்படி வழங்கப் படுகிறது. அவர்கள் பதவியில் இருக்கும்வரை இலவச இருப்பிடமும் தரப்படுகிறது. அவர்களுக்கென்று கொடுக்கப்படும் இருப்பிடத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை மத்திய அரசு ஏற்கிறது. இவர்களின் செல விற்காக ரூ 500-க்கு மேற்படாமல் எந்த மந்திரிக்கும் திட்டமிட்டப் படியாக (Sumptuary Allowance) மத்திய அரசு கொடுக்கலாம். ஆனால் துணை மந்திரிகளுக்கு இது கிடையாது. இதைத் தவிர பயணப் படி (Travelling Allowance)யும், மந்திரிகளுக்கு அளிக்கப்படும். மந்திரிமார்களின் குடும்பத்திலுள்ள மற்றவர்கட்கும் பயணப்படி அளிக்கப்படுகிறது. மந்திரிகள் பயணத்தை (Tour) மேற்கொள்ளும் பொழுது, அவர்களுக்குப் பயணப்படியுடன். தினப்படியும் (Daily Allowance) அளிக்கப்படுகிறது. அலுவலக வேலையாக மேற்கொள் ளும் பயணம், ஆகாய விமானத்தின் மூலமோ, கடல் மார்க்க மாகவோ, அல்லது இரயில் மூலமாகவோ இருப்பினும், அவை ஒவ் வொன்றிற்கும் தக்கவாறு படிகள் அளிக்கப்படுகின்றன. இவ்வாறு அளிக்கப்படும் பயணப்படி பணமாக (Cash) கொடுக்கப்படும். மந் திரியும் அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், உடல் நலன்- குறைவாக, மருத்துவமனை (Hospital)யில் சேர்க்கப்பட்டால், அங்கு அவர்களுக்கு இலவசமாகச் சிகிச்சை அளிக்கப்படும். இச் செலவு களை அரசாங்கமே ஏற்கிறது. அரசாங்கம் முன் பணமாக (Advance) மந்திரிகளுக்கு 'மோட்டார் கார்' வாங்க உதவி செய்கிறது. மந்திரி களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு, அவர்கள் பாராளுமன்ற உறுப்பினருக்குக் கிடைக்கும் எவ்வித உதவியும், தொகையும் கொடுக்கப்பட மாட்டாது.

பாராளுமன்றத்தில் உறுப்பினராக அல்லாதவரையும் மந்திரியாக நியமிக்கலாம். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு மாதங்களுக்குள் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும். இவ்விதமாக நமது பிரதம மந்திரி இந்திரா காந்தியவர்கள், இறந்த லால்பகதூர் சாஸ்திரிக்குப் பிறகு பிரதமராகத் தேர்ந்தெடுக்கும் பொழுது நடந்துள்ளது.

இந்திய நாட்டு அரசியல் சாசனத்தின் சரத்து எண் 78-ன்படி, நாட்டின் பரிபாலன சம்பந்தமான எவ்வித காரியத்தையும், நாட்டின் தலைவருக்குத் தெரியப்படுத்துவதும், யோசனை கூறுவதும் பிரதம மந்திரியின் கடமையாகக் கூறப்பட்டுள்ளது. அதே போல் தனக்கு ஏற்படும் ஐயங்களைப் போக்கிக்கொள்ளவும், சாரங்களைத் தெரிந்துக் கொள்ளவும், தலைவர் பிரதம மந்திரியை அழைத்துக் கேட்கும் உரிமையுண்டு.

சரத்து 77-ன்படி செயற்குழு காரியங்கள் அனைத்தும் நாட்டின் தலைவர் பெயரிலேயே மேற்கொள்ளப்படுகிறது. நமது நாட்டில் மூன்று வகை மந்திரிகள் உள்ளனர். மந்திரிசபை பொறுப்புள்ள மந்திரிகள் (Cabinet Ministers), மாநில மந்திரிகள் (State Ministers), மற்றும் துணை மந்திரிகள் (Deputy Ministers) என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று வகை மந்திரிகளுக்கும் சம்பளம், படிகள் மற்றும் பலவற்றை 'மந்திரிகள் சம்பளச் சட்டம் 1950-ன்படி (The salaries of Minister Act 1950) நிர்ணயிக்கப்படும். துணை மந்திரிகள், மந்திரி சபை மந்திரிகள் என்று கூற முடியாது. அவர்கள் பாராளுமன்றங்களில் நடக்கும் பிரச்சினைகளுக்கு, மந்திரி சபை மந்திரிகள் கூப்பிட்டாலன்றி கலந்துகொள்ள அவசியமில்லை. அதேபோல் மந்திரி சபை நடத்தும் இரகசிய கூட்டங்களிலும், இவர்கள் துணைத் தேவையிருந்தாலன்றி இவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கபட மாட்டார்கள். ஆனால் மாநில மந்திரிகளின் நிலை, இந்தத் துணை மந்திரிகளின் நிலைமையை விட உயர்வானது. இவர்கள் மாநிலத்தில் எந்தத் துறையையும் எடுத்து நடத்தும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். ஆனால் துணை மந்திரிகள் தங்களுடைய முதல்வருக்கு (Chief Minister) உதவியாகவும், அவர் ஊரில்லாமலோ, அல்லது உடல் நிலை குறைவாகவோ அல்லது வேறு எந்தக் காரணத்தை யொட்டியோ அவர் அலுவலக வேலைகளைக் கவனிக்க முடியாத காலங்களில் மட்டும், இவர்கள் அக் காரியங்களைச் செய்யவும் இருக்கிறார்கள். பிரதம மந்திரிக்கும், மக்கள் சபைக்கும், நாட்டின் தலைவருக்கும் பொறுப்புள்ளவர்களாகவும், பதில் கூறும் கடமையுள்ளவர்களாகவும் இருப்பது மந்திரி சபையில் அடங்கிய மந்திரிகள் மட்டுமே துணை மந்திரிகள் அல்ல.

மந்திரி சபையின் அம்சங்களும், பொறுப்புகளும் (Characteristics of Ministerial Responsibility)

நமது நாட்டுப் பாராளுமன்றம் இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றத்தைப் போல் அமைப்புப் பெற்றது. மத்திய பாராளுமன்றத்திலுள்ளவர்களே. மந்திரி சபையின் மந்திரிகளாக இருக்க முடியும். அவர்கள் ஒவ்வொருவரும் தனித் தனியாகவும், கூட்டாகவும் மூன்று வகை பொறுப்புகளை ஏற்கிறார்கள். அவர்கள் சட்டங்களுக்கும், பாராளுமன்றத்துக் கீழ்ச் சபை உறுப்பினர்களுக்கும் நாட்டின் தலைவருக்கும் பதில் கூறும் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள். இதில் இப்பொழுது முதல்வகை பொறுப்பைக் கவனிப்போம். அதாவது பாராளுமன்றத்தின் கீழ்ச்சபைக்குப் பொறுப்பு:-மந்திரிகள் ஒவ்வொருவரும். தன் துறை (Department)யில் ஏற்படும் எவ்வித மாற்றங்களைப் பற்றியும் முன்னேற்றங்கள், வரவு செலவுகள் மற்றெல்லாவற்றைப் பற்றியும் பாராளுமன்றத்தில் எழும் ஐயங்களுக்கும் கேள்விகளுக்கும் பதில் கூறும் பொறுப்பை ஏற்கிறார்கள். அவ்வாறு பாராளுமன்றத்தில் கேட்கும் கேள்விகளுக்குப் பொறுப்புடன் பதில் கூறும் கடமையை மந்திரி சபையிலுள்ள மந்திரிகள் பெற்றிருக்கிறார்கள். அப்படி அவர்கள் கூறும் பதில்கள் சரியாகவோ அல்லது திருப்தியாகவோ இல்லாமல் இருந்தால், பிரதம மந்திரி அதனை ஏற்றுத் தீர்த்து வைக்கவேண்டும். அப்படி அவர்கள் கூறும் பதிலானது சரியாக இல்லையென்றால் மந்திரி சபையின்மீது 'நம்பிக்கையில்லாத் தீர்மானம்,' (No Confidence Motion) மக்கள் சபையால் கொண்டு வந்து, செயற்குழுவை மாற்றவும் முடியும். சரத்து எண் 75-ன்படி மத்திய, மந்திரிகள் எப்படிப் பாராளுமன்றத்திற்குக் கடமை பட்டவர்களாகிறார்கள் என்பதைத் தெளிவுபட விவரித்துள்ளது. ஏதேனும் ஒரு மந்திரி செய்யும் தவறுக்காக மந்திரி சபையில் அடங்கியுள்ள மற்றெல்லா மந்திரிகளும் கூட்டாகப் பதவி துறக்க நேரிடும். அதேபோல் ஒவ்வொரு மந்திரியும் தனித்தனியாகத் தங்களுக்கென்று ஒரு துறையை வைத்துக் கொண்டிருந்தாலும், அவற்றின் காரியங்களை மந்திரி சபையிலுள்ள மற்ற மந்திரிகளையும், பிரதம மந்திரியையும் கலந்தாலோசிக்க வேண்டும். ஏதேனும் ஒரு தவறின் காரணமாக, பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையான மக்கள் சபை மந்திரி சபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து, மந்திரி சபை கலைக்கும்படியான நிலைமை ஏற்படும்பொழுது, பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் பாராளுமன்றத்தை நாட்டின் தலைவரால் கலைத்துவிட முடியும். பொதுவாக இவ்வாறு பிரதம மந்திரி விடுக்கும் கோரிக்கைகளை நாட்டின் தலைவர் ஏற்க மறுக்கமாட்டார் அப்படி அவர் ஒப்புக்கொள்ள வில்லையானால் நாட்டின் பரிபாலனத்தில் முட்டுக்கட்டை ஏற்பட வழியுண்டாக்கலாம். பாராளுமன்றத்

தின் கீழ்ச்சபை, பிரதம மந்திரியின் வேண்டுகோளின்படி கலைக்கப் பட்டு விட்டால் புதிய பொதுத் தேர்தல் மேற்கொள்ளப்படும். அவ்வாறு ஏற்படும் பொதுத் தேர்தலில் பழைய கட்சியே பெருவாரியான இடம் பெறுமாகில் பழைய மந்திரி சபையே பதவியிலிருக்கலாம். அப்படிப் பொதுத் தேர்தலில் பழைய மந்திரிசபையின் கட்சி தோல்வியடையுமானால், மந்திரி சபையைக் கலைக்கவேண்டும்.

இரண்டாவதாக நாட்டின் தலைவருக்கு மந்திரி சபையின் பொறுப்பு (Responsibility of the Ministers to the president)

நாட்டின் பொதுத் தேர்தலுக்குப் பின்பு, பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையாகிய, மக்கள் சபையில் எந்தக் கட்சி பெருவாரியான இடத்தைப் பெற்றுள்ளதோ அக் கட்சியின் தலைவரே நாட்டின் தலைவரால் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பிறகு இவரது சொல்லின்படி தலைவர், மந்திரி சபையின் மற்ற மந்திரிகளைத் தேர்ந்தெடுக்கிறார். நாட்டின் தலைவரின் விருப்பப்படியே மந்திரி சபை செயலாற்றும். அப்படி எந்த மந்திரியாவது அவரது விருப்பத்திற்கு முரணாக நடந்தால் அவர்களைப் பதவியிலிருந்து விலக்கிவிடும் உரிமை நாட்டின் தலைவருக்கு உண்டு. அப்படியின்றி தலைவர் முறையற்ற முறையில் செயல்பட நினைத்தால் அது அவருக்கே ஆபத்தை ஏற்படுத்தும். நாட்டின் அரசியல் சட்டத்திற்கு முரணாக நாட்டின் தலைவர் ஏதேனும் காரியங்களில் ஈடுபட்டிருந்தால் அவரைப் பாராளுமன்றத்தினரால் தண்டித்து, பதவியிலிருந்து விலக்கி விடவும் முடியும். ஆனால் நம் நாட்டில் இதுவரை இவ்வித சந்தர்ப்பங்கள் உருவாகவில்லை.

மூன்றாவதாக நீதிக்கு மந்திரிகளின் கடமைகள் (Legal responsibility of the Minister)

நமது நாட்டு அரசியல் சாசனத்தில், நாட்டின் தலைவர் எப்பொழுதும் மந்திரி சபையின் ஆலோசனையின் பேரிலேயே செயலாற்ற வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடவில்லை. ஆனால் இங்கிலாந்து நாட்டில் ஏதேனும் ஒரு மந்திரியின் கையொப்பம் இல்லாமல் அரசியின் கையொப்பம் மட்டும் பெற்ற எந்தச் சட்டமும் மதிப்புள்ளதாகக் கருதப்படாது. ஆனால் அம் மாதிரியான நிலை நம் நாட்டின் தலைவருக்குக் கிடையாது. அரசியல் சாசனத்தின் சரத்து எண் 77-(2)ன்படி நாட்டின் தலைவர் கையெழுத்துப் பெற்ற எந்தச் சட்டத்தையும் தவறு என்று ஒதுக்கித்தள்ள முடியாது. சரத்து எண் 361-ன்படி நமது நாட்டு மந்திரி சபைக்குச் சட்ட சார்பான பொறுப்பு இங்கிலாந்து நாட்டு மந்திரி சபையைவிட குறைவாகவே உள்ளது.

மத்திய செயற்குழுவின் நிலை (Position of Union Cabinet)

மத்திய மந்திரி சபையே நாட்டின் பூரண வேலைகளையும் கவனிக்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. வெளி நாட்டு விவகாரங்களிலும் இதுவே முக்கிய பங்கேற்கிறது. இதுவே நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல் வளத்தைப் பெருக்குவதற்கான எல்லா வழிகளையும் கண்டுபிடித்துச் செயல்படுத்தவேண்டும். இதுவே எந்தெந்த வரிகளைப் போடவேண்டும், எந்தெந்த வரிகளை நீக்கவேண்டும் என்பதனைத் தீர்மானிக்கும். நாட்டின் வருமானத்தை எப்படிச் செலவு செய்து, பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்பதனையும் தீர்மானம் செய்யும். நாட்டின் வருடாந்திர வரவு, செலவு கணக்குகளைக் கவனிப்பதும், பண சம்பந்தமான மசோதா ஏதேனும் கொண்டு வருவதாக இருந்தால் அதனைச் சாதாரண பாராளுமன்ற உறுப்பினர்களால் கொண்டு வர முடியாது. மத்திய மந்திரி சபையின் மந்திரிகளில் ஒருவரே இம்மாதிரி பண சம்பந்தமான மசோதாக்களைக் கொண்டு வர முடியும். மத்திய மந்திரி சபை, பாராளுமன்றத்தைத் தன்னிச்சைக்குக் கொண்டு வந்து பணிய வைக்க முடியும். நாட்டிற்குச் சம்பந்தப்பட்ட எல்லாவிதமான முக்கிய மசோதாக்கள் அனைத்தையும் மத்திய மந்திரி சபையே கொண்டுவரும். பாராளு மன்ற தனி உறுப்பினரால், பாராளுமன்றத்திற்குக் கொண்டுவரப்படும், மசோதாக்கள் நிறைவேற வேண்டுமானல், அவைகளை மந்திரி சபை விரும்பி சார்ந்திருக்க வேண்டும். இவ்வாறு தனி உறுப்பினர்கள் கொண்டு வரும் மசோதாக்களை, மத்திய மந்திரி சபை உறுப்பினர்கள் ஏற்கா விட்டால், அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

மத்திய மந்திரி சபையில் உள்ள ஒவ்வொரு மந்திரியும் ஒவ்வொரு துறைக்குத் தலைமை வகிக்கிறார்கள். பொதுவாக நாட்டின் பரிபாலனம் முழுதும் இவர்களிடம்தான் உள்ளது மந்திரிகள் தாங்கள் கொண்டுவரும் மசோதாக்களை மட்டும் நிறைவேற்றுவதுடன் நின்று விடாமல், தங்களது கொள்கைகளைச் செயல்படுத்துவதிலும் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். சுருங்கக் கூறின் மத்திய மந்திரிசபை நாட்டின் பரிபாலனத்தின் அச்சாணியாக விளங்குகிறது. இது இன்றைய அரசியல் உலகில் சட்டமன்ற வேலையையும், செயற் குழு வேலையையும் ஒன்ருக ஏற்கிறது. நாட்டின் பலதுறை அதிகாரிகளை நியமிக்கும் பொழுதும் மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. நமது நாட்டு மந்திரி சபையும், இங்கிலாந்து நாட்டு மந்திரி சபையும், அமைப்பிலும் செயலிலும் ஒன்ருக உள்ளது. மந்திரி சபையின் அளவு சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு மாறுபடுகிறது.

நாட்டுப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர், மக்கள் சபை பெருவாரியான இடத்தைப் பெற்ற கட்சி தலைவராக இருப்பதால் இவர், தனது விருப்பு, வெறுப்புகளை மட்டும் மனதில் கொண்டு செயல்படுத்த இயலாது. தனது கட்சியின் சார்பாகவும், அனைத்து பக்கமிருந்து வரும் எதிர்ப்புகளைக் கவனித்து நடந்துகொள்ளும் சக்தியுடையவராகவும் இருக்கவேண்டும். 'ஆயினும் இவர் தன் பதவி ஆசைக்காகவும், பணத்திற்காகவும் அதிகமாக தனது கட்சிக் காரர்களின் வாக்கிற்காகக் கட்டுப்படுவாரேயானால், நாட்டில் அமைதி குறைந்து அரசாங்கம் மாறுவதற்கு ஏதுவான சந்தர்ப்பம் அளிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பொதுவாக நமது நாட்டு மத்திய மந்திரி சபையில் 15ந்து பேர்கள் உண்டு. சில சமயங்களில் அதற்கு அதிகமாகவும், அதற்குக் குறைவாகவும் இருந்ததுண்டு. பழைய அனுபவசாலிகளை ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளுக்கு மந்திரிகளாக நியமிப்பதுமுண்டு. மந்திரி சபை செயல்படும் பொழுது பத்துக்கு மேற்பட்ட நிலைக்குழுக்களாக (Standing Committees) பிரிந்து செயல்படுகிறது. நாட்டின் பொருளாதார நிலையைக் கவனிப்பதற்குப் பொருளாதார நிலைக்குழு ஒன்று இயங்கி வருகிறது. இவற்றின் மூலமாக, நாட்டின் வியாபார, வர்த்தக நிலை, அயல் நாடுகளுடன் வியாபார ஒப்பந்தம், நாட்டின் பொருளாதார நெருக்கடி இவை போன்ற எத்தனையோ காரியங்களை இந்த நிலைக்குழு கவனிக்கின்றது. இவ்வாறு பல நிலைக்குழுக்கள் தீர்மானித்த பலவகை பிரச்சினைகளை, மந்திரி சபை உறுப்பினர்கள் விவாதிக்கும்பொழுது, நிலைக்குழு உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள். பொதுவாக இந்த நிலைக்குழுக்களின் மூலமாக வரும் எல்லா மசோதாக்களும் அப்படியே நிறைவேற்றப்படும். ஒரு சில அரசியல் அறிஞர்கள் நிலைக்குழுக்கள், மத்திய மந்திரி சபையின் போட்டி என்றும் கருதுகிறார்கள். பெரும்பாலான நிலைக்குழுக்களுக்குப் பிரதம மந்திரியே தலைவராக (Chairman) இருப்பார். நிலைக்குழுக்களில் அடங்கியுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை வித்தியாசப்படும்.

மத்திய மந்திரி சபையானது வெறும் கட்சி சார்பில் நடப்பதாக மட்டும் கூறிவிட முடியாது. சிறந்த அறிவும், ஆற்றலும் உள்ளவர்களே மத்திய மந்திரி சபையில் உறுப்பினர்களாக விளங்குகிறார்கள். மேலும் அரசியல் சம்பந்தமாக நோக்கும் பொழுது கட்சி சார்புள்ள மந்திரி சபையிருப்பது போன்றும், பொருளாதார சம்பந்தமாக இருக்கும் பொழுது கட்சி சார்பற்ற மந்திரி சபை போன்றும் தோன்றுகிறது. மத்திய மந்திரி சபையை நினைத்தவுடன் நமக்குத் தோன்றுவது பிரதம மந்திரியேயாகும்.

நமது நாட்டு மத்திய சபையில் மிகவும் முக்கியமான இடத்தை வகிப்பவர் பிரதம மந்திரியேயாவர். பிரதம மந்திரியை நியமிக்கும் பொறுப்பு, நாட்டின் தலைவரையே சாரும். இருப்பினும், பொதுத் தேர்தலுக்குப் பிறகு எந்தக் கட்சி பெருவாரியான இடத்தை மக்கள் சபையில் பெற்றிருக்கிறதோ அந்தக் கட்சித் தலைவரின் விருப்பப்படியே மந்திரி சபையை அமைக்கச் சொல்வார். நாட்டின் தலைவர் யாரைப் பிரதம மந்திரியாக நியமிக்கிறாரோ அவரே மக்கள் சபையின் பெருவாரியான இடத்தைப் பெற்ற கட்சியின் தலைவராக விளங்குவார். ஆனால் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சியும் அதிக இடத்தைப் பெறாமல் இருந்தால், கட்சிகளின் தலைவர்களை அழைத்து ஆலோசனையின் பேரிலும், எந்தக் கட்சித் தலைவர் நாட்டைப் பரிபாலிப்பார் என்ற நம்பிக்கை ஏற்படுகிறதோ அவரையே பிரதம மந்திரியாக்குவார். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பிரதம மந்திரி தகுதியுள்ளவராகவும் இருக்கலாம். அல்லது தகுதியற்றவர்களாகவும் இருக்கலாம். ஆயினும் இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் நாட்டின் தலைவருக்கே பிரதம மந்திரியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பூரணமாக உள்ளது. பிரதம மந்திரியின் நியமனத்திற்குப் பிறகு, தலைவர் மற்ற மந்திரிகளைத் தேர்ந்தெடுக்க முடியாது. ஏனெனில் மந்திரி சபை பிரதம மந்திரியுடன் கூடியதேயன்றி, நாட்டின் தலைவருடன் கூடியதல்ல. அதேபோல் பிரதம மந்திரி பதவி இழக்கும் பொழுது அவருடனே மற்ற மந்திரிகளும் பதவி இழக்க நேரிடும்.

பிரதம மந்திரி தனது மந்திரி சபையில் புதிய மந்திரிகளைச் சேர்க்கவும், எடுக்கவும் உரிமையுண்டு. இவர் தனது மந்திரி சபையை நியமிக்கும் முன்பு, நாட்டின் பூகோள நிலையையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இவர் தனது மந்திரி சபைக்கு வேண்டியவர்கள் அனைவரையும் ஒரே பகுதியிலிருந்து எடுக்கக் கூடாது. இவ்வாறு மந்திரி சபைக்குத் தேர்ந்தெடுக்கும் பொழுது நாட்டின் எந்தப்பகுதியிலுள்ள மக்களும், ஆத்திரப்படும்படியாகப் பிரதம மந்திரி நடந்துக் கொள்ளக்கூடாது. இவர் நாட்டிலுள்ள பலவகை இனத்தினர், தொழிலாளிகள், வியாபாரம், விவசாயம், பொருளாதாரம் அனைத்தையும் நோக்கி அவர்கள் அனைவருக்கும், சாதகமாக நடந்துக் கொள்ள வேண்டும். அதேபோல் ஆண்கள், பெண்கள் இருவருக்கும் இடமளிக்க வேண்டும். சமுகத்தில் பின் தங்கிய இனத்தவருக்கும் இடமளிக்க வேண்டும்.

நாட்டின் பிரதமர் அனைவரிலும் உயர்ந்தவராகக் கருதப்படுகிறார். ஆனால் மந்திரி சபையில் அவர் முதன்மையானவர் அல்லர். இவர் சந்திரனென்றால், மற்ற மத்திய மந்திரி சபையின் மந்திரிகள்

அவரைச் சுற்றிவரும் நட்சத்திரங்களாகும். பிரதம மந்திரியே மந்திரி சபையின் அச்சாணியாவார். இவரே மந்திரி சபையின் தலைவராவார். மற்ற மந்திரிகளுக்கெல்லாம் தலைவர் அல்லர். ஆனால் மற்ற மந்திரிகள் பிரதமருடன் இணைந்து செயல்படும் தோழர்களாகிறார்கள். இந்த இடத்தில் நமது மந்திரிசபை அமெரிக்க நாட்டு மந்திரி சபையினின்றும் பெரிதும் மாறுபடுகிறது. அமெரிக்க நாட்டில் 'மந்திரிசபை' என்று குறிப்பிடுவது அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவரின் கீழ் வேலை பார்க்கும் முக்கிய அரசியல் துறை தலைவர்களையே ஆகும். ஆகையால் அங்கு அந்த அதிகாரிகள் அனைவரும் அமெரிக்க நாட்டுத் தலைவருக்குக் கட்டுப்பட்டே இருக்க வேண்டும். ஆனால் இந்தியாவில் அந்நிலை இல்லை. ஏனெனில் இங்குப் பிரதம மந்திரியுடன், மற்ற மந்திரிகளும் ஒற்றுமையுடன் இணைந்து செயல்பட்டால்தான் அவர்களது நிலைமை நிலையானதாக இருக்கும். அவர்களது கருத்துகளைக் கேட்டு நாட்டிற்கு ஏற்றதாக இருந்தால் செயல்படுத்த வேண்டியது பிரதம மந்திரியின் கடமையாகும். பிரதம மந்திரியே நாட்டின் தலைவருக்கும், மற்ற மந்திரிகளுக்கும் ஓர் இணைப்புப் போல் விளங்குகின்றார். மந்திரி சபையில் ஏற்படுத்தும் அல்லது உருவாகும் எல்லாவித அரசியல் கருத்துகளும் செயல்களும் நாட்டின் தலைவருக்குத் தெரியப்படுத்த வேண்டிய பொறுப்பு பிரதம மந்திரியினுடையதேயாகும்.

பாராளுமன்றத்தில் பிரதம மந்திரியே முக்கியமான பேச்சாளராக விளங்குகின்றார். உள் நாட்டு, அயல் நாட்டு விஷயங்கள் அனைத்திற்கும் இவரே முக்கியமானவராக இருக்கிறார். மந்திரி சபையிலுள்ள மற்ற மந்திரிகள் தங்கள் துறைகளில் செயலாற்றும் பொழுதும், அல்லது பாராளுமன்றத்தில் கேள்விகள் கேட்கும் பொழுதும் இக்கட்டான நிலை ஏற்படும்பொழுது தீர்த்து வைப்பதும் பிரதம மந்திரியின் கடமையாகும். பிரதம மந்திரியையே நாட்டின் தலைவராகக் (leader) கருதுவதில் தவறில்லை. இவரே நாட்டின் மற்றப் பகுதிகளுக்கு உதாரணமாக விளங்க வேண்டும். சுருங்கக் கூறின் நாட்டின் பிரதமராக வருபவர் சிறந்த அறிவும், திறமையும் பெற்றவராக இருக்கவேண்டும். இதற்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர் மறைந்த மாணிக்கம் ஜவஹர்லால் நேருவும், அவரது மகளான இன்றைய நமது பிரதமர் இந்திராவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஒப்புவமை (Comparison)

இந்தியாவின் உண்மை அல்லது பெயரளவு செயற்குழுக்களை நாம் மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நமது இந்திய


நாட்டுத் தலைவர் சாதரண காலங்களில் பெயரளவு செயற்குழுத் தலைவராகவும் அவசரக் காலங்களில் உண்மைச் செயற்குழுத் தலைவராகவும் தோற்றமளிக்கிறார். முதலில் நாம் நமது நாட்டுத் தலைவரை, ஜப்பான் நாட்டு மன்னருடனும், இங்கிலாந்து நாட்டு இராணியுடனும் ஒப்பிடுவோமாயின், இம் மூவரும் கிட்டத்தட்ட ஒரேவிதமான அதிகாரங்களைப் பெற்றவர்கள் போல் தோன்றுகிறார்கள். இவர்களில் நம் நாட்டுத் தலைவர் மட்டும் மக்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆனால் இங்கிலாந்து, ஜப்பான் நாட்டின் பெயரளவு தலைவர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் உயிருடன் இருக்கும்வரை நாட்டின் தலைவர்களாகவும், பெயரளவு செயற்குழுவினராகவும் விளங்குவர். ஆனால் இந்திய நாட்டுத் தலைவர் ஒருமுறை தேர்ந்தெடுத்தால் அவரது காலம் ஐந்து வருடங்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அதிகாரங்களை ஒப்பு நோக்கினால், இங்கிலாந்து நாட்டு இராணியை விட ஜப்பான் நாட்டு மன்னர் சிறிது அதிகாரங்கள் அதிகமாக உள்ளவராகவே தெரிகிறார். அதேபோல் இந்திய நாட்டுத் தலைவரும் இவர்கள் இருவரைவிட பலவகைகளில் அதிகாரம் பெற்றே விளங்குகின்றார். உதாரணமாக நமது நாட்டுத் தலைவருக்குப் பிரதம மந்திரியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பூரணமாக அளிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர நாட்டில் அமைதி குறைந்துள்ள பொழுதும், அயல் நாட்டினரால் நம் நாடு பாதிக்கப்பட்ட பொழுதும், நமது நாட்டில் பொருளாதார நிலை சீர்குலைந்திருக்கும் பொழுதும், நமது தலைவர் உண்மையான செயற்குழுவிற்கான அதிகாரங்களைப் பெற்று விளங்குகின்றார். இவ்வித அவசர உரிமைகள் ஜப்பான், இங்கிலாந்து நாட்டுத் தலைவர்களுக்குக் கிடையாது. ஆகையால்தான் நமது நாட்டுத் தலைவரை இங்கிலாந்து நாட்டு இராணிக்கும் அமெரிக்க நாட்டுத் தலைவருக்கும் ஒப்பிட்டுள்ளார்கள் சில அரசியல் மேதைகள்.

•

இனி நாம் நமது உண்மைச் செயற்குழுவை எடுத்துக் கொண்டு அதனுடைய நிலையை மற்ற நாடுகளுடனும் ஒப்பிடும் பொழுது, நமது நாடு முற்றிலும் இங்கிலாந்து நாட்டு அரசியலின் படைப்பையே கொண்டுள்ளது என்பது சிறிதும் ஐயமில்லை. எப்படிப் பிலிப்பைன்ஸ் நாடு பல வருடங்களாக, அமெரிக்கர்களின் ஆதிக்கத்திலிருந்து, அதன்பின் அது விடுதலையடைந்த பின், எப்படி அமெரிக்க நாட்டின் அரசியல் அமைப்பை அப்படியே ஒத்துக் கொண்டுள்ளதோ அதேபோல் இந்தியாவும், ஆங்கிலேயரிடம் இருநூறு ஆண்டுகள் அடிமைப்பட்டிருந்து, விடுதலை அடைந்ததால் நம் நாடு இங்கிலாந்து நாட்டு அடிப்படையிலேயே நமது அரசியலைக்

கொண்டிருக்கிறோம் என்பதும் சிறிதும் ஆச்சரியமில்லை. இருப்பினும் நமக்கும், இங்கிலாந்து நாட்டவருக்கும் சிறிது வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. முதலில் அவர்கள் இரு கட்சியுடையவர்கள், நம் நாட்டிலோ பல கட்சிகள் உள்ளன. அங்கு ஒரே வகைச் சட்டத்தைக் கையாண்டு வருகிறார்கள். இங்கு நாம் இரு வகைச் சட்டங்களையுடையவர்களாக இருக்கிறோம். அதாவது ஆட்சித்துறைச் சட்டம் (Administrative Law), சட்ட ஆதிக்கம் (Rule of Law) என்ற இரண்டுமாகும். ஆனால் நமது நாட்டு உண்மைச் செயற்குழுவும் இங்கிலாந்து நாட்டு உண்மைச் செயற்குழுவும், செயலிலும் ஒரே மாதிரியாக அமைந்துள்ளது.

இந்திய நாட்டின் அரசியல் அமைப்பை விளக்கும் அட்டவணை (மத்திய அரசு)
(CENTRAL GOVERNMENT OF INDIA)



7. ஆசிய நாடுகளின் மாநிலங்களின் செயற்குழுக்களும், உள்ளாட்சி முறையும்

(States and Local Executives in Asian States)

கூட்டாட்சி நாடுகளாக இந்தியா, மலேயா, இருப்பதை நாம் முன்பு கண்டோம். மத்திய அரசாங்கத்தின் பெயரளவு, உண்மையான செயற்குழுக்களைப் பற்றியும் படித்தோம். இப் பகுதியில் கூட்டாட்சி நாடுகளில், மத்திய அரசைத் தவிர மாகாணங்களில் எப்படிச் செயற்குழு இருக்கிறது என்பதைப் பற்றி ஆராய்வோம்.

1. இந்திய மாநிலங்களின் செயற்குழுக்கள் (State Executive In India)

இந்தியாவில் 1950ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அரசியல் சட்டப்படி, ஒரு ஜனநாயகக் குடியரசை ஏற்படுத்தி, கூட்டாட்சி அரசாங்கத்திற்கும் வழி செய்யப்பட்டிருக்கிறது. இங்கு, மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம் என்று இருவகையாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும், மத்திய அரசாங் கத்தின் அமைப்பைப் போலவே, பெயரளவு செயற்குழுவும், உண்மையான செயற்குழுவும், இயங்கிவருகின்றன. பெயரளவு செயற்குழுவாக ஆளுநர் (Governor) மாநிலத்தில் செயலாற்றி வருகிறார். சில சமயங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாகாணங் களுக்கு ஒரே ஆளுநர் பதவி வகிக்கலாம். மாகாணத்தின் ஆளுநர்கள் இந்திய அரசின் தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் ஐந்தாண்டுகள் பதவி வகிப் பார்கள். பதவி காலம் முடிவதற்கு முன்பாகவே ஆளுநர் விரும்பினால் அவர்கள் தங்கள் பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம். இவர்கள் இந்திய நாட்டின் குடிமகனாகவும், 35 வயது நிரம்பப் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். இந்தியாவில் பாராளு

மன்றத்தின் உறுப்பினர்களாகவோ, ஒரு சட்டசபை 'உறுப்பின ராகவோ இருந்து கொண்டு, ஆளுநர் பதவியை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆளுநர் பதவியை ஏற்றுக் கொண்டால் மற்றப் பதவிகளை விட்டுவிட வேண்டும். வருமானம் வருகின்ற வேறு எந்தத் தொழிலிலும் அவர் ஈடுபடலாகாது. பாராளுமன்றத்தால் முடிவு செய்தபடி இவர் ஊதியம் பெறுவார். பதவியிலிருக்கும்பொழுது ஆளுநர் வாங்கிக் கொண்டிருக்கும் சம்பளம், குறைக்கப்பட மாட்டாது. பதவியை ஏற்கும்பொழுது, அம் மாகாணத்தின் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியிடம் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளவேண்டும். இந்திய நாட்டுத் தலைவரின் ஆணையின்படி, மாநிலத் தலைவர் (State Governor) நடப்பார். இவருக்கும் தண்டனைகளைக் குறைக்கவும், கொடுக்கப்பட்ட தண்டனையை (ஒரு சில வழக்குகளில்) நிறுத்தி வைக்கவும் அதிகாரம் உண்டு.

உண்மையான செயற்குழுவாக மாகாணங்களில் மந்திரி சபை அமைந்திருக்கிறது. மாகாணத்தின் தலைவர் ஆளுநர் தன்னுடைய கடமைகளைச் செய்வதற்கு மாகாண அமைச்சரவை உதவி புரிந்து அறிவுரையும் கூற வேண்டியதாய் இருக்கிறது. மாகாண முதல் மந்திரி (State Chief Minister) ஆளுநரால் நியமிக்கப்படுகிறார். மற்ற மந்திரிகள், முதல் மந்திரியின் ஆலோசனையின் பேரில் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்கள். அமைச்சரவை முழுவதும், மாகாண சட்டசபைக்குப் பொறுப்புடையது. மந்திரி பதவி ஏற்பதற்கு முன்பு, ஆளுநர் பதவிப் பிரமாணத்தை நடத்தி வைப் பார். மாகாண சட்டசபையின் உறுப்பினராக இல்லாத அமைச்சர் ஆறு மாதங்களுக்குள் தேர்ந்தெடுக்கப் படாவிட்டால் அமைச்சராக இருக்க முடியாது. மாகாண சட்டசபை ஏற்படுத்தும் விதிமுறை களுக்குத் தகுந்தவாறு அமைச்சர்கள் ஊதியம் பெறுவார்கள்.

அரசியல் சட்டத்தில் ஆளுநரின் அதிகாரங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன. அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் இவருக்கு உண்டு. மாகாண அரசாங்கம் நிறைவேற்றும் செயற் குழு அதிகாரங்கள் அனைத்தும் ஆளுநரின் பெயரில் நிறைவேற்றப் படுகிறது. மாகாணத்தின் நல்லாட்சிக்காக ஆளுநர் சில விதிகளை ஏற்படுத்தலாம். மாகாணத்தில் நடந்து வரும் எல்லா நிகழ்ச்சி களையும், மந்திரி சபை செய்து வந்த முடிவுகளையும், ஆளுநருக்கு முதல் மந்திரி தெரியப்படுத்த வேண்டும். தான் விரும்பிய விஷயங்களை ஆளுநர் முதல் அமைச்சரின் மூலமாக மந்திரி சபை யினுடைய பரிசீலனைக்கு வைக்க முடியும். சட்டசபை இல்லாத போது அவசரச் சட்டம் பிறப்பிக்கலாம். சூழ்நிலை உடனடியாகச் செயல்படுத்த வேண்டியிருந்தாலும், ஆளுநர் அவசரச் சட்டத்தைப்

பிறப்பிக்கலாம். ஏதாவது ஒரு மசோதா மாகாண சட்டசபையின் வரம்பிற்கு உட்பட்டிருந்தாலும், அல்லது நாட்டின் தலைவருடைய ஒப்புதலுக்கு வைக்க வேண்டிய மசோதாவாக இருந்தாலும் அவற்றின் மீது அவசரச் சட்டங்கள் ஏற்படுத்துவதற்கு முன்பு, மாகாண ஆளுநர் தலைவரிடத்தில் ஒப்புதல் பெற வேண்டும். அவசரச் சட்டங்கள் அனைத்தும், சட்டசபையில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களைப் போலவே சக்தி வாய்ந்ததாகவும், அதிகாரம் உள்ளதாகவும் இருக்கும். அவசரச் சட்டங்கள் அனைத்தும், மாகாண சட்டசபை முன்பு ஒப்புதலுக்கு வைக்கப்படவேண்டும். சட்டசபைகள் ஆரம்பமான பின்பு ஆறு வாரங்களில் அவசரச் சட்டங்கள் முடிவு பெற்றுவிடும். ஆறு வாரங்கள் முடிவதற்கு முன்பாகவே அவசரச் சட்டங்கள் நிறுத்தப்பட வேண்டுமென்று, தீர்மானம் கொண்டு வந்தால் அவசரச் சட்டங்களை நிறுத்திவிடலாம். இவ்வாறு அவசரச் சட்டங்களைப் பிறப்பிப்பது ஜனநாயக மரபிற்கு நல்லதல்ல என்று அரசியல் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். மேலும் ஆறு வாரங்கள் அதிக காலமாகக் கருத முடியாது. சட்டசபையைக் கூட்டுவது, தள்ளிவைப்பது, கலைப்பது ஆகிய அதிகாரங்கள் அனைத்தும் ஆளுநருக்கு இருக்கிறது. மேலும், சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களைத் தலைவருக்கு அனுப்பி ஒப்புதல் பெறுவதற்கும் அதிகாரம் இருக்கிறது. மேலும் ஒவ்வொரு முறையும் சட்டசபை கூடும்பொழுது அங்கு உரை நிகழ்த்துவதற்கும் ஆளுநருக்கு அதிகாரம் இருக்கிறது. சட்ட மன்றத்தில் இயற்றப்பட்ட மசோதாக்கள் அனைத்தும் ஆளுநரின் ஒப்புதலைப் பெற வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவு கணக்குகளின் விவரங்களைச் சட்டசபையில் அரசாங்கம் சமர்ப்பிப்பதைக் கண்காணிக்க வேண்டும்.

ஆளுநரின் நிலை (Position of Governor)

இந்த அரசியல் சட்டத்தில் ஆளுநரின் உண்மையான நிலை என்ன என்பதைப்பற்றி பலவிதமான கருத்துகள் நிலவி வருகின்றன. மந்திரி சபையின் ஆலோசனையின் பேரில்தான் ஆளுநர் தங்களுடைய அதிகாரங்களைச் சட்டப்படி நிறைவேற்ற முடியும். சொந்த முறையில் அவர் எக் காரியங்களையும், எப்பொழுதும் செய்யமுடியாது. சட்டத்தின் எல்லைக்குள் அவர் தன் காரியங்களைச் செய்யும் காரியத்தினால் அவர் சட்டத்திற்கு உட்பட்ட ஆளுநர் ஆவார். மாகாணங்களுக்கு ஓர் அலங்காரப் பாத்திரமாக ஆளுநர் அமர்ந்திருக்கிறார் என்று சிலர் கருதுகிறார்கள். அப்படி இருந்த போதிலும்கூட. ஆளுநர் தன் சொந்தக் கருத்துகளை வெளிப்படையாகச் சொல்லுவதில் தவறுகள் ஒன்றும் இருக்க முடியாது.

எல்லோராலும், எப்பொழுதும் அவர் மற்றவர்களுடைய கருத்து களைத் தெரிந்துகொள்ள விரும்பியவராக இருக்கிறார். தன்னுடைய பொறுப்புகள் எதுவுமில்லாமல் தன்னுடைய வேலைகளைச் செய்வது என்ற ஒரு நிலையை நமது அரசியல் சட்ட அமைப்பில் பார்க்க முடிகிறது. கூட்டாட்சியின், மத்திய அரசாங்கத்தின் தலைவரின் பிரதிநிதியாக இவர் செயல்படுகிறார். கட்சிக் கூட்டங்கள், தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களைத் தவிர, மற்றப் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு இவருக்கும் உரிமை இருக்கிறது. உண்மை யான அதிகாரங்கள் இல்லாவிட்டாலும்கூட, அரசியல் சட்டத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு ஆளுநருக்கு உண்டு. அமைச்சரவை ஆலோசனைக் கூறுவதுபோல, ஆளுநரும் அமைச்சரவைக்கும், மக்களுக்கும் ஆலோசனைக் கூறுவதில் தவறில்லை. கட்சிகள் வேறு பாடின்றி ஆளுநர் எல்லோருக்கும் பொதுவானவராக நடந்து கொள்ளவேண்டும். அரசாங்கம் செய்த முடிவுகளை, அமைச்சர வையின் ஆலோசனையின் பேரில் நிறைவேற்றுவதற்கு முன்பாக அவைகள் சட்டத்திற்கு உட்பட்டவைகளா என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். சுருக்கமாகச் சொல்லப்போனால் ஆளுநர் பதவியும் சிறப்பும் அதன் பொறுப்புகளைத் தாங்கும் தனிப்பட்ட வர்களைப் பொறுத்திருக்கிறது. ஒரு பக்கம் பார்க்கப் போனால் அவர் மாகாண அரசாங்கத்திற்குப்பெயரளவு செயற்குழுத் தலைவராகவும், மற்றொரு பக்கம் பார்க்கப்போனால், மத்திய அரசாங்கத்தின் பிரதி நிதியாகவும் பணியாற்றுகின்றார். இது கூட்டாட்சியின் அம்சங் களில் ஒன்றாகும். ஆளுநருக்கு ஏதாவது ஐயப்பாடுகள் வருமே யானால் அப்படிப்பட்ட விவகாரங்களை, மத்திய அரசாங்கத்தின் ஆலோசனையின் பெயரில் செயலாற்றலாம். கட்சிக் கண்ணோட்ட மில்லாமல், சட்டத்தின் வரையறைக்கு உட்பட்டு ஆளுநர் செயலாற்றினால் அது நன்மையாகும். அவசரநிலை ஏற்படும் காலத்தில் ஆளுநருக்கு அதிக அதிகாரங்கள் உள்ளன. அப்பொழுது அவர் உண்மையான செயற்குழுவின் தலைவராக மாறிவிடுவார். ஒரு மாகாணத்தில் அரசாங்கத்திலுள்ள இரு உறுப்புகளான உண்மையான செயற்குழு, சட்டமன்றம் இவற்றுள் வேறுபாடுகள் ஏற்படுமேயானால் அதனைத் தீர்ப்பதற்கு ஆளுநர் உதவி புரியலாம். இல்லாவிட்டால் மாகாண நீதிமன்றம் சட்டத்தின்படி தீர்ப்புக் கூறலாம். சாதாரணமாக நடைபெற வேண்டிய அரசாங்கம், மாகாணத்தில் செயலாற்ற முடியாதுபோய்விட்டால் அப்பொழுது உண்மையான அதிகாரம் ஆளுநருக்குக் கிடைக்கிறது. நமது அரசியல் சட்டத்தில் “ மக்கள் நல நாடு ” என்ற கொள்கையைக் குறிக்கோளாக வைத்திருக்கிறோம். இந்தக் குறிக்கோள் நிறை வேற்றுவதற்காகப் பல நிறுவனங்கள் சேவை செய்கின்றன. அப்படிப் பட்ட வேலைகளைக் கவனிக்க ஆளுநர் மிகவும் அக்கறை எடுத்துக்

கொண்டுள்ளார். ஆகவே ஆளுநர்கள் தங்களுடைய கடமைகளைச் சரியாக 'நிறைவேற்றுவார்களேயானால், நல்ல தொண்டினை மக்களுக்குச் செய்யமுடியும்.

மாநிலங்களின் உண்மையான செயற்குழு (Real Executives in Federal states in India.)

இந்தியா ஒரு கூட்டாட்சி நாடாக இருக்கும் காரணத்தினால் மாகாணங்களில் மந்திரிசபை உண்மையான செயற்குழுவாக இயங்கிவருகிறது. இம் மந்திரிசபை முதல் மந்திரியைத் தலைவராகக் கொண்டு இயங்கிவருகிறது. மாகாண சட்டசபையில் பெரும் பான்மையான இடங்களைப் பெற்ற கட்சியே மந்திரிசபையை அமைக்கிறது. முதல் மந்திரியையும், மற்ற மந்திரிகளையும் நியமிக்கும் பொறுப்பு ஆளுநருடையதாகும். அதைப்போலவே மந்திரிகள் தங்கள் பதவியை இராஜினமா செய்யும்பொழுதும் ஆளுநர் ஏற்றுக்கொண்ட பின்பு சட்ட பூர்வமாக அவர்கள் மந்திரி பதவியிலிருந்து விடுபடுவார்கள். அமைச்சரவையில் செய்யப்படும் முடிவுகள் அனைத்தையும் முதலமைச்சர் ஆளுநருக்குத் தெரியப்படுத்த வேண்டும். மாகாணங்களில் முதல் மந்திரியின் நிலை, மத்திய அரசாங்கத்தில் பிரதம மந்திரியின் நிலையைப் போலவே இருக்கிறது. முதலமைச்சர் பெரும்பான்மையான வாக்குகளைப்பெற்ற கட்சியின் தலைவராவார். இவர் ஆளுநரால் நியமிக்கப்படும் காரணத்தினால் முதல் மந்திரியாக இருந்து அரசாங்கத்தை நடத்துவார். மந்திரி சபையில் மற்ற மந்திரிகளைக் கலந்து ஆலோசித்துப் பிரச்சினைகளுக்கு முடிவுகள் எடுக்கப்படவேண்டும். முதல் மந்திரியினுடைய வெற்றி யானது, அவர் தனக்குள்ள செல்வாக்கை மந்திரி சபையில் பயன் படுத்திக் கொள்ளும் விதத்தைப் பொறுத்ததாகும். மாகாணத் தினுடைய கீழ்ச்சபையின் தலைவராக முதல் மந்திரி இருப்பார். அச் சபையின் நம்பிக்கையைப் பெறும் காலம்வரை முதன் மந்திரியாகச் செயலாற்றுவார். அரசாங்கத்தின் கொள்கையை வகுப்பது, சட்ட மன்றத்தில் மசோதாக்களைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடு களைச் செய்வது இவருடைய பொறுப்பாகும். சட்டசபையில் கேள்வி கேட்கப்படும்பொழுது அதற்குரிய பதிலை அதற்கு ஏற்பப் பல மந்திரி கள் பதில் சொன்ன போதிலும்கூட, முதல் அமைச்சரும் பதில் சொல்வதற்குக் கலந்து கொள்கிறார். எல்லாத் துறைகளும், பல மந்திரிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட பொது வாக அவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பும், அவர்கள் அனை வரையும் ஒன்றாகச் செயல்படக் கூடிய நிலையை உண்டாக்குவதும், முதல் அமைச்சரின் பொறுப்பும்கடமையுமாகும். அமைச்சரவையில் வேறுபாடன கருத்துகள் தோன்றினால் முதல் அமைச்சருடைய

இந்தியாவில் மாநில அரசுகளின் அமைப்பை விளக்கும் அட்டவணை

(STATE GOVERNMENT IN INDIA)

1

மாநில சட்டமன்றம்
(State Legislative Body)

மாநில சட்டமன்றம்
(State Legislative)

- மேல் சட்டசபை
  (Legislative Council)
- கீழ்ச் சட்டசபை (அல்லது) மாநில மக்கள்சபை
  (Lower House)
  (Legislative Assembly)

2

—மாநில செயற்குழு
(State Executive)

- ஆளுநர் (Governor)
  மாநில செயற்குழுத் தலைவர் (பெயரளவு)
  (State Nominal Executive)
- மாநில மந்திரிசபை (State Ministry)
  மாநில உண்மையான செயற்குழு
  (State Real Executive)

3

மாநில நீதித்துறை
(State Judiciary)

உயர் நீதிமன்றம்
(High Courts)

முடிவை அமைச்சரவை ஏற்றுக்கொள்ள வேண்டும். மாகாண அரசாங்கத்தின் சார்பில், அவர் சொல்லக்கூடிய அனைத்தும் அரசாங்கத்தின் சார்பில் சொல்லப்பட்ட பொறுப்பான பேச்சு களாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும். பலவிதமான பதவி களுக்கு, தனது மாகாணத்தில் அதிகாரிகளை நியமிக்கும் வாய்ப்பும் அதிகமாக உண்டு. ஆகவேதான் மாகாணத்தின் உண்மையான செயற்குழு மந்திரி சபையென்று கருதப்படுகிறது.

2. மலாசிய நாட்டு மாநிலங்களின் செயற்குழுக்கள் (Malaysian State Executives)

மலாசியாவில் உள்ள பதின் மூன்று மாநிலங்களிலும், அவை களுக்கென தனி அரசியல் சட்டங்களும் உள்ளன. 1963-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அரசியல் சட்டத்தின்படி இரு பிரிவுகள் உள்ளன. ஒன்று கூட்டாட்சியைப் பற்றியது. மற்றொன்று மாநிலங்களின் அரசியல் சட்ட அமைப்புகளைப்பற்றியது. கூட்டாட்சி அரசியல் அமைப்பிற்கும், மாநிலங்களின் அரசியல் அமைப்பிற்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. இருந்தபோதிலும் பாராளுமன்ற ஜன நாயகம் நல்ல முறையில் இயங்கிவருவதற்காக எல்லா மாநிலங் களும் தங்கள் அரசியல் சட்டங்களை 1963-ன் ஒப்பந்தத்தின்படி திருத்தி அமைத்திருக்கின்றன. இதன்படி மாநிலங்கள் அதிகப் படியான அளவிற்குச் சுய ஆட்சி உரிமைகளைப் பெற்றிருக்கின்றன.

மாநில பெயரளவு செயற்குழு (State Nominal Executive)

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் (Governor) பெயரளவு செயற்குழுவாக இருக்கின்றார். இவர் மாநில செயற்குழு சபை (State Executive Council)யின் ஆலோசனையின் பெயரில் செய லாற்றுகிறார். இச் சபை மந்திரி சபையைப்போல சட்டசபைக்குக் கூட்டுப் பொறுப்புடன் இயங்கிவருகிறது. மாகாணங்களின் ஆளுநர் கள் மன்னரால் நியமிக்கப்படுகிறார்கள்.

மாநிலங்களின் உண்மையான செயற்குழுக்கள் (States Rea Executives)

மலாசிய நாட்டின் மாநிலங்களில், உண்மையான செயற் குழுவாக 'மாநிலங்களின் செயற்குழு சபைகள்' இயங்கி வருகிறது. இக் குழுக்களின் தலைவர்களாக மாநிலங்களின் முதன் மந்திரிகள் இருக்கிறார்கள். இவர்கள் கூட்டாட்சி அரசாங்கத்தின் பிரதம மந்திரி எவ்வாறு நியமிக்கப்படுகிறாரோ, அதிகாரங்களை உடைய வராக இருக்கிறாரோ, அதைப்போலவே, மாநில முதன் மந்திரியும் அதிகாரங்கள் உடையவராக இருக்கிறார்.

இந்திய மாநில செயற்குழுக்களுடன், மலாயா நாட்டு மாநில செயற் குழுக்களை ஒப்புநோக்குதல் (Comparison between India and Malaysia States Executives)

இந்த இரண்டு நாடுகளின் மாநிலங்களின் செயற்குழுக்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, பல ஒற்றுமைகளும், சில வேற்றுமை களும் உள்ளன. முதலாவதாக இரண்டு நாடுகளும் பல மாநிலங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இரண்டாவதாக இரண்டு நாடு களிலும் மத்திய அரசு என்று ஒன்று உள்ளது. மத்திய அரசுகளின் செயற்குழுக்களில் இரண்டு பிரிவுகள் உள்ளன. அவைகள் பெயரளவு செயற்குழுக்கள் என்றும், உண்மையான செயற்குழுக் கள் என்றும் கூறப்படுகிறது. பெயரளவு செயற்குழுவை இந்தி யாவில், 'நாட்டுத் தலைவர்' என்றும் (President of India), மலாயா நாட்டுப் பெயரளவு தலைவரை 'மன்னர்' (Emperor) என்றும் கூறு கிறோம். இந்திய நாட்டுத் தலைவரைத் தேர்வுக்குழுவின் (Electoral College) மூலம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கிறார் கள். மலாசிய நாட்டு மன்னர் ஆட்சியாளருடைய சபையால் (Confederation of Rulers) நியமிக்கப்படுகிறார். இவர்களின் பெயரிலேயே இந் நாடுகளின் சட்டங்களும் பரிபாலனமும் நடக் கிறது. இவர்கள் இருவரும் நாட்டின் தலைவர்களாகவும், ஒற்று மையின் சின்னமாகவும், மக்களின் பிரதிநிதித் தலைவர்களாகவும் விளங்குகிறார்கள்.

அடுத்து இந்த இரு நாடுகளின் உண்மையான செயற்குழுக்களை எடுத்துக் கொள்வோமாயின், இரு நாடுகளிலும் பாராளுமன்றம் கொண்ட மந்திரி சபைகள் உள்ளன. இவைகளே நாட்டின் உண்மையான பரிபாலனத்தை நடத்திவருகிறது. இரு நாடுகளிலும் மக்களாட்சியே மேற்கொள்ளப்படுகிறது.

இனி இவ்விரண்டு நாடுகளின் மாநில அரசுகளை எடுத்துக் கொள்வோமாயின், ஒவ்வொரு மாநிலமும் தனித்தனி அரசுகளைப் பெற்றுள்ளது. இங்குப் பெயரளவு செயற்குழுக்களாக மாநில ஆளுநர் (State Governor) என்ற பெயருடனும், உண்மையான செயற்குழுவாக மாநில முதன் மந்திரி, அவருடன் கூடிய மந்திரி சபை (State Chief Minister and other Ministers) என்ற பெயருடன் மாநில ஆட்சியை நடத்தி வருகிறார்கள். இந்திய நாட்டு மாநிலங்களின் அரசியல் அமைப்பு, செயற்குழுவின் அமைப்பு அனைத்தும் மத்திய அரசின் நிலையிலிருந்து சிறிதும் மாறுபட்டில்லை. மேலும் பெரும்பாலான அதிகாரங்கள் மத்திய அரசிடமேயுள்ளது.

மலாசிய நாட்டு மாநிலங்களின் அமைப்பை விளக்கும் அட்டவணை

சட்டமன்றம் (State Legislative)

1

மாநில செயற்குழு
(Elected State Legislative Assembly)

மாநில செயற்குழு
(State Executive Body)

2

Nominal Executive
A hereditary Ruler (or) A appointed Governor. (மலாய நாட்டில் 9 மாநிலங்களில் மன்னர் பரம்பரையினரும் மற்ற 4 மாநிலங்களில் மலாய நாட்டு மன்னரால், மாநில முதன் மந்திரியின் ஆலோசனையின் பேரில் நியமிக்கப்படும் ஆளுநர்) (இது மாநிலத்தின் பெயரளவு செயற்குழு)

மாநில உண்மையான செயற்குழு
(Executive Council) இதில் மாநில முதன் மந்திரியும், மற்ற மந்திரிகளும் உள்ளனர்.

(நீதித்துறை) (State Judiciary)

3

மாநில நீதிமன்றம்
(State Court)

* "மலாசிய நாட்டு மாநிலங்கள் ஒவ்வொன்றின் அரசும் அந்தந்த மாநிலங்களின் அரசியல் அமைப்பை ஒத்திருக்கும். ஆகையால் இந்திய நாட்டு மாநிலங்களின் அரசியல் அமைப்பினின்றும் வேறுபடுகிறது. ஏனெனில் இந்திய நாட்டில் ஒரே ஓர் அரசியல் சட்டமே உள்ளது."

ஆனால் மலாயா நாட்டு மாநிலங்கள் அதிக அதிகாரம் உடையதாக உள்ளன. மலாய நாட்டுக் கூட்டாட்சி முறை, அமெரிக்க நாட்டை அப்படியே மேற்கொண்டுள்ளது.

3. ஜப்பான் நாட்டு உள்ளாட்சி முறை (Local Administration in Japan)

இனி நாம் மற்ற ஆசிய நாடுகளான ஜப்பான், பிலிப்பைன்ஸ், சைனா இவைகளை எடுத்துக் கொண்டோமானால், இங்கு மாநிலங்கள் கிடையாது. ஒரே ஓர் அரசாங்கத்தின்கீழ் நாட்டின் எல்லாப் பகுதிகளும் ஒற்றையாட்சி முறையில் நடைபெறுகின்றது. இந் நாடுகளில் பரிபாலனம் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதனை இனி தனித் தனியாக நோக்குவோம்.

ஜப்பான் நாட்டு உள்ளாட்சி முறை (Local Administration in Japan)

ஜப்பான் நாட்டைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் சுயநிருவாகம் (Autonomy) அளிக்கப்பட்டுள்ளது. அங்கு நடத்தும் நிருவாகத்தின் அதிகாரிகள் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஜப்பான் நாட்டுப் புதிய அரசியல் சட்டத்தின்படி உள்ளாட்சி (Locol Administration) அதிகாரிகள் நேரிடை ஓட்டு முறைப்படி தேர்ந்தெடுத்து அதன் பிறகு ஜப்பான் நாட்டுப் பாராளுமன்றமான 'டயட்டிடம்' ஒப்புதல் பெற்று அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். பிறகு 1947-ம் வருடம் ஏற்படுத்தப்பட்ட உள்ளாட்சி சுயநிருவாகச் சட்டத்தின்படி (Local Autonomy Law) மத்திய அரசு, உள்ளாட்சி நிருவாகத்தின் மேல் செலுத்திவந்த அதிகாரம் குறைக்கப்பட்டது. படிப்படியாக உள்ளாட்சி நிருவாகம் வலுப்பெற்றுவிட்டபோதிலும், மத்திய அரசின் அதிகாரமும், உள்ளாட்சி மீது செய்யப்பட்டுவரும் மேற்பார்வையும், சிறிதும் மாறுபட்டதாகத் தெரியவில்லை. உள்ளாட்சி நிருவாகத்தின் முதல் அதிகாரியாக ஆளுநர் இருக்கிறார். அனைத்து உள்ளாட்சித் துறையின் ஆளுநர்களும், மற்ற உயர் அதிகாரிகளும் ஜப்பான் நாட்டுத் தலை நகரான டோக்கியோவில் அடிக்கடி ஒன்று சேர்ந்து, ஆலோசனை நடத்தி, மத்திய அரசிடமிருந்து பணமும், மற்ற உரிமைகளும் பெற்றுப் பரிபாலனம் நடத்தி வருகிறார்கள். ஜப்பான் நாட்டு உள்ளாட்சி அதிகாரிகள் அந் நாட்டின் மத்திய அரசு செயற்குழுவிற்குப் பல வகையிலும் பொறுப்புள்ளவர்கள் ஆகின்றார்கள். இந் நாட்டின் உள்ளாட்சிமுறை அப்படியே இங்கிலாந்து நாட்டை ஒட்டியுள்ளது.

4. பிலிப்பைன்ஸ் நாட்டு உள்ளாட்சி முறை (Local Administration in Phillippines)

பிலிப்பைன்ஸ் நாடு ஒற்றையாட்சி முறையைக் கொண்ட நாடு என்பதனை முன்பே கண்டோம். இங்கு மத்திய அரசு மிகவும் பலம் கொண்டது. இங்கு மாநிலங்கள் என்றும், மாநில அரசு என்றும் இல்லையாதலால், உள்ளாட்சியின் மூலம் நாட்டின் எல்லாப் பகுதிகளையும் செவ்வனே பரிபாலிக்கிறார்கள். பிலிப்பைன்ஸ் நாட்டை நாற்பத்தி நான்கு மாகாணங்களாகப் பிரித்திருக்கிறார்கள். 1955 முதல் இம் மாகாணங்களின் தலைவர்களாகப் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர் உள்ளனர். இவர்களே மாகாணங்களின் உயர்ந்த செயற்குழுத் தலைவர்களாகிறார்கள். ஒரு மாகாணத்தின் ஆளுநர் நான்கு அல்லது ஐந்து மாகாணங்களின் வாரியங்களில் (Provincial Board) உறுப்பினராக இருக்கலாம். ஆனால் இந்த மாநில ஆளுநர்களுக்கு நாட்டுப் பரிபாலன செயல்களில் அதிகாரம் கிடையாது. மாநிலங்களின் பல துறைகளின் உயர் அதிகாரிகள், மாநில ஆளுநர்களுக்கு எந்த விதத்திலும் பொறுப்புள்ளவர்களாக இல்லை. பலதுறைகளின் உயர் அதிகாரிகள் அனைவரும் மத்திய அரசுக்கே கட்டுப்பட்டவர்களாகிறார்கள். மாநில ஆளுநர்கள் பெயரளவு வரவு செலவு திட்டம் (N›minal Budget) என்ற ஒன்றை ஒவ்வொரு ஆண்டும் தயார் செய்கிறார்கள், ஆனால் அதனை நிர்ணயிக்கும் பொறுப்பும், மற்றபடி உள்ளாட்சிக்கு வேண்டிய சட்டங்களை இயற்றும் பொறுப்பும், வரிகள் வசூலிக்கும் பொறுப்பும் மத்திய அரசுக்கே உள்ளது. மாநிலத்தின் பரிபாலனத்தை நடத்தும் அதிகாரங்கள் மாநில ஆளுநரிடம் இல்லாவிட்டாலும், இவர் பிலிப்பைன்ஸ் நாட்டு அரசியலில் மிகவும் முக்கிய இடத்தை வகிக்கிறார். இவர்களும் கட்சி சார்பிலே தேர்ந்தெடுக்கப்படுவதால் மாநில ஆளுநர்கள், நாட்டுத் தலைவருடனும், மற்ற அரசியல் தலைவர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாகிறார்கள். இந்த மாநில ஆளுநர்கள், நகராட்சி அதிகாரிகளை (Municipal Officers) தற்காலிகமாகப் பதவியிலிருந்து தடைவிதிக்க அதிகாரமிருக்கிறது.

மாநிலங்களுக்குக் கீழ் பல நகராட்சிகள் (Municipality) உள்ளன. இதனுடைய தலைவர்களாக மாநகர் முதல்வர்களும் (Mayors), அவர்களுக்கு உதவியாக ஒரு குழுவும் உள்ளது. இவர்கள் நான்கு வருடத்திற்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். குழுவின் உறுப்பினர்கள் மாவட்டங்களின் (Districts) தலைவர்களாக உள்ளார்கள். இவர்கள் மாநில ஆளுநர்களைவிட

பிலிப்பைன்ஸ் நாட்டு உள்ளாட்சியை விளக்கும் அட்டவணை

பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர்
(President of Phillippines)

(Office of the President)
தலைவரின் அலுவலகம்

குடிமுறை பணியாளர் தேர்வு ஆணைக்குழு அலுவலகம்.	வரவு செலவு திட்ட ஆணைக்குழுவும், ஆணையாளரும்.	குறைகளை நீக்கி செயல்படுத்தும் ஆணைக்குழுவும், ஆணையாளரும்.	செயற்குழு அலுவலகம், செயற்குழு செயலாளர்.	தனியார் அலுவலகம்	பத்திரிகையாளருடன் தொடர்பு கொள்ளும் அலுவலகமும், செயலாளரும்.	உள்ளாட்சி நிருவாகத்தைக் கண்காணிக்கும் அலுவலகமும், முதல்வரும்.	நாட்டு மக்களின் பொது நலனைக் கவனிக்கும் அலுவலகம்

↑

44 மாகாணங்களின் ஆளுநர்கள்.
மாகாணத்தின் முதல் செயற்குழுத் தலைவர்.

↑

நகராட்சி—முதல் செயலாளர் மாநகர் முதல்வர் மற்றும் சட்டங்களைச் செயலாக்குபவர்.

↑

மாவட்டங்கள்—நகராட்சி குழுவிலுள்ள உறுப்பினர்கள் ஒவ்வொரு மாவட்டத்தின் தலைவர்களாக இருக்கிறார்கள்.

↑

கிராமம்—உள்ளாட்சி உதவித் தலைவர்.

* இந்த உள்ளாட்சி செயற்குழுத் தலைவர்கள் மாகாண ஆளுநர், மற்ற அனைவரும் அந்தந்த இடத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் அனைவரும் மத்திய அரசு தலைவரின் ஆணைப்படியே செயல்புரியவேண்டும்

சிறிது அதிக அதிகாரம் பெற்று விளங்குகிறார்கள். இந்த மாவட்ட அதிகாரிகளின் கீழ் ஒன்று அல்லது இரண்டு கிராமங்கள் இருக்கும். ஒவ்வொரு கிராமமும் தனித்தனி கிராம அரசைக் கொண்டிருக்கிறது. பிலிப்பைன்ஸ் நாட்டு உள்ளாட்சி முறை படிப்படியாகப் பிரித்தும், தனித்தனி அதிகாரிகளைக் கொண்டும் நடந்து வந்தாலும் இவை அனைத்தின் பரிபாலனங்களும் மத்திய அரசின் ஆணையின்படியே நடக்கிறது.

பிலிப்பைன்ஸ் நாட்டு மத்திய அரசின் அமைப்பு, நாட்டுத் தலைவரின் அதிகாரம் இவையனைத்தும் அமெரிக்க நாட்டின் குடியரசு தலைவரை அப்படியே ஒத்திருக்கிறது. பிலிப்பைன்ஸ் நாட்டு ஆட்சி முறை ஒற்றையாட்சி முறையில் அமைந்துள்ளது. ஆனால் அமெரிக்க நாட்டு அரசு கூட்டாட்சி முறையில் அமைந்துள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டு மாநிலங்கள், அமெரிக்க நாட்டு மாநிலங்களைப்போல் அல்ல. அமெரிக்க நாட்டு மாநிலங்கள் தனித்தனி அரசியல் அமைப்புகள் கொண்டதாயும், தனித்தனி அரசுகள் கொண்டதாயும், அதிக அதிகாரங்கள் பெற்றதாயும் உள்ளன. ஆனால் பிலிப்பைன்ஸ் நாட்டு மாநிலங்கள் உள்ளாட்சி முறைக்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு மாநில அதிகாரிக்குத் தனி அதிகாரமோ அரசாங்கமோ கிடையாது. மாநிலங்களின் அனைத்துச் செயல்களையும், மத்திய அரசின் அனுமதியை மாநில ஆளுநர் பெற்ற பின்பே செயல்படுத்த முடியும். பிலிப்பைன்ஸ் நாட்டு உள்ளாட்சித்துறை செயற்குழுவினர் எல்லா வகையிலும் மத்திய அரசு செயற்குழுவிற்குக் கட்டுப்பட்டே விளங்குகிறார்கள். சுருங்கக் கூறின் பிலிப்பைன்ஸ் நாட்டு மத்திய அரசு, அமெரிக்காவையும், உள்ளாட்சி நடக்கும் முறை இங்கிலாந்து நாட்டையும் கொண்டுள்ளது.

5. சீன நாட்டின் உள்ளாட்சி முறை
(Local Administration in China)

சீன நாடும் ஒற்றையாட்சி முறையைக் கொண்டது. சீன நாடு ஒரே ஓர் அரசை மட்டும் கொண்டது. சீன நாட்டுப் பரிபாலனம் செவ்வனே நடத்த, நாட்டைப் பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அந்தப் பிரிவுகளை மாகாணங்கள் என்றும் (Provinces) தன்னாட்சிப் பகுதிகள் (Autonomous Regions) என்றும் நகராட்சிகள் (Municipalities) என்றும் பிரித்திருக்கிறார்கள். மேலும் மாகாணங்களும், தன்னாட்சிப் பகுதிகளும், பல தன்னாட்சிச் சூ (Autonomous Chou) என்றும், கௌன்டிகள் (Counties) என்றும், நகராட்சிகள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கௌன்டிகளும், நகராட்சிகளும் மறுபடியும் பல நகரங்களாக (Towns) பிரிக்கப்பட்டுள்


ளன. பெரிய நகராட்சிகள் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நகராட்சிகள் அனைத்தும் மத்திய அரசின் மேற்பார்வையிலும், கட்டளையின் பேரிலும் செயலாற்றுகின்றன. தன்னாட்சிப் பகுதிகள், தன்னாட்சிச் சூ, தன்னாட்சிக் கௌன்டிகள் (Autonomous Counties) இவைகள் 'மக்கள் தன்னாட்சிப் பகுதிகள்' (National Autonomous Areas) என்று கூறப்படுகின்றன.

மக்கள் காங்கிரஸ் (The People Congress), மற்றும் மக்கள் மன்றம் (People's Councils) என்ற இரண்டு மாநிலங்களிலும், நகராட்சியிலும், நகராட்சி மாவட்டங்களிலும் (Municipal Districts), நகரங்களிலும் பரிபாலன குழுக்களாக அமைந்து, அவைகள் சீன நாட்டு மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் பரிபாலனத்தை நடத்தி வருகிறது. இங்குள்ள துணைத் தலைவர்கள், அந்தந்தப் பகுதியில் உள்ள மக்கள் காங்கிரஸால் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இத் தலைவர்களின் பதவி காலம் நான்கு ஆண்டுகளாகும். இவர்களே அந்தந்தப் பகுதிகளின் செயற்குழுத் தலைவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

உள்ளாட்சி மக்கள் காங்கிரஸே, அப் பகுதியின் பரிபாலனத்தையும், பொருளாதாரம் மற்றும் பல துறைகளின் அபிவிருத்தி திட்டங்களையும், வருடாந்திர வரவு செலவு அட்டவணையையும் இயற்றுகிறது. உள்ளாட்சி மக்கள் காங்கிரஸிற்கு உள்ள அதிகாரங்கள் அந்தந்தப் பகுதிக்கு மட்டுமே உரியது. ஒவ்வொரு பகுதியின் துணைத் தலைவர்களும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் படியே செயலாற்றவேண்டும்.

உள்ளாட்சி மக்கள் மன்றமே உள்ளாட்சி பரிபாலனத்தின் செயற்குழு என்றும் கூறுகிறார்கள். இதில் உள்ள அங்கத்தினர்கள் உள்ளாட்சி மக்கள் காங்கிரஸ் ஏற்படுத்தும் எல்லாத் திட்டங்களையும் மேற்கொண்டு செயல்படுத்தவேண்டும். சீன நாட்டு உள்ளாட்சிப் பரிபாலனம் சுதந்திரமுள்ளதாகப் பார்வைக்குத் தோன்றினாலும், உண்மையில் மத்திய அரசின் சட்டத்தின்படியே பரிபாலனம் நடக்கிறது. சீன நாடு ஆறு பெரிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆறு பிரிவுகளும், கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரிகளின்கீழ் உள்ளது. சீன நாட்டுச் சிறுபகுதியின் அன்றாட அரசியல் காரியங்களும், சீன நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் கட்டளைப்படியே நடக்கிறது. இந்தக் கட்சியில் பல கோடிக் கணக்கான ஆண்களும், பெண்களும் ஒன்று சேர்ந்து நாட்டின் பரிபாலனத்தைச் செவ்வனே நடத்திவருகிறார்கள். ஆனால் அனைவரின் அரசாங்கச் செயல்களும் சீன நாட்டுக் குடியரசுத் தலைவரும்

சீன நாட்டின் மத்திய, உள்ளாட்சியினை விளக்கும் அட்டவணை



கட்சித் தலைவருமான மாசேதுங்கின் கட்டளைப்படியே இயங்கி வருகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஒப்புவமை (Comparison)

பொதுவாக இந்த ஐந்து ஆசிய நாடுகளான ஜப்பான், சீனு, மலாசியா, பிலிப்பைன்ஸ், இந்தியா இவைகளின் மாநில அரசுகளின் செயற்குழுக்களின் அமைப்பையும், அதிகாரங்களையும், உள்ளாட்சி அதிகாரிகள், அவர்களின் அதிகாரங்கள் அனைத்தையும் நோக்கினேம். இந்தியா, மலாசியா இவை இரண்டைத் தவிர, மற்ற மூன்று நாடுகளும் ஒற்றையாட்சி முறையை மேற்கொண்டு விளங்குகிறது. இவற்றில் ஜப்பான், பிலிப்பைன்ஸ் நாடுகளின் உள்ளாட்சி முறைகள் இங்கிலாந்து நாட்டை ஒத்துள்ளது. ஆனுல் சீன நாட்டு உள்ளாட்சி முறை கட்சியின் அடிப்படையிலேயே பரிபாலிக்கப்படுவதை நாம் அறிந்தோம். பொதுவாகச் சீன நாட்டு மத்திய செயற்குழுவும், மற்றும் உள்ளாட்சி பரிபாலனமும் உலகிலுள்ள எந்த நாட்டுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும்படியாக அமையவில்லை. உலகில் பெரிய கம்யூனிஸ்ட்டு நாடுகளான சீனு, ருஷ்யா இவை இரண்டையும் ஒப்பிட்டு நோக்குவோமாகில், ஒரே கட்சியின் அடிப்படையில் பரிபாலனம் செய்யும் இவ்விரண்டு நாடுகளின் செயற்குழு, மற்றும் அரசியல் அமைப்புகள் பலவற்றிலும் மாறுபட்டு இருப்பதை நாம் பார்க்கலாம்.

6. சீன நாட்டு அரசியல் அமைப்புடன், ருஷ்ய நாட்டின் அரசியல் அமைப்பை ஒப்பிடுதல் (Comparison Between The Government of China And Russia)

• சீன நாட்டு அரசியல் சட்டம் 1954-ல் உருவாக்கப்பட்டது. ருஷ்ய நாட்டு அரசியல் சட்டம் 1936-ல் உருவாக்கப்பட்டது. இருப்பின் இவ்விரு நாடுகளின் அரசியல் அமைப்பில் பல ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் உள்ளன. முதலில் இவ்விரு நாடுகளின் ஒற்றுமைகளை நோக்குவோம். இரண்டு நாடுகளும் கம்யூனிஸ்ட்டு கட்சியின் கொள்கைகளை முழுமையாக மேற்கொண்டுள்ளது. இரு நாடுகளும் மக்களாட்சி என்னும் முறையிலேயே சட்டமன்றங்களைக் கொண்டுள்ளது. இவ்விரு நாடுகளின் பல்வேறு பிரிவுகளும் கம்யூனிஸ்ட்டு கட்சித் தலைவர்களின் கட்டளையை அப்படியே மேற்கொண்டு அரசினை நடத்தி வருகிறது. ருஷ்ய நாட்டுப் 'பிரிசீடியம்', (Presidium) போலவே சீன நாட்டு நிலையான குழு (Standing

Committee) நாட்டிற்காக ஏற்படுத்தும் சட்டங்களை மேற்கொண்டு செயலாற்றுகிறது. ருஷ்ய நாட்டுச் செயற்குழுவான பிரிசீடியம் உண்மையான அதிகாரம் பெற்றுள்ளது. இதனுடைய தலைவர், நாட்டுப் பல் துறை மந்திரிகளைத் தேர்ந்தெடுத்துப் பிறகு ருஷ்ய நாட்டுச் சட்ட மன்றத்து அங்கீகாரம் பெற்று, மந்திரிகளைப் பதவியில் நியமிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறார். இந்த மாதிரியான அதிகாரம் சீன நாட்டுச் செயற்குழுவான நிலை குழுவிற்கு இல்லை. சீன நாட்டுத் தேசிய மக்கள் காங்கிரஸ் செயலாற்றாத காலங்களில், நிலைக்குழுவே நாட்டுக் காரியங்களைச் செய்ய முடியும். இந்த மாதிரியான அதிகாரம் ருஷ்ய நாட்டுப் பிரிசீடியத்திற்கு இல்லை. இரண்டு நாடுகளின் அரசும் தொழிலாளிகளின் நலனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இரு நாடுகளின் அரசியல் சட்டத்தின்படி மக்கள் எவரும் தனி உரிமை சொத்துகளை வைத்துக் கொள்ள முடியாது.

இனி ருஷ்ய, சீன நாடுகளின் அரசியலில் உள்ள வேற்றுமைகளைக் காண்போம். ருஷ்ய நாட்டுத் தலைவருடன், சீன நாட்டுத் தலைவரை ஒப்பிட்டுப் பார்ப்போமானால், சீன நாட்டுத் தலைவர் தனியான அரசியல் அதிகாரம் பெற்றிருப்பதுபோல், ருஷ்ய நாட்டுத் தலைவர் பெற்றிருக்கவில்லை. ருஷ்ய நாட்டுப் பிரிசீடியத்தின் தலைவர், நாட்டுத் தலைவர் என்று பொதுவாகக் குறிப்பிடப்படுகிறார். மேலும் ருஷ்ய நாட்டுப் பிரிசீடியத்தில் முப்பத்திரண்டு தலைவர்கள் உள்ளனர். ஆகையால் இதனைக் கூட்டுத் தலைவர்கள் கொண்ட நாடு என்றும் கூறலாம். ஆனால் சீன நாட்டு அரசியல் சட்டத்தின்படி, சீனக் குடியரசு தலைவர் தனி அதிகாரம் பெற்றுள்ளார். இவருக்குள்ள அதிகாரங்களும், செயல்களும் அந் நாட்டுத் தேசிய மக்கள் காங்கிரசிற்குத் தெரியவேண்டும் என்று அவசியமில்லை. மேலும் இவரே நாட்டின் பாதுகாப்பிற்கும், படைக்கும் தலைவராகிறார். சீன நாட்டின் மற்ற அரசாங்க உறுப்புகளான நிலைக்குழு, தேசிய மக்கள் காங்கிரஸ், மற்றும் பலவும் தலைவரின் எண்ணப்படியே கலந்தாலோசித்துச் செயலாற்ற வேண்டும். சீன நாட்டில் துணைத்தலைவர் என்ற பதவி ருஷ்ய நாட்டின் செயற்குழுவில் இருப்பதாகத் தெரியவில்லை.

இவற்றைத் தவிர ருஷ்ய நாடு இரு சபையுள்ள சட்ட மன்றத்தை உடையதாக இருக்கிறது. ஆனால் சீன நாட்டில் ஒரே ஒரு சபையுள்ள சட்டமன்றமே உள்ளது. ருஷ்ய நாடு கூட்டாட்சி முறையையும், சீன நாடு ஒற்றையாட்சி முறையையும், மேற்கொண்டுள்ளது. இத்தனை வேற்றுமைகளைக் கொண்டுள்ள இவ்விரு


கம்யூனிஸ்ட்டு நாடுகளிலும், அரசாங்க உறுப்புகளான பொதுத் தேர்தல், செயற்குழு, சட்டமன்றம், நீதித்துறை அனைத்தும் உலக மக்களின் கண்களுக்கு மக்களாட்சியைக் கொண்டுள்ள மற்ற நாடுகளின் அரசாங்கம் போல் தோற்றமளித்தாலும் உண்மையில் இந்த இரு நாடுகளும் கம்யூனிஸ்ட்டு கட்சித் தலைவர்களின் அடிமைகளாக இயங்குகின்றன என்பதில் ஐயமில்லை.

---

8. ஆசிய நாட்டுச் செயற்குழுக்களுடன் மேலை நாட்டுச் செயற்குழுக்களை ஒப்பு நோக்குதல்

(Comparison Between Asian And Western Executives)

இப் புத்தகத்தின் பகுதி இரண்டில் ஆசிய நாட்டில் முக்கியமாக விளங்கும் ஐந்து நாடுகளின் செயற்குழுக்களைப் பற்றி ஆராய்ந்தோம், ஜப்பான், சீனு, பிலிப்பைன்ஸ், மலாசியா மற்றும் இந்தியா இந்த ஐந்து நாடுகளின் அரசியல் அமைப்பை நாம் ஆராயும்பொழுது இவைகள் அனைத்தும் மேலை நாடுகளில் உள்ளது போலவே இருப்பதை நாம் காண்கின்ருேம். மேலை நாடுகளின் நினைவு வரும் பொழுது முதலில் நமக்கு நினைவு வருவது இங்கிலாந்து நாடேயாகும். இங்கிலாந்து நாடு மற்ற எல்லா நாட்டு அரசியல் அமைப்பிற்கும் தாயாக விளங்குகின்றது. அடுத்துச் சிறந்து விளங்குவது அமெரிக்கா, பிரான்சு, ஸ்விட்ஜர்லாந்து போன்ற நாடுகளாகும். மேலை நாடுகளின் அரசியல் அமைப்பை நோக்கும் பொழுது பொதுவாக நாம் அதை இரண்டு வகைகளாகப் பிரிக்க முடியும். ஒன்று பாராளுமன்றத்தின் உதவியுடன் தோன்றி பிரதம மந்திரியைத் தலைவராகக் கொண்டுள்ள மந்திரி சபையுள்ள செயற்குழுவைக் கொண்டது எனவும். அடுத்துத் 'தலைவர்' முறை செயற்குழுவை உள்ளது எனவும் இரண்டு வகையாகும். இந்த இரண்டாவது வகையை நாம் இன்னும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க முடியும். அதாவது ஒரு தலைவரைக் கொண்டுள்ள செயற்குழு என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட தலைவர்களைக் கொண்டுள்ள செயற்குழு என்றும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். இவற்றில் முதல் வகைக்கு அமெரிக்காவையும், இரண்டாவது வகைக்கு ஸ்விட்ஜர்லாந்து நாட்டையும் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.


செயற்குழுக்கள் (Executives)
பெயரளவு செயற்குழு (Nominal Executive)
உண்மைச் செயற்குழு (Real Executive)
மந்திரி சபையுள்ள செயற்குழு (Cabinet form of Executive)
தலைவருள்ள செயற்குழு (Presidential form of Executive)
ஒருவரைத் தலைவராகக் கொண்ட செயற்குழு (Single Presidential Form)
ஒன்றுக்கு மேற்பட்ட தலைவர்களைக் கொண்ட செயற்குழு (Collegiate Presidential Form)

பெயரளவு செயற்குழுவிற்கும், உண்மைச் செயற்குழுவிற்கும் உள்ள வித்தியாசங்களை இப் புத்தகத்தின் முதல் பிரிவில் நாம் தெளிவாகக் கண்டுள்ளோம். இங்கு நாம் பாராளுமன்ற செயற்குழு என்றால் என்ன? தலைவரையுடைய செயற்குழு என்றால் என்ன? என்பதனை முதலில் நோக்குவோம். அதன் பின் மேலை நாடுகளுக்கும் நாம் ஆராய்ந்த ஆசிய நாடுகளின் செயற்குழுக்களுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை நன்கு ஆராய்வோம்.

முதலில் நாம் பாராளுமன்ற செயற்குழு (Parliamentary Executive) என்பதன் பொருளை நோக்குவோம். பாராளுமன்ற செயற்குழு, சட்டமன்றத்தின் பொறுப்பிலுள்ளது. உண்மையான செயற்குழுவான 'மந்திரி சபை' ஒரு பொறுப்பு வாய்ந்த செயற்குழுவாகும். ஜே. டபில்யூ. கார்னர் (J. W. Carner) என்பவர், "பிரதம மந்திரியைத் தலைமையாகக் கொண்டு மந்திரிசபை அமைத்துள்ள செயற்குழு, முதலில் சட்டமன்றத்திற்குப் பொறுப்புள்ளதாகவும், மேலும் மக்களுக்கும் அடுத்து, நாட்டின் பெயரளவு செயற்குழுத் தலைவருக்கும் பொறுப்புடன் பதில் கூறும் நிலையில் உள்ளது" என்றும் குறிப்பிட்டுள்ளார். இம் முறையில் அமைந்துள்ள செயற்குழு, சட்டமன்றத்தின் அங்கீகாரத்துடன் இருக்கும் வரை தங்களுடைய பதவியில் இருக்க முடியும். இல்லையானால் சட்டமன்றம், செயற்குழுவிற்கு விரோதமாக நடந்துக் கொண்டு, செயற்குழுவின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருமேயாகில், மந்திரி சபை தனது பதவியை இழக்க நேரிடும். இவ்வாறு மந்திரி சபை தங்களது பதவியை இழந்துவிட்டால் பெயரளவு செயற்குழுத் தலைவரால் பாராளுமன்றமும் கலைக்கப் பட்டு, புது வாக்குப் பதிவு நாட்டில் நடைபெறும்.

இங்கிலாந்து நாட்டின் அரசியல் சட்டத்தைப் பற்றி குறிப்பிடுகையில் சி. எப். ஸ்ட்ராங் (C. F. Strong) கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார். "மக்கள் சபையாகிய" பாராளுமன்றத்தில் உண்மையான செயற்குழுவாகிய அமைச்சரவை ஒரு குழுவாக அமைகிறது. இப்போக்கு ஜனநாயகத்தின் முன்னேற்றத்தை ஒட்டி இருக்கிறது. மேலும் உண்மையான செயற்குழுவாகிய அமைச்சரவைப் பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையாகிய பொதுமக்கள் சபையின் ஒரு குழுவாகவும் அமைகிறது. வரலாற்றின் அடிப்படையில் வந்த பாராளுமன்றத்தின் செல்வாக்குச் செயற்குழுவோடு சேர்ந்து விட்டது. இப் போக்கிற்குக் காரணம் அரசியல் கட்சி வளர்ச்சி என்பது தெரிய வருகிறது. இவ்வாறு பாராளுமன்ற செயற்குழு அடங்கிய நாடுகளில் உண்மையான செயற்குழு என்று ஒன்றும்,

பெயரளவு செயற்குழு என்று ஒன்றும் இருக்கிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக மேலை நாடுகளில் இங்கிலாந்து நாட்டையும், ஆசிய நாடுகளில் ஜப்பான், இந்தியா, மலாசியா நாடுகளையும் கூறலாம். இங்கிலாந்து நாட்டு இராணியும், ஜப்பான் நாட்டு மன்னரும், மலாசியா நாட்டு மன்னரும் இந்திய நாட்டுத் தலைவரும் பெயரளவு செயற்குழுத் தலைவர்களாக உள்ளனர்.

இங்கிலாந்து நாட்டு இராணியும், ஜப்பான் நாட்டு மன்னரும் பரம்பரை, பரம்பரையாக அரச குடும்பங்களிலிருந்து வருகிறார்கள். ஒரு மன்னனோ அல்லது இராணியோ இறந்துவிட்டால் அவர்களது மூத்தக் குழந்தையே பிறகு நாட்டின் தலைவராக விளங்கவேண்டும். ஒருமுறை நாட்டின் பெயரளவு தலைவராக நியமித்த பின்பு அவர்கள் உயிருடன் இருக்கும்வரை நாட்டின் பெயரளவு செயற்குழுவாக இருக்க முடியும். இந் நிலையில் மலாசிய நாடு மன்னரைக் கொண்டிருந்த போதும் சிறிது வேறுபடுகிறது. மற்ற நாடுகளில் உள்ள விதிகளைப் போல ஓர் அரசன் இருந்தால் அவனது மூத்தக் குழந்தை பட்டத்திற்கு வரவேண்டும் என்ற அவசியம் மலாயா நாட்டில் கிடையாது. அரசரைத் தேர்ந்தெடுக்கும் ஆட்சியாளர்கள் சபை என்று ஒன்று மலாயா நாட்டில் உள்ளது. அதன் முடிவின் படி மன்னரைத் தேர்ந்தெடுக்க முடியும். ஆனால் இந்திய நாட்டுத் தலைவரோ முற்றிலும் மாறுபட்டுத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவரை இந்திய நாட்டுக் குடிமக்களின் பிரதிநிதிகள் அடங்கிய தனிப்பட்ட தேர்தல் கூட்டம் (Electoral College) ஒன்றின் மூலமாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கிறோம். ஐந்து ஆண்டுகள் பதவி முடிந்தவுடன் மறுமுறை இவரையே இப் பதவிக்குத் தேர்ந்தெடுக்க முடியும். பதவிக் காலம் முடியும் முன்பு இவர் தனது அலுவலகத்திலிருந்து விலகவும் இவருக்கு உரிமையுண்டு. இவர் தனது அரசியல் காரியங்களைச் செயல்படுத்தும்பொழுது, நாட்டின் முக்கிய உண்மையான செயற்குழுக்கான மந்திரி சபையின் நோக்கை ஒட்டியே செயலாற்ற வேண்டும். அப்படி அவர் உண்மை செயற்குழுவிற்கு முரணாக செயல்படுவாரேயானால் இவருடைய பதவிக்கு ஆபத்து வரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மேலும் இந்திய நாட்டு அரசியல் சட்டத்திற்கு முரணாக இந்திய நாட்டுத் தலைவர் நடப்பாரேயானால் அவரைச் சட்டப்படி பதவியிலிருந்து விலக்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. இங்கு இங்கிலாந்து நாட்டின் இராணியின் நிலை மிகுந்த வேறுபாடுள்ளதாகத் தெரிகிறது. ஏனெனில் அங்கு இராணிக்கு எந்தவிதமான அரசியல் உரிமையும் 1688-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்ற சட்டத்தின்படி பறிக்கப்பட்டு

விட்டதால் அவர்களைச் சட்டத்தின்படி தண்டிக்கவோ, விவாதிக்கவோ முடியாது. ஆகையால்தான் இங்கிலாந்து நாட்டு இராணி சட்டத்திற்கு மேம்பட்டவர் என்று கூறப்படுகிறார். ஜப்பான் நாட்டு மன்னரும், மலாசிய நாட்டு மன்னரும் இதே நிலையில்தான் உள்ளனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அடுத்து இந்திய நாட்டுத் தலைவருக்கும் மற்ற நாட்டுப் பெயரளவு செயற்குழுத் தலைவர்களுக்கும் மிக முக்கியமான வித்தியாசம் ஒன்றுள்ளது. அதன்படி இந்தியக் குடியரசு தலைவர், அவசரக் காலங்களில் உண்மையான அதிகாரத்தைப் பெறுகிறார். அவசரக் காலங்களை மூன்றாகப் பிரித்துள்ளது. முதலில் அந்நியர் படையெடுப்பால் நாட்டின் பரிபாலனம் பாதிக்கப்படும் பொழுதும், மேலும் உள் நாட்டில் எப் பகுதியிலாவது நிலையான அரசாங்கம் இல்லாத பொழுதும், அல்லது அமைதி குறைந்திருக்கும் பொழுதும், நாட்டின் பொருளாதார நிலை சீர்குலைந்திருக்கும் பொழுதும், இந்திய நாட்டுத் தலைவர் உண்மையான செயற் குழுவாகப் பணியாற்ற முடியும். ஆகையால்தான் இந்திய நாட்டுத் தலைவர் சாதாரண காலங்களில் இங்கிலாந்து நாட்டு இராணிக்கும், அவசரக் காலங்களில் அமெரிக்க நாட்டுத் தலைவருக்கும் ஒப்பானவராகக் கருதப்படுகிறார். இங்கிலாந்து நாட்டு இராணியுடன், ஜப்பான், மலாசிய நாட்டு மன்னர்களை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இவர்கள் இரண்டு பேரும்கூட முன்னவரைவிட சிறிது அதிகாரம் பெற்றவர்களாகவே இருக்கிறார்கள். அதிகாரமும் அற்ற இந்தப் பதவி இங்கிலாந்து நாட்டு மன்னர் பரம்பரைக்கு ஏன் என்று ஒரு கேள்வி எழலாம். விக்டோரியா இராணி இங்கிலாந்து நாட்டின் தலைவியாக விளங்கும் பொழுது, உண்மையான செயற்குழுவான மந்திரி சபையுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தார். மந்திரிகள் நாட்டின் பரிபாலனத்தைச் செம்மையாக நடத்தும்பொழுது, அவர்களைப் பாராட்டவும், ஊக்குவிக்கவும் செய்தார். அதே போல் அவர்களிடம் குறைகள் காணும்பொழுது அதைத் தவிர்க்கும்படியும் ஆலோசனைக் கூறினார். இதைத் தவிர இங்கிலாந்து நாட்டு மக்கள், அந் நாட்டு அரச குடும்பத்திற்கு இன்னும் ஓர் உயர்ந்த இடத்தையே அளிக்கின்றனர். நாட்டின் ஒற்றுமை, அமைதி, வளர்ச்சி, நாகரிகம் இவை அனைத்திற்கும் நாட்டு மக்கள் அரச குடும்பத்துத் தலைவர்களையே பார்த்து மேற்கோளாகக் கொள்ளுகின்றனர். மேலும் மற்றப் பாராளுமன்ற மந்திரிசபையுள்ள நாடுகளை நோக்கும்பொழுது, ஒவ்வொரு நாட்டிலும், பெயரளவு செயற்குழுவென்று ஒன்று இருப்பதை நாம் காண்கின்றோம். அப்படியே இங்கிலாந்து நாட்டிலும், அரச குடும்பத்தை

அரசியலில் இருந்து முழுமையாக விலக்கிவிட்டாலும், அவர்களுக்குப் பதிலாக மற்றொருவரை அந்த இடத்தில் போட வேண்டும். அதற்குப் பதிலாக இங்கிலாந்து நாட்டு மக்கள் மன்னர் குடும்பத்தையே வைத்திருக்கின்றார்கள்.

இதுவரை நாம் மேலை, கீழை நாடுகளில் உள்ள பெயரளவு செயற்குழுக்களை ஒப்பிட்டுப் பார்த்த நாம், இனிப் பாராளுமன்ற செயற்குழுக்கள் அமைந்துள்ள நாடுகளை எடுத்துக் கொண்டு ஆராய்வோம். நாம் முன்பே கண்டபடி, பாராளுமன்ற செயற்குழுவே இங்கிலாந்து, இந்தியா, மலாசியா, ஜப்பான் நாடுகளில் உண்மையான செயற்குழுவாக விளங்குகின்றது. இந்த நாடுகளைப்பற்றி ஆய்வதற்கு முன்பு நாம் பாராளுமன்ற செயற்குழுக்களின் பொதுவான குணங்கள் என்னென்ன என்பதனை முதலில் ஆராய்வோம். முதலாக இம் முறையைக் கையாளும் ஒவ்வொரு நாட்டிலும், ஒரு பெயரளவு செயற்குழுவும் உண்மையான செயற்குழுவும் உண்டு. இரண்டாவதாக நாட்டின் உண்மையான அதிகாரங்கள் பிரதம மந்திரியைத் தலைவராகக் கொண்ட மந்திரி சபைக்கே உண்டு. இந்த உண்மையான செயற்குழுவிற்கு அளவிற்கு அதிகமான அதிகாரங்கள் உண்டு. நாட்டின் பரிபாலன சம்பந்தப்பட்ட பொதுநலம், பொருளாதாரம், அரசியல் மற்றும் அனைத்துத் துறைகளையும், பாராளுமன்ற உறுப்பினர்களின் துணையுடனும், மற்ற நிலையான செயற்குழுக்களின் அல்லது அலுவலகச் செயற்குழுக்களின் துணையுடனும் (Permanent Executives or Official Executives) நடத்திச் செல்ல வேண்டும். மூன்றாவதாக நாட்டிற்காகக் கொண்டுவரும் எந்த மசோதாவும் (Bill) பெயரளவு செயற்குழுத் தலைவரின் கையொப்பம் பெற்ற பின்புதான் அது சட்டமாக (Law) மாறும். நான்காவதாக நாட்டின் பெயரளவு செயற்குழுத் தலைவர், இந்த உண்மையான செயற்குழுவின் எண்ணத்தின்படியும், கோரிக்கையின்படியுமே செயலாற்றவேண்டும்.

அடுத்து இந்த உண்மையான பாராளுமன்ற செயற்குழு எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதை நோக்குவோம். பொதுத் தேர்தலுக்குப் பிறகு பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையான மக்கள் சபையில் எந்த ஒரு கட்சி பெரும்பான்மையான இடத்தைப் பெறுகிறதோ அந்த ஒரு கட்சியின் தலைவரே நாட்டின் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், தேர்ந்தெடுக்கப்பட்டு ஆறு மாதங்களுக்குள், பாராளுமன்றத்தின் உறுப்பினராக இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் பதவியை இழக்க நேரிடும். அடுத்து உண்மையான செயற்குழுவும், சட்டமன்றமும் ஒன்றுக்கொன்று இணைந்து செயலாற்றுகிறது. உண்மை யென்னவென்றால்

செயற்குழுவின் உறுப்பினர்களை நாட்டின் பாராளுமன்றமாகிய கீழ்ச் சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதேயாகும். ஆனால் தலைவரை உண்மையான செயற்குழுவாகக் கொண்டு விளங்கும் நாடுகளில், செயற்குழு, சட்டமன்றம், நீதித்துறை இம் மூன்றும், தனித்தனியாகச் செயலாற்றுகிறது. உதாரணமாக நாம் இங்கிலாந்து, இந்தியா, மற்றும் ஜப்பான், மலாசியா போன்ற நாடுகளை எடுத்துக்கொண்டோமானால் இந் நாடுகளில் பிரதம மந்திரிகளும், அவர்களது மற்ற மந்திரிசபை மந்திரிகளும், அந்தந்த நாட்டுப் பாராளுமன்றத்திலிருந்து, அதுவும் கீழ்ச் சபை உறுப்பினர்களிடம் எக் கட்சிப் பெரும்பான்மையான இடத்தைப் பெற்றுள்ளதோ அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகையால் இவ்வாறு அமையப்பெற்ற குழுக்கள், செயற்குழுக்களின் உறுப்பினர்களாகவும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள். இவ்வாறு அமையப் பெற்ற செயற்குழுக்களில் உள்ள ஒவ்வொரு செயற்குழுவினரும், அவரவர்களது துறை (Department) களுக்குத் தனித்தனியாகப் பொறுப்பு ஏற்பதுடன், கூட்டாகவும் பொறுப்பு ஏற்கவேண்டியுள்ளது. பாராளுமன்றத்தில் எடுத்து ஆராயப்படும் எந்த ஒரு மசோதாவும் அல்லது பிரச்சினைக்கும் மந்திரி சபையில் அடங்கியுள்ள மந்திரிகள் பொறுப்பாகவும், தனித்தனியாகவும், கூட்டாகவும் பதில் கூறி விளக்கும் பொறுப்பைப் பெற்றவராகிறார்கள். அவ்வாறு பதில் கூறும் எந்த ஒரு மந்திரியின் பதில் பாராளுமன்றத்தின் அங்கத்தினர்களுக்குத் திருப்தியாக இல்லையோ, அப்பொழுது பிரதம மந்திரி அதனை விளக்கவேண்டும். அப்படிக் கொடுக்கப்படும் பிரதம மந்திரியின் விளக்கமும் சரிப்படாவிட்டால் பாராளுமன்றம், மந்திரிசபையின் மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வரவும் வாய்ப்பிருக்கிறது. சுருங்கக் கூறின் மந்திரிசபை செயற்குழுவிற்கும், சட்டமன்றத்திற்கும் ஓர் இணைப்பைப்போல் நின்று செயலாற்றி வருகிறது. மேலும் சட்டமன்றத்தில் பல குழுக்கள் இருக்கின்றன. ஆனால் எல்லாக் குழுக்களிலும், மந்திரிசபைக் குழுவே உயர்ந்த இடத்தை வகிக்கிறது.

அடுத்து உண்மைச் செயற்குழுவான மந்திரி சபைக்கு, பிரதம மந்திரியே தலைமை வகிக்கிறார். இன்று பெரும்பாலும் நாட்டின் பிரதம மந்திரிகளுக்கு அளவிற்கு அதிகமான அதிகாரங்கள் உள்ளன. ஜனநாயக நாட்டின் பிரதம மந்திரியே நாட்டின் பாராளுமன்றத்தின் தலைவராகவும், கட்சியின் தலைவராகவும், மந்திரி சபையின் தலைவராகவும், நாட்டின் மக்களுக்கும் பெயரளவு தலைவருக்கும் ஓர் இணைப்பாகவும் விளங்குகின்றார். ஆனால்

அவர் தனது மந்திரிசபை உறுப்பினர்களின் தலைவராகக் கருதப் படுவதில்லை. பிரதமர் இவர்களுடன் தோழமையுடனும், சரி சமானமாகவும் இணைந்து நின்று நாட்டின் பரிபாலனத்தை நடத்தி வருகிறார். சுருக்கமாக மார்லே (Morley) என்பவர் பிரதம மந்திரியின் நிலையை விளக்குகிறார். இவரது கருத்துப்படி பிரதம மந்திரி சூரியனாவும். மற்ற மந்திரிகள் மற்ற கிரகங்களாகவும் இருந்து இயங்கி வருகிறது என்கிறார்.

நாட்டின் பொதுத் தேர்தலுக்குப் பிறகு எக் கட்சிப் பெருவாரி யான இடத்தை மக்கள் சபையில் பெற்றிருக்கிறதோ, அக் கட்சியின் தலைவரை அழைத்து நாட்டின் பிரதமராக ஆக்குகிறார் நாட்டின் தலைவர். அதற்குப் பிறகு மந்திரிசபைக்கு வேண்டியவர் களைத் தேர்ந்தெடுக்கும் முழுப் பொறுப்பு இவரிடமே விடப்படு கிறது. இவர் தனது விருப்பப்படியோ அல்லது கட்சி ஒற்றுமைக் காகவோ, மந்திரிகளைத் தேர்ந்தெடுக்காமல் ஒவ்வொரு துறை யிலும் சிறந்து விளங்கும் உறுப்பினர்களையே மந்திரியாக நிய மிப்பார். இந்த முறையையே இங்கிலாந்து, இந்தியா, ஜப்பான், மலாசிய நாடுகள் பின்பற்றி வருகின்றன.

இவ்வாறு நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்டு அவர் நாட்டிற்காகச் செய்துவரும் ஒவ்வொரு காரியங்களையும் அந் நாட்டு மக்கள் மட்டுமன்றி உலக நாடுகளும் கண்காணித்து வரு கிறது. உதாரணமாக நாம் நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தியை எடுத்துக் கொள்வோமானால் அவர்கள் பங்களாதேஷ் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக அவர் மேற்கொண்ட அயல் நாட்டுப் பயணம், அவர்கள் இந்தியாவின் நடுநிலைமைக் கொள் கைகளைப் பற்றி பன்னாட்டவருக்கும் புரியும்படி எடுத்துக் கூறுவது, தமது நாட்டுச் சமூக, பொருளாதார நிலை உயர அவர்கள் மற்ற நாடுகளுடன் கொள்ளும் தொடர்பு இவைகள் அனைத்தும் நம் நாட்டுடன் நண்பர்களாக இருப்பவர்கள் மட்டுமல்லாமல் மற்ற நாட்டவரும் கண்காணித்து வருகின்றனர். இன்றைய பிரதம மந்திரிகளின் நிலைமை, முற்காலத்தில் இருந்த சர்வாதிகாரிகளின் அதிகாரிகளின் அதிகாரத்தைவிட அதிகமாக இருக்கிறது.

அரசியலில் ஒற்றுமை (Political Homogenity) என்பது அடுத்த ஒரு சிறந்த அம்சமாகப் பாராளுமன்ற செயற்குழுவிற்கு உள்ளது. அதாவது மந்திரிசபையில் அடங்கியுள்ள அத்தனை மந்திரிகளும் ஒரே கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கவேண்டும். இம் மாதிரி அமைக்கப்பட்ட செயற்குழு ஒரே கட்சியைச் சார்ந்ததாக இருந்தால்தான் நன்றாகச் செயல்படும். மந்திரி

சபைக்குள் ஒற்றுமை இருக்கும். அப்படியில்லாமல் மந்திரிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் செய்யும் பரிபாலனம் செம்மையாக இருக்காது. நமது நாட்டை எடுத்துக் கொண்டோமானால் இம் மாதிரியான நிலை 1950 முதல் 1967 வரை இருந்து வந்தது. அதாவது எல்லா மந்திரிகளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருந்தார்கள். ஆனல் 1969-ல் காங்கிரஸ் கட்சிக்குள் பிரிவு ஏற்பட்டு இரண்டாகப் பிரிந்த பின்பு ஆளும் கட்சியில் பிரதமரின் நிலைமை கடுமையாகவே இருந்தது. ஆனல் அந் நிலை மாற்றப் பட்டு, 1971-ன்று பொதுத் தேர்தலுக்குப் பிறகு இந்திரா காங்கிரஸின் நிலை மிகவும் உறுதியாக்கப்பட்டு விட்டது. அவ்வாறு எந்தக் கட்சியும் பெருவாரியான இடத்தைப் பெறவில்லையென்றால் கூட்டுக் கட்சி ஆட்சி ஏற்படும். இதற்குப் பிரெஞ்சு நாட்டைச் சிறந்த உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இந்தியாவிலும், பிரெஞ்சு நாட்டிலும் பல்வேறு கட்சிகள் அரசியலில் உள்ளன. இந்தியாவில் இதுவரை ஒரே கட்சியைச் சேர்ந்த மத்திய மந்திரி சபையில் பரிபாலனத்தில் இடர்கள் எதுவும் ஏற்படவில்லை. ஆனல் பிரெஞ்சு நாட்டில் அடிக்கடி மந்திரிசபை மாறிக்கொண்டே இருக்கும். அதற்குக் காரணம் செயற்குழுவில் உள்ளவர்கள் அனைவரும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்பதே. இங்கிலாந்து நாட்டில் இரண்டு கட்சிகளே இருப்பதினல் அங்கு ஆளும் கட்சியும் மற்றும் எதிர்க் கட்சி இவை இரண்டுமே வலுவுள்ளதாகவும் ஒன்றுக்கொன்று போட்டியாகவும் இருப்பதினல் இங்கிலாந்தின் அரசியலில் அதிக தவறுகள் ஏற்படுவதற்கு வழியில்லை. இந்திய நாட்டில் ஆளும் கட்சி மட்டுமே உறுதி வாய்ந்ததாக இருக்கிறது. எதிர்க் கட்சிகள் பல இருப்பதாலும், அவர்களுக்குள் ஒற்றுமை இல்லாததாலும் ஆளும் கட்சியில் ஏற்படும் குறைபாடுகள் தென்பட்டாலும் சரியாகக் கண்டிக்க முடியாத நிலையில் இந்திய நாட்டு எதிர்க்கட்சிகள் உள்ளன.

பாராளு மன்றத்தின் மூலம் உருவாக்கப்பட்ட செயற்குழு அனைத்தும், சட்டமன்றத்தைச் சேர்ந்தே இருக்கவேண்டும். நாட்டின் பரிபாலனம், பொருளாதார நிலை இவை இரண்டிற்கும் சட்டமன்றத்தின் விருப்பப்படியே நாட்டின் செயற்குழு செயல்படவேண்டும்.

மேற்கூறிய விளக்கங்களைப் பொதுவாக ஆராய்வோமாயின் செயற்குழுவைச் சேர்ந்தவர் அனைவரும் ஒரே கட்சியைச் சேர்ந்திருக்க வேண்டும். சட்டமன்றத்தின் நம்பிக்கைப்பெற்றுச் செயலாற்றவேண்டும். எதிர்க் கட்சிகள் கூறும் குற்றங்களையும், குறை

பாடுகளையும் செயற்குழுவினர் பொறுமையாகக் கேட்டு அவர்களது கேள்விகளுக்குப் பொறுப்பாகப் பதில் கூறவேண்டும். இவ்வாறு அமையப்படும் செயற்குழுவிற்குச் சிறந்த வலுவான எதிர்க்கட்சி ஒன்று வேண்டும். இவையனைத்தையும் விட பெயரளவு செயற்குழுவாக ஒருவர் இருக்க வேண்டும் என்று நமக்குப் புரிகிறது. நாம் ஆசிய நாட்டுச் செயற்குழுக்களையும், மேலை நாட்டுச் செயற்குழுக்களையும் ஒப்பிட்டு நோக்கும் பொழுது ஒவ்வொரு நாட்டிலும், செயற்குழுக்களின் பெயர்கள், காலங்கள் இவற்றினைத் தவிர மற்றபடி அதிகாரங்கள், அமைப்புகள் அனைத்தும் பெரும்பாலும் ஒத்திருப்பதை நாம் நன்கு உணரமுடிகிறது. இதனைக் கீழ்க்கண்ட அட்டவணையின் மூலம் நன்கு புரிந்துக் கொள்ள முடியும்.

ஆசிய நாடுகளின் செயற்குழுக்களும், மேலை நாட்டுச்

எண்.	நாடுகளின் பெயர்	அரசாங்க அமைப்பு	செயற் குழுவின் அமைப்பு	பெயரளவு செயற்குழு	உண்மைச் செயற்குழு	பெயரளவு செயற்குழுவைத் தேர்ந்தெடுக்கும் அல்லது நியமிக்கும் முறை காலம் முதலியன
1	2	3	4	5	6	7
1	இங்கிலாந்து (England)	ஒற்றையாட்சி (Unitary)	பாராளுமன்றமுடையது (Parliamentary)	அரசி (Queen of England)	மந்திரி சபை (Cabinet)	இங்கிலாந்து நாட்டு மன்னர் பரம்பரையிலிருந்து வழி வழியாக மூத்த மகனோ அல்லது மகளோ, மன்னர் அல்லது இராணி இறந்த பிறகு பதவிக்கு வருகிறார்கள். ஒரு முறை பதவி ஏற்றவர்கள் அவர்கள் இறக்கும் வரை பதவியில் இருக்கலாம்.
2	அமெரிக்கா (America)	கூட்டாட்சி (Federal)	பாராளுமன்றத்திற்குப் பொறுப்பற்றது (Non-Parliamentary)	அமெரிக்க நாட்டுத் தலைவர் (The President of America) இவர் பெயரளவு உண்மைச் செயற்குழுவாக விளங்குகிறார்,)		

செயற்குழுக்களும் (அட்டவணை விளக்கம்)

உண்மையான செயற்குழுவை நியமிக்கும் முறை காலம் முதலியன	பெயரளவு செயற்குழுவின் அதிகாரங்கள்	உண்மையான செயற்குழுவின் அதிகாரங்கள்	குறிப்புகள்
8	9	10	11
பாராளும் மன்றத்தின் கீழ்ச் சபையான மக்கள் சபையில் எக் கட்சி பெரும்பான்மையான இடத்தைப் பெற்றிருக்கிறதோ அக் கட்சியின் தலைவர் நாட்டின் பிரதமராகவும் அவரின் விருப்பத்தின்படி இராணி மற்ற மந்திரிகள் ஐந்து வருடத்திற்குத் தேர்ந்தெடுக்கிறார்கள்.	செயற்குழு, சட்டமன்ற, நீதித் துறை, மதச் சடங்குகள் மற்றும் நாட்டின் அனைத்துக்காரியங்களும் இராணியின் பெயரிலேயே நடக்கிறது. இவர் சுதந்திரமாக எந்த அரசாங்கக் காரியமும் செய்ய முடியாது.	செயற்குழு அதிகாரமான உயர்ந்த அதிகாரிகளை நியமிப்பது, நீக்குவது, சட்ட மன்ற அதிகாரங்களான சட்டங்களைக் கொண்டு வருதல், மாற்றுதல், மக்கள் அனைவருக்கும் உரிமைகளைக் காத்தல், நாட்டின் அமைதியைக் காத்தல், மற்றும் எல்லாவித அரசாங்க வேலைகளும் உண்மையாகச் செயல்படுத்துவது இங்கிலாந்து நாட்டு மந்திரி சபையாகும்.	இங்கிலாந்து நாடு உலகில் உள்ள மற்ற எல்லா நாட்டு அரசிற்கும், தாயாகவும், வழி காட்டியாகவும் அமைந்துள்ளது.
அமெரிக்க நாட்டுத் தலைவர், சிறப்புத் தேர்வு குழு (Electoral College) வின் மூலம் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர் நான்கு ஆண்டுகள் பதவியில் இருப்பார். இவரும் கட்சியின் அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார்.	—	இவர் செயற்குழு, சட்ட மன்ற, நீதித் துறை அதிகாரங்களுடன், மற்றும் அயல் நாட்டு விவகாரங்களிலும், மற்றும் நாட்டின் நன்மையைக் கருதி மேற்கொள்ளும் அனைத்துக் காரியங்களிலும், பூரண அதிகாரம் பெற்று விளங்குகிறார். இவரது கொள்கைகள் சட்ட மன்ற உறுப்பினர்களான செனேட்டார் ஏற்காவிட்டால், தலைவர் நாட்டு மக்களின் அங்கீகாரம் பெற்று எதையும் செயல்படுத்த முடியும்.	அமெரிக்க நாட்டுத் தலைவர் அந்த நாட்டுப் பாராளுமன்றமான காங்கிரசிற்குக் கட்டுப்பட்டவர் அல்ல. இவரது அதிகாரம் பழைய காலத்து மன்னர்களைவிட அதிகமாக இருக்கிறது. இவரை முடிசூடா மன்னன் என்று இன்றைய அரசியலில் கூறுவது சாலப் பொருந்தும்.

ஆசிய நாடுகளின் செயற்குழுக்களும் மேலை நாட்டுச்

எண்.	நாடுகளின் பெயர்	அரசாங்க அமைப்பு	செயற் குழுவின் அமைப்பு	பெயரளவு செயற்குழு	உண்மைச் செயற்குழு	பெயரளவு செயற்குழுவைத் தேர்ந்தெடுக்கப்படும் அல்லது நியமிக்கும் முறை காலம் முதலியன
1	2	3	4	5	6	7
3	ஜப்பான் (Japan)	ஒற்றையாட்சி (unitary)	பாராளுமன்ற முடையது (Parliamentary)	மன்னர் (Emperor)	மந்திரி சபை (Cabinet)	ஜப்பான் நாட்டு மன்னர் அந் நாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். மன்னர் இறந்து விட்டால், அவரின் மூத்த மகனே அல்லது மகளோ நாட்டின் பெயரளவு செயற்குழுவாக வரலாம்.
4	சீன நாடு (China)	ஒற்றை ஆட்சி (Unitary)	பாராளுமன்றமுடையது (Parliamentary)	அரசகுழு (State Council)	சீன நாட்டுக் குடியரசு தலைவர் (Chairman of People's Republic)	சீன நாட்டு அரசின்படி அரசு குழு சிறந்த, உயர்ந்த செயற் குழு என்று கூறப்படுகிறது. ஆனால் எல்லா அரசியல் அதி காரங்களும் சீன நாட்டுக் குடியரசு தலைவரிடம் உள்ளது. ஆகையால்தான் அரச குழுவைப் பெயரளவு செயற்குழு என்று கூறுகிறோம். இதில் பிரதம மந்திரி, மற்ற மந்திரிகள் 4 ஆகு வருடங்களுக்குச் சீன நாட்டுக் குடியரசு தலைவரால் நியமிக்கப் படுகிறார்கள்.

செயற்குழுக்களும் (அட்டவணை விளக்கம்)

உண்மையான செயற்குழுவை நியமிக்கும் முறை காலம் முதலியன	பெயரளவு செயற்குழுவின் அதிகாரங்கள்	உண்மையான செயற்குழுவின் அதிகாரங்கள்	பிற குறிப்புகள்
8	9	10	11
பாராளுமன்றமான டயட்டின் (Diet) கீழ்ச் சபையான மக்கள் சபையில் எக் கட்சி பெரும்பாலான இடத்தை அடைகிறதோ அந்தக் கட்சியின் தலைவரே நாட்டின் பிரதமராகவும், அவரது தேர்வின்படி, மன்னர் மற்ற மந்திரிகளையும் நியமிப்பார். காலம் 4-ன்கு வருடங்கள்.	*செயற்குழு, சட்டமன்ற, நீதித்துறை கடமைகள் மன்னரின் பெயரிலேயே நடக்கிறது. ஆனால் ஜப்பான் நாட்டு மன்னருக்கு உண்மை அதிகாரம் கிடையாது.*	*ஜப்பான் நாட்டு மந்திரி சபைக்கு உண்மையான செயற்குழு, சட்டமன்ற, நீதித்துறை அதிகாரங்களும், மேலும் நாட்டின் மேன்மைக்கும், நன்மைக்கும் நடத்தும், உருவாக்கும் எல்லாக் காரியங்களுக்கும், இதற்கே பூரண அதிகாரம் உள்ளது.*	*ஜப்பான் நாட்டு அரசாங்கம் எல்லா வகைகளிலும் இங்கிலாந்து நாட்டை ஒட்டியுள்ளது.*
சீன நாட்டுக் குடியரசு தலைவர் தேசிய மக்கள் காங்கிரஸ் என்னும் சீன நாட்டு ஒரு சபையுள்ள சட்டமன்ற உறுப்பினர்களால் 4-ன்கு ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர் நாட்டின் தலைவராக இருக்கிறார்.	*சீன நாட்டு அரசு குழு நாட்டின் பெயரளவு செயற்குழுவாயினும், இதனுடைய முக்கிய கடமைகள் (1) ஆட்சிக்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து நிரந்தர குழுவிற்கு அனுப்ப வேண்டும். (2) நாட்டின் பொது விவகாரங்களைக் கவனித்து மேற்பார்வை பார்ப்பது போன்றதாகும். (3) இது குடியரசு தலைவருக்குக் கட்டுப் பட்டது.*	*சீன நாட்டுக் குடியரசு தலைவர் சீன நாட்டுப் பிரதமர், மற்ற அதிகாரிகளை நியமிப்பது பொதுக் குற்றங்களைக் கண்காணித்துத் தீர்ப்பு வழங்குதல் மன்னிப்பு அளித்தல், வெளிநாட்டு விவகாரங்களைக் கவனித்தல், நாட்டுப்படையின் தலைவராகவும், தேசிய பாதுகாப்புக் குழுவின் தலைவராகவும் அரசியல் சட்டம் மாற்றும் பொழுதும் புதிதாக ஏற்படுத்தும் பொழுதும், இவர் முக்கிய இடம் வகிக்கிறார்.*	*சீன நாட்டு அரசியல் அமைப்பு, அரசாங்கத்தின் செயற்குழு, அவற்றின் நிலை. அதிகாரங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பது போல் உள்ளது. ஆனால் உண்மையான அதிகாரங்கள் அனைத்தும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும், நாட்டின் குடியரசு தலைவருமான மாசேதுங்கிடம் தான் உள்ளது. மேலும் சீன நாட்டுச் செயற்குழுவை மேலை நாட்டுச் செயற்குழுக்களுடனோ அல்லது ஆசிய நாட்டுச் செயற்குழுக்களுடனோ ஒப்பிட முடியாது.*

ஆசிய நாடுகளின் செயற்குழுக்களும் மேலை நாட்டுச்

எண்	நாடுகளின் பெயர்	அரசாங்க அமைப்பு	செயற் குழுவின் அமைப்பு	பெயரளவு செயற்குழு	உண்மைச் செயற்குழு	பெயரளவு செயற்குழுவைத் தேர்ந்தெடுக்கப்படும் அல்லது நியமிக்கும் முறை காலம் முதலியன
1	2	3	4	5	6	7
5	பிலிப்பைன்ஸ் (Phillippines)	ஒற்றை ஆட்சி (Unitary)	பாராளுமன்றத்திற்குப் பொறுப் பற்றது—(Non-Parliamentary)	பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர் (The President of Phillipp nes) (இவர் பெயரளவு உண்மைச் செயற் குழுவாக விளங்கு கிறார்)		—
6	மலாசியா (Malaysia)	கூட்டாட்சி (Federal)	பாராளுமன்ற முடையது (Parliamentary)	மன்னர் (Emperor)	மந்திரி சபை (Cabinet)	மன்னர் ஆட்சியாளருடைய சபையால் (Confed ration of Rulers) 5ந்து ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார். அரசர் இறந்து விட்டால் மூத்த மகன் தான் பட்டத்திற்கு வர வேண்டும் என்பதில்லை. அந்த பொறுப்பு ஆட்சியாளரின் சபையினுடையது.

செயற்குழுக்களும் (அட்டவணை விளக்கம்)

உண்மையான செயற்குழுவை நியமிக்கும் முறை காலம் முதலியன	பெயரளவு செயற்குழுவின் அதிகாரங்கள்	உண்மையான செயற்குழுவின் அதிகாரங்கள்	குறிப்புகள்
8	9	10	11
பிலிப்பைன்ஸ் நாட்டுத்தலைவர், அந் நாட்டு மக்களால் நேர்முகமாக 4ன்கு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்.	—	நாட்டின் தலைவர் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் படுவதால் இவர் அந் நாடு பாராளுமன்றமான காங்கிரசிற்குக் கட்டுப்பட வேண்டிய அவசியமில்லை. இவரே நாட்டின் உண்மைச் செயற்குழு, இவர் செயற்குழு, சட்டமன்ற, நீதித்துறை அதிகாரங்களையும், நாட்டின் நன்மைக்காகவும், வளத்திற்காகவும் மேற்கொள்ளும் எல்லா காரியங்களுக்கும் பூரண உரிமை பெற்று விளங்குகிறார். மேல் சபை உறுப்பினரான செனேட்டார் இவரது கொள்கைகளை ஏற்காவிட்டால், மக்களின் அங்கீகாரம் பெற்றுச் செயலாற்ற முடியும்.	பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர் முற்றிலும் அமெரிக்க நாட்டுத் தலைவரை ஒத்திருப்பது நன்கு தெரிகிறது.
மலாசிய நாட்டுப் பாராளும் மன்றத்தின் கீழ்ச்சபையாகிய 'திவான் ரயத்'தில் எக் கட்சி பெரும்பான்மையான இடத்தை வகிக்கிறதோ அக் கட்சியின் தலைவரோ அல்லது திறமைமிக்கவரோ பிரதமராக மன்னரால் நியமிக்கப் படுகிறார். பிரதமரின் தேர்வின்படி மற்ற மந்திரிகள் மன்னரால் நியமிக்கப்படுகிறார்கள். காலம் 5 வருடங்கள்.	செயற் குழு, சட்டமன்ற, நீதித்துறை மற்ற பல காரியங்களும் மன்னரின் பெயரிலேயே நடக்கிறது. இவரால் தன்னிச்சையாக எந்த அரசாங்கக் காரியமும் செய்ய முடியாது.	செயற்குழு அதிகாரம், சட்டமன்ற அதிகாரம் நீதித்துறை அதிகாரம் அனைத்தும் மந்திரி சபையே பெற்று நாட்டின் பரிபாலனத்தை நடத்தி வருகிறது. இதுவே உண்மையான செயற்குழுவாகும்.	மலாசிய நாட்டுச் செயற்குழுவின் அமைப்பு, அதிகாரங்கள் அனைத்தும் இங்கிலாந்து நாட்டையே ஒத்திருக்கிறது. ஆனால் மன்னர் நியமனத்தில் மட்டும் இங்கிலாந்திலிருந்து சிறிது மலாசியா மாறுபட்டு நிற்கிறது.

ஆசிய நாடுகளின் செயற்குழுக்களும் மேலை நாட்டுச்

எண்.	நாடுகளின் பெயர்	அரசாங்க அமைப்பு	செயற் குழுவின் அமைப்பு	பெயரளவுச் செயற்குழு	உண்மைச் செயற்குழு	பெயரளவு செயற்குழுவைத் தேர்ந்தெடுக்கப்படும் அல்லது நியமிக்கும் முறை காலம் முதலியன
1	2	3	4	5	6	7
7	இந்தியா (India)	கூட்டாட்சி (Federal)	பாராளுமன்ற முடையது (Parliamentary)	தலைவர் (President of India)	மந்திரி சபை (Cabinet)	பெயரளவு செயற்குழுவான நாட்டுத் தலைவர் சிறப்புத் தேர்வு குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப் படுகிறார். ஒரு முறை தேர்ந் தெடுக்கப்பட்டவர் 5ந்து வருட காலம் பதவியில் இருக்கலாம்.

குறிப்பு :—மேலை நாடுகள் :—

ஆசிய நாடுகள் :—

செயற்குழுக்களும் (அட்டவணை விளக்கம்)

உண்மையான செயற்குழுவை நியமிக்கும் முறை காலம் முதலியன	பெயரளவு செயற்குழுவின் அதிகாரங்கள்	உண்மையான செயற்குழுவின் அதிகாரங்கள்	குறிப்புகள்
8	9	10	11
உண்மையான செயற்குழுவான மந்திரி சபையில் அடங்கியுள்ள பிரதம மந்திரி, மற்ற மந்திரிகளை, இந்திய நாட்டுப் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையான மக்கள் சபையில் எக் கட்சி பெரும்பான்மையான இடத்தைப் பெற்றிருக்கிறதோ அக் கட்சியிலிருந்து நாட்டுத் தலைவரால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் 5 வருடகாலம் பதவியில் இருக்கலாம்.	இந்திய நாட்டுத் தலைவரின் பெயரிலேயே நாடு அமைதியாக இருக்கும் காலங்களில் நாட்டுப் பரிபாலனம் நடக்கிறது. ஆகையால் சாதாரண காலங்களில் பெயரளவு செயற்குழுவாகவும், அவசர காலங்களான, உள் நாட்டுக் குழப்பங்கள், அயல் நாட்டுப் படையெடுப்பால் நாடு பாதிக்கும் பொழுது, பொருளாதார நிலை சீர்குலைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், நாட்டுத் தலைவர் உண்மைச் செயற்குழுவாக செயலாற்ற முடியும்.	இந்திய நாட்டு மந்திரி சபைக்கு உண்மையான செயற்குழு, சட்டமன்ற, நீதித் துறை அதிகாரங்கள் உள்ளன. பொதுவாக நாட்டின் பரிபாலனம் எச்சமயத்திலும் மந்திரி சபையாலேயே நடத்தப்பட்டு வரப்படுகிறது.	இந்திய நாட்டுத் தலைவர் சாதாரண காலங்களில் இங்கிலாந்து நாட்டு இராணியைப் போலவும், அவசர காலங்களில் அமெரிக்க நாட்டுத் தலைவரையும் ஒத்துள்ளார். இந்திய நாட்டு மந்திரி சபை, முற்றிலும் இங்கிலாந்து நாட்டு மந்திரி சபையைப் போலவே அமைந்திருக்கிறது.

இங்கிலாந்து, அமெரிக்கா

ஜப்பான், சீனா, பிலிப்பைன்ஸ், மலாசியா, இந்தியா.

இதுவரை பாராளுமன்ற செயற்குழுக்களைக் கொண்டுள்ள ஜப்பான், மலாயா, இந்திய நாடுகளை ஆராய்ந்து இவைகளுக்குள்ள ஒற்றுமையும், வேற்றுமைகளையும் நாம் அங்கங்கே கண்டோம். அப்படி ஒப்பு நோக்கும்பொழுது பெயரளவு செயற்குழுக்கள் இந்திய நாட்டில் மட்டும் வேறுபாடு கொண்டுள்ளதைக் காண்கின்றோம். ஆனல் உண்மையான செயற்குழுக்கள் மேற் கூறிய நாடுகள் அனைத்தும் ஒரே மாதிரியாக இருப்பது நன்கு விளங்குகின்றது. இம் மாதிரியான செயற்குழு நல்லதா அல்லது தீமையுள்ளதா என்பதனை ஆராய்வோம். நன்மைகளில் முதன்மையாகத் திகழ்வது செயற்குழுவிற்கும், சட்டமன்றத்திற்கும் உள்ள ஒற்றுமையாகும். அதாவது நாட்டிற்காகச் செய்யும் எந்தக் காரியமும் ஒழுங்காக நிறைவேற வேண்டுமாயின் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் செயற்குழு உறுப்பினர் சார்பாகவும் அதே போல் செயற்குழு மேற்கொள்ளும் ஒவ்வொரு காரியத்திற்கும் சட்டமன்றம் இணையாகவும் நின்று செயல்பட்டால் தான் அரசாட்சி என்ற சக்கரம் நன்கு சுழலும் என்பதனை நாம் அறிந்து கொள்கின்றோம். இரண்டாவது நன்மை எதிர்க்கட்சிக்காரர்களுக்கும், நாட்டு மக்களின் பழிப்பிற்கும் ஆளாகாமல் நாட்டைச் செவ்வனே நடத்தவேண்டும் என்ற கடமையுணர்ச்சியை உண்டாக்குகிறது. மூன்ருவதாக மந்திரிசபையுள்ள செயற்குழுக்கள் சுருங்கி விரியும் தன்மையுடையதாகவும், வளைந்து கொடுக்கும் தன்மையுள்ளதாகவும் இருக்கிறது. உதாரணமாக இங்கிலாந்து, இந்தியா இவை இரண்டும் பாராளுமன்றத்தை ஒட்டியே இசைந்து செயல்பட்டு வருகிறது. இது அமெரிக்க முறைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். நான்காவதாக, பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் திறமைசாலியானவராக இருப்பார். நமது பழைய பிரதமர் நேரு இன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி, அதே போல் இங்கிலாந்து நாட்டில் வில்சன், மலாசிய நாட்டுத் துங்கு அப்துல் ரக்மான் போன்றவர்கள் சிறந்த உதாரணமாகத் திகழ்கிருர்கள்.

இவ்வளவு சிறப்பு அம்சங்களைப் பெற்றுள்ள இம் முறையில் குறைபாடுகள் இல்லாமல் இல்லை. மான்டெஸ்க்யூ (Montesqueieu) அவர்களின் அரசியல் கருத்தின்படி ஓர் அரசாங்கத்தின் மூன்று அம்சங்களான செயற்குழு, சட்ட மன்றம், நீதித்துறை இம் மூன்றும் தனித்தனியாக இயங்காமல், ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு இணைந்து செயல்படுகின்றது. இவ்வாறு ஓர் அரசாங்கத்தின் மூன்று துறைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்வதால் செயற்குழுவின் அதிகாரம் கட்டுக்கு மீறி போய் விடுகிறது. மந்திரி சபையின் தலைவரான பிரதம மந்திரியின் அதி

காரம் அதிகரித்து, சுயேச்சையாகச் செயல்படவும், தனது மந்திரி சபைகளில் உள்ள மற்ற மந்திரிகளைத் தனக்குக் கீழே வேலை செய்பவர்களாக நினைத்து அதிகாரம் செய்யவும் பதவியிலிருந்து நீக்கவும் முடியும். இவ்வாறு நாட்டின் அரசியலுக்கு முறையற்ற செயல்களைச் செய்வதால் நாட்டில் அமைதி குலைந்து பரிபாலனம் கெடுவதற்கு இது ஒரு வழி வகுக்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. இம் முறை கட்சியின் அடிப்படையில் இயங்குவதால் இரண்டு கட்சிகள் இருந்தால் நன்ருகச் செயல்படுத்த முடியும். ஆனால் பிரான்சு, இந்திய நாடுகளைப்போல் பல்வேறு கட்சிகள் இருப்பதால் அமைச்சரவைக்குள் சச்சரவுகள் எழவும், அடிக்கடி அரசு மாறவும் வழியுண்டு. இவ்வாறு கட்சியின் அடிப்படையில் உருவாக்கப்படும் மந்திரிசபையில் அடங்கியுள்ள மந்திரிகள் அனைவரும் திறமையுள்ளவர்கள் என்று கூறிவிட முடியாது. ஏனெனில் சில சந்தர்ப்பங்களில் கட்சிக்காரர்களின் விருப்பத்திற்காக ஒன்றும் தெரியாதவர்களையும் மந்திரிகளாகத் தனது மந்திரி சபையில் இருக்க இடம் கொடுக்கவேண்டிய நிலையில் இருக்கிருர்கள். மேலும் தங்களுடைய கட்சியின் பலத்தை அதிகரிக்கவும், எதிர்க் கட்சிகளைப் பலவீனப்படுத்தவும் மந்திரிகள் தங்களது செல்வாக்கை உபயோகப்படுத்துவார்கள்.

மேற் கூறிய குறைபாடுகள் இம் முறையில் இருந்தாலும் பாராளுமன்ற செயற்குழு முறையே இன்று பெரும்பாலான மேலை, கீழை நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகிறது. இதுவரை செயற்குழுவின் ஒரு முக்கியப் பிரிவான பாராளுமன்ற செயற்குழுவை மட்டும் நாம் ஆராய்ந்தோம். அடுத்த முக்கியமான பிரிவு தலைவர் முறையைக் கொண்டுள்ள செயற்குழுவாகும். இம் முறையிலும் இரண்டு பிரிவுகள் உள்ளன. அதாவது ஒருவரைத் தலைவராகக் கொண்டுள்ள முறையென்றும், ஒன்றுக்கு மேற்பட்டவர்களைத் தலைவராகக் கொண்ட செயற்குழு என்றும் பிரிக்கப்பட்டுள்ளது. பொதுவாகத் தலைவரைக் கொண்ட செயற்குழு என்ருல் என்ன? அதன் பொருள் என்ன? அதனுடைய சிறப்பு அம்சங்கள் என்னென்ன? என்பதனை முதலில் ஆராய்வோம். அதற்குப் பின்பு நாம் இம் முறையினைக் கையாண்டு வரும் மேலை நாடுகளுடன் ஆசிய நாடுகளை ஒப்பிட்டு நோக்குவோம்.

ஜே. டபிள்யூ. கார்னல் (J. W. Carnel) அவர்களின் கருத்துப்படி தலைவர் முறையைக் கொண்டுள்ள செயற்குழு, மந்திரி சபையைக் கொண்டுள்ள செயற்குழுவிற்கு முற்றிலும் மாறுபட்டு உள்ளது. தலைவர் சட்டமன்றத்திற்குக் கட்டுப்பாடுள்ளவர் அல்லர். அவர்களுடைய பதவியும் அவர்கள் பதவி

காலம் முடியும்வரை நிலேயானது. இவர் அரசாங்கத்தின் தலேவராகவும், நாட்டின் தலேவராகவும் திகழ்வார்.

தலேவரைச் செயற்குழுவாகக் கொண்டுள்ள அரசின் அம்சங்கள் முதலாவதாக மந்திரி சபையுள்ள செயற்குழுவை உடைய நாடுகளில் உண்மைச் செயற்குழு என்றும், பெயரளவு செயற்குழு என்றும் இரண்டு செயற்குழுக்கள் உள்ளன. ஆனல் தலேவரைச் செயற்குழுவாகக் கொண்ட நாடுகளில் இவரே நாட்டின் உண்மைச் செயற்குழுவாகவும், பெயரளவு செயற்குழுவாகவும் பணியாற்றுகிருர். இதற்குச் சிறந்த உதாரணம் அமெரிக்க நாடாகும். இரண்டாவதாக நாட்டின் தலேவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் பரம்பரை பரம்பரையாக வருபவர் அல்லர். நாட்டு மக்களால் ஒரு முகமாக வாக்கெடுப்பு நடத்தி தேர்ந்தெடுக்கப்படுகிருர். உதாரணமாக அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலேவர்களேக் கூறலாம். இவ்வாறு தலேவரை உண்மைச் செயற்குழுவாகக் கொண்டுள்ள நாடுகளில், தலேவர்கள் சட்ட மன்றத்தின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லே. உதாரணமாக இங்கிலாந்து, இந்திய நாடுகளில் மந்திரி சபையில் உள்ள மந்திரிகள் அனேவரும் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அப்படி உறுப்பினர்களாக இல்லாமலே மந்திரிகளாக நியமிக்கப்பட்டிருந்தால் ஆறு மாத காலங்களுக்குள் சட்ட மன்றத்தில் இடம் பெற்றவராக இருக்க வேண்டும். ஒரு முறை நாட்டின் தலேவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அவரது பதவிக் காலம் எத்தனே ஆண்டுகள் என்று அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ளதோ அதுவரைத் தலேவராக இருந்து பணியாற்ற முடியும். உதாரணமாக அமெரிக்கா, பிலிப்பைன்ஸ், நாட்டுத் தலேவர்களின் பதவிக் காலம் நான்கு ஆண்டுகள் என்று அரசியல் சாசனங்களில் குறிக்கப்பட்டுள்ளது. அதே போல் இங்கிலாந்து, இந்தியா போன்ற செயற்குழுக்களுக்கு ஐந்து ஆண்டுகள் என்று குறிப்பிட்டிருந்தாலும் அவர்கள் எதுவரைச் சட்ட மன்றத்தின் ஆதரவைப் பெற்றிருக்கிருர்களோ, அதுவரைதான் அவர்கள் பதவியிலிருக்க முடியும். அடுத்துத் தலேவரைச் செயற்குழுவாக உள்ள நாட்டில் சட்ட மன்றத்து அதிகாரங்கள் அதிகம் என்று கூற முடியாது. ஏனெனில் இங்குச் சட்ட மன்றமும், செயற்குழுவும் தனித்து இயங்குகின்றது. அடுத்துத் தலேவருக்கு உதவியாகப் பணியாற்றும் மந்திரி சபை (Cabinet) தலேவருக்கு இணேயானவர்கள் அல்லர். இவர்கள் தலேவருக்குக் கீழ் பணியாற்றும் உதவியாளர்கள் என்று கருதப்படுகிருர்கள். இந்த மந்திரி சபைக்கும் இங்கிலாந்து, இந்தியா, மலாசியா, ஜப்பான் நாடுகளில் உள்ள மந்திரி சபைகளேயும் ஒப்பிட்டுப் பார்த்தால் எந்த வகையிலும் ஒத்துவராது.

ஏனெனில் இந்த நாடுகளில் உள்ள செயற்குழுக்கள் அந்தந்த நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, உண்மையான செயற் குழுவாக விளங்குகின்றது. மேலும் மந்திரி சபையில் உள்ள அத்தனை மந்திரிகளும் பிரதம மந்திரியுடன் இணைந்து செயல்பட வேண்டுமே ஒழிய, பிரதம மந்திரிக்கு, மற்ற மந்திரிகள் கீழ்ப் பட்டவர்கள் அல்லர். ஆனால் தலைவரைச் செயற்குழுவாக உள்ள நாடுகளில் உள்ள மந்திரி சபையில் உள்ள மந்திரிகள் நாட்டின் தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். இவர்களை மந்திரிகள் என்று குறிப்பிடுவதைவிட, ஒவ்வொரு துறையின் முதல் அதிகாரிகள் என்று வேண்டுமானால் கூறலாம். மேலும் இவர்கள் தலைவரின் கட்டளைப்படியே செயலாற்ற வேண்டும். தலைவர் மாறும் பொழுது, இவர்களும் மாறிவிடுவார்கள்.

இதுவரை ஒருவரைத் தலைவராகக் கொண்டு செயலாற்றும் செயற்குழுவின் நோக்கம், அது இயங்கும் வகை இவற்றினை ஆராய்ந்தோம். இனி இம் முறைப்படி செயலாற்றும் மேலை நாடு களில் முக்கியமான நாடான அமெரிக்காவையும், அதே போல் நாம் ஆராய்ந்த ஆசிய நாடுகளின், பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவரையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். முன்பு நாம் குறிப்பிட்ட படியே, பிலிப்பைன்ஸ் நாடு அமெரிக்காவின் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்ற நாடாதலின் அதனுடைய அரசியல் அமைப்பு அப்படியே அமெரிக்க நாட்டினுடையதைப் போலவே உள்ளது. அமெரிக்க நாட்டுத் தலைவரும், பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவரு மாக இருப்பவர்கள் அந்தந்த நாட்டுக் குடிமகன்களாகவும், முப்பத்தைந்து வயது நிரம்பப் பெற்றவராகவும், பதினான்கு வருடங்கள் அந் நாட்டிலேயே இருப்பவராகவும் இருக்க வேண்டும். இந் நாட்டுத் தலைவர்கள் தேர்தலின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். தேர்தலில் யார் ஒருவர் மிக அதிக ஓட்டைப் பெறு கிறார்களோ அவர்கள் தலைவராகவும், அதற்கு அடுத்து அதிக ஓட்டுகளைப் பெற்றவரை உப தலைவராகவும் தேர்ந்தெடுப்பார்கள். இவர்களுடைய சம்பளம் அந்தந்த நாட்டு அரசியல் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டது போல் கொடுக்கப்படுகிறது. இவர்கள் வரி செலுத்த வேண்டியதில்லை. இவர்களை எவ்வித தண்டனைக்கோ, விசாரணைக்கோ கொண்டு போக முடியாது. ஆனால் இவர்களைக் கடும் குற்றம் (Impeachment) சாட்டிப் பதவியிலிருந்து விலக்கிவிட முடியும்.

பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்க நாட்டுத் தலைவர்களின் அதிகாரங்களைச் செயற்குழு அதிகாரங்கள் என்றும், சட்ட மன்ற அதிகாரங்கள் என்றும், நீதித்துறை அதிகாரங்கள் என்றும் மூன்று

வகைகளாகப் பிரிக்கிறார்கள். இந் நாட்டுத் தலைவர்களின் செயற் குழு அதிகாரங்களை முதலில் எடுத்துக் கொள்வோம். கூட்டாட்சி முறையில் செயல்படும் எல்லாத் துறை அதிகாரிகளின் நியமனமும் இவர்களால் செய்யப்படுகிறது. அவ்வாறு அதிகாரி களை நியமிக்கும்பொழுது, பாராளுமன்றமாகிய 'காங்கிரஸின்' (Congress) மேல் சபையாகிய செனேட்டர்களில் மூன்றில் இரண்டு பங்கு அங்கீகாரம் பெற வேண்டும். நாட்டின் பாதுகாப்புச் சம்பந்தமான முப்படைகளின் அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பும் இவர்களுடையதே. இவர்கள் செனேட்டர்களின் அனுமதியின் பேரில் மற்ற நாடுகளுடன் போர் தொடுக்கவும் ஒப்பந்தம் செய்யவும் அதிகாரம் உண்டு. நாட்டில் ஒரு முறை போர் துவங்கி விட்டால், தலைவருக்கு அளவுக்கு அதிகமான அதிகாரங்கள் உண்டு.

இனி இந்த இரு நாட்டுத் தலைவர்களின் சட்ட மன்ற அதிகாரங்களை நோக்குவோம். காங்கிரஸின் இரு சபைகளிலும் பெரும்பான்மை ஓட்டுப் பெற்ற மசோதாக்கள் தலைவரின் கையெழுத்திற்காக அனுப்பப்படும். அவ்வாறு அனுப்பப்படும் மசோதாக்களைப் பத்து நாட்களுக்குள் திருப்பி தலைவர் அனுப்ப வில்லையென்றால் அந்த மசோதா தலைவரிடமே இறந்து விடுகிறது. ஆனால் இம்மாதிரி செய்யும் பொழுது மசோதா அரசியல் சட்டத் தின் சம்மந்தமாக இருந்தால் தலைவரால் ஒன்றும் செய்ய முடியாது. அதே போல் குறிப்பிட்ட தினங்களுக்குள் தலைவரால் மறு பார் வைக்கு அனுப்பப்பட்டு மறுபடியும் இவரது கையெழுத்திற்கு வரும் பொழுது, அதனை மறுக்க முடியாது. இவர்களின் நிலை இந்திய நாட்டுப் பிரதமருக்கும், இங்கிலாந்து நாட்டுப் பிரதமருக்கும் மாறுபட்டிருப்பினும் அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர் கள் தங்களது எண்ணங்களைச் செய்தி வடிவமாகக் காங்கிரஸிற்குத் தெரிவிக்க உரிமையுண்டு. இவர்கள் ஏதேனும் புதிய மசோதாக் களைக் கொண்டுவரும் அதிகாரமும் உண்டு. நெருக்கடி நேரங் களில் தலைவர்கள் புதிய சட்டங்களைப் பிறப்பிக்கலாம்.

இனி இவர்களுடைய நீதித்துறை அதிகாரங்களை நோக்கு வோம். உச்ச நீதி மன்றத்தின் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் உண்டு. குற்றவாளிகளை மன்னிக்கும் அதிகாரங்களும் இவர்களுக்கு உண்டு.

இங்கிலாந்து நாட்டு இராணி, ஜப்பான் நாட்டு மன்னர் இந்திய நாட்டுத் தலைவர் இவர்களுடன் அமெரிக்க நாட்டுத் தலை வரையும், பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவரையும் ஒப்பிட்டால், முதலில் கூறப்பட்டவர்கள் பெயரளவு செயற்குழுத் தலைவர்

களாகவும், பின்னர் கூறப்பட்ட இருவரும் உண்மையான செயற் குழுத் தலைவர்களாகவும் இருக்கிறார்கள். அமெரிக்க நாட்டுத் தலைவர் உலக அரசியலியலிலே ஒரு பெரும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளார். இவருடைய அதிகாரங்களைப் போலவே பிலிப் பைன்ஸ் நாட்டுத் தலைவரும் பெற்றிருந்தாலும் உலக அரங்கில் அமெரிக்க நாட்டுத் தலைவருக்கு உள்ள சிறப்பிடம் பிலிப்பைன்ஸ் நாட்டவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு முக்கியமான காரணம், பிலிப்பைன்ஸ் நாடு அமெரிக்கர்களிட மிருந்து சுதந்திரம் பெற்று வளர்ந்து வரும் ஓர் சுதந்திர நாடாகும். மேலும் இன்று உலகிலேயே மிகவும் செல்வமுள்ள நாடாகவும், அரசியல், பொருளாதார மற்றும் மக்கள் நலம் இவை அனைத் திற்கும் உதவக் கூடிய ஒரே நாடாகவும் அமெரிக்கா விளங்குகிறது. இங்கு நாம் இந்திய நாட்டுத் தலைவரையும் ஒப்பிட முடியும். அமெரிக்க, பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர்களுக்குத் தனியாக அவ சர அதிகாரங்கள் தரப்படவில்லை. ஏனெனில் அவர்களே உண்மைச் செயற்குழுவாகப் பணியாற்றுகிறார்கள். ஆனால் இந்திய நாட்டுத் தலைவர் சாதாரண காலங்களில் பெயரளவு செயற்குழுத் தலை வராகவும், அவசர காலங்களில் உண்மையான செயற்குழுத் தலை வரைப் போலவும் பணியாற்றுகிறார்.

இனி அமெரிக்க, பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர்களின் மந்திரி சபைகளை நோக்குவோம். இவ்விரு நாடுகளிலும் மந்திரி சபை என்று குறிப்பிடுவதே தவறாகும். இவர்கள் ஒவ்வொரு துறையின் அதிகாரிகள் அடங்கிய குழுவாகும். அவர்களை நியமிக்கும் பொறுப்புத் தலைவர்களுக்கே உண்டு. அதிகாரிகள் தலைவரின் விருப்பப்படியே செயலாற்ற வேண்டும். இவர் சட்டமன்றமாகிய காங்கிரசுக்குக் கட்டுப்படவோ, பதில் கூறவோ வேண்டிய அவசிய மில்லை. அதே போல் இவர்கள் சட்ட மன்றத்தில் உறுப்பினர் களாக இருக்க வேண்டிய அவசியமும் இல்லை.

இதுவரை ஒருவரை மட்டும் தலைவராகக் கொண்டு செயலாற்றி வரும் அமெரிக்க, பிலிப்பைன்ஸ் நாட்டுச் செயற் குழுவைப் பற்றி ஆராய்ந்து, ஒப்பு நோக்கினோம். இனி ஒன்றுக்கு மேற்பட்ட தலைவர்களைக் கொண்ட செயற்குழுவைப் பற்றி தெரிந்துக் கொள்வோம். இவ்வாறு கூட்டாகத் தலைவர்களைக் கொண்ட நாடுகளில் இரண்டு முக்கியமானது. ஒன்று ஸ்விட்சர் லாந்து, மற்றது ருஷ்யா. ருஷ்ய நாட்டுக் கூட்டுச் செயற்குழு மட்டு மின்றி அரசின் மற்றெல்லாப் பிரிவுகளும் கம்யூனிஸ்டு கட்சியினர் தலைவர்களின் ஆலோசனையின்படியே செயலாற்றுவதால் இதனை எந்த நாட்டுடனும் ஒப்பிட முடியாது. ஸ்விட்சர்லாந்து நாட்டின்

கூட்டுச் செயற்குழுவைப் போல் நாம் இப் புத்தகத்தில் ஆராய்ந்த ஆசிய நாடுகளில் செயற்குழுக்கள் இருக்கவில்லை. இருந்த போதிலும் கூட்டுச் செயற்குழு என்றால் என்ன என்பதனைச் சிறிதே தெரிந்து கொள்வோம். இந் நாட்டின் கூட்டுச் செயற்குழுவில் ஏழு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இந்த ஏழு பேரும் அந் நாட்டுச் சட்ட மன்ற உறுப்பினர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இவர்களுக்குக் காலம் நான்கு ஆண்டுகள். இந்த ஏழு பேரில் ஒருவரை நாட்டின் தலைவராகவும், மற்றொருவரை உப தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களது காலம் ஓர் ஆண்டுதான். தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்டின் தலைவர், அமெரிக்க நாட்டுத் தலைவருக்கோ அல்லது பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவருக்கோ இணையானவராகக் கருதப்படமாட்டார். அதே போல் இந்தியா, ஜப்பான், மலாயா, இங்கிலாந்து நாட்டுப் பிரதம மந்திரிக்கு ஒப்பானவராகத் திகழமாட்டார். கூட்டுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், சட்ட மன்றத்தில் நடக்கும் விவரங்களை விவாதிக்கவும், கேட்கவும் உரிமையிருக்கிறது. இவ்வாறு கூட்டுத் தலைவர்களாகத் தேர்ந் தெடுக்கப்படுபவர்கள். ஒரே கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இவர்கள் வெவ்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஒவ்வொரு தலைவரும், ஒவ்வொரு முக்கியத் துறையின் தலைவர்களாக விளங்குகின்றார்கள். இங்கிலாந்து, இந்தியா, மலாயா போன்ற நாடுகளின் செயற் குழுக்கள் எப்படிச் சட்ட மன்றத்தின் சார்பில் உயிர் வாழ் கின்றதோ, அதே நிலையில்தான் ஸ்விட்சர்லாந்து நாட்டுச் செயற் குழுவின் நிலைமையுமாகும்.

பொதுவாக நோக்கினால் ஸ்விட்சர்லாந்து நாட்டின் செயற் குழு, தலைவர் முறையிலுள்ள சிறப்புகளையும், பாராளுமன்ற செயற்குழுவாகிய மந்திரி சபையையுடைய செயற்குழுவின் சிறப்பு அம்சங்களையும் ஒருங்கே பெற்றுள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை. அமெரிக்கா, பிலிப்பைன்ஸ், மற்றும் ஸ்விட்சர்லாந்து நாடுகளின் அரசியல் அமைப்பை விளக்கும் அட்டவணைகளைக் கீழே காண்போம்.

இங்கிலாந்து நாட்டு அரசியல் அமைப்பை விளக்கும் அட்டவணை

(GOVERNMENT OF ENGLAND)

செயற்குழு (Executive Body)
இங்கிலாந்து நாட்டு இராணி
(Queen of England)
பெயரளவு செயற்குழு
(Nominal Executive)

மந்திரி சபை (Cabinet)
உண்மையான செயற்குழு
(Real Executive)

சட்ட மன்றம் (Legislative Body)
பாராளுமன்றம் (Parliament)

பிரபுக்கள் சபை
(House of Lords)
(மேல் சபை)

மக்கள் சபை
(House of Commons)
(கீழ்ச் சபை)

நீதித்துறை (Judiciary)
சட்ட பிரபுக்கள் (Law Lords)

அமெரிக்க நாட்டு அரசியல் அமைப்பை விளக்கும் அட்டவணை

(GOVERNMENT OF AMERICA)

1

(Legislative Body)
சட்ட மன்றம்

- அமெரிக்க நாட்டுப் பாராளு மன்றம் (Congress) காங்கிரஸ்
  - (Senate) செனேட் (மேல் சபை)
  - மக்கள் மன்றம் (House of Representatives, கீழ்ச்சபை

2

செயற்குழு (Executive Body)

அமெரிக்க நாட்டுத் தலைவர் (President of America)
இவரே பெயரளவு மற்றும் உண்மைச் செயற்குழுவாக இருக்கிறார் (Both Real and Nominal Executive)

3

நீதித்துறை (Judiciary)

- உச்ச நீதி மன்றம் (Supreme Court)

ஸ்விட்சர்லாந்து நாட்டின் அரசியல் அமைப்பை விளக்கும் அட்டவணை

(GOVERNMENT OF SWITZERLAND)

1

சட்ட மன்றம்
(Legislative Body)
கூட்டாட்சி மன்றம்
Federal Council)

- மாநிலங்களின் மன்றம்
(Council of States)
(மேல் சபை)
- மக்கள் மன்றம்
(The National Council)
(கீழ்ச்சபை)

2

செயற்குழு (Executive Body)

ஸ்விட்சர்லாந்து பன்மை (அல்லது) ஏழு தலைவர்கள் அடங்கிய செயற்குழு
(Switzerland Plural Executive)
இவர்களே இந்த நாட்டின் உண்மையான மற்றும் பெயரளவு செயற்குழுவாகும்
(Both Real & Nominal Executive)
(இந்த ஏழு தலைவர்களே முக்கியமான துறைகளின் அதிகாரிகளாக இருந்து நாட்டைப் பரிபாலிக்கின்றனர்)

நீதித்துறை (Judiciary)
கூட்டாட்சி தீர்ப்பாயம்
(Federal Tribunal)

9. செயற்குழுக்களின் இன்றைய நிலை
(Present Condition of Executives)

இதுவரை ஆசிய நாடுகளின் செயற்குழுக்களுடன், மேலை நாட்டுச் செயற்குழுக்களை ஒப்பிட்டுப் பார்த்தோம். இதைத் தவிர நாம் பெயரளவு செயற்குழு என்றால் என்ன? உண்மைச் செயற்குழு என்றால் என்ன என்றும் கண்டோம். மேலும் உண்மைச் செயற்குழுவில் உள்ள பாராளுமன்ற செயற்குழு, தலைவரைக் கொண்ட செயற்குழு என்னும் இருவகையையும் ஆராய்ந்து பார்த்தோம். இனி இங்கு நாம் உண்மைச் செயற்குழுக்கள் எவ்வகையைச் சார்ந்திருப்பினும் இன்றைய நிலை என்ன? என்பதனை ஆராய்வோம்.

இன்று உண்மைச் செயற்குழுக்களின் நிலைமை மிகவும் உயர்ந்ததாகவும், சக்திவாய்ந்த அரசாங்கத்தின் உறுப்பாகவும் கருதப்படுகிறது. உதாரணமாக அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைவரையும், பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவரையும் எடுத்துக் கொள்வோமேயானால் இவர்கள் முடிசூடா மன்னர்களாக நாட்டைப் பரிபாலிக்கிறார்கள் என்பது தெரிகிறது. அதனால்தான் அரசியல் அறிஞர் ஒருவர், இங்கிலாந்து நாட்டு இராணியுடன் அமெரிக்க நாட்டுத் தலைவரை ஒப்பிட்டுக் கூறும்பொழுது இங்கிலாந்து நாட்டு இராணிக்கு மணி மகுடம் உள்ளது. ஆனால் அதிகாரம் இல்லை என்றும், அமெரிக்க நாட்டுத் தலைவருக்கு எல்லையற்ற அதிகாரங்கள் உள்ளன. ஆனால் மணிமுடி இல்லை என்றும் வர்ணித்துள்ளார். அரசியலில் அதுவும் 20-ம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை நாம் காணும் பொழுது, 18 மற்றும் 19-வது நூற்றாண்டில் இருந்து வந்த அரசியலிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருப்பதை நாம் காண்கின்றோம்.

உதாரணமாக நாம் நமது நாடாகிய இந்திய நாட்டை எடுத்துக்கொண்டால் 1947-ஆம் ஆண்டு வரை நாம் இங்கிலாந்து

அரசின் ஆதிக்கத்தில் இருந்தோம். சுதந்திரம் பெற்ற பின்பு, நாம் நமக்கென்று ஓர் அரசியல் அமைப்பை எழுதி அதன்படி செயற்குழு, சட்டமன்றம், மற்றும் நீதித்துறைகளை அமைத்துக் கொண்டோம். அதே போல்தான் பிலிப்பைன்ஸ், மலாசியா மற்றும் ஜப்பான் நாடுகளும் சுதந்திரம் பெற்ற பின்பு தங்களுக் கென்று ஓர் அரசியல் அமைப்பை ஏற்றுக்கொண்டது. இந் நாடுகள் சுதந்திரம் அடைவதற்கு முன்பு எந் நாட்டவரிடம் அடிமைப் பெற்றிருந்ததோ பெரும்பாலும் அந் நாட்டு முறையையே பின்பற்றியுள்ளது. இதற்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்வது நம் நாடும், பிலிப்பைன்ஸ் நாடுமாகும். நாம் இங்கிலாந்து நாட்ட வரிடம் அடிமைப் பெற்றிருந்தது போல், பிலிப்பைன்ஸ் அமெரிக்க நாட்டிடம் அடிமைப்பெற்றிருந்தது. ஆகையால்தான் பிலிப்பைன்ஸ் நாட்டு அரசியல் அமைப்பு அமெரிக்க நாட்டி னுடையதைப் போலவே அமைந்துள்ளது.

அடுத்து இன்று எம் மாதிரியான அரசாட்சியை உடைய நாடானாலும் அவற்றின் கொள்கைகள் அனைத்தும் உலக நாடு களோடு ஒத்ததாகவே உள்ளது. நாட்டு மக்களின் நலனுக்காகச் செயலாற்றும் அரசாங்கமே வேண்டுமென்று உலக அரசியலில் பொதுவாகப் பேசப்படுகிறது. இவ்வாறு மக்கள் நலனைப்பற்றி யும், சுதந்திரத்தைப் பற்றியும் பேசப்படும் நாடுகளில் எல்லாம் மக்களாட்சியே வேறு வேறு உருவில் நடைபெறுகிறது. பொது வாக மக்களின் பிரதிநிதிகளே நாட்டைப் பரிபாலிக்கின்றனர். அதனால்தான் இன்றைய செயற்குழுக்களின் வேலைகளும், அதி காரங்களும் அளவிற்கு மீறியுள்ளது. நாம் உண்மைச் செயற் குழுக்களின் அதிகாரங்களைப் பற்றி ஆராயும் பொழுது முதன் முதலில் இங்கிலாந்து நாட்டை எடுத்துக் கொள்வோம். அங்கு இராணி பெயரளவு செயற்குழுவாகவும், பிரதம மந்திரியைத் தலைவராகக் கொண்ட மந்திரிசபை நாட்டின் பரிபாலனத்தையும் கவனித்து வருகிறது. இதே முறைதான் இந்திய நாட்டிலும், ஜப் பான் நாட்டிலும், மலாசிய நாட்டிலும் பின்பற்றி வருகிறார்கள். இந் நாடுகளில் மட்டுமின்றி, இதே மாதிரியான முறையைப் பின்பற்றி வரும் மற்ற நாடுகளிலும் பிரதம மந்திரியே ஆட்சி யாளராகக் கருதப்படுகிறார். மேலும் இம் முறை செயற்குழுவை யுடைய நாடுகள் கட்சியின் சார்பைக் கொண்டுள்ளது. அதாவது பர்ராளுமன்றத்தின் கீழ்ச் சபையாக விளங்கும் மக்கள் சபையில் எக் கட்சிப் பெரும்பான்மையான இடத்தைப் பெற்றுள்ளதோ, பெரும்பாலும் அக் கட்சியின் தலைவரே நாட்டின் பிரதம மந்திரி யாக நியமிக்கப்படுகிறார். இவ்வாறு நாட்டு மக்கள் அனைவருக்கும் முதன்மையானவராக மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுவதால்

இவர் நாட்டு மக்களின் நன்மதிப்பிற்கும், பெயரளவு செயற்குழுத் தலைவருக்கும், சட்டமன்றத்திற்கும், சுருங்கக் கூறின் நாட்டின் எல்லாத் துறைகளுக்கும் இவரே முதற்கண் தொடர்புள்ளவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நாட்டின் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்ட பின்பு அவர்கள் நாட்டின் ஒழுங்கான பரிபாலனத்தை மனதில் கொண்டு, வேலைகளைப் பல துறைகளாகப் பிரிக்கின்றனர். அவற்றில் முக்கியமான துறைகளைத் தங்களிடமும், மற்ற முக்கியமான துறைகளைத் தனது சகாக்களான மற்ற மந்திரிகளுடனும் பகிர்ந்து கொள்கிறார். இவ்வாறு ஒவ்வொருவருக்கும் வேலைகளைப் பகிர்வதுடன் பிரதமரின் வேலை முடிவு பெறுவதில்லை. ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கும் துறைகள் செவ்வனே நடக்கின்றதா என்பதைக் கவனிக்கும் பொறுப்பு இவருடையதே. ஏனெனில் ஏதோ ஒரு துறையின் மந்திரி செய்யும் தவறுக்காக மந்திரி சபை முழுவதுமே மாற நேரிடும். மேலும் பாராளு மன்றத்தினரால் மந்திரிசபை உருவாக்கப்படுவதால், பாராளு மன்றத்தினர் எழுப்பும் ஒவ்வொரு ஐயங்களுக்கும், கேள்விக்கும் பதில் கொடுக்க வேண்டிய பொறுப்பு இவருடையதாகிறது. அதுமட்டுமின்றி நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றாலொழிய அடுத்த முறை இவரது கட்சிப் பெரும்பான்மையான இடத்தைப் பாராளுமன்றத்தில் பெறமுடியாது. இவ்வாறு பிரதம மந்திரியின் நிலை பலவகையிலும் முக்கியத்துவம் பெறுகிறது.

இதைத் தவிர நாட்டின் அமைதியைக் காக்கவும், சட்டத்தினைப் பராமரிக்கவும், நாட்டின் நீதியை நிலை நிறுத்தவும் வேண்டிய பொறுப்பு இவரையே சேருகிறது. உதாரணமாகப் பாகிஸ்தான், இந்திய நாட்டின் மீது 1965-66-ல் படையெடுத்திருந்த பொழுது, அப்பொழுது நமது நாட்டின் பிரதமராக விளங்கிய லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் வந்து, நமது படை வீரர்களுக்கு வேண்டிய பொருள்களையும், செல்வத்தையும் மக்களிடமிருந்து வாங்கிச் சென்றார். அதே போல் நாட்டின் எப் பகுதி பஞ்சத்தாலும், மற்றபடி இயற்கையின் விளைவாக ஏற்பட்ட நட்டத்தினால் பாதிக்கப்பட்ட போதிலும் மக்களுக்கு ஆறுதல் கூறும் பொறுப்பு பிரதமருடையதே. உதாரணமாக 1970-ல் நமது நாட்டின் ஒரு பகுதியான ஒரிசாவில் வெள்ளம் அடித்துப் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வீடு வாசல் இழந்து கஷ்டப்பட்டபொழுது, திருமதி இந்திரா காந்தி அவர்கள் அவ்விடத்திற்குச் சென்று, மக்களுக்கு ஆறுதல் கூறி, மத்திய அரசிடமிருந்து ஒரு தொகை நிதியாகவும்

வழங்கினார்கள். இதைப்போல் கூட்டாட்சி முறையில் உள்ள நாடுகளில் நாட்டின் எப் பகுதி எந்த விதத்தில் பாதித்தாலும் பாரபட்சமின்றி பாதுகாத்து உதவ வேண்டிய பொறுப்பு மத்திய மந்திரிசபையினுடையதே.

தங்களுடைய நாடு, பகை நாட்டவரால் பாதிக்கப்பட்டிருக்கும் பொழுது தனது சக மந்திரிகளுடன் அவசரக் கூட்டம் நடத்தி முடிவெடுக்கவேண்டிய பொறுப்பும் பிரதமருடையதே. அதேபோல் நாட்டின் நலனுக்காக மற்ற நாடுகளுடன் தொடர்பு கொள்வதிலும், வியாபார வாணிக ஒப்பந்தம் கொள்வதிலும் இவருடைய கருத்தே முதன்மையாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக ஜூன் 12-ல் திருமதி இந்திரா காந்தியும், திரு பூட்டோ அவர்களும் மேற்கொண்ட நல்லுறவு கூட்டும் சிம்லா ஒப்பந்தமும் ஆகும்.

இதைத் தவிர நாட்டின் பரிபாலனத்தை வெறும் ஒரு சிறு குழுவாகிய மந்திரி சபையினால் மட்டும் நடத்திவிட முடியாது. அவர்களுக்கு உதவியாக நிலையான செயற்குழுக்கள் அல்லது அலுவலகச் செயற்குழுக்களின் முதல் அலுவலர்களை நியமிக்கும் பொறுப்பு, நாட்டின் முப்படை தளபதிகளை நியமிக்கும் பொறுப்பு, நீதித்துறை தலைவர்களை நியமிக்கும் பொறுப்பு நமது நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்குத் தூதுவர்களை நியமிக்கும் பொறுப்பு, இதைத் தவிர நாட்டின் திட்டம், மற்றும் எல்லாத் துறைகளின் அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பு மத்திய மந்திரிசபையினுடையதே ஆகிறது.

மேலும் பாராளுமன்றங்களில் கொண்டுவரும் சாசனங்கள் பெரும்பாலும் நாட்டின் நலனை ஒட்டியுள்ளதா என்றும், நாட்டிற்குப் பொருத்தமானதா என்பதையும் அறிய வேண்டும். அதேபோல் நாட்டு மக்கள் மீது போடப்படும் வரி அதிகமாக்குவதும், குறைப்பதும், நீக்குவதும் உண்மைச் செயற்குழுவின் கடமையாகும். இதைத் தவிர நாட்டின் பொருளாதார நிலை சீர்குலையாமல் பாதுகாக்க வேண்டியதும் இதனுடைய பொறுப்பாகும். இவை எல்லாவற்றையும் விட நாட்டில் அவ்வப்பொழுது ஏற்படும் புதுப்புது பிரச்சினைகளுக்கு வழி காண்பது உண்மைச் செயற்குழுவின் தலையாயக் கடமையாகும்.

பொதுவாக இன்றையச் செயற்குழுக்களின் நிலை மிகமிக உயர்வை அடைந்ததற்குக் காரணம் காலப்போக்கில் நாட்டில் ஏற்படும் மாறுதல்களை ஒட்டி ஏற்படும் குழப்பம் நிறைந்த பிரச்சினைகளே யாகும். இதைத் தவிர சட்டமன்ற உறுப்

பினர்கள் பொரும்பாலான காரியங்களைச் செயற்குழுவிடம் கொடுத்து விடுகிறார்கள். மேலும் இதைத் தவிர சட்டமன்றத்தில் பெரும் மதிப்பைப் பெற்ற கட்சியே ஆளும் கட்சியாக அமைவது, நாட்டு மக்களின் பொது நலனுக்காகப் போடப்படும் திட்டங்கள் இவைகள் அனைத்துமே யாகும்.

தலைவரை உண்மைச் செயற்குழுவாகப் பெற்றுள்ள நாடுகளான அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் நாடும் இதே போன்று அளவிற்கு அதிகமான அதிகாரங்களைப் பெற்றது என்பதில் ஐயமில்லை. இன்னும் சிறிது விளக்கமாக ஆராய்வோமாயின் பாராளுமன்றத்திலிருந்து உருவாக்கப்பட்ட செயற்குழுவான மந்திரி சபையைவிட, இந்தச் செயற்குழுவிற்கு இன்னும் செல்வாக்கு அதிகமாக உள்ளது. ஏனெனில் இவர்கள் நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதால் இவர்கள் நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றால் மட்டும் போதுமானது. சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கட்டுப்படுவதற்கு அவசியம் இல்லை. உதாரணமாகத் திரு நிக்ஸன் மேற்கொண்டிருக்கும் வியட்நாம் போரைப் பற்றி அந் நாட்டுப் பாராளுமன்றமான காங்கிரஸ் உறுப்பினர்கள் பல வகையில் அதிருப்தியும், மற்ற நாடுகளின் வெறுப்பைப் பெற்றபோதிலும் கூட, அமெரிக்க நாட்டுத் தலைவர், தன் விருப்பப்படியே போரை நடத்தி வருகிறார்.

இந்த இரண்டு முறைகளைவிட மூன்றாவது வகைச் செயற்குழு கம்யூனிஸ்ட் நாடுகளான சைனா, ருஷ்யா நாடுகளில் மேற்கொள்ளப்படுகிறது. இங்கும் மக்களாட்சி முறையிலேயே நாடாளப்படுகிறது. இருப்பினும் உலகில் நாம் மற்ற நாடுகளில் காணும் இரு கட்சி முறையோ அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கட்சி முறையோ அல்லாமல் ஒரே ஒரு கட்சியான கம்யூனிசத்தையே தங்களது உடல், உயிர் பொருளாக மதித்துச் செயல்படுகிறார்கள். மற்ற அரசுகளில் காணப்படுவதுபோல் இங்கும் செயற்குழு, சட்ட மன்றம், நீதித்துறை அனைத்தும் இருந்தாலும் கூட கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் கூற்றுக்கும், சொல்லுக்கும் சிறிதும் முரண்படாமல் நாட்டைப் பராமரித்தல் வேண்டும். ஆகையால் கம்யூனிஸ்ட் நாடுகளில் நாட்டின் ஆட்சிச் செயற்குழுவிடம் இருக்கிறது என்று கூறுவதை விட கட்சித் தலைவர்களிடம் உள்ளது என்று கூறுவதே சாலப் பொருந்தும்.

சுருங்கக் கூறின், மக்களாட்சி முறையைப் பின்பற்றி நடத்தி வரும் நாடுகளில் எல்லாம் செயற்குழுக்களின் ஆதிக்கம் பழங்

காலத்தைப் போலவே மாறிவருகிறது என்பதில் ஐயமில்லை. எப்படிப் பழைய காலத்தில் மன்னர்கள் தனக்கு உதவியாக மந்திரிகளையும், இராஜப் பிரமுகர்களையும், தூதுவர்களையும் வைத்து நாட்டினைச் செவ்வனே நடத்தினர்களோ அதே போல். இந்த இருபதாம் நூற்றுண்டில் முடிசூடா மன்னர்களாகவும் இராணிகளாகவும் நாடுகளின் பிரதம மந்திரிகளும் தலைவர்களும் அரசாட்சியினை நடத்தி வருகிறார்கள்.

பகுதி 'இ'

1. அரசியல் செயற்குழுக்களுடன் அலுவலகச் செயற்குழுக்களை ஒப்பிடுதல் சரித்திர ஆதாரங்கள்

(Comparison between State Executives and Official Executives)

நிலையான செயற்குழு என்று கூறப்படுவது, அரசாங்கத்தின் பல்துறை ஊழியர்களேயாகும். இவர்கள் எத்தகையவர்? எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டார்கள்? இவர்களது இன்றைய நிலை என்ன? என்பதனைப் பற்றியெல்லாம் நாம் இந்தப் பாகத்தில் பார்க்கலாம். சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு ஆராயும் பொழுது, இன்று நாம் காணும் இந்த அரசியல் ஊழியர்கள் அல்லது குடிமுறைப் பணியாட்கள் அல்லது நிலையான செயற்குழுக்கள் இவை திடீரென்று தோன்றியதல்ல. காலாகாலமாக இது இருந்து வருகிறது. பழைய கிரேக்க ரோமானியர்களின் சரித்திரத்திலேயே இந்தக் குடிமுறைப் பணியாட்கள் முக்கிய பங்கு பெறுகின்றனர். நாட்டின் பல பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் அரசாங்க அலுவல்களுக்கு இவர்களே கருவிகளாக இருந்து பணியாற்றி வந்ததாகச் சரித்திரத்தின் மூலம் தெரியவருகிறது. அடுத்து நாம் சரித்திரத்தின் நடுப் பகுதியை (Medieval Age) எடுத்துக் கொண்டோமாகில் சர்வாதிகாரத் தலைவர்களாக இருந்து வந்த பிரஷ்யா நாட்டுப் பிரடரிக் (Fredrick the Great). பிரான்சு நாட்டின் பதினான்காம் லூயி (Louis XIV) மற்றும், ருஷ்ய நாட்டின் தலைவரான 'பீடர்' (Peter the Great) என்ற மூவரும், மிகவும் முக்கியமானவர்கள். இவர்களே இந்தக் குடிமுறைப் பணியாட்களுக்கு அரசாங்கத்தின் அன்றாட காரியங்களைச் செய்யும் பணியை ஒழுங்குபடுத்தி முறையுடன் தந்திருக்கிறார்கள். அதற்குப் பின்

ஐரோப்பிய நாடுகளில் இவர்களின் முறை அப்பொழுதற்கப் பொழுது சிறிது சிறிது மாறுதல் அடைந்து, இந்தக் குடிமுறைப் பணியாட்களுக்கு ஒரு நிலையான இடத்தை அரசாங்கக் காரியங்களில் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். அதன் பிறகு நாம் வாழும் இன்றைய உலகில், அரசாங்க அலுவலர்களின் முறை பெரும்பாலும், இங்கிலாந்து நாட்டினுடையதைப் போலவே உள்ளது. இம் முறையே இந்தியா, மற்றும் பல நாடுகளும் பின்பற்றி வருகின்றன. இந்த முறையைப் பற்றித் தெளிவாக இப் பாகத்தின் பிற்பகுதியில் காணலாம்.

செயற்குழு என்று குறிப்பிடும்பொழுது நமக்கு முதலில் தோன்றுவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கும் மந்திரி சபையோ அல்லது, தலைவரையோதான். ஆனால் இவர்கள் நாட்டினைச் செவ்வனே பரிபாலிக்க திரையின் பின்னிருந்து உதவும். மற்றொரு குழு இருப்பதையும், அது நிரந்தரமான செயற்குழு என்பதையும் இக் குழு நாட்டின் இருதயம் போன்றது என்பதையும் பொதுவாக மறந்து விடுகிறார்கள். நாகரிகம் மாறிக் கொண்டேவரும். இன்றைய நாடுகளில், நாட்டு மக்களின் நலன்களுக்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு காரியங்களும் யாரால் செய்யப்படுகிறது? எல்லாவற்றிலும் அரசியல் செயற்குழுவே நேரிடையாகச் செய்துவிடுகிறதா? என்ற கோள்விகள் எழும்பொழுது நமக்கு அரசாங்க அலுவலகங்களைப் பற்றி நினைவு வருகிறது. அன்றாட நாட்டின் பிரச்சினைகளுக்காகப் பாடுபடும் ஓர் இயந்திரமே அரசாங்கப் பல்வேறு துறைகளின் அலுவலகங்களாகும். இந்த இயந்திரத்தை இயக்கப் பெரும்பான்மை எண்ணிக்கைகளைக் கொண்ட வேலையாட்கள் வேலை செய்கிறார்கள். அரசியல் செயற்குழு மேற்கொள்ளும் ஒவ்வொரு கொள்கைகளையும், செயல்படுத்தும் பொறுப்பு, அலுவலகச் செயற்குழுவையே சேருகிறது.

இந்த அலுவலகச் செயற்குழுவில் பணியாற்றுபவர்களைக் குடிமுறைப் பணியாளர்கள் (Civil Servants) என்று அழைக்கின்றார்கள். இவர்கள், அரசியல் செயற்குழு இடும் கட்டளைகளை அப்படியே மேற்கொண்டு செயலாற்றிட வேண்டும். இவர்களே நாட்டின் அன்றாட வேலைகளை நடத்தி வருகிறார்கள். இந்தக் குடிமுறைப் பணியாளர்கள், நாட்டின் சட்டமன்ற, நீதித்துறை ஆட்களினின்றும், நாட்டைப் பாதுகாக்கும் படை வீரர்களினின்றும் மாறுபட்டவர்களாகிறார்கள். ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் குடிமுறைப் பணியாளர்களை வெவ்வேறாக வகைப்படுத்துகிறார்கள். ஒருசில நாடுகளில் உயர் அதிகாரிகளை இவர்

களுடன் சேர்ப்பதில்லை. இன்னும் சில நாடுகளில் வெறும் அரசாங்க அலுவலகங்களில் வேலை செய்யும் குமாஸ்தாக்களையும், கணக்கர்களை மட்டுமே குறிப்பிடுகிறார்கள். அரசியல் செயற்குழு விற்கும், உண்மையான செயற்குழுவிற்கும் பல வேறுபாடுகள் உள்ளன. முதலாவதாக உண்மையான செயற்குழுவென்று கருதப்படும் மந்திரிசபை, தலைவர், பாராளுமன்றம் இவை போன்றவைகள் நிரந்தரமானதல்ல. அந்தந்த நாட்டு அரசியல் சாசனத்தில் குறிப்பிட்டிருப்பது போல் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளோ பதவியில் இருக்கலாம். அவ்வாறு குறித்த காலம் வரைக்கூட இல்லாமல் போகும் நிலையும் சில சந்தர்ப்பங்களில் அரசியல் செயற்குழுக்களுக்கு உருவாகலாம். ஆனால் ஒரு முறை அரசாங்க அலுவலராக அல்லது அலுவலகச் செயற்குழுவினராக நியமிக்கப்பட்டால் அவர்கள் தாங்கள் ஓய்வு பெறும்வரை பதவி யிலிருக்கலாம். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசியல் செயற் குழுவாகப் பதவி வகித்தாலும், குடிமுறைப் பணியாளர்கள் தங்கள் கடமைகளைச் செய்து கொண்டே இருக்கவேண்டும். தங்களது விருப்பு, வெறுப்புகளை வெளிக்காட்டக்கூடாது. ஆகையால் தான் இவர்களை நிலையான செயற்குழு என்று கூறுகிறார்கள்.

குடிமுறைப் பணியாட்களின் முக்கிய தத்துவம்: (Importance of Civil Service)

இன்றைய அரசியல், பழம் பெரும் அறிவும், அனுபவமும் நிறைந்த குடிமுறைப் பணியாட்களின் திறமை மிக்க பணி மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு நாட்டிலும் குடிமுறைப் பணியாட்களின் முக்கியத்துவம் நன்கு உணரப் பட்டுள்ளது. அவர்கள் இல்லாமல் அரசாங்கம் செயலாற்ற முடியாது. நாட்டின் நல்லாட்சிக்கு வேண்டிய திட்டங்கள் அனைத்தும் அரசியல் செயற்குழுவான மந்திரிசபையோ அல்லது தலைவரோ ஏற்படுத்தினாலும், அதனை ஒழுங்காக முறைப்படுத்தி செயலில் கொண்டுவரும் பொறுப்பு குடிமுறைப் பணியாட் களுடையது என்பதில் சிறிதும் ஐயமில்லை. நாட்டிற்காக ஏற் படுத்தப்படும் திட்டங்களிலும், கொள்கைகளும், மந்திரிசபையின் ஒருமுக இசைவுடனும், அதனைப் பாராளுமன்றத்திற்குக் கொண்டு வந்து அங்கும் பெரும்பாலோர் ஏற்றுக்கொள்வதும் இன்றைய அரசியலில் பெரிய காரியமாகக் கருதுவதற்கில்லை. ஏனெனில் இப்பொழுது நடைபெறும் பெரும்பாலான நாடுகளில் கட்சி சார்பு கொண்ட மக்களாட்சி முறையாகும். இதனால் பாராளு மன்றத்தில் எக் கட்சி மக்கள் சபையில் அதிக இடத்தைப் பெறு கிறதோ அக் கட்சியே நாட்டின் ஆளும் கட்சியாக இருக்கிறது.

இதனால் எவ்விதத் தடையுமின்றி மந்திரிசபையின் கொள்கைகள் உடனுக்குடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் அதனைச் செயலளவிற்குக் கொண்டுவந்து மக்களிடையே வேரூன்ற வைக்கும் பொறுப்புத் திறமை நிறைந்த குடிமுறைப் பணியாட்களிடம் மட்டுமே இருக்கின்றது. ஒரு நாட்டில் நல்ல மந்திரிசபை அமையப் பெற்றுத் திறமை மிக்க நேர்மையும், சட்டமும் தெரிந்த அறிவுள்ள குடிமுறைப் பணியாட்களைப் பெற்றிருக்குமானால், அந் நாட்டின் பரிபாலனம் நிலையானதாகவும், ஒழுங்கானதாகவும் இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. உதாரணமாக மேலை நாடுகளான, அமெரிக்கா இங்கிலாந்து போன்ற நாடுகளில் குடிமுறைப் பணியாட்கள் மிகவும் திறமை பெற்றவர்களாகவும், சட்ட அறிவு பெற்றவர்களாகவும், உண்மை அரசியல் அலுவலர்களாகவும் பணியாற்றி வருகின்றார்கள். ஆனால் இந்தியா, இதைப் போன்ற பின்தங்கப்பட்ட அல்லது வளர்ச்சிப் பெற்று வரும் நாடுகளில், குடிமுறைப் பணியாட்கள், தங்கள் நாடுகளில் ஆட்சியாளர்களாக வருபவர்கள், தங்கள் கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பின், அவர்களைப் போற்றுவதிலும், புகழ்வதிலும், அவர்களையே சுற்றி வந்தும் தங்கள் கடமையை மறந்துவிடுகின்றார்கள். பொதுவாக 19வது, 20வது நூற்றாண்டுகளில் மேலை நாடுகளின் குடிமுறைப் பணியாட்கள் ஒரு சிறப்பிடத்தை நாட்டின் பரிபாலனத்தில் பெற்றுவிட்டார்கள். பைனர் (Finer) என்பவர் இதனைக் கீழ்க் கண்டவாறு தெளிவுபடுத்துகிறார். மேலை நாட்டு அரசியல் நாகரிக வளர்ச்சிக்கு, குடிமுறைப் பணியாட்கள் மூலதனமாகவும், நீதி நிறைந்த, இயக்கும் கருவியாகவும், மற்ற அரசியல் நிறுவனங்களுக்கு வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது என்கின்றார். மேலும் அவர் குறிப்பிடும்பொழுது 17-ம், 18-ம் நூற்றாண்டில் பயிற்சிப் பெறாத கல்வியறிவு அற்ற, மக்களால் விரும்பப்படாத, பொறுமை, சகிப்புத் தன்மை இவை ஏதுவுமே அற்ற பணியாட்களே நாட்டின் பல் துறைகளில் இருந்து வந்தனர் என்றும், இன்று அந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது என்றும் கூறுகின்றார்.

அதிகாரவர்க்கத்தின் பிறப்பிடம் (Origin of Bureaucracy)

நிலையான செயற்குழு அல்லது குடிமுறைப் பணியாட்களையே அதிகார வர்க்கம் என்று குறிப்பிடுகின்றனர். 'அதிகார வர்க்கம்' (Bureaucracy) என்ற சொல், பிரெஞ்சு நாட்டு மக்களால் முதன் முதலில் 17-ம் நூற்றாண்டில் உபயோகப்படுத்தப்பட்டது. பிரெஞ்சு நாட்டு ஆட்சித் துறையின்படி, ஒவ்வொரு மந்திரிக்கும் பல்வகையான குடிமுறைப் பணியாட்கள் இருந்து வந்தனர்.

மேலும் பிரெஞ்சு நாட்டு அரசியல் செயற்குழு மிகமிக நிலையற்றதாக இருப்பதால், இந் நாட்டில், குடிமுறைப் பணியாட்களின் நிலை மிக உயர்வாக உள்ளது. இந்த 'அதிகார வர்க்கம்' என்ற சொல் இன்றைய நாடுகளில் குடிமுறைப் பணியாட்களையே குறிப்பிடப்படுகிறது. எப்பொழுதாவது பொதுமக்கள் அரசாங்க அலுவலர்களின் காரிய தாமதத்தையும், பொறுப்பற்ற செயல்களையும், முறையற்ற செயல்களையும் கண்டு கொதிப்படையும் பொழுது 'அதிகார வர்க்கத்தினர்' என்று ஏளனமாகக் குறிப்பிடுகின்றனர். இந்தியா, இங்கிலாந்து, ஜப்பான், மலாயா, மற்றும் பல நாடுகளிலும் குடிமுறைப் பணியாட்களின் நிலை ஒரே மாதிரியாக இருக்கின்றன.

பொதுத்துறை அலுவல்களை உருவாக்குதல் (Organisation of Civil Service)

அரசாங்கத்தை நடத்திச் செல்லும் சக்கரங்களாக நாட்டில் பொதுத் துறை அல்லது குடிமுறைப் பணியாட்கள் இயங்கி வருகின்றார்கள். இது நாட்டின் தலைமைச் செயலகத்திலிருந்து உருவாகிறது. இச் செயலகத்தில் ஒவ்வொரு அரசாங்கத்தின் துறைக்கும் தனித்தனி அலுவலகம் உண்டு. இந்த ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு மந்திரியின்கீழ் செயலாற்றும். ஒரு துறையின் மந்திரிக்கு உதவியாக ஒரு துணை மந்திரியும் இருப்பார். இவர் மந்திரிசபையில் அடங்கிய மந்திரியல்ல. ஒரு துறையின் மந்திரி தன் துறைக்கு வேண்டிய கட்டளைகளை அத் துறையின் செயலாளரிடம் (Secretary) கூறுவார். செயலாளர் அதனைத் தனக்குக் கீழ் வேலை செய்யும், பலவகைப்பட்ட பொதுத் துறை அலுவலர்களுக்கு அனுப்பி அதன்படிச் செயலாற்றப் பணிப்பார்.

அரசாங்கம் நாட்டு மக்களில் ஒரு பகுதியினரைத் தனது பல துறைகளுக்கும் பணியாட்களாக மாற்றிவிடுகிறது. மேலும் அவரவர்களின் கல்வி, அறிவுத் திறமைக் கேற்பவும், பணிகளுக் கேற்பவும், சம்பளங்கள் பிரித்துத் தரப்படுகிறது. பொதுவாக நாட்டின் அன்றாட அரசியல் காரியங்கள் நடைப்பெற பல நூற்றுக்கணக்கான பணியாட்களும், சிறு துறைகளும் வேண்டும். அரசாங்கப் பலவகைத் திறமைப் படைத்தவர்களையே அரசாங்க அலுவலகங்களில் வைக்கிறார்கள். இவ்வாறு பல்வகைப் பட்டவர்களை வேலையில் வைக்கும்பொழுது அவர்களை நியமிக்கும் முறை, கட்டுப்பாடு, பதவி உயர்வு, சம்பளம், சட்ட உரிமை, மற்ற இனத்தவருடன் தொடர்பு இவைகளைப்பற்றி யெல்லாம் அந் நாட்டின் அரசாங்கமே தீர்மானித்து வரையறுக்க வேண்டும்.

குடிமுறைப் பணியாட்களின் நிலை மிக உயர்ந்ததாகும். அதனை இன்னும் மேன்மைப்படுத்த வேண்டுமானல் பல சிறந்த முறைகளைக் கையாளவேண்டும். லாஸ்கி (Laski) என்ற அரசியல் மேதை கூறுகிறார். அரசாங்கத்தின் பொதுப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு, அரசியல் செயற்குழுவிற்கு உள்ள அதிகாரத்தினுல் மட்டுமல்ல. அதைத் தவிர அவர்கள் தேர்ந் தெடுக்கும் பொழுது அரசியல் சூழ்நிலைமையையும், திறமையையும் கூட ஆராயவேண்டும். ஆனல் இன்றைய அரசியல் உலகில், பொதுத் துறைபாட்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது ஒருசில முறை யற்ற போக்குகளும், அரசியற் செயற்குழுவால் மேற்கொள்ளப் படுகிறது. நியமிக்கப்படும் நிலையான செயற்குழு அதிகாரிகளை, அவரவர்கள் திறமைக்கேற்ப தேர்ந்தெடுப்பாராயின், அரசியல் வேலைகள் செவ்வனே நடக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அமெரிக்க முறையின்படி அந் நாட்டுத் தலைவர்கள் (President of America) மாறும்பொழுதெல்லாம் அவர் நியமனம் செய்த அவரது மந்திரிசபை அல்லது, அவரது பல்துறை காரியதரிசிகளும் மாற்றப்படுகிறார்கள். இதனை 'ஸ்பாயல்' (Spoil) முறை என்று கூறப்படுகிறது. அரசாங்க அலுவலகங்களில் வேலைப் பார்க்கும் பணியாளர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துதரவேண்டும். உதாரணமாக, நல்ல சம்பளம், நிலையான இடம், முறையான விடுப்பு வசதி (Leave) ஓய்வு ஊதியம் இவை போன்ற பல, வேலை கொடுக்கும்பொழுது, வேலையிலிருந்து நீக்கும் பொழுதும், பதவி உயர்வு கொடுக்கும் பொழுதும், அந்தந்த விதிமுறைகளைச் செவ் வனே மேற்கொள்ள வேண்டும். வேலைகள் கொடுக்கும் பொழுது, தனக்கு வேண்டியவர், வேண்டாதார் என்ற எண்ணம் இருத்தல் கூடாது.

ஒவ்வொரு நாடும் தங்கள் தங்கள் நாட்டின் விதிகளுக்கேற்பக் குடிப்பணியாளர்களை நியமிக்கின்றார்கள். உதாரணமாக, நாம் நமது நாட்டை எடுத்துக் கொண்டோமானல், நமது அரசியல் சாசனத்தின்படி மூன்றுவகையான 'அரசு பணியாளர் தேர்வுக் குழுக்கள் உள்ளன. 1. அனைத்திந்தியப் பணி (All India Services) 2. மத்திய அரசு பணியாளர் தேர்வுக்குழு (Union Public Service Commission) மற்றும் 3. மாநில அரசு பணியாளர் தேர்வுக்குழு (State Service Commission) என்ற மூன்றுமாகும். நமது அரசியல் சாசனத்தின் சரத்து எண் 315 ன்படி மத்திய மாநில அரசு பணித் தேர்வுக்குழுக்களும், அவற்றின் அதிகாரிகளின் சுதந்திரம், கடமை முதலியவற்றை அழகாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இக் குழுக்களின் விதிகளின்படி எப்படி அரசியல் அலுவலகங்களில் பணியாளர்களாக நியமிக்கப்படுபவர்கள் எத்தகையவராக இருக்க

வேண்டும். அவர்களை நியமனம் செய்த பின்பு அவர்களது சம்பளம் விதி முதலியவைகளைப் பற்றி யெல்லாம் முறையாக வகுக்கப் பட்டுள்ளது. இக் குழுக்கள் ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுதும் பொதுவாகவும் சில கடமைகளை உடையவர்களாகி றார்கள். 1. அந்தந்தப் பதவிக்குத் தக்கவாறு தேர்வுகளை நடத்த வேண்டும். 2. அதன் பிறகு அவர்களை எம் முறையில் நியமிக்க வேண்டும். 3. ஒவ்வொரு வருடமும், இந்திய நாட்டுத் தலை வருக்கு ஓர் அறிக்கையை (Report) அனுப்ப வேண்டும்.

பலவகை ஆட்சி நிருவாகச் செயல்கள் (Types of Administrative Functions)

நாட்டின் ஆட்சியைச் செவ்வனே நடத்த பலவகை நிறுவனங் கள் உள்ளன. தீர்மானம் செய்யப்பட்ட ஆட்சியினுடைய கொள்கைகளை ஏற்று மேற்பார்வை பார்ப்பது (determination of administrative Policy), வேலைகளைச் செய்வதற்கான வழி காட்டுதல் மற்றும் (direction and Supervision of the work) உண்மையாகச் செய்ய வேண்டிய வேலைகளுக்காக (actual doing of the work), சட்டங்களை ஏற்படுத்திச் செயல்படுத்தும் பொழுது ஏற்படும் குழப்பங்களை நீக்குதல், தீர்த்துவைத்தல் (Settlement of disputes arising out of the enforcement of law and conditions of Services) என்பன போன்ற பலவகைப்படும். இவற்றைத் தவிர வேலைகளை யார் யாரிடம் ஒப்படைப்பது போன்ற பிரச் சினைகளையும் கவனிக்க வேண்டும். இன்றைய நாடுகளில், குடி முறைப் பணியாட்களை, நிருவாகத்திற்கும், குமாஸ்தாவாகவும் தொழில் நுணுக்கத்தினராகவும், திறமை நிறைந்த இயக்குநர் களாகவும், பொதுக் கல்வி பணியாளர்களாகவும் பணியாற்றி வாரம், மாதம் அல்லது வருடாந்திரமாக தங்களது கூலிகளையோ அல்லது வருமானத்தையோ பெறுபவர்கள் என்று சுருக்கமாகக் கூறப்படுகிறார்கள்.

குடிமுறைப் பணியாட்களின் வேலைகள் (Functions of Civil Servants)

குடிமுறைப் பணியாட்கள் நாட்டின் நிருவாகத்திற்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் மறைமுகமாகச் செய்கிறார்கள். அரசியல் செயற்குழுத் தலைவர்கள் இடும் கட்டளைகளை மேற்கொண்டு; தங்களுக்குக் கீழுள்ள அதிகாரிகளை ஏவி, அதனைச் செவ்வனே செயலில் கொண்டுவருகிறார்களா என்று கவனிக்க வேண்டிய பொறுப்பை ஏற்கிறார்கள். முதலாவதாக இவர்கள் அரசியல் செயற்குழுக்களின் அதிகாரங்களை முழு வேகத்துடன் செயல்படுத்த

வேண்டும். இரண்டாவதாக இவர்கள் தங்களைப் பொதுப் பணிக்காக ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். நாட்டு அரசாங்கத்தின் அன்றாட வேலைகளைக் கவனிப்பதும் இவர்களே. தங்களுக்குக் கீழுள்ள அதிகாரிகள் ஒழுங்காகப் பணியாற்றி வருகிறார்களா என் பதனையும் ஆராய வேண்டும். அவர்களது திறமையையும், வேலைகளையும் மேற்பார்வைச் செய்ய வேண்டும். அலுவலகத்தினர், தங்களது கடமைகளைச் செய்யும் பொழுது முறையற்ற முறையில் நடந்துகொள்வார்களேயானால் அவர்களைத் தண்டிக்க வேண்டும்.

குடிமுறைப் பணியாட்களின் அம்சங்கள் (Features of the Civil Services)

முதலாவதாக நாட்டின் பொது அரசியல் நிருவாகத்தை மேற்கொள்ளும் பணி இவர்களுடையதே. நாட்டிற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டுவது, அதற்கு வேண்டிய விவரங்களைச் சேகரித்து, அத் துறை மந்திரிகளுக்குத் தர வேண்டியது, இதைப் போன்ற எல்லாப் பணிகளுமாகும். ஒவ்வொரு துறையிலும் பலவகைப்பட்ட அரசியல் பணியாட்கள் வேலை செய்கின்றனர். அவற்றைப் பொது நிருவாகத்தினர் என்றும், தொழில் சம்பந்தப்பட்ட மருத்துவர், சட்ட நிபுணர், மற்றும், பொறி இயலாளர் என்றும் குமாஸ்தாக்கள் என்றும், பயிற்சிப் பெற்ற வேலையாளர்கள் என்றும், (Skilled workers), பயிற்சிப் பெருத வேலையாளர்கள் என்றும் பிரிக்கப்படுகின்றனர். இவர்கள் அனைவருக்கும் முதன்மையாகத் திகழும் அதிகாரிகளிடம் அதிகமான அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. உண்மையாகக் கூறும்பொழுது, அரசியல் செயற்குழுவினரான மந்திரிகளைவிட, நிலையான செயற்குழுவாகிய குடிமுறைப் பணியாட்களே திறமைசாலிகள். மந்திரிகளின் கட்டளைகளை அப்படியே ஏற்றுக் கொண்டு, இவர்கள் பணியாற்றினாலும், மந்திரிகள் போடும் கட்டளைகளுக்கு வேண்டிய எல்லாச் சாதனங்களையும் சேகரித்துக் கொடுப்பவர்களும் இவர்களே. அவ்வப்பொழுது மந்திரிகளுக்குச் சூழ்நிலையை விளக்கவும், விவரங்களை எடுத்துக்கூறி அவர்களது ஐயங்களைப் போக்குவதும் இவர்களுடைய முக்கியக் கடமையாகும். இவர்கள் பணியாற்றும் திறமையினால் மந்திரிகளுக்கு நிலையான இடத்தை அரசியலில் கொடுக்கவும் முடியும். அதேபோல் இவர்கள் செய்யும் தவறுகளினால் பல மந்திரிகள் பதவியை இழக்கவும் நேரிடும். எப்படிக் குடிமுறைப் பணியாட்கள் அரசாங்க நிருவாகத்திற்கு வேண்டிய எல்லாப் பணிகளைச் செய்து வந்தாலும், அவர்களின் நிலை திரைமறைவானதே. ஆனால் புகழும், சிறப்பும் பெறுபவர்கள் அரசியல் செயற்குழுவாகிய மந்திரி சபையினரேயாகும். அதேபோல் தவறு

கள் நடந்துவிடும் பொழுதும், அதற்கு வேண்டிய தண்டனையை முதலில் பெறுபவர்கள் மந்திரிகளே. அதன் பிறகுதான் குடி முறைப் பணியாட்களின் மீது நடவடிக்கையெடுக்கப்படும்.

இரண்டாவதாகக் குடிமுறைப் பணியாட்களாக, அதுவும் முக்கிய அதிகாரிகளாகவும், முதற்கண் அதிகாரிகளாகவும் நியமிக்கப் படுபவர்கள், அந்தந்தத் துறையில் அனுபவமுள்ளவர்களாக இருக்க வேண்டும். மேலும் எந்தக் கட்சியையோ, அல்லது எத் தகைய ஆளுநர் அல்லது செயற்குழுக்கள் நாட்டில் அமையப் பெற்றாலும், குடிமுறைப் பணியாட்கள் தங்களது கடமைகளைத் தொடர்ந்து செய்து வரவேண்டும். சுருங்கக் கூறின், அரசியல் செயற்குழு நிலையற்றது. ஆனால் குடிமுறைப் பணியாட்கள் நிலை யாக நின்று பணியாற்றும் செயற்குழுவாகும்.

உண்மையான செயற்குழுவான மந்திரிகளுக்கும், நிலையான செயற்குழுவான குடிமுறைப் பணியாட்களுக்கும் மற்றொரு முக்கிய வித்தியாசம் உள்ளது. அதாவது, அரசியல் செயற்குழுக்கள், பாராளுமன்றத்தின் கீழ்ச் சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை யான இடத்தை எக் கட்சிப் பெற்றுள்ளதோ அக் கட்சியினரைச் சேர்ந்தவர்களே ஆளுநராக அமைகின்றனர். இதனால் பாராளு மன்றத்திற்கு அவர்கள் கட்டுப்பட வேண்டியுள்ளது. ஆனால் நிலை யான செயற்குழுவைச் சேர்ந்த குடிமுறைப் பணியாட்கள் விதி களின் படியும், அவர்களது திறமை, அனுபவம் இவற்றின்படி நிய மிக்கப்படுவதால் இவர்கள் தங்கள் விருப்பப்படி சுதந்திரத்துடன் பணியாற்றலாம். இவர்கள் சட்ட மன்றத்தினருக்குக் கட்டுப்பட வேண்டியதில்லை. ஆனால் மந்திரிகளுக்கு, அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமையுண்டு.

அடுத்து, குடிமுறைப் பணியாட்கள் எக் கட்சியையும் சார்ந்த வர்கள் இல்லை. அவர்கள் பணியாற்றும் பொழுது நடுநாயகமாக இருக்க வேண்டும். ஆனால் அரசியல் செயற்குழு கட்சியின் அடிப் படையிலேயே இன்று எல்லா நாடுகளிலும் அமைக்கப்பட்டுச் செயலாற்றி வருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாகக் கம்யூனிச நாடுகளான சைனு, ருஷ்யா போன்றவை இம் முறைக்கு முதற்கண் உதாரணமாகும். குடிமுறைப் பணியாட்கள் நாட்டின் இருதய மாக நின்று உண்மையாகப் பணியாற்ற வேண்டும். இவர்கள் நாட்டின் உண்மை வேலைக்காரர்கள். ஆனால் அரசியல் செயற்குழு வினர் கட்சியின் கருவிகளாவார்.


ஒரு நாட்டிற்கு இவ்வாறு இரண்டு வகை செயற் குழுக்கள் அவசியம் தானு? என்று கேட்கலாம். ஆனால் இந்தக் கேள்வி

கேட்பதே முறையற்றது என்பதை நாம் உணரவேண்டும். இன்றைய உலகில் அனைத்து நாடுகளிலும் ஜனநாயக ஆட்சியே நடக்கிறது. பரம்பரை வழிவந்த மன்னராட்சியோ அல்லது, சர்வாதிகார ஆட்சியோ நடந்த காலத்தில் நாட்டிலுள்ள மற்ற மக்கள் அனைவரும் அடிமைகளாகவே உலகில் வாழ்ந்து வந்தனர். ஆனால் இன்றைய நிலை அப்படியில்லை. ஒரு நாட்டில் பிறந்த ஒவ்வொரு குடிமகனும், அரசியல், சமூகம், பொருளாதாரம் இவைகளில் சுதந்திரம் பெற்றுவிட்டான். அதன் அடையாளமாக அவனுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி இன்று அவன் தனது நாட்டின் தலைவனைத் தேர்ந்தெடுக்கிறான். தேர்ந் தெடுத்த தலைவனோ அல்லது தலைவர்களோ நாட்டு மக்களின் நலனுக்காகப் பாடுபடாமல், தங்கள் விருப்பம் போல் பாடுபடுவார் களேயானால், அவர்களைப் பதவியிலிருந்து நீக்கி மற்றவரைப் பதவி யில் அமர்த்தும் உரிமையை மக்கள் பெற்றிருக்கிறார்கள். ஆகையால் மந்திரிகளாகவோ, அல்லது நாட்டுத் தலைவர்களாகவோ அல்லது சுருக்கமாக உண்மை அரசியல் செயற்குழுக்களாகவோ தங்கள் பதவியில் நிலைத்து நிற்கவேண்டுமென்றால், அவர்கள் மக்களின் நல்வாழ்விற்காகவும், நன்மைக்காகவும் செயலாற்ற வேண்டும். ஆனால் நிலையான செயற்குழு அந்நிலையை உடையது அல்ல. ஒரு முறை பதவி வகித்தால் அவன் ஓய்வு பெறும்வரைத் தனது பதவி யில் நிலையாக இருந்து பணியாற்ற முடியும். இவ்வாறு தொடர்ந்து பணியாற்றும் இந்த நிலையான செயற்குழுவே நாட்டின் பல மான கோட்டையாக மேலைநாடுகளில் கருதுகிறார்கள். மேலும் இவர்களின் மூலமாகவே நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் செம்மைப்படுத்தி, அப் பகுதியினர் குறைகளை நீக்க முடிகிறது. அரசாங்கத்தின் சக்கரங்களான இந்த நிலையான செயற்குழுவினர் பொது மக்களுக்கும், மந்திரிகளுக்கும் நடுகண் நின்று பணி யாற்றி வருகிறார்கள்.

இத்தனைச் சிறப்பு அம்சங்களைப் பெற்றிருக்கும் இந்த நிலையான செயற்குழுவில் குறைபாடுகள் இல்லாமல் இல்லை. தொடர்ந்து பல வருடங்கள் ஒரே மாதிரியான காரியங்களைச் செய்து வருவ தால் அவர்கள் சோம்பேறிகளாக மாறி வெறுப்புடன் பணியாற்ற நேரிடும். இதனால் அரசாங்கத்தின் வேலைகள் தடங்கலாவதுடன், அரசியல் செயற்குழுவிற்கும் கெட்ட பெயரை ஏற்படுத்த ஏது வாகிறது. மேலும் நடைமுறையில் சிகப்பு நாடாமுறை (Red Tapism) கையாளப்பட்டு வேலையைத் தாமதப்படுத்துகிறது, அவரவர்கள் தங்களது பொறுப்புகளை உணராமல், அடுத்தவர் மீது பொறுப்புகளைச் சுமத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பர். இதைத் தவிர தவறான முறைகளைப் பயன்படுத்திப் பணம் சம்பாதித்துக் குற்றவாளிகளாக மாறவும் கூடும்.

பொதுவான நிலையான செயற்குழுவிற்கும், அரசியல் செயற்குழுவிற்கும் அரசினை நடத்தும்பொருட்டு உள்ள பிணைப்பை விளக்கும் அட்டவணை

நிருவாகமும் பொதுத்துறை அலுவலும்
(Administration and Civil Service)



Permanent Executive
(நிலையான அல்லது அலுவலகச் செயற்குழு)

(Secretary)
காரியதரிசி அல்லது செயலாளர்

|

Routine Work
அரசாங்கத்தின் வழக்கமான அன்றாட வேலைகள்

|

Senior Officer (மேலான பதவியாளர்)

|

Junior Officer (இளநிலைப் பதவியிலுள்ளவர்)

|

Superintendent (மேற்பார்வையாளர்)

|

Head Clerk (தலைமைக் குமாஸ்தா)

|

Senior Clerk (மேலான குமாஸ்தா)

|

Junior Clerk (இளநிலைக் குமாஸ்தா)

|

Typist & Steno (தட்டெழுத்தாளரும், சுருக்கெழுத்தாளரும்)

|

Peon (கடைநிலை ஊழியர்)

குடிமுறைப் பணியாட்களின் பலவகைப் பிரிவினைகளும், நிலையான செயற்குழுவுமே, அரசாங்கத்தின் அன்றாட வேலைகளைக் கவனிக்கிறது.

2. மேலை நாடுகளின் நிலையான செயற்குழுக்களின் நிலை

(Permanent Executives in Western Countries)

நிலையான செயற்குழுக்களின் வேலைகள், மற்றும் அதனைப் பற்றிய எல்லா விவரங்களையும் முற்பகுதியில் கண்டோம். இனி இங்கே இந்த நிலையான செயற்குழுக்கள் அல்லது குடிமுறைப் பணியாட்களின் நிலை இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு, நாடுகளில் எப்படியுள்ளது என்பதை நாம் தெரிந்து கொள்ளுவோம்.

இங்கிலாந்து நாட்டின் குடிமுறைப் பணி (Civil Service in England)

இங்கிலாந்து நாட்டு அரசாங்கப் பணியாட்களைக் குடிமுறைப் பணியாட்கள் என்று குறிப்பிடுகிறோம். அரசாங்கம் முறையாக நடப்பதற்கான எல்லாவிதமான விவரங்களையும், மந்திரிகளின் கட்டளைகளையும் ஏற்றுக்கொண்டு அதன்படிச் செயலாற்றுவதும், நாட்டின் அன்றாட காரியங்களை ஒழுங்காகச் செய்வதும், நாட்டிற்கு வேண்டிய திட்டங்களை வகுக்க பல வழிகளிலும் மந்திரிகளுக்கு உதவியாக இருந்து பணிபுரிவதும் இவர்களது கடமையாகும். நாட்டினுடைய உண்மையான பரிபாலனத்தை இவர்களே மறைமுகமாகச் செய்து வருகிறார்கள் என்று கூறினால் மிகையாகாது.

1855-ம் ஆண்டிற்கு முன்பு, இங்கிலாந்து நாட்டில் குடிமுறைப் பணி செவ்வனே நடந்ததாகத் தெரியவில்லை. இதனை 1849-ம் ஆண்டு கருவூலம் செயலாளராக (Secretary of the Treasury) பணியாற்றிய சர். சார்லஸ் டிரிவிலியன் (Sir. Charles Trevelyan) என்பவர் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்டதாவது குடிமுறைப் பணியாட்களின் எண்ணிக்கை அளவிற்கு அதிகமாக அரசாங்கத் துறைகளில் இருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் வேலைகளில் சுறுசுறுப்பற்றவர்களாகவும், சரியான வேலைகளுக்குத்

தகுதியற்றவர்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் இந்த அரசியல் துறையினின்றும் வேறுபட்டு வேறு எங்காவது வேலைகளுக்குச் செல்வார்களேயாயின், அவர்களது நிலை மிகவும் மோசமானதாக இருக்கும் என்று கூறினர். ஆகையால் 1855-ம் ஆண்டு மே மாதம் குடிமுறைப் பணியாட்களின் நியமனம் மற்றும் அவர்களை எப்படித் தேர்ந்தெடுப்பது, இவை போன்ற ஒரு புரட்சி தோற்றுவிக்கப் பட்டது.

இப் புரட்சியில் குடிமுறைப் பணியாட்களின் கடமைகள் என்னென்ன என்பதனையும் அழகாகத் தெளிவுபடுத்திக் கூறப்பட்டுள்ளது. முதலாவதாகக் குடிமுறைப் பணியாளராகப் பணியாற்ற வருபவர்கள், நிடுநிலை ஊழியர்களாக இருந்து பணியாற்ற வேண்டும் என்றும், இரண்டாவதாக அவர்களுடைய சொந்த நோக்கங்களோ, வகுப்புப் பொறுப்புகளோ வெளிப்படுத்தக் கூடாது என்றும், மூன்றாவதாக எக் கட்சியின் கொள்கைகளுக்கும் அப்பாற்பட்டவர்களாக அரசாங்கத்தில் பணியாற்ற வேண்டுமென்றும் விதிகளை வகுத்தனர். இதைத் தவிர இப் புரட்சிக்குப் பிறகு, மிகச் சிறந்த முறையில் அரசாங்கத்தில் பல்வகைப்பட்ட பணியாட்களைத் தேர்ந்தெடுத்தனர்.

இங்கிலாந்து நாட்டில் குடிமுறைப் பணியாட்களைத் தேர்ந்தெடுக்கும் முறை (Method of selection)

பொதுவாகக் குடிமுறைப் பணியாட்களை நான்கு வகைகளாகப் பிரித்துள்ளனர். அவைகள் 1. பரிபாலனம் செய்பவர்கள் (Administrative class) 2. செயற்குழு வகுப்பு (The Executive class) 3. எழுத்தாளர்கள் வகுப்பு (The Clerical class) மற்றும் 4. தொழில், விஞ்ஞான, தொழில் நுட்பாளர்கள் வகுப்பு என்பனவாகும். இந்தக் குடிமுறைப் பணியாட்களை நியமனம் செய்வதற்கென்று குடிமுறைப் பணியாளர் தேர்வுக்குழு (Civil Service Commission) என்று ஒன்றை ஏற்படுத்தினர். இவற்றில் தேர்வு நடத்துவதற்கென்று ‘மத்திய தேர்வுக் குழுவினர்’ (Central Board of examiners) என்று ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலமாகக் குடிமுறைப் பணியாட்களின் பல்வகைப்பட்ட தேர்வுகளை நடத்துகிறார்கள். இந்தக் குழுவில் இடம் வகிக்கும் நபர்களின் எண்ணிக்கை அப்போதைக்கப்போது மாறுபடும். இந்தக் குழுவே, பணியாட்களின் வயது, உடல்நிலை, நடத்தை, அறிவுத்திறன், திறமை மற்றும் அனைத்தும், பெற்றிருக்கிறார்களா என்பதனை ஆராய்ந்து அவர்களுக்குத் தக்கபடி வேலைகள் கொடுத்து நியமனம் செய்வார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்

படுவதற்கு முன்பு, அவர்களுக்கென்று எழுத்தின் மூலமாக ஒரு தேர்வு நடத்தப்படும். இத் தேர்வு எட்டுப் பாகங்களுடையதாக இருக்கும். இவற்றில் மூன்று பாகங்கள், ஆங்கில மொழியுடைய தாகவும். மற்ற ஐந்து பாகங்கள், அவரவர்களின் துறையைச் சேர்ந்ததாகவும் இருக்கும். இவ்வாறு எழுதப்பட்ட தேர்வில் குறிப்பிட்ட எண்களைப் பெற்றிருந்த நபர்கள், நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள். இந்த நேர்முகத் தேர்வின் பொழுது, ஒவ்வொரு நபரைப் பற்றிய எல்லா விதமான உண்மை களையும் அறிந்துக் கொண்டு வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார் கள். பொதுவாக இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் வயது இருபத்து நான்கிற்குள் இருக்க வேண்டும். 1925-ம் ஆண்டுமுதல் பெண்களும் இந்தத் தேர்வுகளில் கலந்து கொள்ள வாய்ப் பளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், ஒரு குறிப்பிட்ட காலம்வரை தகுதி காணும் பருவத்தின ராக (Probationers) பணியாற்ற வேண்டும். இவ்வாறு திறமையை வைத்து, உண்மையாகத் தேர்ந்தெடுக்கப்படும், குடி முறைப் பணியாட்களின் தொண்டு அரசாங்கத்தின் அன்றாட வேலைகளுக்கு இன்றியமையாதது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இனி இந்தக் குடிமுறைப் பணியாட்களுக்கும், அரசியல் செயற் குழுவிற்கும் உள்ள தொடர்புகள் என்னென்ன என்பதனை ஆராய்வோம். குடிமுறைப் பணியாளர்களில், மிக உயர்ந்த பதவி வகிக்கும் அதிகாரிகள் மந்திரிகளுக்கு அடுத்தபடியாக இருக்கிறார் கள். இவர்களே ஒவ்வொரு துறைக்கும் நிலையான அதிகாரிகளா கவும், செயற்குழுவினராகவும் கருதப்படுகிறார்கள். நாட்டிற்கு வேண்டிய எல்லாத் திட்டங்களைத் தீட்டுவதற்கும், சட்டமன்றத்து உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கும், மந்திரிகள் அளிக்கும் விடைகளுக்கும் வேண்டிய எல்லா விவரங்களையும் சேகரித்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்தக் குடிமுறைப் பணியாட்களு டையதே. ஒரு துறையின் ஒவ்வொரு சிறிய, பெரிய விவரங்களை நன்கு ஆராய்ந்து, சேகரித்து, ஒழுங்குபடுத்தி அத் துறை மந்திரிக்குக் கொடுக்க வேண்டியதும், இவர்களுடைய கடமையாகும். இந்த நிலையான செயற்குழு, நாட்டின் சட்டமன்ற உறுப்பினருக்கு எந்த விதத்திலும் கட்டுப்பட வேண்டிய அவசியமில்லை. இருந்த போதி லும், இங்கிலாந்து நாட்டின் இன்றைய அரசியலில், சட்டமன்ற குழுக்களில், இந்தக் குடிமுறைப் பணியாட்களின் முக்கிய பெரிய அதிகாரிகள் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றார்கள். உயர் அதி காரிகள் தங்களுக்குக் கீழுள்ள பல்வகைப் பட்ட சிறிய அதிகாரிகளு டனும், குமாஸ்தாக்கள் மற்றும் பலருடனும் இணைந்து செயல் புரிந்து, மந்திரிகளின் கட்டளைகளை நிறைவேற்றுகின்றார்கள்.

இங்கிலாந்து நாட்டின் குடிமுறைப் பணியாட்களின் உரிமைகள் (Rights of the civil servants)

'வொயிட்லி கவுன்சில்' (Whitely Council) என்ற ஒரு கூட்டத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் குடிமுறைப் பணியாட்களின் நிலைமையையும், தற்காப்பையும் காத்து வருகிறார்கள். 1947-ல் ஏற்படுத்தப்பட்ட அரச சாசனத்தின்படி குடிமுறைப் பணியாட்களின் மீது சாட்டப்படும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும், பதவியிலிருந்து அவர்களை எடுத்து விட்ட பிறகு மேற்கொள்ள முடியாது. மேலும், ஓர் அதிகாரியின் மீது குற்றம் சுமத்தப்பட்டு, அவர்களை விசாரணைக்குக் கொண்டு வருவதற்கு முன்பு, அதனைப் பற்றி முழு விவரங்களையும் அந்த அதிகாரிக்குத் தெரியப்படுத்த வேண்டும். அவ்வாறு ஓர் அதிகாரியின் மீதோ அல்லது எந்த அரசாங்க ஊழியர் மீதோ சுமத்தப்படும் குற்றங்கள் ஆதாரங்களைப் பெற்றதாகவும் நிரூபிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் நோக்கும் பொழுது, இங்கிலாந்து நாட்டின் குடிமுறைப் பணியாட்களின் நிலை உயர்வாக உள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அமெரிக்க நாட்டுக் குடிமுறைப் பணி (Civil Service in the United States)

அமெரிக்க நாட்டுக் குடிமுறைப் பணியாட்களைத் தேர்ந்தெடுத்து விலக்கும் முறையை 'ஸ்பாயல்ஸ்' (Spoils) முறை என்று கூறுகிறார்கள். இந்த முறையின்படி வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அமெரிக்க நாட்டுத் தலைவரின் விருப்பப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இந்த முறை 1883-க்கு முன் கையாளப்பட்டு வந்த போதிலும், இம் முறை படிப்படியாகச் சீர்குலைந்து விட்டது. அதற்கு முக்கியக் காரணங்கள் தனி ஒருவரின் விருப்பத்திற்கு இணங்க தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரிகள் திறமை மிக்கவர்களாக இருப்பார்கள் என்பது சந்தேகமே. மேலும் தோழமையின் காரணமாகச் சிலர் செய்யும் குறைகளை மறைக்கவும், நடவடிக்கைகள் எடுக்கவும் முடியாமல் போகவேண்டிய நிலைமை உருவாகிறது. மேலும், கட்சிகளின் வலு அதிகரித்துவிடுகிறது. இவ்வாறு நியமிக்கப்படும் அதிகாரிகள், நாட்டுத் தலைவரின் குடும்பத்தினர் என்று கேலியாகக் கூறப்படுகிறது. ஏனெனில் தலைவரின் விருப்பத்தின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவரும், அவரவர்கள் திறமையைக் காட்ட முடியாமல், தலைவரின் அடிமைகளாகவே பணியாற்ற வேண்டியுள்ளது. இவ்வாறு நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் நிலைமை, பொதுத் தேர்தலுக்குப் பிறகு பாதிக்கப்படுகிறது. அதாவது பழைய தலைவரே,

மறுபடியும் நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், இந்த அதிகாரிகளின் நிலைமை நிலையாக இருக்கும். அப்படி அவர்கள் மாறிவிடுவார்களேயாயின், இந்த அதிகாரிகளும், பெரும்பாலும் புதிய தலைவருக்குத் தக்கவாறு மாற்றப்படுவார்கள். இவ்வாறு மாற்றப்படுவதால் நாட்டின் பரிபாலனம் செவ்வனே நடைபெற தடைபடுகிறது என்பதும், இது நீதியற்ற முறையென்பதும் உண்மையாகும். சுருங்கக் கூறின் இந்த 'ஸ்பாயல்ஸ்' முறையின்படி, அரசாங்கப் பணியாட்களின் நிலை, கட்சியைச் சார்ந்ததாகவும், நிலையற்றதாகவும் உள்ளது.

இந்த முறையை மாற்றி, குடிமுறைப் பணியாட்களுக்கு ஒரு நிலையான இடத்தை அளிக்கும் பொருட்டு, 1883-ல் ஒரு சட்டம் உருவாக்கப்பட்டது. அதன்படி 'குடிமுறைப் பணிக் குழு' ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. இதனை நாட்டின் தலைவர், செனேட்டார்களின் அங்கீகாரம் பெற்றுத் தோற்றுவித்தார். இக் குழுவில் மூன்று நபர்கள் இடம் பெறுவார்கள். அவர்களில் இரண்டிற்கு மேல், தலைவரின் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கக் கூடாது. தலைவரின் ஆலோசனையைக் கேட்டு, குடிமுறைப் பணியாட்களுக்கென்று சில விதிகளை நியமித்தார்கள். அதன்படி 1. இவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது தேர்வுகள் நடத்த வேண்டும் என்றும், 2. அந்தக் குடிமுறைப் பணியாட்களின் தேர்வுக் குழுவினரே, தேர்வுகளை மதிப்பிட்டு, அவரவர்களின் திறமையை ஆராய்ந்து வேலைகளில் நியமிக்க வேண்டுமென்றும், 3. தேர்வில் யார் யார் எந்தெந்த இடத்தைப் பெறுகின்றனரோ அதன்படியே வேலை வாய்ப்பைப் பெற வேண்டுமென்றும், 4, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், ஒரு குறித்த காலம்வரை காணும் பருவத்தினராக (Probationer) பணியாற்ற வேண்டும் என்றும், 5. வருடத்திற்கு ஒருமுறை ஒரு விரிவான உரையை எழுதி தலைவரிடம் கொடுக்க வேண்டுமென்றும் விதிகள் வகுக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி, குடிமுறைப் பணியாட்களை நியமிக்கும் முழு பொறுப்பும் நாட்டின் தலைவரிடமே கொடுக்கப்பட்டுள்ளது என்பது நன்கு தெரிகிறது.

இந்தச் சட்டத்திற்குப் பிறகு அமெரிக்க நாட்டில் 'ஹூவர் கமிஷன்' (Hoover Commission) என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டு நாட்டின் நிருவாகத்துறைகளைப் பற்றி ஆராய்ந்தனர், இந்த ஆராய்ச்சியின் பயனாக, குடிமுறைப் பணியாட்கள் 'ஸ்பாயல்ஸ்' முறையினின்றும் சிறிது விடுபட்டுள்ளனர். தேர்ந்தெடுக்கப்பட்ட குடிமுறைப் பணியாட்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும்

'பொது நிருவாகம்' (Public Administration) என்ற புது கல்வியே இன்று அமெரிக்க நாட்டில் கல்வித் துறையில் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இவ்வாறு பல வகையிலும், பொதுப் பணியாளர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு, இன்று தலைசிறந்த குடிமுறைப் பணியாட்களை, அமெரிக்க நாட்டு அரசியல் துறைகள் பெற்றிருக்கின்றன. 1938-ம் ஆண்டு நாட்டின் தலைவர், இந்தக் குடிமுறைப் பணியாட்களுக்கென்று ஒரு பயிற்சி நிலையம், கல்வி நிலையத்தின் உதவியுடன் ஆரம்பிக்கக் கட்டளையிட்டார். அதற்கு முதன் முதலில் அமெரிக்க நாட்டுச் சட்டமன்றமான காங்கிரஸிடமிருந்து (Congress) எதிர்ப்பே கிடைத்தது. ஆனால் பின்னால் இந்தக் கட்டளை நிறைவேற்றப்பட்டு, இன்று உயர் அதிகாரிகள் தனிப் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

இந்த நாட்டுக் குடிமுறைப் பணியாட்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு நாட்டின் தலைவரிடமேயுள்ளது. இன்று இவர்களது நிலை உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. இவர்களது அலுவலகத்திலிருந்து இவர்களை நீக்க வேண்டுமென்றால், மற்ற மக்களாட்சி நாடுகளில், குடிமுறைப் பணியாட்களை எவ்வாறு நீக்குகிறார்களோ அதே முறைதான் இன்று அமெரிக்க நாட்டிலும் கையாளப்பட்டு வருகிறது. குற்றம் சாட்டப்பட்ட எந்தக் குடிப் பணியாளும், சட்டத்தின் முன் நிரூபிக்கப்பட்ட பின்பே பதவியிழக்க நேரிடும். இவர்களின் குற்றச்சாட்டுகளைக் கவனித்து, ஆராய்ந்து, விசாரணைச் செய்ய வேண்டிய பொறுப்பு, காங்கிரஸின் மேல் சபையான 'செனேட்'டிடம் விடப்பட்டுள்ளது. இவ்வளவு மாறுதல்கள் இருந்த போதிலும், அமெரிக்க நாட்டுத் தலைவருக்கு உள்ள அதிகப்படியான செயற்குழு அதிகாரத்தினால், எந்தக் குடிமுறைப் பணியாட்களை நியமிக்கவும், வேலையினின்றி எடுக்கவும் முடியும்.

பிரான்சு நாட்டுக் குடிமுறைப் பணி (Civil Service in France)

பிரான்சு நாட்டின் நிருவாகம் அலுவலர்களைக் கொண்டே நடைபெறுகிறது. நிருவாகத் துறைகளுக்கு அமைச்சர்கள் தலைவராயிருப்பினும் தினசரி நடவடிக்கையாவும் அலுவலர் மூலமே நடைபெறுகின்றன. இவ் விஷயத்தில் இங்கிலாந்து, பிரான்சு இவை இரண்டும் ஒன்று போலவே அமைந்துள்ளது. இவ் அலுவலர்கள் நிலையானவர்கள். அமைச்சரவை மாறலாம், ஆனால் இவர்கள் மாறுவதில்லை. அரசு முறைகள் மாறலாம், ஆனால் அலுவலர்கள் மாறுவதில்லை. எனவேதான் 'பால்டெஸ்சேனல்' (Paul Deschanel) என்பவர், பிரான்சு நாட்டில் மக்களாட்சியில்லை, அலுவலர்களின் ஆட்சி நடைபெறுகின்றது என்று கூறி

யுள்ளார். அமைச்சர்கள் நிருவாகக் கொள்கைகளை நிர்ணயிக்கின்றனர். அக் கொள்கைகளைச் செயல்படுத்துவதில் அலுவலர்களே எல்லாப் பங்கையும் பெறுகின்றனர்.

பிரான்சு நாட்டில் நிருவாகம் நல்ல முறையில் அமைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்கும் ஓர் இயக்குநர் உள்ளார். அவருக்குக் கீழ் பலபேர் பணியாற்றுகிறார்கள். அமைச்சருக்கு அறிவுரை கூறவும், ஆலோசனைகள் சொல்லவும் ஒரு தலைமை அலுவலர் உண்டு. அவருக்குப் பல துணை அலுவலர்கள் நியமிக் கப்படுகின்றனர். துறை இயக்குநர் கீழ்ப்பதவியிலிருந்து உயர் வடைந்தவராய் இருப்பார். ஒவ்வொரு துறையும் பல மாவட்டப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டப் பிரிவிற்கும் ஒரு தலைவர் உண்டு. அவருக்குக் கீழும் பலர் பணிபுரி கின்றனர்.

பிரான்சு நாட்டில், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ளது போன்று ஆட்சிப் பணி சட்டம் ஒன்றும் இல்லை. அத்தகைய ஒரு சட்டம் உண்டாக்க வேண்டும் என்ற முயற்சி பல தடவைகள் தோல்வி யுற்றது. ஆனால் அலுவலர்களைப் பற்றிய நிபந்தனைகள் யாவும் அவ்வப்போது ஏற்படுத்தப் பெறும் விதி முறைகளால் வகுக்கப்படுகின்றன. இவ் விதிகள் நாட்டுக் குழுவின் (Council of State) ஒப்புதலைப் பெற்று அமைச்சரவையால் உண்டாக்கப் படுகின்றன. நிருவாகத்தின் கீழ்ப்படியில் உள்ள பணிகளுக்குத் தேர்வு மூலம் அலுவலர் நியமிக்கப்படுகின்றனர். தலைமைப் பதவி கள் தவிர மற்றவை உயர்வின் மூலமேதான் கிடைக்கும். உயர்வுகள் அமைச்சரால் கொடுக்கப்படுகின்றன. நெடுநாள் பணியாற்றியது மட்டுமின்றி, திறமையும், உயர்வின் போது கவனிக்கப்படுகிறது. அதே சமயம் சிபாரிசுகளும், மற்றக் கருத்துகளும் பதவி உயர்வு அளிப்பதில் பங்கு பெறாமல் போவதில்லை. அலுவலர்கள் யாவரும் பதவி நீக்கத்தினின்றும், அனாவசியத் தண்டனைகளினின்றும் வெகு வாகப் பாதுகாக்கப்படுகின்றனர். அவர்களைப் பற்றிய வழக்குகள் 'ஒழுக்கக் குழு' (Commission of Discipline) என்பதால் ஆராயப் படும். ஒவ்வொரு துறைக்கும் தக்க ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு, அத் துறை மந்திரிக்கு மட்டுமே உண்டு.

பொதுவாகப் பிரான்சு நாட்டு நிருவாக அலுவலர்கள் மிக்க திறம் படைத்தவராய் உள்ளனர். சம்பளம் குறைவாயிருப்பினும், சிறந்த அறிவும் திறனும் பெற்ற பல இளைஞர்கள் அலுவலராகப் பணியாற்ற வருகின்றனர். அப் பணிகளைப் பொறுத்து அவர் களுக்குச் சமூகத்தில் உண்டாகும் மதிப்பினால் சம்பளக் குறைவைப்

பற்றி அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை. மேலும் ஓய்வு பெற்ற பணியாட்களுக்கு நல்ல சலுகைகள் உள்ளன. ஆகையால்தான் பிரான்சு நாட்டின் தனியார் துறைகளில் அதிக ஊதியம் கிடைத்த போதிலும், இளைஞர்கள் அரசியல் துறையையே நாடுகின்றனர். இதனால்தான் பிரான்சு நாட்டில் அரசியற் செயற்குழு நிலையற்று அடிக்கடி மாறுபட்டபோதிலும் நிருவாகம் ஒழுங்காக நடைபெற்று விடுகிறது. இதற்கு முக்கிய காரணம், பிரான்சு நாட்டுக் குடி முறைப் பணியாட்கள்தான் என்று கூறவும் வேண்டுமோ.

மேலே கூறிய இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு நாடுகளின் உண்மையான செயற்குழுக்களின் நிலைமையை, நிலையான செயற் குழுக்களுடன் நாம் ஒன்றாகச் சேர்த்து ஆராயும் பொழுது, இவை களில் உள்ள வேறுபாடுகள் நன்கு புலனாகிறது. முதலாவதாக இங்கிலாந்து, பிரான்சு நாடுகளில் குடிமுறைப் பணியாட்களின் நிலை உறுதி வாய்ந்ததாகவும், கட்சி சார்பற்றதாகவும், பெருமதிப்பு உடையதாகவும் உள்ளது. ஆனால் அமெரிக்க நாட்டுக் குடிமுறைப் பணியாட்களின் நிலை, நாட்டுத் தலைவரின் விதிப்படியும், நிலையற்ற தாகவும் இருக்கிறது. இரண்டாவதாக ஒரு சில உயர் பதவிகளைத் தவிர, மற்றெல்லாப் பதவிகளுக்கும் தேர்வுகள் நடத்தியே அரசாங்க பணியாட்களை இங்கிலாந்து, பிரான்சு நாடுகளில் தேர்ந்தெடுக் கிறார்கள். ஆனால் அமெரிக்க நாட்டில் தேர்வுகள் சாதாரண அரசியல் பணியாட்களுக்கு மட்டுமே நடத்தப்படுகிறது. மற்ற மிக உயர்ந்த அதிகாரிகளான, அரசாங்கத்துறை செயலாளர்கள், மற்றும் பல உயர் அதிகாரிகளையும் நியமிக்கும் பொறுப்பு அமெரிக்க நாட்டுத் தலைவரைப் பொறுத்ததே. மேலும் உயர் குடிமுறைப் பணியாட்கள் இங்கிலாந்திலும், பிரான்சு நாட்டிலும் திறமையும், நல்ல புதிய கருத்துகளை மந்திரிகளுக்குக் கூறவும் இடமிருக்கிறது. ஆனால் அமெரிக்க நாட்டுச் செயலாளர்களின் நிலை இவ்விடத்தில் கட்டுப்பாடுகள் நிறைந்ததாகவும், சுதந்திரமற்றதாகவும் உள்ளது. இன்றைய அரசியலில் இங்கிலாந்து நாட்டு முறை பெரும்பாலான நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகிறது. அமெரிக்க நாட்டு முறை ஒரு சில நாடுகளில் மட்டுமே பின்பற்றப்பட்டு வருகிறது. ஆயினும் மக் களாட்சி முறையை ஒழுங்காக மேற்கொள்ளும் நாடுகளில் இங்கி லாந்து நாட்டு முறையே சிறந்த இடத்தைப் பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

3. ஆசிய நாடுகளின் நிலையான செயற்குழுக்களின் நிலை
(Permanent Executive in Asian States)

1. ஜப்பான் நாட்டு நிலையான செயற்குழு (Permanent Executive (or) Civil Service in Japan)

நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்களால் அரசாங்கத்தின் நிருவாகம் நடத்தப்படுவது என்பது ஜப்பானில் தொன்று தொட்டு கடைபிடிக்கப்பட்டு வரும் வழக்கம் என்று சொல்லலாம். அதிகார வர்க்கத்தின் செல்வாக்கு அரசியல் கட்சிகளுடைய தலையீடு யில்லாமல் வளர்ந்தது. மாஜி மீட்சிக்குக் காரணமாக இருந்த 'சமுராய்' என்று வழங்கப்பட்ட போர்வீரர் வகுப்பே மீட்சிக்குப் பிறகு தேசத்தின் நிருவாத்திலும் முக்கிய பங்குபெற்றது. 1885-ல் அரசாங்கப் பதவிகளுக்கு நியமனம் செய்யப் பரீட்சைகள் வைத்துத் திறமை மிக்கவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டு 1887-ல் இரண்டாம், மூன்றும் தர உத்தி யோகஸ்தர்களுக்குப் பரீட்சைகள் வைக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டது.

மாஜி அரசியலமைப்பில் நிருவாகத்துறை, உயர்தர உத்தி யோகஸ்தர்கள், சாதாரண உத்தியோகஸ்தர்கள் என்று இரண்டு வகுப்பாகப் பிரிக்கப்பட்டிருந்தது. உயர்தர உத்தியோகஸ்தர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டார்கள். காபினட் மந்திரிகள், தூதர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், உயர்தர உத்தியோகஸ்தர் கள் ஆனார்கள். உப மந்திரிகள், இலாக்கா தலைமை உத்தியோகஸ் தர்கள், கீழ்மன்ற நீதிபதிகள் ஆகியோர் இரண்டாம் தர உத்தி யோகஸ்தர்கள் ஆவார்கள். மற்றக் கீழ்ப் பதவிகளை வகித்தவர்கள் மூன்றும்தர உத்தியோகஸ்தர்கள். அரசாங்க உத்தியோகத்தில் 5 சதவீதமே உயர்தர குடிமுறைப் பணியைச் சேர்ந்தவர்கள். சாதாரணக் குடிமுறைப் பணியாட்களான நான்காந்தர உத்தி

யோகஸ்தர்களையும் பாகுபாடு செய்யப்படாத (Unclassified) உத்தியோகஸ்தர்களையும் கொண்டது. உத்தியோகஸ்தர்களில் நான்கில் மூன்று பங்கு பாகுபாடு செய்யப்படாத பகுதியைச் சேர்ந்தவராவர்.

முதல்தர உத்தியோகஸ்தர்கள் தவிர மற்ற உயர்தரப் பதவிகளுக்குப் போட்டிப் பரீட்சைகள் மூலம் நியமனம் செய்யப்பட்டது. இப் போட்டிப் பரீட்சை பெரும்பாலும் டோக்கியோ சாம்ராஜ்யப் பல்கலைக்கழகச் (Tokyo Imperial University) சட்டத்துறை அங்கத்தினர்களைக் கொண்ட கமிட்டியால் வருடா வருடம் டோக்கியோவில் நடத்தப்பட்டது. இந்தப் பல்கலைக்கழகம்தான் முதலில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குப் பயிற்சி அளித்தது. பெரும்பாலும் சட்டப் பாடங்களில் பரீட்சைகள் வைக்கப்பட்டதால் சாம்ராஜ்ய பல்கலைக்கழகப் பட்டதாரிகள் தேருவதற்கு நல்ல வாய்ப்புக் கொடுத்தது. உயர்ந்த பதவிகளில் பெருவாரியாக அவர்களே இடம் பெற்றுர்கள்.

சாதாரண குடிமுறைப் பணியாட்கள் பரீட்சைகளுக்கு உயர் தரப் பட்டதாரிகளே போட்டியிட்டார்கள். இவர்களே அரசாங்கத்தின் அன்றுட அலுவல்களைக் கவனித்து வந்தார்கள். ஆனுல் இவர்களுக்கு, உயர்ந்த பதவிகளில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு இருந்த மரியாதையோ, அந்தஸ்தோ இல்லை. இவர்களுக்கு உத்தியோக உயர்வுபெறுவதற்கும் வாய்ப்பில்லை. இதனுல் ஜப்பானிய குடிமுறைப் பணியில் உயர்வுதாழ்வு மனப்பான்மை அதிகமாக இருந்தது. இதனுல் போட்டிகள் மிகுந்தன. ஒத்துழைப்புக் குறைந்தது.

ஜப்பானிய மக்களிடம் அதிகார வர்க்கத்தின் உறவுகள் சுமூகமாக இல்லை. மாஜி அமைப்பில் அதிகாரிகள் பேரரசபைக்குப் பொறுப்புள்ளவர்களாய் இருக்க வேண்டுமே யல்லாது, மக்களுக்குப் பொறுப்புள்ளவர்களாய் இருக்கவேண்டியதில்லை. இது இவர்களுக்கு ஒரு முக்கியத்துவத்தைக் கொடுத்ததோடல்லாமல் அவர்களை யாருக்கும் பொறுப்பற்றவர்களாக்கி விட்டது. பொதுவாக ஜப்பானிய அரசாங்கப் பணியாட்கள் கர்வம் பிடித்தவர்கள் என்றும் மக்களைத் துச்சமாக எண்ணுகிறவர்கள் என்றும் பெயர் வாங்கி இருக்கிறுர்கள். அதிகார வர்க்கத்தினர் பொதுமக்கள் உறவுகளில் கவனம் செலுத்தாததே இதற்கு முக்கியக் காரணமாகும்.

புதிய அரசியல் திட்டத்தில் நிருவாகத்துறைப் பற்றி ஒன்றும் விசேஷமாகக் குறிப்பிடப்படாத போதிலும் நிருவாகத் துறைக்குச் சில சிறிய குறிக்கோள்களை அரசியல் திட்டம் அளிக்கிறது. அரசியல்

திட்டம் ஜீவாதார உரிமைகள் அத்தியாயத்தில் எல்லா அரசாங்க உத்தியோகஸ்தர்களும் சமுதாய ஊழியர்கள் என்றும், மக்களுக்கு உத்தியோகஸ்தர்களின் மீது ஏதாவது குறை இருந்தால் அதை நிவர்த்தி செய்ய அரசாங்கத்திடம் விண்ணப்பித்துக்கொள்ளலாம் என்றும் குறிப்பிடுகிறது. நிருவாகத் துறையும் மற்றத் துறைகளைப் போல அரசியலமைப்புத் திட்டத்திற்கு உட்பட்டு இயங்க வேண்டும் என்பதை அரசியல் திட்டம் பல இடங்களில் வலியுறுத்துகிறது. நீதிமன்றங்களுக்கு, நிருவாகத்துறை அரசியல் திட்டத்திற்கு உட்பட்டு இயங்குகின்றதா என்பதை கவனிக்கவும், இயலா விட்டால் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

அரசியல் திட்டம் நிருவாகத்துறையின் மனப்பான்மையை மாற்றுவதற்கு முயன்றபோதிலும், அவ்வாறு மாற்றுவது எளிதான காரியமன்று. அதிகார வர்க்கத்தின் ஆதிபத்தியம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு இராணுவத் தலைவர்களும், கட்சித் தலைவர்களும் தலைமைப் பதவிகளினின்றும் நீக்கப்பட்டதால் அவர்கள் அனுபவம் காரண மாகத் தேசத்திற்குத் தலைமை தாங்குவதற்கு அதிகார வர்க்கத் தினரே தகுதி உள்ளவராய் இருந்தனர். ஓய்வு பெற்ற அதிகாரி கள் கட்சித் தலைவர்களாய் மாறினர். அரசியல் கட்சிகளும் அவர் களுக்கு வரவேற்பளித்தது. மேலும் அமெரிக்க இராணுவத் தலைவர் களின் தூண்டுதலால் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் அமுலாக்குவதற்கு நிருவாகத்துறையின் உதவி அவசியமாய் இருந்தது. ஆட்சி அமைப்பில் பலமாக ஊன்றியிருந்ததால் மக்க ளாட்சிப் பாதையில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் அதிகார வர்க்கத்தை விசேஷமாகப் பாதிக்கவில்லை.

1948-ல் தேசியப் பாதுகாப்பணிச் சட்டம் (National Public Service Law) என்று ஒன்று உருவாக்கப்பட்டது. புதுச் சட்டத்தின் நோக்கம் ஜனநாயக அடிப்படையில் திறமை மிக்க நிருவாகத்தை ஏற்படுத்தும்படி புதிய சட்டம், பொதுப் பண்பைச் சாதாரண பணிகள், விசேடப் பணிகள்' என்று இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கிறது. விசேடப் பணி என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களையும், பரீட்சையின்றி நியமிக்கப்படும் உத்தியோகஸ் தர்களையும் கொண்டது. உதாரணமாக அமைச்சரவை, தேசியப் பணியாளர் நிறுவனம், கணக்குத் தணிக்கைபோர்டு தூதர்கள், நீதிபதிகள் போன்றோராவர். தேசியப் பொதுப் பணிச் சட்டம் அவர்களுக்குப் பயன்படுத்தப்படமாட்டாது.

இந்தச் சட்டத்தை அமுலாக்குவதற்குத் தேசியப் பணியாளர் ஸ்தாபனத்தை (National Personal Authority) ஏற்படுத்தியிருக்கிறது. இந்த ஸ்தாபனம் அமைச்சரவையின் அதிகாரத்தின் கீழிருக்கிறது. அவ்வப்பொழுது பிரதம மந்திரிக்கும், அமைச்சரவைக்கும் வருடமொருமுறை 'டயட்டிற்கும்' (Diet) அறிக்கைகள் சமர்ப்பிக்கிறது. இது மூன்று உறுப்பினர்களைக் கொண்டது. இவர்கள் பாராளுமன்றத்தின் ஒப்புதலின் பேரில் நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுள் ஒருவரைத் தலைவராக நியமிக்கிறது. மற்ற இரண்டு பேரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவராகவோ அல்லது ஒரே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரே துறையிலிருந்து வந்த பட்டதாரிகளாகவோ இருக்கக் கூடாது. நியமனத்திற்கு 5 வருடத்திற்கு முன் முக்கியமான பொறுப்புகளை அரசியல் கட்சியில் வகித்திருக்கக் கூடாது. இவர்களின் பதவிக்காலம் நான்கு வருடம். இவர்கள் இரண்டுமுறை பதவி வகிக்கலாம். குறிப்பிட்ட சில காரணங்களால் அமைச்சரவை இவர்களைப் பதவயிலிருந்து நீக்கி விட முடியும்.

தேசியப் பணியாளர் ஸ்தாபனம் ஒரு பொது இயக்குநரைக் கொண்டுள்ளது. அவரே அதனுடைய தலைவராகவும், அதனுடைய முக்கிய கூட்டங்களில் பங்கு கொண்டு செயலாற்றுபவராக இருக்கிறார். பல அரசாங்கத் துறைகளின் இயக்குநர்களைக் கொண்ட 'தேசியப் பணியாளர் கௌன்சில்' (National personal Council) தலைவராகவும் அவர் விளங்கினர். இதுவே அரசாங்கத்திற்கும் மற்றத் துறைகளுக்கும் இணைப்பாக அமைந்துள்ளது.

தேசியப் பொதுப் பணிச் சட்டத்தின் நோக்கம், அரசு துறைகள், அரசியலுக்கு அப்பாற்பட்ட, அரசாங்கத்தின் தலையீடுகள் இல்லாத துறைகளாகச் சுயேச்சையாக இயங்க வேண்டும் என்பதே. மேலும், அரசாங்க உத்தியோகங்களுக்கு நபர்களைத் தேர்ந்தெடுத்தலும் (Recruitment), ஊதியம் (Compensation) நிர்ணயித்தல், வேலை நிலைகளை வகுத்தல், (Position Classification) உத்தியோக உயர்வு (Promotion), உத்தியோக ஓய்வு (Retirement), உத்தியோகஸ்தர்களின் குறைபாடுகளைக் கவனித்தல், இவைகள் எல்லாம் தேசிய ஸ்தாபனத்தின் முக்கிய அலுவல்களாகும்.

சட்டங்களினுலோ அல்லது மந்திரி சபை உத்தரவுகளினுலோ நீக்கப்படாத எல்லாப் பதவிகளுக்கும் போட்டிப் பரீட்சைகளினுலும் மற்றத் திறமைச் சோதனைகளினுலும், ஆட்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். நியமிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கை

எடுக்கும் அதிகாரம் இருந்த போதிலும், இறுதி அதிகாரம் தேசியப் பணியாளர் ஸ்தாபனத்திடமே இருக்கிறது.

இவ்வளவு அதிகாரங்கள் ஒரு சுயேச்சையான ஸ்தாபனத்திற்கு இருந்த போதிலும் அது வெற்றிகரமாக இயங்குவது அரசாங்கத்தின் மற்ற உறுப்புகளின் ஒத்துழைப்பைப் பொறுத்திருக்கிறது. இதுகாறும் தாங்களே நடத்தி வந்த எல்லா அதிகாரங்களையும் மந்திரிகள் விட்டுவிட விரும்பவில்லை. மேலும் அனுபவம் மிக்க நிருவாக உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு மேல் அதிகாரம் செலுத்தக் கூடிய ஒரு ஸ்தாபனம் வளர்வதை விரும்பவில்லை. ஜப்பான் நாட்டுப் பாராளுமன்றத்தின் மேல் சபை உறுப்பினர்கள் இம் முற்போக்கான கொள்கைகளைச் சிறிதும் விரும்பவில்லை.

இனி ஜப்பானிய அமைப்பில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பெற்றிருக்கும் உரிமைகளைக் கவனிக்கலாம். உத்தியோகஸ்தர்கள் அரசியல் கட்சிகளில் சேரலாம், தேர்தல்களில் வாக்களிக்கலாம். ஆனால் கட்சிகளின் ஆலோசனையாளர்களாகவோ அல்லது அலுவலர்களாகவோ, கட்சி வேலைகளில் பங்கெடுத்துக் கொள்ளவோ கூடாது. அரசாங்க வேலையாட்கள் தொழிலாளர் சங்கங்களில் சேரலாம். இச் சங்கங்கள் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தலாம். 1948ஆம் வருடம் தேசியப் பணிச் சட்டத்திற்குக் கொண்டு வரப்பட்ட திருத்தம் கூட்டுப் பேரம் செய்வதையும் வேலை நிறுத்தங்களையும் தடை செய்தது. வேலை நிறுத்தம் செய்யத் தூண்டக் கூடிய செயல்களிலும் பங்கு கொள்ளக் கூடாது. பணியாளர்கள் அவர்களது வேலை நிலைகளில் மாற்றம் கோரலாம். அதனை விசாரித்துத் தகுந்த நடவடிக்கை இந்த தேசியப் பணியாளர் கவுன்சில் மேற்கொள்ளும். பிறகு முடிவை அரசாங்கத்திற்கு அனுப்பும். இறுதியாக முடிவு எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பே.

2. மலேசியா நாட்டு நிலையான செயற்குழு (Permanent Executive or Civil Service in Malasia)

மலாயா நாடும், இந்தியாவைப் போலவே கூட்டாட்சி முறையைக் கொண்டுள்ளது. இருப்பினும், இந்தியா கூட்டாட்சி நாடாக இருந்தாலும், அதனுடைய பரிபாலனம் ஒற்றை ஆட்சி முறையில் உள்ளது போலவே உள்ளது. அதாவது ஒரே அரசியல் அமைப்பு ஒரே மாதிரியான செயற்குழு, ஒரே மாதிரியான அமைப்புள்ள அரசாங்க அலுவலகங்களும், விதிகளும் இந்தியாவின் மைய மற்றும் மாநிலங்களில் பின்பற்றப்படுகின்றன ஆனால் மலாசிய நாட்டில் பதின்மூன்று மாநிலங்கள் உள்ளன. அந்தப்

பதின்மூன்று மாநிலங்களும், தனித்தனி அரசியல் அமைப்பைப் பெற்றுள்ளன. ஆகையால் இத் தீவில் மைய அரசாங்கத்தின் துறைகள் பணியாற்றுவது போல மாநில அரசாங்கத்தின் துறைகள் அமையப் பெறவில்லை. மலாயா மைய அரசாங்கம், நாட்டிற்கு வேண்டிய பொதுவான எல்லாக் காரியங்களையும் மந்திரி சபையின் மூலம் நடத்தி வருகிறது. மந்திரி சபையில் உள்ள ஒவ்வொரு மந்திரிக்கும் ஒவ்வொரு துறை உள்ளது. அந்த ஒவ்வொரு துறையிலும் பல்வகைப்பட்ட ஊழியர்கள் உள்ளனர். இவர்களில் மிக உயர்ந்த அதிகாரிகளைத் தவிர மற்ற ஊழியர்களை, நாட்டின் பொதுப்பணி அரசினர் குழுவின் மூலம் தேர்வுகள் நடத்தி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இன்று கிட்டத்தட்ட 1, 15, 000 பேர் பணியாற்றி வருகிறார்கள்.

இதைப் போலவே மலாயா நாட்டு மற்ற மாநிலங்களிலும், அந்தந்த மாநிலத்தின் அரசிற்கு ஏற்ப அரசாங்கத்தின் அலுவல்கள் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு செயலாளர் உண்டு. இவர்கள் அனைவரும் மாநில தலைமைச் செயலகத்தில் பணியாற்றுவர். ஒரு துறையின் செயலாளரே, அந்த மாநிலத்தின் அந்தத் துறைக்குப் பெரிய அதிகாரியாகிறார். இவருக்குக் கீழ் பல அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்களை மாநில அரசு பணிச் செயற்குழுவே தேர்ந்தெடுத்து நியமிக்கிறது. இவர்களது கடமைகள், இந்திய நாட்டு நிலையான செயற்குழுவின் கடமைகளைப் போலவே உள்ளது. அதாவது நாட்டு, மாநில துறை மந்திரிகள் இடும் கட்டளைகளை, அத் துறை செயலாளர்கள் மூலமாக, மற்ற அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் செயலாக்கப்படுகிறது. நாட்டின் பரிபாலனம் அமெரிக்க நாட்டைப் போல் இருந்த போதிலும், உண்மையான செயற்குழுக்களின் நிலை இந்தியா, இங்கிலாந்து நாட்டினைப் போல உறுதி வாய்ந்ததாகவே உள்ளது. மற்றக் குடியாட்சி நாடுகளில் அரசாங்க பணியாட்கள் என்னென்ன பயன்களைப் பெறுகின்றார்களோ அனைத்தையும் அரசாங்கப் பணியாட்கள் பெறுகின்றனர்.

3. பிலிப்பைன்ஸ் நாட்டுக் குடிமுறைப் பணி அல்லது நிலையான செயற்குழு

(Permanent Executive (or) Civil Service in Philippines)

பிலிப்பைன்ஸ் நாட்டு அரசியல் சாசனத்தின் கோப்பு எண் 12வதின்படி நாட்டின் பல்வேறு துறைகளிலும், குடிமுறைப் பணியாட்களை கிளைகளாகப் பிரிந்து செயல்படுத்தி வருகிறார்கள்

பிலிப்பைன்ஸ் நாட்டுச் செயற்குழுவும், அது பணியாற்றும் முறையை விளக்கும் அட்டவணையும்

(President of the Philippines) பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர்

(Advisory Bodies) அறிவுரைக் கூறும் குழுக்கள்

(Cabinet) மந்திரிசபை

(Council of State) நாட்டுக் குழு

(Office of the President) தலைவரின் அலுவலகம்

- Bureau of (Civil Service Commission) பொதுப் பணி துறையாளரைத் தேர்ந்தெடுக்கும் குழு (ஆணையாளர்)
- Budget Commission (Budget Commissioner) வருடாந்திர வரவு, செலவு திட்டக் குழு (ஆணையாளர்)
- Presidential Complaints and Action Commission (Commissioner) தலைவரிடம் வரும் குறைகளைக் கவனித்து நடவடிக்கை எடுக்கும் குழு (ஆணையாளர்)
- Executive Office (Executive Secretary) செயற்குழு அலுவலகம் (செயலாளர்)
- Private Ofiice தனி அலுவலகம்
- Press Relation Office (Secretary) செய்தித்தாள் உறவு அலுவலகம் (செயலாளர்)
- Office of Local Government (Chief) உள்ளாட்சித் துறை அலுவலகம் (முதல்வர்)
- Social welfare Admenestration (Administrator) சமூக நல அமைப்பும், அதன் பரிபாலனமும் (ஆட்சியாளர்)

பல அரசாங்கத் துறைகள்

- Department of Foreign Affairs (Secretary) அயல்நாட்டுப் பிரச்சனை துறை (செயலாளர்)
- Department of Finance (Secretary) நிதித் துறை (செயலாளர்)
- Department of Justice (Secretary) நீதித் துறை (செயலாளர்)
- Department of Agriculture (Secretary) விவசாயத் துறை (செயலாளர்)
- Department of P. W. (Secretary) பொதுப் பணித்துறை (செயலாளர்)
- Department of Education (Secretary) கல்வித் துறை (செயலாளர்)
- Department of Labour (Secretary) தொழிலாளர் நலத் துறை (செயலாளர்)
- Department of National Defence (Secretary) நாட்டுப் பாதுகாப்புத் துறை (செயலாளர்)
- Department of Health (Secretary) உடல் நலத் துறை (செயலாளர்)
- Department of Commeise and Industry (Secretary) தொழில் வர்த்தகத் துறை (செயலாளர்)

மிக உயர்ந்த அதிகாரிகள், பொருள் நுட்ப அறிஞர்கள், விஞ்ஞானிகள், இவர்களைத் தவிர, அரசாங்கத்தின் பல்வகைப்பட்ட அரசு ஊழியர்களை நியமிப்பது மற்ற நாடுகளில் நாம் கண்டது போல் குடிமுறைப் பணியாட்களின் தேர்வுக் குழுவின் மூலமேயாகும். ஆனால் முதலில் கூறிய உயர் அதிகாரிகள். விஞ்ஞானிகள் இவர்களை நாட்டின் தலைவரே நியமிக்கிறார். இந்த நாட்டில் கையாளப்படும் முறை, அமெரிக்க நாட்டின் முறையைப் போல் உள்ளது. இந் நாட்டில் அரசியல் அமைப்பும் தலைவரின் அதிகாரமும், அமெரிக்க நாட்டை அப்படியே கொண்டுள்ளது.

நாட்டின் அரசியல் பணித் துறை ஆட்களாக நியமிக்கப்பட்டவர்கள், அரசியல் போராட்டங்கள் எதிலும் பங்கு கொள்ளுதல் கூடாது. இவர்கள் தேர்தலில் நிற்கக் கூடாது. அப்படி அவர்கள் தேர்தலில் நிற்க வேண்டுமென்றால் அவர்கள் தங்களது வேலையை இராஜினுமா செய்து விடவேண்டும். ஒருமுறை இழந்த வேலையை மறுபடியும் பெற முடியாது. ஒருமுறை அரசாங்க ஊழியனாகப் பணியேற்றவனை அவ்வளவு எளிதில் பதவியிலிருந்து விலக்க முடியாது.

நாட்டின் தலைவருக்கு அரசாங்கக் காரியங்களின் உதவிக்கு, ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு செயலாளர்கள் நியமித்துள்ளது. அந்த ஒவ்வொரு துறை செயலாளருக்குக் கீழும் பல்லாயிரக்கணக்கான அதிகாரிகளும், பணியாட்களும் இருக்கின்றனர். இவர்களே பிலிப்பைன்ஸ் நாட்டு அன்றாட அரசியல் அலுவல்களைக் கவனிக்கிறார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை இவ்வாறு பணியாற்றும் எந்த அரசு ஊழியனும் இரண்டு ஊதியம் எம் முறையிலும் பெற முடியாது. அப்படிப் பெற நினைத்தால் அவனை வேலையிலிருந்து நீக்க முடியும். அல்லது, ஏதேனும் ஒரு சட்டத்தின் கீழ் அம் மாதிரியான ஊதியத்தைப் பெற முடியும்.

பிலிப்பைன்ஸ் நாட்டு அரசியல் மற்றும் நிலையான செயற்குழுக்களின் இணைப்பைக் கீழே கொடுக்கப்பட்ட அட்டவணை நன்கு விளக்கும்.

4. இந்திய நாட்டு நிலையான செயற்குழு
(Permanent Executive (or) Civil Service in India)

இந்திய நாட்டு மத்திய அரசாங்கத்தில் அல்லது மாநில அரசாங்கத்தில் வேலை செய்பவர்களைப் ' பொதுப் பணியாளர்கள் ' என்று அழைக்கப்படுகிறார்கள். இந்திய நாட்டு அரசியல் சாசனத்

தின் சரத்து எண் 311-ன்படி பொதுப் பணியாளர்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப் பட்டுள்ளது. முதலாவதாகக் குடிமுறைப் பணி (Civil Service) என்றும் இரண்டாவதாக அனைத்திந்தியப் பணி (All India service) என்றும் மூன்றாவதாக மாநில குடிமுறைப் பணி (Civil service of a State) என்றும் பிரிக்கப் பட்டுள்ளது.

இவற்றில் முதலாவதாகத் திகழும் அனைத்திந்தியப் பணிகளில் ' இந்திய வெளிநாட்டுப் பணி (Indian Foreign Service), இந்தியப் பாதுகாப்புப் பணி, (Indian Defence Service) இந்திய இரயில்வே பணி (Indian Railway Service). இந்திய வருமான வரிப் பணி (Indian Income Tax Service), இதுபோன்ற பல முக்கியமான துறைகளில் பணியாற்றுபவர்கள், ' மத்திய அரசு பணியாளர் தேர்வுக் குழு ' (Union Public Service Commission) மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தக் குழு இங்கிலாந்து நாட்டின் குடிமுறைப் பணி குழுவைப் போலவே பணியாற்றி வருகிறது. முதலில் அந்தந்தத் துறை பணியாட்களின் வகைப்படி எழுத்தின் மூலம் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. அந்தத் தேர்தலில் இந்தக் குழு முடிவு செய்யப்பட்ட எண்களைப் பெற்றுத் தேர்வு பெற்றவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். இதன் மூலம் அவர்களின் திறன், உடல்நிலை, மற்றும் பல விவரங்களைத் தெரிந்துக் கொண்டு, அவரவர்களின் திறமைக்கேற்ப வேலைகள் கொடுக்கப் படும். உயர்ந்த பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரிகள் நான்கு அல்லது ஆறுமாத காலம் பயிற்சி நிலையங்களில் துறைகளுக்குத் தக்கவாறு பயிற்சி பெறுகிறார்கள். இவ்வாறு அரசு துறைகளில் நிலையான இடம் பெறும் நிருவாகிகளை அவ்வளவு எளிதில் பதவியிலிருந்து விலக்கி விட முடியாது. அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் உறுதியான பின்புதான் அவர்களைப் பதவியினின்று நீக்க முடியும். நாட்டின் தலைவர் (President of India) குடிமுறைப் பணியாட்களைப் பற்றி வேலைக்கு நியமிக்கும் விதிகளைப் பற்றியும், தேர்வுகளைப் பற்றியும், மாற்றங்களைப் பற்றியும், உயர் பதவி கொடுப்பதைப் பற்றியும், மற்றும் அவர்கள் பதவியிலிருக்கும் பொழுது ஏற்படும் ஆபத்துகளில் மாட்டிக் கொண்டாலோ. வேறு எந்தவிதமான துன்பங்கள் ஏற்பட்டாலோ அந்தச் செலவுகளை ஏற்கும் பொறுப்பு, இவைகளைப் பற்றியும், இந்த மத்திய அரசு பணியாளர் தேர்வுக் குழு அதிகாரிகளைக் கலந்து ஆலோசிக்கும் உரிமையுண்டு. இந்திய நாட்டு அரசு ஊழியர்களின் நிலையைப் பற்றி நாட்டு அரசியல் சாசனத்தில் தெளிவாகவும் உறுதியானது என்று கூறப்பட்டுள்ளது. அவர்களது பதவிக்கும் நிலைக்கும் தற்காப்பு அளிக்கப்பட்டுள்ளது. எவரேனும், தங்களது

பதவியிலிருக்கும் பொழுது தவறுகள் செய்து, அது நிரூபிக்கப் பட்டால், அந்த வழக்குகளை மேற்கொள்ளும் பொழுது, பிரான்சு நாட்டு முறையான ஆட்சி முறை சட்டத்தின் (Administrative Law) படியே நடத்தித் தண்டனையும் வழங்குவார்கள்.

மத்திய அரச ஊழியர்களை நியமிக்க 'மத்திய அரசு பணி யாளர் குழு' என்று ஒன்று இருப்பது போலவே, இந்திய நாட்டு மாநிலங்களிலும், பணியாளர் தேர்வுக் குழுக்கள் உள்ளன. இவை கள் தனித் தனி மாநிலங்களிலும் இருக்கிறது. அல்லது இரண்டு மூன்று மாநிலங்கள் ஒன்றாகச் சேர்ந்தும் மாநிலங்களின் கூட்டுப் பணியாளர் தேர்வுக் குழு என்றும் நியமிக்கலாம் என்றும் நமது அரசியல் சாசனத்தில் உள்ளது. மத்திய அரசு பணியாளர் களின் தேர்வுக் குழுவின் அதிகாரிகளையும், ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் இணைந்து ஏற்படுத்தும் அரசு பணியாளர்களின் தேர்வுக் குழுவிற்கும், அதிகாரிகளை நியமனம் செய்பவர் நாட்டின் தலைவரேயாவர். அதே போல் மாநிலங்களின் பணியாளர் தேர்வுக் குழுக்களின் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மாநில ஆளுநருக்கே உண்டு. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் தேர்வுக் குழுவின் அதிகாரிகள் குறைந்தது பத்து வருட காலமா வது இதே மாதிரி பதவியை மாநிலங்களிலாவது அல்லது மத்திய அரசிலாவது வகித்திருக்க வேண்டும். ஒருமுறை மத்திய அரசு பணித் தேர்வுக் குழுக்களின் 'அவைத் தலைவராக' (Chairman) தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆறு வருட காலம் அப் பதவியில் இருக்கலாம். ஆனால் அந்த ஆறு வருட காலத்திற்குள் அவர்கள் அறுபத்தைந்து வயதை அடைந்து விடுவார்களேயாயின், பதவியி லிருந்து விலகிவிட வேண்டும். அதே போல் மாநில அரசு 'ஊழியர் தேர்வுக் குழுவின் அவைத் தலைவராகவோ அல்லது, கூட்டு மாநிலங்களின் 'அரசு பணித் தேர்வுக் குழுவின்' தலைவராகவோ தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் ஆறு வருட காலம் அப் பதவியில் இருக்கலாம். இவர்கள் பதவியிலிருக்கும் வயது அறுபத்தி ஒன்பது என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அவர்களது காலம் முடிவதற்கு முன்பு அவர்களைப் பதவியிலிருந்து எடுத்துவிடவும் முடியும். ஒரு முறை பதவியிலிருந்து எடுக்கப்பட்ட அவைத் தலைவர்கள், மறுபடி யும் அதே பதவிக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.

நமது நாட்டின் அரசியல் சரத்து எண் 317-ன்படி 'மத்திய மாநில அரசுப் பணியாளர்' தேர்வுக் குழுக்களின் அவைத் தலைவர் களையோ அல்லது மற்ற உறுப்பினர்களையோ, நேரடியாகப் பதவி யிலிருந்து எடுத்துவிட முடியாது என்று கூறப்படுகிறது. அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, நாட்டுத்

தலைவரின் கட்டளையின்படியே அவர்களைப் பதவியிலிருந்து எடுக்க முடியும். இவ்வாறு நியமிக்கப்பட்ட அவைத் தலைவரோ அல்லது மற்ற உறுப்பினர்களோ தங்களது பதவி காலத்தில் அதிக கடன் பட்டுத் தங்களது சொத்துகளை இழந்தவர்களாக (Insolvent) இருப்பார்களேயானால் அவர்களைப் பதவியினின்று நீக்க, நாட்டின் தலைவருக்கு அதிகாரம் உண்டு. அதே போல் உடல் நலம் குன்றியோ, அல்லது மற்ற எக் காரணத்தைக் கொண்டும், தேர்வுக் குழுவின் உறுப்பினர்கள் பணியாற்றும் சக்தியை இழந்திருப்பார்களேயானால் அவர்களைப் பதவியிலிருந்து விலக்கிவிடும் உரிமை தலைவருக்கு உண்டு. மேலும் இந்த அதிகாரிகள் இலாபம் வரும்படியான ஏதேனும் கம்பெனிகளிலோ அல்லது வியாபார வர்த்தகங்களிலோ தொடர்பு கொண்டிருப்பார்களேயானால் அவர்கள் சட்ட விரோதிகளாகக் கருதப்பட்டுப் பதவி இழக்க நேரிடும்.

சரத்து எண் 318-ன்படி, நாட்டின் தலைவரும், மாநிலங்களின் இயக்குநர்களும், இந்த 'அரசாங்கப் பணிக் குழுத் தேர்வு' அதிகாரிகளையும், மற்ற உறுப்பினர்களையும், நியமிக்கும் பொழுது எண்ணிக்கைகள் அப்போதைக்கப்போது மாறுபடும். மத்திய அரசு பணித் தேர்வுக் குழுவில் ஒரு செயலாளரும், அவருக்கு உதவியாகப் பலதரப்பட்ட அதிகாரிகளும் உள்ளனர். இவர்களை நியமிக்கும் பொறுப்பும் நாட்டின் தலைவரிடமே இருக்கிறது. இருந்த போதிலும், அக் குழுக்களின் அவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பவருக்கும் சில அதிகாரங்கள் உள்ளன. தற்காலிகமாக ஏதேனும் அலுவலர்களை நியமிக்க வேண்டியிருந்தால், அதனை அவைத் தலைவரே செய்யலாம். குழுக்களின் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்குப் பதவியில் சேரும்பொழுது, இத்தனைக் காலம் பதவியில் இருக்கலாம் என்று வரையறுக்கப்படும். அந்தக் காலம் முடிந்த பின்பு, மறுபடியும் அவர்கள் பதவியில் நீடிக்க உத்தரவுகளும் கொடுக்கலாம். இவர்கள் கீழ்த் துணைச் செயலாளர்கள் என்றும், கீழ்ச் செயலாளர்கள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கும் கீழ், பிரிவு அதிகாரிகள் (Section Officers), அவைத் தலைவரின் சொந்த செயலாளர் என்றும், அவருக்கென்று ஒரு சுருக்கெழுத்தாளரும் தரப்படும். இவர்கள் அனைவரையும் தவிர குமாஸ்தாக்கள், இன்னும் பலரும் இருக்கின்றனர்.

இந்தியப் பொதுப் பணியாளர்களின் கடமைகள் (Functions of The Indian Public Service Commission)

மைய மற்றும் மாநில அரசு பணியாளர் தேர்வுக் குழுக்கள் அரசாங்கத்தில் பணியாற்றும் பல் துறையினரையும் தேர்வு நடத்தி தேர்ந்தெடுக்க வேண்டும். அடுத்துப் பதவிகளை நியமிக்கும் போது

அனுசரிக்க வேண்டிய விதிகளை வரையறுக்க வேண்டும். குடி முறைப் பணியாட்களின் வேலைகள், ஊதியம், படிகள், மற்றும் உயர் பதவி, பதவி கால முடிவு இவைகளையெல்லாம் பற்றியும் முடிவெடுக்க வேண்டும். இதைத் தவிர, அரசு ஊழியர்கள் பதவி யிலிருக்கும் பொழுது ஏற்படும் எவ்விதமான கட்டங்களுக்கும் பண உதவி செய்ய வேண்டும். இது போன்ற பலவற்றையும் நிர்ணயிக்கும் பொறுப்பு இவர்களுடையதே.

சரத்து எண் 320-ன்படி நாட்டின் தலைவர் அரசாங்கப் பணி யாளர்களைப் பற்றி எந்தவிதமான ஐயப்பாடுகளை எழுப்பினாலும் அதனைத் தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு, மத்திய, மாநில அரசு பணித் தேர்வுக் குழு அதிகாரிகளுடையதாகும். நாட்டின் முன்னேற்றத்திற்காக உருவாக்கப்படும் எந்தவிதமான திட்டத் திற்கும் நாட்டின் அரசியல் செயற்குழுக்களைச் சேர்ந்தவர்கள், அந்தந்த அரசு துறைகளின் அதிகாரிகளைக் கலந்து ஆலோசிக்கலாம். அனைத்திந்திய பணிகளின் அதிகாரிகளை முதல் பிரிவு, இரண்டாம் பிரிவு என்று பல பிரிவுகளாகப் பிரித்துள்ளது. அவற்றில் முதல் இரண்டு பிரிவுகளில் பணியாற்றும் அதிகாரிகள், அடிக்கடி அரசியல் செயற்குழுக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கும்.

சரத்து எண் 321-ன்படி, நமது பாராளுமன்றம் ஏதேனும் புதிய வேலைகளை மத்திய அல்லது மாநில அரசு பணித் தேர்வுக் குழுக்க ளுக்கு இட முடியும். சரத்து எண் 322-ல் மத்திய, மாநில அரசு பணியாளர் தேர்வுக் குழு அதிகாரிகளின் சம்பளம், ஓய்வுக் காலம், பணம், முதலியவைகளை வரையறுத்து அதனை 'திரண்ட நிதி' (Consolidated Fund) யிலிருந்து அளிக்கப்பட வேண்டும் என்பதனை யும் கூறப்பட்டுள்ளது.

சரத்து எண் 323-ன்படி வருடா வருடம் இக் குழுக்களைப் பற்றி ஆய்வறிக்கை (Report) ஒன்றை நாட்டின் தலைவருக்கும், மாநில ஆளுநருக்கும் அளிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

அவசர காரியத்திற்காகவும், அதிக வேலையின் காரணமாகவும், தற்காலிகமாக நியமிக்கப்படும் பொதுப்பணியாளர்கள், இக் குழு வின் அதிகாரிகள் நியமித்து ஒரு வருடத்திற்கு மேல் பணியாற்ற முடியாது. அப்படி ஒரு வருடத்திற்கு மேலும் அந்த அதிகாரி நீடிப்பாரேயானால் அதற்குத் தனியாக அதிகாரத்தையும் அங்கீ காரத்தையும் குழு பெற வேண்டும்.

முதன் முதலில் ஆங்கிலேயர் ஆட்சி நம் நாட்டில் துவங்கும் பொழுது இம்முறை இந்திய நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது.

அதன் பிறகு நம் நாடு சுதந்திரம் பெற்ற பின்பு இம்முறையில் குழப்பங்கள் ஏற்பட்ட போதிலும், படிப்படியாகக் குழப்பங்கள் குறைந்து இன்று அமைதியான இடத்தை இந்தியநாட்டுப் பொதுப் பணியாட்கள் பெற்றிருக்கிறார்கள். திரு வி. பி. மேனன் (V. P. Menon) அவர்கள் அரசாங்க ஊழியர்களைப் பற்றி குறிப்பிடும் பொழுது, இதுவரை நாட்டின் திட்டத்திற்கு வேண்டிய எல்லா முக்கிய விவரங்களையும் தேடிச் சேகரித்துத் தந்த பெருமை இவர்களையே சாரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சிறப்புகள் பல நம் நாட்டு நிலையான செயற்குழுக்கள் பெற்றிருந்த போதிலும், இம்முறையில் பல குறைபாடுகள் உள்ளன. முதலாவதாக இக் குழுக்களில் நடக்கும் தேர்வுகள் பெரும்பாலும் பல்கலைக்கழகங்களின் தேர்வுகளைப் போலவே உள்ளது. நாட்டின் பிற்பட்டோர் மற்றும், பின் தங்கியோருக்கு என்று ஒதுக்கப்பட்ட இடங்கள் சரியாக நிரப்பப் பெறுவதில்லை. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு பணியாட்கள் கட்சி சார்பற்று பணியாற்றுவதாகத் தெரியவில்லை. மேலும் அரசியல் துறைகளில் அளவிற்கு அதிகமான ஆட்கள் இருப்பதால் அன்றாட வேலைகள் மெதுவாக நடைபெறுகின்றன. மேலும் லஞ்சம் ஊழல் இவைகள் அரசாங்க அலுவலகங்களில் நிரம்பிவிட்டது. இதனைத் தீர்க்க ஒரு வழி கண்டுபிடித்து, அரசியலின் அன்றாட வேலைகளை ஒழுங்காகக் கவனிக்க வேறு சில சீர்த்திருத்தங்களைக் கொண்டு வருவது நமது நாட்டிற்கு மிகவும் அவசியமாகும்.

5. சீன நாட்டு நிலையான செயற்குழு (அல்லது) குடிமுறைப் பணியாட்களின் நிலை (China's Permanent Executive or Civil Service)

மற்ற ஆசிய நாடுகளில் உள்ளது போல் சீனாவிலும் அரசாங்கத்தை நடத்துவற்குக் குடிமுறைப் பணியாட்கள் இருக்கிறார்கள். அவர்கள் பலவகை 'பணி அமைப்புகளாக' (Cadres) வகைப்படுத்தி பணியாற்றுகிறார்கள். அவர்களுக்குக் கொள்கை ஒழுக்கம் (Policy Discipline) பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. தங்களுடைய நாட்டின் ஒரே கட்சியான கம்யூனிஸ்ட்டு கட்சியின் கொள்கைகளை நிறைவேற்றும் வகையில் பணியாற்றுகிறார்கள். கம்யூனிஸ்ட்டு கட்சியின் தலைவரின் சொற்படியே இவர்கள் பணியாற்றுகிறார்கள். கட்சியின் உறுப்பினர்களே பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சமுதாயத்தில் நல்ல மதிப்புப் பெற்றவர்களும் கம்யூனிஸ்ட்டு கட்சிக்கு ஆதரவாக இருப்பவர்களும் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் அரசாங்கத்தில் முக்கியமான பதவிகளைக் கம்யூ

னிஸ்ட்டு கட்சியிலுள்ள பெருந்தலைவர்களே ஏற்று இருக்கிறார்கள். 'பணி அமைப்பு' (Cadres) என்ற பிரிவைச் சார்ந்தவர்கள் இளைஞர்களாகவும், கட்சியின் கொள்கையில் ஆர்வமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் கட்சியால் ஆதரிக்கப்பட்டவர்களும், ஆனால் கட்சியின் உறுப்பினர்களாக இல்லாதவர்களும் இருக்கிறார்கள். இவர்களின் முக்கியமான தகுதிகள் கட்சி மீது உள்ள பற்று, கீழ்ப்படிதல், காரியங்களைத் துரிதமாகச் செய்தல் கொடுக்கப்பட்ட வேலைகளைத் திறமையாகச் செய்தல் ஆகியவையாம். பெரும்பாலும் இவர்கள் முப்பது வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களாக இருப்பார்கள். பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்களும், பயிற்சி நிலையங்களில் படித்தவர்களும், குடிமுறைப் பணியாட்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகட்குப் பயிற்சி கொடுக்கப்பட்ட பின்புதான் இந்தப் 'பணி அமைப்பு' ஆட்களை உண்மையான வேலைக்கு அனுப்புகிறார்கள். இந்தப் 'பணி அமைப்பு' குடிமுறைப் பணியாட்கள் இல்லாவிட்டால் கம்யூனிஸ்ட்டுகள் தங்களுடைய அதிகாரத்தை நிலை நாட்டுவது கடினமாக இருக்கும். கம்யூனிஸ்ட்டு கட்சி மட்டும் நாட்டில் அதிகாரத்தை நிலைநாட்ட முடிவதில்லை. எல்லாக் கம்யூனிஸ்ட்டு ஆட்களும் 'பணி அமைப்பு' ஆட்களாக முடியாது. அதைப்போல எல்லாப் பணி அமைப்பு ஆட்களும் கம்யூனிஸ்ட்டுகளாக இருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. கம்யூனிஸ்ட்டு கட்சி அதிகாரிகளும், தலைவர்களும், குடிமுறைப் பணியாட்களைப் பதவியிலிருந்து ஒழிப்பதற்கும், அவர்கள்மீது அதிகாரம் செலுத்துவதற்கும் தங்கள் கட்சி பலத்தைப் பயன்படுத்துகிறார்கள். கட்சிக்குச் சாதகமாக இல்லாதவர்களை உடனே எடுத்துவிடுகிறார்கள். ஆகவே உண்மையான அரசாங்க ஊழியர்களாக உழைப்பவர்கள் கட்சியை நம்பி வாழ்வதில்லை. சீன சமுதாயத்தில் மிகவும் நற்பெயர் பெற்றவர்களையும், அரசாங்கப் பணிக்கு ஊழியர்களாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் பணியாற்றுவார்கள். அக்கால வரம்பு முடிந்தவுடன் பதவியிலிருந்து விலகுவார்கள். ஆனாலும் கம்யூனிஸ்ட்டு கட்சியை ஆதரிப்பவர்களுக்கு அதிக சலுகையும், ஊதியமும் கொடுக்கப்படுகின்றன.

மூன்று கொள்கையின் அடிப்படையில் குடிமுறைப் பணியாட்கள் இயங்கி வருகிறார்கள். முதலாவதாகக் குடிமுறைப் பணியாட்கள் பொதுத் தேர்வின் (Public Examination) மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இரண்டாவதாக இரண்டு விதமான தேர்வுகள் நடத்தப்படுகின்றன. உயர்தர அதிகாரிகளை Higher Official) தேர்ந்தெடுப்பதற்காக ஒருவகைத் தேர்வும் கீழ்த்தர அதிகாரிகளை

(Lower Officials) தேர்ந்தெடுப்பதற்காக ஒருவகைத் தேர்வும் நடத்தப்படுகின்றன. பதவி உயர்வானது, திறமையின் அடிப் படையில் பொதுவாகக் கொடுக்கப்படுகிறது. மூன்றுவது கொள் கையின்படி எல்லாக் குடிமுறைப் பணியாட்களும் அரசாங்கத் திற்குச் சாதகமாகவும், கம்யூனிஸ்ட்டு கட்சியின்கொள்கைக்கு ஏற்ற வாறும் பணியாற்ற வேண்டும். இக் காலத்தில் பெரும்பாலும் சீன பல்கலைக்கழகத்தில் பயின்ற திறமை வாய்ந்த மாணவர்களே அரசாங்கப் பணியாட்களாகப் பதவி வகிக்கிறுர்கள். இவர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சி மிகவும் தலைசிறந்த முறையில் இருக்கிறது. குறிப்பாக எழுத்தாளர்களுக்கு (Clerks) நல்ல பயிற்சி கொடுக் கப்படுகிறது. சீனுவில் ஏற்பட்ட புரட்சிக்கு முன்பு இருந்த குடி முறைப் பணியாட்களின் நிலையும், புரட்சிக்குப் பின்பு ஏற்பட்ட அவர்களது நிலையும் மிகவும் வேறுபட்டு உள்ளது. இப்பொழுது இருக்கும் முறை மிகவும் நல்ல முறையில் அமைந்திருப்பதாகக் கருதப்படுகிறது.

இந் நாட்டுக் குடிமுறைப் பணியாட்களைத் தேர்ந்தெடுக்கும் முறையில் சில முக்கிய குறைபாடுகளும் உள்ளன. முதலாவதாக இங்குத் தேர்வு முறை நெகிழா முறையில் (Rigid Type) உள்ளது. இரண்டாவதாகக் குடிமுறைப் பணியாட்களின் நிலை கட்சியின் அடிப்படையிலேயே இயங்கி வருகிறது. ஆகவே மக்களின் நலன் மிகவும் பாதிக்கப்படுகிறது. மூன்றுவதாகத் தகுதிக்கு எப்பொழுதும் மதிப்புக் கொடுக்கப்படுவதில்லை. நான்காவதாகக் கம்யூனிஸ்ட்டு கட்சிக்கு ஒவ்வாதவர்களாகக் கருதப்படுபவர்கள் குடிமுறைப் பணியாட்களாக இருந்தால் அவர்களது நிலை மிகவும் பாதிக்கப் படுகிறது. இவ்வாறு மிகவும் பாதிக்கப்படுபவர்கள் கம்யூனிஸ்ட்டு அரசாங்கத்தை எதிர்த்து வாதாடவோ, நீதி மன்றத்திற்குச் செல்லவோ அதிகாரம் இல்லை.

சீன நாட்டுக் குடிமுறைப் பணியாட்களின் நிலை மிகவும் கீழான நிலையில் உள்ளது. இவர்களுக்கு எவ்வித சுதந்திரமோ, நிலையான இடமோ, மற்ற நாட்டுக் குடிமுறைப் பணியாட்கள் அனுபவிக்கும் உரிமைகளோ சிறிதும் இல்லை. பொதுவாக நாட்டின் ஒவ்வொரு துறையும் கம்யூனிஸ்ட்டு கட்சித் தலைவருடன் தொடர்பு கொண் டுள்ளது என்பதில் ஐயமில்லை. நாட்டின் அன்றுட அலுவல்களைச் செய்து வரும் இந்த நாட்டு அரசாங்கப் பணியாட்களின் நிலை அடிமைகளை விட கேவலமாக உள்ளது என்பதில் சிறிதும் பொரு ளற்றதாக இல்லை. இந்தச் சீன நாட்டுக் குடிமுறைப் பணியாட் களின் நிலையை மற்ற உலக நாடுகளின் குடிமுறைப் பணியாட் களுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. இது சீன நாட்டிற்கே உரிய ஒரு தனி வழியாகும்.

—

4. பொதுக் கருத்து
(General Opinion)

இந்த இருபதாம் நூற்றுண்டில் அரசுகளுக்கும், குடிமுறைப் பணியாட்களுக்கும் உள்ள தொடர்பும், அவர்களது வளர்ச்சியும் மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகவும், முன்னைய நூற்றுண்டு களினின்றும் மிகவும் மாறுபட்டும் விளங்குகிறது. இந் நூற்றுண்டில் அதிகார வர்க்கத்தின் நிலை மிகவும் சக்தி வாய்ந்ததாகவும், அரசியல் உலகில் ஈடுபாடு கொண்டதாகவும் திகழ்கிறது. சில நாடுகளின் புள்ளி விவரங்களை நோக்குவோமாயின், குடிமுறைப் பணியாட்களின் வளர்ச்சி நன்கு புரியும். உதாரணமாக இங்கிலாந்து நாட்டில் 19-ம் நூற்றுண்டில் அரசாங்கத் துறைகளில் 17,815 குடிமுறைப் பணியாட்களே இருந்தனர். ஆனுல் 20-ம் நூற்றுண்டில் பல்லாயிரக்கணக்கானவர்கள் அரசியல் அலுவலகங் களில் பணியாற்றுகின்றனர். அதே போல் அமெரிக்க நாட்டை எடுத்துக் கொண்டோமானுல் அங்கு 19-ம் நூற்றுண்டில் 2,00,000 பேர் குடிமுறைப் பணியாட்களாக இருந்தனர். ஆனுல் இன்று அவர்களின் இருபது பத்து லட்சங்களுக்கு மேல் (Millions) அரசாங்க அலுவலகங்களில் நிறைந்துள்ளனர். நாம் நமது நாட்டை எடுத்துக் கொண்டோமானுல் சுதந்திரம் அடைந்த பொழுது இருந்து வந்த குடிமுறைப் பணியாட்களின் எண்ணிக்கை யைப் போல் மூன்று பங்கு அதிகமாக இருப்பதாகப் புள்ளி விவரம் கூறுகிறது. (இந்தப் புள்ளி விவரங்கள் குடிமுறைப் பணியாட்களின் சரித்திரம், மற்றப் பிரச்சினைகள் என்னும் புத்தகத்திலிருந்து எடுக் கப்பட்டது) எல்லா நாடுகளையும் விட சீன, ருஷ்ய நாடுகளில் அர சாங்கத் துறைகளில் பணியாற்றும் பணியாட்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம். ஏனெனில் அங்கு ஒரே ஒரு கட்சியான கம்யூனிஸ்ட் டுகளின் கொள்கையின் அடிப்படையிலும், மக்களாட்சி என்ற போர்வையில் சர்வாதிகார ஆட்சியும் நடந்து வருகிறது. ஆகையால் இவ்விரு நாடுகளில் இயங்கும் எல்லாத் துறைகளும், அரசாங்கத்

துறைகளாக இருப்பதால் அங்குப் பணியாற்றுபவர்கள் அனைவரும் அரசாங்க ஊழியர்களாகவே கருதப்படுகிறார்கள்.

முதலாளி தத்துவத்தை (Capitalism) கொண்ட நாடுகளாக இருந்தாலும், கம்யூனிஸ்ட்டு (Communism) கொள்கைகளை உடைய நாடுகளாக இருந்தாலும் அல்லது சோஷியலிஸ (Socialism கொள்கைகளை உடைய நாடுகளாக இருந்தாலும், எல்லா நாடுகளிலும், அரசியல் அதிகாரிகளுக்கும் அன்றாட நாட்டுப் பரிபாலனம் செவ்வனே நடப்பதற்கும் அச்சாக (Axis) விளங்குபவர்கள் இந்தக் குடிமுறைப் பணியாட்களே. இந்த அரசாங்கப் பணியாட்கள் அனைவரும் பல வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அந்தந்தப் பிரிவுகளில் தனித்தனியாகத் தேர்வுகளும், பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றனர். (இதனைப் பற்றிய தெளிவான விவரங்களை இப் பகுதியின் முதல் பாகத்தில் பார்க்கவும்.)

இன்றைய உலகில் உள்ள நாடுகளின் முக்கிய குறிக்கோள் மக்கள் நல வாழ்வு என்பதேயாகும். இதனை ஒரு நாட்டின் அரசாங்கம் செவ்வனே நடத்த வேண்டுமாயின், அரசியல் செயற்குழுக்களுக்கு உதவியாகப் பலபேர் தேவைப்படுகிறார்கள். பல துறைகளில் சிறந்து விளங்குபவர்களும் திறமை மிக்கவர்களுமே உயர்ந்த அதிகாரிகளாகவும், பொறுப்புள்ள காரியதரிசிகளாகவும் இருந்து அரசியல் செயற்குழுக்களுக்கு உதவ, இவர்களுக்குக் கீழ் பலவகைப்பட்ட அதிகாரிகளும், மற்ற அலுவலர்களும் பணியாற்றுகிறார்கள். ஆங்கில அகராதி (Dictionary) குடிமுறைப் பணியாட்களுக்கு, 'போர் துறை அல்லாத மற்ற அரசியல் துறைகளின் நிருவாகம் செவ்வனே நடக்க உதவும் கூட்டம்' என்று பொருள் கூறுகிறது. 1931 ல் இங்கிலாந்து நாட்டு ராயல் கமிஷன் (Royal Commission) குடிமுறைப் பணியாட்களைப் பற்றி விளக்கம் தரும்பொழுது, மன்னர் அல்லது அரசின் பணியாட்கள், மற்றதைவிட்டு அரசியல் நீதித்துறை இவற்றில் பணியாற்றும் திறமைப் பெற்ற சமூகத்தினர் என்றும் இவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் நேர்முகமானதும் முழுமையானதும் என்றும்.' பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றது என்றும்' விளக்கியுள்ளது.

இவ்வளவு முக்கிய இடத்தையும், சிறப்பையும் பெற்றுள்ள இந்த அரசியல் பல் துறைப் பணியாட்களின் நிலையைப் பற்றியோ அல்லது அவர்களுடைய கடமைகளைப் பற்றியோ பேகாட் (Bagehot), ஆன்சன் (Anson), டெய்சி (Dicey) போன்றவர்களின் பழைய அரசியல் விளக்கங்களில் எதுவும் குறிப்பிடவில்லை. இந்தக் குடிமுறைப் பணியாட்கள் திடீரென்று அரசியலில் இடம் பெற

வில்லை. தொன்று தொட்டே இவர்கள் அரசாங்கப் பணிகளில் ஈடுபட்டு வந்தவர்களாகவே காணப்படுகின்றார்கள். முதன் முதலில் மனிதன் எப்பொழுது சமூகம் என்று ஒன்றை அமைத்துக் கொண்டு வாழ ஆரம்பித்தானோ, அப்பொழுதே அச் சமூகத்தைப் பரிபாலிப்பதற்கு அரசாங்கம் என்ற ஒன்றையும், அவர்கள் வாழ நாடு என்ற ஒன்றையும் தோற்றுவித்தான். அதன் பிறகு ஒரு நாட்டின்கண் வாழும் மக்களின் நலனை ஒட்டி, விவசாயம், வர்த்தகம் இவை போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தான். முதலாவதாக, விவசாயிகளே அரசாங்க ஊழியர்களாகவும், மக்கள் நலவாழ்வின் சமூக ஊழியர்களாகவும் கருதப்பட்டார்கள். உதாரணமாக இந்தியா, எகிப்து (Egypt), சீனா இது போன்ற நாடுகளில் விவசாயிகளே நாட்டின் நல்வாழ்வின் சின்னமாகக் கருதப்பட்டு வந்தார்கள். விவசாய நிலங்களை அதிகமாகப் பெற்றிருப்பவர்கள் செல்வந்தர்களாகவும், அரசர்களுக்கு அடுத்த நிலையைச் சமூகத்தில் பெற்றவர்களாகவும் இருந்தனர். ஆனால் இன்று இந்நிலை மாறுபட்டு விட்டபோதிலும், விவசாயிகள் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால் இன்று 'விவசாயத் துறை' (Agricultur Departi-ment) என்று ஒன்றை ஏற்படுத்தி, அதற்கு ஒரு மந்திரியும், அவருக்குக் கீழ் செயலாளர், மற்ற அதிகாரிகளும் அமர்த்தப்பட்டு, அவர்கள் விவசாயிகள் நலனையும் நாட்டின் உற்பத்தியையும், இன்னும் பல புதிய புதிய மாற்றங்களையும், பயிற்சிகளையும், வசதிகளையும் விவசாயத் துறைக்குச் செய்து வருகிறார்கள். இதைப் போன்றே இன்றைய அரசாங்கப் பரிபாலனத்தில் பல நூற்றுக் கணக்கான துறைகள் குடிமுறைப் பணியாட்களுடன் இயங்கி வருகிறது.

இந்தக் குடிமுறைப் பணியாட்களின் வளர்ச்சி முக்கியமாக இந்திய நாட்டில் ஆங்கிலேய ஆட்சிக்குப் பிறகு தோன்றியதாகக் கருதப்படுவது தவறான நோக்கமாகும். கௌடில்யரின் அர்த்த சாத்திரத்திலும் (Kautalya's Arthasastra), மௌரிய (Maurya), முகலாயர் (Mu-lim) விஜயநகரர் (Vijayanagara) மற்றும் சேர, சோழ, பாண்டியர் (Chera, Chola, Pandias) இவர்களின் ஆட்சியிலே குடிமுறைப் பணியாட்களைப் பற்றியும், அவர்கள் அரசாங்கம் செவ்வனே நடக்க அரசாங்கத்தின் பல்வேறு துறைகளில் உதவிபுரிந்து வந்ததைப் பற்றியும் இந்திய நாட்டுச் சரித்திரத்தில் அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரித்திரத்திலும், அரசியலிலும் இவ்வளவு முக்கிய இடத்தை வகித்த, வகித்து வரும் இந்தக் குடிமுறைப் பணியாட்களின் நிலை

இன்று இந்தியா, ஜப்பான், சீனு, ருஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் தாழ்த்தப்பட்டுள்ளது. ஏனெனின் இந்நாடுகளில் திறமை அறிவு, தேர்வு, சிறப்பு அம்சம் இவைகளை நோக்கியும் தேர்வுகள் நடத்தியும் குடிமுறைப் பணியாட்களைத் தேர்ந்தெடுப்பதாக இருப் பினும் அரசாங்கத்தின் செயற்குழுக்களின் ஈடுபாடு இவர்களின் நிலையில் அதிகமாகிக் கொண்டு வருகிறது. இதனுல் இந்த நாடு களில் அரசாங்க ஊழியர்கள் திறமையற்றவர்களாகவும், கட்சி சார்புடையவர்களாகவும் மாறுவதுடன், நாட்டின் அன்றுட பரிபாலனமும் செவ்வனே நடைபெறத் தடையாகவும் இருந்து வருகிறுர்கள். நாட்டின் பரிபாலனம் சீர்குலைந்தால் முதலில் பாதிக்கப்படுபவர்கள் அரசியல் செயற்குழுவினர்களே. ஆயினும் அவர்கள் நாட்டின் பல துறைகளில் முதல் அதிகாரி களாக இருப்பதாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக விளங்குவதாலும், நிரந்தர செயற்குழு அதிகாரிகள் இவர்களுக்கு அடிமைகளாக மாறிவிடுகிறுர்கள். இந்நிலை மாற, நிலையான செயற்குழு அதிகாரிகள், திறமையுடனும், கடமையிலிருந்து சிறிதும் மாறுபடாமலும். மக்களின் நலனை மனதில் கொண்டும், பணம், பதவி ஆசைகள் இல்லாமலும், லஞ்சம், ஊழல் இவை களில் ஈடுபடாமலும், அரசியல் செயற்குழுவினருக்கு உதவியாக வும், பல உண்மைகளை விளக்கவும், அரசியல் செயற்குழுவினர் செய்யும் குறைகளை மறைக்காமல் எடுத்துக் கூறவும் வேண்டும். இவ்வாறு நிலையான செயற்குழுவினர் அரசியல் துறைகளில் பணி யாற்றி வருவார்களேயாயின், இன்று அவர்கள் அடைந்திருக்கும் நிலையை விட, பல வகையிலும் சிறந்து விளங்குவார்கள் என்பதி லும், நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெறுவார்கள் என்பதிலும், சிறிதும் ஐயமில்லை.

தனி அதிகாரங்கள்

அரசியல் பெரியோர்களும் தத்துவவாதிகளின் பெயர்களும்

(Political Leaders and Philosophers)

1 Tiruvelluvar.	—	திருவள்ளுவர்.
1 Aristotle	—	அரிஸ்டாட்டில்
1a. Anson	—	ஆன்சன்
2. Abrahamlincoln	—	ஆப்ரகாம் லிங்கன்
2(a) Bagehot	—	பேகாட்
3. Bentham	—	பென்தம்
4. Benjamin Franklin	—	பென்சமின் ப்ராங்க்ளின்
5. Bodin	—	போதின்
6. M. E. Bountmy	—	எம். ஈ. பௌட்மி
7. Lord Bryce	—	பிரைஸ் பிரபு
8. Chou-En-Lai	—	சூ என் லாய்
9. Chiang-Kai-Shek	—	ஷியாங் கே ஷேக்
10. Prof: De Tocqueville	—	பேராசிரியர் டி டாக்கவில்லி
10(a) Dicey	—	டெய்சி
11. Frederick	—	பிடரிக்
12. Finer	—	பைனர்
13. Sir Henry Maine	—	சர் ஹென்றி மெயின்
14. Hobbes	—	ஹப்ஸ்
15. Harrington	—	ஹேரிங்டன்
15(a) Kautalya	—	கௌடில்யா
16. Locke	—	லாக்
17. Louis XIV	—	பதினான்காம் லூயி
18. Marriot	—	மாரியாட்
19. Marshall	—	மார்ஷல்
20. Marsiglio	—	மார்ஸிக்லியோ

21. Montesquieu — மான்டெஸ்க்யூ
22. Mao Tse Tung — மா ஸே துங்
23. Peter — பீடர்
24. Rousseau — ரூஸோ
25. C. F. Strong — சி. எப். ஸ்டராங்கு
26. E.V. Ramaswamy. — பெரியார். ஈ. வெ. ரா.

மேற்கோள் நூற்பட்டியல்
(Bibliography)

1. Constitution of Philippines — Public Information Bureau, Ministry of Foreign Affairs, Philippines-1971.

2. Constitution of Asian Countries - The Secretariat of the Asian African Legal Consultative Committee. New Delhi. Published by N. M. Tripathi Private Ltd., Bombay, 1968.

3. Governments and Politics of South East Asia. (Second Edition) Edited by George Mc Turnankuhin, Cornell University Press, Ithaca, New york.

4. The Government and Politics of Communist China D. J. waller - Hutchinson University Library, London.

5. How the Civil Service work - Bosworth Monck Phoenix House Ltd., London.

6. The Japan of To-day - Ministry of Foreign Affairs Japan, 1971.

7. Leadership in Communist China - John wilson Lewis Cornell University Press, Ithaca, New york.

8. Modern Government - T. Mathew & V. N. Krishnan, Published by S. Viswanathan, Madras-31.

9. Malaysia in Brief Published for the Ministry of Foreign Affairs by the Department of Information Malaysia (1971).

10. Political Science - (Theory and the Government-Machinery) B. K. Gokhale - A. R. Sheth & Co., Bombay.

11. Public Administration in Philippines - Edwin O. stene and Associates - Manina Bureau of printing.

12. Seleted Modern Government - V. D. Mahajan S. Chand & Co.,

13. Far Eastern - Government and Politics - Linebarger, Djang and Burks - D. Vannostrand Company, Irc. Princetor, New Jersey.

14. Civil Services History and Problems (Rt) Hon'ble Srinivasa Sastri Lectures (1954 - 1955) by panikar University of Madras.

கலைச் சொற்கள்
(Glossary)

A

1. Aristocracy — உயர்குடி ஆட்சி
2. Administrative Law — முறையான ஆட்சித்துறை சட்டம்
3. Act of Parliament — பாராளுமன்ற சட்டம்
3a. Agriculture Department — விவசாயத் துறை
4. Amendments of the Constitution — அரசியல் அமைப்பில் மாற்றங்கள்
5. Allowances — படிகள்
6. Articles — சரத்து
7. Assistant Minister — உதவி மந்திரி
8. Admintstrative Function — நிருவாகச் செயல்கள்
9. Anarchy — கொடுங்கோன்மையாட்சி
10. Axis — அச்சு

B

1. Bicameralism — இரு சபையுள்ள சட்டமன்றம்
2. Bill of Rights — உரிமைகளின் சாசனம்

C

1. City States — நகர அரசுகள்
2. Constitution — அரசியல் அமைப்பு
3. Central Government — நடு அல்லது மத்திய அரசு
4. Convention — பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்ட

5.	Cabinet	—	மந்திரி சபை
6.	Committees	—	குழுக்கள்
7.	Confederation and Rulers	—	ஆட்சியாளரின் மாநாடு
8.	Comparison	—	ஒப்புவமை அல்லது ஒப்பிட்டுப் பார்த்தல்
9.	Chairman	—	நாட்டின் தலைவர்
10.	Chief Justice	—	பிரதான நீதிபதி
11.	Cultural Revolution	—	கலாச்சார புரட்சி
12.	Congress	—	பிலிப்பைன்ஸ் (மற்றும் அமெரிக்க நாட்டுப் பாராளுமன்றத்தின் பெயர்)
13.	Contingency Fund	—	எதிர்பாராத செலவு நிதி
14.	Civil Servants	—	குடிமுறைப் பணியாட்கள்
15.	County	—	கௌவுன்டி
16.	Chief Minister	—	முதல் மந்திரி
17.	Capitalism	—	முதலாளி தத்துவம்

D

1.	Directive Principles	—	நெறி செய் நியதிகள்
2.	Democracy	—	மக்களாட்சி
3.	Diet	—	டயட் (ஜப்பான் நாட்டுப் பாராளு மன்றத்தின் பெயர்)
4.	Diplomatic Powers	—	தூதுவர் அதிகாரங்கள்
5.	Diputy Minister	—	துணை மந்திரி
6.	Daily Allowance	—	தினப் படி
7.	District	—	மாவட்டம்

E

1.	Executive	—	செயற்குழு (அல்லது) நிருவாகத் துறை
2.	Economics	—	பொருளாதாரம்
3.	Economic Depression	—	பொருளாதார மந்தம்
4.	Emergency Power	—	அவசர கால அதிகாரங்கள்
5.	Electoral College	—	தேர்வு கல்லூரி அல்லது தனிப்பட்ட தேர்தல் கூட்டம்

F

1.	Flexible Constitution	—	நெகிழும் அரசியல் அமைப்பு
2.	Federal	—	கூட்டாட்சி

3. Fundamental Rights — நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள்
4. Finance Commission — நிதி ஆணைக்குழு

G

1. Government — அரசாங்கம்
2. General Amnosity — பொதுக் குற்ற மன்னிப்பு
3. Governor — ஆளுநர்

H

1. House of Lords — பிரபுக்கள் சபை
2. House of Commons — பொது மக்கள் சபை
3. High Court — உயர் நீதி மன்றம்
4. Heads of Commissions — குழுக்களின் தலைவர்கள்

J

1. Judiciary — நீதித் துறை
2. Japan — ஜப்பான் நாடு

L

1. Laws — சட்டங்கள்
2. Legislative — சட்டமன்றம்
3. Local Administration — உள்ளாட்சி
4. Local Autonomy Law — சுயநிருவாகச் சட்டம்

M

1. Monarch — மன்னர் ஆட்சி
2. Municipality — நகராட்சி
3. Municipal District — நகராட்சி மாவட்டம்
4. Mayor — மாநகராட்சித் தலைவர்

N

1. National Language — தாய் நாட்டு மொழி
2. No Confidence Motion — நம்பிக்கையில்லா தீர்மானம்

O

1. Oligarchy — சிறு குழு ஆட்சி
2. Origin of Bureaucracy — அதிகார வர்க்கத்தின் பிறப்பிடம்

P

1.	Political	—	அரசியல் சம்மந்தமான
2.	Population	—	மக்கள்
3.	Président	—	தலைவர்
4.	Presidential Government	—	தலைவர் முறை துறைத்தனம்
5.	Plural Executive	—	ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டுத் தலைவரைக் கொண்ட செயற் குழு
6.	Prioy Purse Bill	—	இராஜமானிய மசோதா
7.	Premier	—	பிரதமர்
8.	Provincial Board	—	மாகாண வாரியம்
9.	Preamble	—	முன்னுரை
10.	Presidium	—	பிரிஸீடியம் (ருஷ்ய நாட்டுச் செயற்குழுவின் பெயர்)
11.	Pesos	—	பெசோக்கள் (பிலிப்பைன்ஸ் நாட்டு நாணயத்தின் பெயர்
12.	Province	—	மாவட்டம்
13.	Polity	—	பாலிட்டி

R

1.	Rigid Constitution	—	நெகிழா அரசியலமைப்பு
2,	Rule of Law	—	சட்ட ஆதிக்கம்
3.	Representative	—	பிரதிநிதிகள்
4.	Registered Marriage	—	ஒப்பந்தத் திருமணங்கள்

S

1.	Society	—	சமுதாயம்
2.	State	—	நாடு
3.	Sovereignity	—	இறைமை
4.	Sovereign Democratic Republic	—	பூரண உரிமை பெற்ற ஜன நாயக அரசு
5:	State Government	—	மாநில அரசு
6.	Signal Executive	—	ஒருவரையுடைய செயற்குழு
7.	Supreme Court	—	உச்ச நீதி மன்றம்
8.	State Council	—	நாட்டுக் குழு
9.	Secretary		செயலாளர்
10.	State orders	—	அரசு ஆணைகள்
11.	Standing Committee	—	நிரந்தரக் குழு
12.	Social Justice	—	சமூக நீதி

13. Sumptuary Allowance — திட்டமிட்ட 'படி'
14. State Exective — மாநிலங்களின் செயற்குழு

T

1. Territory — இடம்
2. Travelling Allowance — பயணப்படி

U

1. Unitary ஒருமுக ஆட்சி
2. Unicameralism — ஒரு சபையுள்ள சட்டமன்றம்
3. Union Public Service Commission — மைய அரசு பணியாளர் தேர்வு ஆணைக்குழு

V

1. Vice-President — துணைத் தலைவர்

W

1. Welfare state பொது நல நாடு
2. Worker's Welfare state — தொழிலாளர் நலன் நாடும் நாடு